

வெளிச்சத்தை நோக்கி
சு. சமுத்திரம்
திருவரசு புத்தக நிலையம்

# வெளிச்சத்தை நோக்கி...

(நாவல்)

## சு. சமுத்திரம்

13, தீனதயாளு தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600 017

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1987
இரண்டாம் பதிப்பு : (திருவரசு) ஆகஸ்ட், 2000
உரிமை : ஆசிரியருக்கு

**விலை: ரூ. 35-00**

| | | |
|---|---|---|
| Title | : | **VELICHATHAI NOKKI...** |
| Author | : | **Su. Samuthiram** |
| Subject | : | Novel |
| Language | : | Tamil |
| Edition | : | Second Edition - August, 2000. |
| No. of Pages | : | 184 |
| Published By | : | **THIRUVARASU PUTHAKA NILAYAM**<br>13, Deenadayalu Street,<br>Thiyagaraya Nagar,<br>**CHENNAI** - 600 017. |
| Price | : | Rs. **35-00** |

Laser Typesetting at : **EKALAIVAN PATHIPPAKAM**
Chennai - 600 041. ✆ : **4917594**

Printed at : Malar Printers. Chennai - 600 034. ✆ 822 4803

# பதிப்புரை

நாடறிந்த நல்லதோர் எழுத்தாளர் திரு. சு. சமுத்திரம் அவர்கள். இலக்கியத்தைப் பொழுதுபோக்குச் சாதனமாக மலினப்படுத்தி எழுதி வருகின்ற எழுத்தாளர்களின் பாணியிலிருந்து முற்றிலும் விலகி, திட்டவட்டமான, ஆரோக்கியமான குறிக்கோளுடன் எழுதி வருபவர் திரு. சு. சமுத்திரம். அதே சமயம், மலைப்பிரசங்கம் போல், உபதேச நடையில் வாசகர்களை மிரட்டாமல் எப்படி வாழ்ந்தால் நல்லது என்பதை அவர் இதமான குரலில், தோழமை உணர்வுடன் விளக்குகிறார்.

"வெளிச்சத்தை நோக்கி..." என்னும் இந்நாவலின் பெயரே திரு. சமுத்திரத்தின் ஆக்கப்பூர்வமான கண்ணோட்டத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது. மனவியலும் சமூகவியலும் பின்னிப் பிணைந்து உருவாகியுள்ள இந்நாவல் டாக்டர். மு.வ. அவர்களின் இலக்கியப் பரம்பரையில் புதிய தடம் பதிக்கிறது. மு.வ. அவர்களின் மேற்கோள் ஒன்று இந்நாவலில் தரப்படுவதும், குணநலன்களுக்கு ஏற்றபடிக் கதாநாயகனுக்கு மெய்யப்பன் என்று பெயர் சூட்டப்படுவதும் கவனிக்கத்தக்கவை.

மெய்யப்பனைப் போலவே எண்ணற்ற இளைஞர்கள் பளிங்கு போன்ற இதயத்துடனும் லட்சிய வேட்கையுடனும் அலுவலகங்களில் பணிபுரியச் சேர்கின்றனர். ஆனால், அலுவலகச் சூழ்நிலையும் சமூகத்தின் சீர்கேடுகளும் அவர்களுடைய லட்சியங்களையெல்லாம் நசுக்கிவிடுகின்றன. ஆகவே பெரும்பான்மையான இளைஞர்கள் காலப்போக்கில் சூழ்நிலையோடு சமரசம் செய்துகொண்டு, செக்கு மாட்டு வாழ்க்கையில் ஆயுளைக் கழித்து விடுகின்றனர்.

'ஆனால் சூழ்நிலை எதிர்ப்பாக இருந்தாலும் எப்போதும் நன்மையே செய்வேன்; தீமைக்கு விலை போகமாட்டேன்' என்று கங்கணம் கட்டிக்கொண்டு போராடுகின்ற சிறுபான்மை

லட்சியவாதிகளின் பிரதிநிதியாக மெய்யப்பன் விளங்குகிறான். இந்தப் போராட்டம் அவனது உடலைச் சிதைக்கிறது; பொருளாதாரத்தைச் சேதப்படுத்துகிறது; உள்ளத்தை ரணகளமாக்குகிறது. மெய்யப்பன் மனநோயாளி ஆகிவிடுகிறான். அவனால் தன் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் பிரமைகளையும் வகைப்படுத்தி ஆராய முடியாமல் போய்விடுகிறது.

ஆகவே, மெய்யப்பனைக் குணப்படுத்த, அவனைப்போல் தத்தளிக்கின்ற லட்சியவாதிகளுக்கு வழிகாட்ட, மனநல மருத்துவராக டாக்டர். ரகுராமன் வருகிறார். அவருடைய அறிவுரைகளின் வடிவில் திரு. சு. சமுத்திரம், வாழ்க்கையில் பிரச்சினைகளைச் சமாளிக்கும் விதம் குறித்துத் தனது கண்ணோட்டத்தைத் தெளிவாக்குகிறார்.

மெய்யப்பனிடம் என்ன குறை? நல்லவன்தான் என்றாலும் அவன் இயங்கிய சமூகம் குறுகியது. அலுவலகத்தில் சிலருக்கும் வெளியில் சத்யாவிற்கும் அவனது கருணை கிடைத்தது. பாலைவனத்தில் விழுந்த மழைத்துளி போல் இது போதாது. அறிவை விசாலமாக்கி, சேவையின் எல்லையை விரிவாக்கி, தனி மனிதன், சமூக மனிதனாக மாறவேண்டும். கார்ல் மார்க்சும் சரி, காந்தியடிகளும் சரி, சமூகச் சிந்தனையை விரிவாக்குவதையே வற்புறுத்தியதைத் திரு. சு. சமுத்திரம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நாவலில் வருகின்ற சம்பவங்கள் உண்மையில் நடந்தவை என்கிறார் திரு. சு. சமுத்திரம். அதனால்தான் இந்நாவலைப் படிக்கும் போது யதார்த்தமான வாழ்க்கையை அணு அணுவாக அனுபவிப்பது போன்ற உணர்வை நாம் பெறுகிறோம். தமிழ்நாட்டு இளைய தலைமுறையினர் அனைவரிடமும் இருக்கவேண்டிய இந்நூலை வெளியிடும் வாய்ப்பை எங்கள் புத்தக நிலையத்திற்கு அளித்த சு. சமுத்திரம் அவர்களுக்கு நன்றி.

***திருவரசு புத்தக நிலையத்தார்.***

# என்னுரை

"**வெளிச்சத்தை நோக்கி...**" என்ற இந்த நாவல், நான் மிகவும் ஒன்றிப்புடன் எழுதிய படைப்பாகும். திரு. **வலம்புரிஜான்** அவர்களை ஆசிரியராகக் கொண்ட "தாய்" பத்திரிகையில் தொடர்கதை லட்சணங்களோடு எழுதாமல், நாவல் மாதிரியே எழுதப்பட்டது. இதற்காக **வலம்புரிஜான்** அவர்களுக்கும், இந்த நாவல் வெற்றிபெற உறுதுணையாக இருந்த **கீதப்பிரியன்** அவர்களுக்கும் இன்றளவும் நன்றிக்கடன் பட்டிருப்பதாக உணர்கிறேன்.

நான் டெல்லியில் பணியாற்றியபோது, ஒரு இளைஞனுக்கு நேர்ந்த மனநோயையும், அவனிடம் ஈடுபாடு கொண்ட என்னையும் இணைத்து உள்ளதை உள்ளபடி எழுதிய நாவல். உண்மை நிகழ்வை எழுதியதால் மனநோய் பற்றிய ஆராய்ச்சி நூல்களை படிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. ஆனாலும், டெல்லி வெலிங்டன் மருத்துவமனையில் அந்த இளைஞனுக்கு சிகிச்சை செய்த மனநோய் நிபுணரும் - மனநோய் மருத்துவரும் விவரித்த விவரங்களை இந்த நாவலில் சேர்த்திருக்கிறேன். இதில் வரும் வசிய சிகிச்சை முறையும் நான் கண்ணாரக் கண்டது.

பொதுவாக, "சிசோபோனியா" **(Schizophrenia)** என்று கூறப்படும் மன அழுங்கு நோய்க்குரிய அத்தனை வெளிப்பாடுகளும் அந்த இளைஞனுக்கு இருந்தது. இந்த நோயில் சிக்குபவர்களுக்கு தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதோ, தங்களுடைய செயல்பாடுகளோ தெரியாது. ஆனால் கெட்ட வேளையிலும் ஒரு நல்லவேளையாக, இந்த இளைஞனை பிடித்த மனநோய் தீவிர நரம்புத்தளர்ச்சி **(Compulsive Neurosis)** என்ற வகையைச் சார்ந்தது. இதனால் இவனுக்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது நன்றாகவே தெரிந்தது. இதனால் ஒருவகையில் மனவேதனையும் அதிகரித்தது என்று சொல்லலாம். ஆனாலும், இது நரம்புத் தளர்ச்சி முற்றிய நிலையில் அமைந்த மனநோய் என்பதால், இந்த இளைஞனுக்கு வசிய சிகிச்சை முறை கைகொடுத்தது. இதுவே

முன்னால் குறிப்பிட்ட **மன அழுங்கு** நோயாக இருந்தால், இந்தச் சிகிச்சை பலன் அளித்திருக்காது.

ஓரிரண்டு இளைஞர்களை, மனநோய் மருத்துவர்களிடம் நான் அழைத்துச் சென்றிருக்கிறேன். மனநோய் மருத்துவர்களோ மணிக் கணக்கில் காத்திருக்கும் இந்த நோயாளிகளிடம் நிமிடக் கணக்கில் பேசிவிட்டு, மாத்திரையை எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். இந்த மாத்திரைகளால் ஏற்படும் பக்க விளைவுகளைப் பற்றியும், இவர்கள், இந்த வகை நோயாளிகளுக்கோ அல்லது உடன் செல்கிறவர் களுக்கோ எடுத்துக் கூறுவதில்லை. இப்படிப்பட்ட மனநோய் வருவதற்குரிய காரண காரியங்கள் பற்றியோ கூடப் போகிறவர் களிடமும் சொல்வதில்லை. மனநோயாளிகளின் எண்ணிக்கைப் பெருக்கமும் அவசர அவசரமாக பணம் பண்ணும் குறிக்கோளுமே பெரும்பாலான மன்நல மருத்துவர்களுக்கு லட்சியமாகி, அந்த லட்சியமே மருத்துவ வியாபாரமாகி விட்டது.

ஒருவருக்கு மனநோய் என்பது, உடல் அளவாலும், மனோ ரீதியிலும் ஏற்படலாம். முதலில் உடல் அளவில் ஏற்பட்டிருக்கிறதா என்பதற்கு மூளை சம்பந்தப்பட்ட பாகங்களை "எக்ஸ்ரே" எடுப்பதும், "ஸ்கேன்" செய்வதும் மிகவும் முக்கியமானது. மூளையின் நரம்புகளோ செல்களோ பாதிக்கப்பட்டிருந்தால், மனநோய் மருந்து பயன்படாது. இதைப் பற்றி மனநோய் மருத்துவர்கள் கவலைப் படாததால்தான், பல நோயாளிகள் சாகும் வரைக்கும் அல்லது பல ஆண்டுகளுக்கு மருத்துவர்கள் எழுதிக் கொடுக்கும் மாத்திரைகளை விடாப்பிடியாக விழுங்குகிறார்கள். இதனால் நோயின் தாக்குதல் தணிகிறதே தவிர, நோய் தீருவதில்லை. பௌதீக ரீதியில் மூளை எப்படி இருக்கிறது என்பதை முதலில் கண்டறிய வேண்டுமென்ற அடிப்படை உண்மை, நமது மனநல மருத்துவர்களுக்கு தோன்றாமல் இருப்பது ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் உள்ளது. வியாபாரம் என்று வந்தால் இப்படித்தான் போலும்.

இந்தவகை மருத்துவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர் டாக்டர். **எம். திருநாவுக்கரசு.** இவரைப்போல் சில மருத்துவர்கள் இருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியாது. எந்த மனநோயாளியையும் முதலில் அவரது மூளையில் குறைபாடுகள் இருக்கிறதா என்பதை விஞ்ஞானக் கருவிகள் மூலம் கண்டறிந்த பிறகே, இவர் சிகிச்சையை

துவக்குகிறார். இதில் வெற்றியும் பெறுகிறார். மனயியல் பற்றி பல மனிதாபிமானக் கட்டுரைகளை இவர் சிறப்பாக எழுதுவதற்குக் காரணம், "**இரட்டை சிகிச்சை முறை**"யை ஆதாரமாக வைத்திருப்பது தான் காரணம் என்று கருதுகிறேன். இதனால்தான் பதிப்பகத் துறையில் நல்ல நூல்களை மட்டுமே வெளியிடும் நாடறிந்த நிறுவனமான வானதிப் பதிப்பகம், இவரது "**குழந்தைகள் மனநலம்**" என்ற நூலை மிகச் சிறப்பாக வெளியிட்டிருக்கிறது.

இந்த நாவலில் வரும் மனயியல் நுட்பங்கள், விஞ்ஞான ரீதியில் இருக்கவேண்டும் என்பதற்காக புகழ்பெற்ற மொழி பெயர்ப்பாளரான திருமதி. **சரஸ்வதி ராம்நாத்** அவர்களின் மகனும், பிரபலமான மனநோய் மருத்துவ நிபுணருமான டாக்டர். **ரகுராமனுடன்** பலதடவை உரையாடி குறிப்புக்களை எடுத்துக் கொண்டேன். நான் பெங்களூரில் பணியாற்றியதும், அவர் அங்குள்ள "நிமான்ஸ்" என்ற புகழ்பெற்ற மனநோய் மருத்துவமனையில் பணியாற்றியதும் வசதியாய்ப் போயிற்று. சலிக்காமல் பல தகவல்களை எனக்குத் தந்துதவினார். இதனால்தான் இந்த நாவலில் வரும் மெய்யப்பனுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டருக்கு, அவரது பெயரையே சூட்டினேன்.

இந்த நாவலுக்கு அருமையான பதிப்புரை வழங்கிய **திருவரசு புத்தக நிலையத்திற்கு** நான் பெரிதும் நன்றியுடையேன். இந்த நாவலை வெளியிட வேண்டுமென்று சொன்ன மறுநாளே இதை அச்சுக்கு எடுத்துக் கொண்டார்கள். பெரியவர் திருநாவுக்கரசு அவர்கள், எடுத்த காரியம் எதிலும் துல்லியமாகவும் துளக்கமாகவும் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறவர். அவரது இந்த சிந்தனையை பிரதிபலிக்கும் வகையில், அவரது புதல்வர்களான அருமைத் தம்பிகள் ராமுவும் சோமுவும் பணியாற்றுவது பதிப்பகத் துறைக்கே ஒரு வரப்பிரசாதமாகும். இந்த வகையில், நான் மட்டுமல்ல... இந்த நாவலும் கொடுத்து வைத்தது என்று கருதுகிறேன். பெரியவர் திருநாவுக்கரசு அவர்களின் இலக்கிய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இன்னும் பல படைப்புக்களை உருவாக்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இந்த நாவல் தங்களுக்கு ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி வாசகப் பெருமக்கள் ஒரு வரி எழுதிப்போட்டால் நன்றியுடையேன்.

**சு. சமுத்திரம்**

## மனவியலும் - சமூகவியலும் பின்னிப்பிணைந்து...

"**வெளிச்சத்தை நோக்கி...**" என்னும் இந்நாவலின் பெயரே எழுத்தாளர் சமுத்திரத்தின் ஆக்கப்பூர்வமான கண்ணோட்டத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது. மனவியலும் சமூகவியலும் பின்னிப் பிணைந்து உருவாகி உள்ள இந்நாவல், **டாக்டர். மு.வ.** அவர்களின் இலக்கியப் பரம்பரையில் புதிய தடம் பதிக்கிறது. **மு.வ.** அவர்களின் மேற்கோள் ஒன்று இந்த நாவலில் தரப்படுவதும், குணநலன்களுக்கு ஏற்றபடிக் கதாநாயகனுக்கு மெய்யப்பன் என்று பெயர் சூட்டப்படுவதும் கவனிக்கத்தக்கவை.

அறிவை விசாலமாக்கி, சேவையின் எல்லையை விரிவாக்கி, தனி மனிதன், சமூக மனிதனாக மாறவேண்டும். கார்ல் மார்க்சும் சரி, காந்தியடிகளும் சரி, சமூகச் சிந்தனையை விரிவாக்குவதையே வற்புறுத்தியதைத் திரு. சு. சமுத்திரம் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டு இளைய தலைமுறையினர் அனைவரிடமும் இருக்கவேண்டிய இந்நூலை வெளியிடும் வாய்ப்பை எங்கள் புத்தக நிலையத்திற்கு அளித்த சு. சமுத்திரம் அவர்களுக்கு நன்றி.

**திருவரசு புத்தக நிலையத்தார்,**
சென்னை - 600 017.

# வெளிச்சத்தை நோக்கி...

## 1

அந்த அலுவலகம் இயங்குகிறதோ இல்லையோ, ஊழியர்கள் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள். காலையில் களைப்போடு வந்து, மாலையில் சுறுசுறுப்போடு போகிறவர்கள். மாலை மணி ஐந்தரை வருவதற்கு, இன்னும் அரைமணி நேரமே பாக்கி; வீட்டிற்குப் போவதற்கு இப்போதே ஆயத்தம் செய்ய வேண்டாமா? பாக்கி நேரத்தில், பாக்கி வேலையை செய்யணுமா என்ன....? நாளை என்பது எதற்காக இருக்கு? வீடு என்பது எதற்காக இருக்கு? அங்கே மட்டும் செய்ய வேண்டிய வேலை பாக்கி இல்லையா?

சுவர்க்கடிகாரம் ஐந்து தடவை அடித்துக் கொண்ட போது, அடிக்கப்பட்ட டைப் ரைட்டர்கள், பாதிக் காகிதங்களைக் கெளவியபடி நின்றன. மானேஜரின் அறைக்கு முன்னால், துவார பாலகி மாதிரி, 'எஸ்' நாற்காலியில் உட்கார்ந்திருந்த வாணி, ஓசைப்படாமல் எழுந்திருக்கப் போனாள். செருப்புச் சத்தத்தை மோப்பம் பிடித்து, மானேஜர் தன்னைக் கூப்பிட்டு விடக்கூடாது என்று பயந்தவள்போல், அந்த ஸ்டெனோகிராபர் பெண், மேஜைக்கு அடியில் கிடந்த

செருப்புக்களை கால்களால் ஓசைப்படாமல் தூக்கி, மாட்டிக்கொண்டு தரையில் செருப்பு உரசாதபடி நடக்கப்போனாள்.

மானேஜர் அறைக்கு எதிரே அமர்ந்திருந்த குமார், எழுதிக் கொண்டிருந்த ரிஜிஸ்டரை எரிச்சலோடு எறிந்து விட்டு, சட்டைக் காலரைத் தூக்கியபடி, மார்புக்குள் 'பூ' என்று ஊதினான். வெள்ளை யூனிபாரம் போட்ட பியூன் முனுசாமி, யூனிபாரத்தைக் கழற்றி வைப்பதற்காக, 'ஸ்டோர் ரூமைப்' பார்த்துப் போய்க் கொண்டிருந்தான். டைப்பிஸ்ட் மங்கைகளான கனகமும், மீனாட்சியும், 'இன்னுமா புறப்படல...' என்பது மாதிரி தத்தம் காதல் ரத்தினங்களான சந்தானத்தையும், சற்குண பாண்டியனையும் எரிச்சலோடு பார்த்தார்கள். அக்கௌண்டன்ட் பாஷ்யம்-ஐம்பதைத் தாண்டியவர்-பேர்தான் பழசே தவிர, அவருடைய கிருதா புதுசு. "கனகு செத்தே வா... இந்த ஸ்டேட்மெண்டை 'கம்பேர்' பண்ணலாம்" என்றார். சின்ன வயதில் காதல் அனுபவம் இல்லாதவர். ஆகையால் யார் காதல் வயப்பட்டாலும், அவர்களைப் படாதபாடு படுத்தி விடுவார். கனகம், குனிந்த தலை நிமிராதது போலிருந்த பாஷ்யத்தைப் பார்த்து, மோவாயை இடிப்பது போல் முன்னும் பின்னுமாக ஆட்டிக்கொண்டே போனாள். இதற்குள் நாலே முக்கால்-ஐந்து மணிக்கு முன்னதாகவே விரிந்த தலையோடு, கலைந்த கோலத்தோடு 'டாய்லட்' அறைக்குப் போன சில ஊழியைகள், இப்போது ஐந்தே கால் மணிக்கு, மேக்கப்போடு திரும்பி, அறைக்கு வெளியே நின்றுகொண்டே, உள்ளே நோட்டம் பார்த்துவிட்டு, புறப்படப் போனார்கள். அதாவது அவர்கள் நாலே முக்கால் மணிக்குக் கிளம்பலியாம்... இப்போ ஐந்து இருபதுக்குத்தான் கிளம்புகிறார்களாம்.

திடீரென்று வெளியே நின்ற பெண்கள் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தார்கள். பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே, அலுவலகத்திற்குள் நுழைந்து, வாசல் பக்கம் குவியலாக நின்றார்கள். 'கேட்

பக்கத்துல பார்த்தோம். இன்னும் என்ன பண்றார்' என்றாள் ஒருத்தி. 'வழில எவனாவது மடக்கி இருப்பான்...' என்றாள் ஒருத்தி... 'எவனாவதா... இல்ல... எவளாவதா' என்று ஒருத்தி திருத்தப் பிரேரணை கொண்டு வந்தாள். 'வழில போன எவனையாவது... இவருதான் மடக்கி... வாயைக் கிளறிக் கொண்டு இருப்பார்' என்றாள் மற்றும் ஒருத்தி.

திடீரென்று, சைனா பஜாரில் யானை புகுவது மாதிரி, மெய்யப்பன் உள்ளே வந்தான். கண்கள், முகத்தை ஆட்டாமலே நாலு பக்கமும் சுழல, விறுவிறுவென்று நடந்தவன், அந்தப் பெண் குவியலுக்குச் சற்றுத் தள்ளி நின்று கொண்டே, அலுவலகப் பிரஜைகளைக் கம்பீரமாகப் பார்த்தான். ஒரு நாற்காலி காலியாக இருப்பதையும் பார்த்து நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டான். அளவுக்குச் சற்று அதிகமான உயரம். அளவுக்குச் சற்று மங்கலான பானை நிறம். யாரையாவது பார்த்தால், கழுத்தைக் குழைந்து வளைக்காமல், சட்டென்று வளைத்துப் பார்க்கும் வேகக்காரன். ஒல்லியாக இருந்தாலும், வைரப்பட்ட உடம்பு.

அவனைப் பார்த்ததும், "அடேய் தடிராமா" என்றான் குமார். ''தம்பீ'' என்று பல்லெல்லாம் பாசமாகக் கூப்பிட்டாள் வாணி. "கடன்காரா... பாட்டியை நல்லா அனுப்புனியோ..." என்றார் பல்லெல்லாம் பாசி படர்ந்த பாஷ்யம். யூனிபாரத்தைக் கழற்றிப் போட்டுவிட்டு, வெள்ளை வேட்டி, மஞ்சள் சட்டையோடு வந்த பியூன் முனுசாமி, "என்ன தலைவரே" என்றான்.

எல்லோரும் ஒரே சமயத்தில் பேசியதுபோல் இருந்ததால், மெய்யப்பன், காதுகளை இருகையாலும் பொத்திக் கொண்டு "ஒன் பை ஒன் பிளீஸ்..." என்றான். உடனே குமார், "ஒன் மனசுல என்னடா நெனப்பு... பெரிய ரஜினிகாந்துன்னு எண்ணமோ" என்றபோது, மெய்யப்பன், அந்த நடிகர் மாதிரி ஒரு கோணலான கராத்தே வீச்சை வீசுவதுபோல், கையை நீட்டி, முகத்தை வளைத்து 'டூயிங்' என்றான். "மூன்றரை மணிக்கு டிரெயின்... இவ்வளவு நேரமும்

என்னடா பண்ணினே..." என்று குமார் அதட்டியபோது, மெய்யப்பன் அவன் முன்னால்போய், தன் காதுகளைப் பிடித்துக் கொண்டு, தோப்புக் கரணம் போடுவது போல் போட்டான். எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

அக்கௌண்டன்ட் பாஷ்யம் வெற்றிலைக் காம்பைக் கிள்ளியபடியே, "ஏம்பா... பாட்டி இறந்துட்டான்னுதானே ஊருக்குப் போனே... மொகத்துல... துக்கக் குறியே... காணுமேடா..." என்றார்.

"என்னை... என்ன... அவளோட உடன்கட்டை ஏறச் சொல்றீங்களா, அக்கௌண்டன்ட் ஸார்... இந்தக் கூத்தைக் கேளும்... பாட்டியை மூலையில் சாத்தி வச்சிருக்கு... ஊர்ல உள்ள பெண்ணுங்கெல்லாம்... திரண்டு வந்து ஒப்பாரி வச்சாங்க... முந்தானை சேலையை விசிறி மாதிரி அடித்து, முகத்துக்கெதிரே வீசிக்கிட்டே அழுதாங்க... 'அடடே... நம்ம பாட்டிக்கா இவ்வளவு விசிறிகள்'னு நினைச்சேன்... கடைசில என்னடான்னால்... இழவுக்கு வந்த ஒவ்வொருத்தியும்... செத்துப்போன அம்மாவையும், சாகாம இருக்கும் மாமியாரையும் நினைத்து அழுகுறாளுங்க... பாட்டிக்கு அழ யாருமே இல்ல..."

"நீயாவது அழுதியோ... மாட்டே... லோகத்துல... அம்மாவோட அம்மா இறந்தால்தான் பேரப் பிள்ளிங்க அழும்... அப்பாவோட அம்மா செத்தால் சிரிக்கும். இதுக்கென்று ஒரு ஆராய்ச்சியே பண்ணலாம்..."

"அதை நீங்களே செய்யுங்களேன் ஸார்... ஒரு வருஷம் ஸ்டடி லீவ்ல போங்க... ஆபீஸும் உருப்பட்டாப்ல இருக்கும். ஆராய்ச்சியும் முடியும்..."

பாஷ்யம் கோபத்தோடு மெய்யப்பனைப் பார்த்துத் தலை நிமிர்த்த அவன் பிசிறில்லாது சிரித்த சிரிப்பு தொற்றிக் கொள்ள, சிரிப்போடு தலையைக் கீழே போட்டார். வாணி, மெய்யப்பனைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டே

நின்றாள். பிறகு, "தம்பீ! நீ இன்னைக்கு என் வீட்லதான் சாப்பிடணும்..." என்றாள். உடனே குமார், "என்னோட வாரான்... வராட்டால் உதை கிடைக்குமுன்னு தெரியும்" என்றான்.

மெய்யப்பன், குமார் அருகே சென்று, ஒரு கூழைக் கும்பிடு போட்டு, "டேய்... உதைச்சாலும் சோத்தால உதைடா..." என்று சொல்லிவிட்டு வாணியை நோக்கி, "அக்கா... இந்த ரௌடிப் பய... சொன்னபடி உதைக்கிறவன்... இன்னொரு நாளைக்கு வாரேன்..." என்றான்.

அதுவரை பேசாமல் இருந்த சந்தானம், "அங்கேயும் சாப்பிட்டுட்டு, அப்புறமாய் வாணி வீட்லயும் சாப்பிடுங்களேன் சார்... ஒங்களுக்கென்ன அது முடியாத காரியமா?" என்றான்.

"டேய் படுபாவி... கண்ணாடா போடுறே... வாணிக்கா... இவன் காலடி மண்ணை எடுத்து வைங்க... நாளைக்குச் சுத்திப் போடணும்... இல்லன்னா... என் வயிறு வீங்கிடும்..."

கனகம் குழைந்தாள். "மெய்யப்பன் ஸார்... பாட்டி செத்ததும் அவளோட மோதிரத்தை எனக்குத் தாரதாய் சொன்னீங்களே..."

கனகம் விளையாட்டாகத்தான் முன்பு கேட்டாள். அவனும் விளையாட்டாக, 'அதுக்கென்ன' என்பது மாதிரிதான் சொன்னான். ஆனால் இப்போது சட்டைப் பையைத் துழாவி, கால் பவுன் மோதிரத்தை எடுத்து நீட்டினான். கனகம் கையை நீட்டாமல் நின்றபோது, "எங்க ஊர் வழக்கப்படி... பாட்டியோட நகை... பேத்திகளுக்குத்தான சேரணும்... நீயும் எனக்கு தங்கை மாதிரிதானே... போட்டுக்கோ... இன்னொண்ணு இருக்கு... அது வாணியக்காவுக்கு..." என்றான். கனகம், 'இப்படியுமா ஒருவர் இருக்க முடியும்' என்பதுபோல் அவனைப் பார்த்தபோது, 'என் தம்பின்னா... இப்படித்தான்' என்பதுபோல் வாணி பார்த்தாள்.

“எவ்வளவு பணம் தரணும்” என்றாள் கனகம்.

“அதை அப்புறம் பார்த்துக்கலாம்” என்றான் மெய்யப்பன்.

குமார் மட்டும், “பய... நீட்டுற வேகத்தைப் பார்த்தால்... பித்தளை மோதிரம் மாதிரி தெரியுது... ஏமாந்துடாதீங்க...” என்றான்.

எல்லோரும் போய்விட்டார்கள். குமாரும் மெய்யப்பனும், இப்போது சீரியஸாகப் பேசிக்கொண்டு எழுந்தார்கள். மானேஜர் அறைக்குள் போகப் போனவனை, குமார் கழுத்தைப் பிடித்துத் திருப்பி, அலுவலகத்திற்கு வெளியே கொண்டு வந்தான். செல்லக் கண்டிப்போடு அதட்டினான்.

“ஏண்டா... ஒனக்கு அறிவிருக்காடா... ரெண்டு மோதிரமும், ஒரு பவுனுக்கு மேல போகும்... இப்டியாடா வீசுறது.”

“விட்டுத்தள்ளுடா... கனகம் ஒரு தடவை கேட்டாள்... நான் சரின்னு எப்டியோ சொல்லிட்டேன். நல்ல பொண்ணு... போட்டுட்டுப் போறாள்...”

“போடா மடையா... வாணியாவது ஒன்னை தம்பி மாதிரி நினைக்கிறவள்... கொடுத்தால் பரவாயில்லை... இந்த கனகம் யாருடா... இதையே நாளைக்கு ஒன் மனைவிக்காக வச்சிருக்கலாம் இல்லையா...”

“எங்க பாட்டி விவகாரம் ஒனக்குத் தெரியாதுடா... இப்போகூட அவள் இறந்தது... எனக்குப் பெரிசாத் தெரியல... அந்த அளவுக்கு அவள் கிட்ட... சரி... விட்டுத்தள்ளு... அவளோட பொருள் எதையும் என்கிட்ட வச்சுக்க நான் தயாராய் இல்லை. அதை விற்றுப் பயன்படுத்தவும் தயாராய் இல்ல... தூர வீசியெறிய வேண்டியதை... அவங்ககிட்ட கொடுத்தேன்.”

மெய்யப்பன் வெறுப்போடு பேசியதைக் கேட்ட குமார், அவனை ஆச்சரியமாகப் பார்த்தான். பாட்டி மீது இவ்வளவு வெறுப்பா?...

"எப்படியோ போ... பத்தாயிரம் ரூபாய் வரைக்கும் சொத்துத் தேறுமுன்னு சொன்னியே... என்ன பண்ணுனே..."

"சித்தப்பா கேட்டார். கொடுத்துட்டேன்..."

"ஒனக்கு அறிவிருக்காடா..."

"நீ ஒருத்தன்... இப்போ அந்தப் பத்தாயிரம் ரூபாய் வந்து என்ன ஆயிடப் போவுது... எனக்கு என்ன... தங்கச்சி இருக்காளா... அண்ணன் தம்பி உண்டா... எங்க பாட்டி, எங்க அம்மாவை என்னவெல்லாமோ பண்ணினாள்... என்னைப் பாடாய்ப் படுத்தினாள்... இப்போ என்னத்தைக் கொண்டு போனாள்...? அவள் சேர்த்த சொத்து எனக்கு வரப்படாது... அவள் சொத்துல ஒரு துரும்பு என் சட்டையில் விழுந்தால்... அதை என் சட்டையோடு சேர்த்து எரிப்பேன்... விவரித்தால் மகாபாரதம் மாதிரி நீளும்... விட்டுத் தள்ளு... விமலா ஏன் இன்னைக்கு வரல?..."

"நீ ஒரு மடையண்டா... இப்போ பதினைந்து நாளாய் எவனோ ஒருவன்கூட சுத்திக்கிட்டு இருக்காளாம்... வித விதமான ஸ்கூட்டர்லயும், மோட்டார் பைக்கிலயுமாய்... இது சீக்கிரம் விதவிதமான மனுஷங்ககூடயும் சுத்துறக்கு ஆரம்பிப்பாள் என்கிறதுக்கு அறிகுறி."

மெய்யப்பன், ஒருகணம் திடுக்கிட்டு, மறுகணம் கத்தினான். "டேய் குமார்... அவளுக்கும் எனக்கும் இருக்கிற நெருக்கம் ஒனக்குத் தெரியும்... அபாண்டமாய் பேசப்படாது. நீ கண்ணாலப் பார்த்தியா?..."

"பாஷ்யம் பார்த்ததாய் சொன்னார்..."

"அவன் அசல் சனீஸ்வரன்... ஆகாசப் புலுகன்... வயிற்றெரிச்சல் மனுஷன்."

"நடக்கறது பொய்யாய் இருக்கணுமுன்னு நினைக்கிறே... அதனால அதைப் பார்த்தவரும், பொய்யனாய் ஒனக்குத் தெரியுது... பாஷ்யம் பார்த்ததையே நானும் பார்த்திருந்தாலும் என்னையும் இப்படித்தான் சொல்வே... ஏன்னா... காதல் கண்ணையும் நட்பையும் மூடும்... அதுலயும்... நடிக்கத் தெரிந்தவளோட காதல், நண்பனையும் துரோகியாய் காட்டும்... எனக்கு நீ நல்லாய் இருக்கணும் என்கிறதுதான். நிச்சயம் காலம் பதில் சொல்லும்..."

மெய்யப்பன், குமாரின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டான். "என்னடா நீ... இப்படிப் பேசுறே.... உன்னையா சந்தேகப்படுவேன்... அப்படிச் சந்தேகப்பட்டால் நான்தான் உருப்படுவேனா... ஒன்னைவிட எனக்கு யாரும் உசத்தி இல்லை... தெரிஞ்சுக்கடா..."

நண்பர்கள் இருவரும், ஒருவர் உள்ளத்தில் இன்னொருவர் வியாபிக்க ஒரே மாதிரி நடந்தார்கள். சிறிது நேரத்தில் மெய்யப்பனின் உள்ளம் கனத்தது. ஆகாயத்துள் மறைவது போன்ற உணர்வு. பூமிக்குள் போனது போன்ற இருள் மயம். அந்தரத்தில் நிற்பது போன்ற வேரற்ற நிலை.

மெய்யப்பன் சுருண்டு விழப் போகிறவன்போல் நடந்தான்.

# 2

காலம் பதில் சொல்லத் துவங்கியது. அதுவும், குமாரின் கணிப்பில் முதல் வகுப்பில் தேற நினைத்தது போல், வேகமாக விடையெழுதத் துவங்கியது.

இரண்டு நாள் கழித்து, விமலா அலுவலகம் வந்தாள். மெய்யப்பனைப் பார்த்ததும், வாயை அகலப்படுத்தி, ஆச்சரியப்பட்டவள்போல் 'ஹலோ' என்றாள். அவ்வளவு தான். முன்பெல்லாம் இப்படி இடைவெளிவிட்டு அவனைப் பார்த்தால், அவனுடன் இடைவெளி விடாமல் உட்காருபவள் - 'என்கிட்ட பேசாமல் அங்கே என்ன பேச்சு...' என்று கோபத்தோடு குதிப்பவள்; மெய்யப்பன், அவளை உற்றுப் பார்த்தான். அடியோடு மாறியதுபோல் தெரிந்தது.

வயிறு நன்றாக இருந்ததோ இல்லையோ, நன்றாகத் தெரிந்தது. எதையாவது பேசும்போதோ அல்லது கேட்கும் போதோ தோளைக் குலுக்கி, கைகளை மல்லாந்து விரித்து, உதட்டைப் பிதுக்கி, நெற்றியைச் சுழித்த விதம், அவள் யாரோ ஒருத்தருக்காகச் செய்து காட்டுவதை இங்கேயும் எதேச்சையாய்ச் செய்வது போலிருந்தது.

மெய்யப்பன் அவளாகத் தன்னிடம் பேசுவாள் என்று எதிர்பார்த்தான். பேசவில்லை. பேச விரும்புவது போலவும் தெரியவில்லை. ஏதோ ஒரு ரிஜிஸ்டரை எடுக்கும் சாக்கில் அந்தப் பக்கமாகப் போனவன் "என்னம்மா... டல்லா இருக்கே" என்றான். "நோ... நோ... இப்போதான் ஹேப்பியாய் இருக்கேன்" என்றாள். "பாட்டி செத்ததைக்கூட கேட்கத் தோணலியா..." என்றான். "பாட்டி செத்தால் என்ன... வேற யார் செத்தால் எனக்கென்ன..." என்றாள் வெடுக்கென்று. மெய்யப்பனின் முகம் இறுகியது. ஏதோ, தொலை தூரத்திற்குப் போகிறவன்போல் வேகமாக நடந்து, தன் இருக்கையில் அமர்ந்தான். குமார் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். பேச

முடியவில்லை. அந்த அலுவலகமே அவனுக்கு வேறுவிதமாகத் தெரிந்தது. வேலை ஓடவில்லை. அரைநாள் லீவு போட்டுவிட்டு, குமாரிடம் கூடச் சொல்லாமல் போய்விட்டான்.

## 3

ஒரு வாரம் வரை வினாடிகள்கூட அவனுக்கு யுகங்களாகத் தெரிந்தன. என்னதான் மறக்க முயன்றாலும் விமலாவை அவனால் மறக்க முடியவில்லை. அதே சமயம் அவளாகப் பேசாமல், தான் பேசப் போவதில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டான். அந்தத் தீர்மான வேகத்தில் இன்னொரு வாரம் ஓடியது. குமாரிடம் யந்திர கதியில் பேசினான். அவனும் இவன் அதிர்ச்சியைப் புரிந்து கொண்டவன்போல், விட்டுப் பிடிக்க நினைத்தவனாய், நண்பனிடம் இருந்து விடுபடாமலே இருந்தான்.

துள்ளிப் பாயும் ஆறு அணைக்கட்டில் சிறைப்பட்டு அசையாமல் தேங்கியதுபோல், எட்டிப் பாய்ந்த வெட்டுக் கிளி எதனிடமோ சிக்கிக் கொண்டதுபோல், மெய்யப்பன் உணர்வுகளில் சிக்கி, சீரழிந்து, இறுதியில் யாரிடமும் பேசாத மௌன நிலைக்கு வந்தான். அலுவலக ஊழியர்கள் அவனிடம் பேசிப் பார்த்தார்கள். அவன் ஒரே வார்த்தையில் பேச்சை முடித்தான். விமலாவின் 'புதுமைப்' போக்குதான், அவனை அடிசாய்ந்த மரமாக்கிவிட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆக, அவர்களும் அவனை விட்டுப்பிடிக்க நினைத்தார்கள்.

விமலாவை விட்டுவிட வேண்டும் என்று முதல் வாரம் நினைத்து, விட்டுப் பிடிக்க வேண்டும் என்று இரண்டாவது

வாரம் நினைத்து, இப்போது விடவே முடியாது என்பது போல் மெய்யப்பன் அவள் பார்வைக்காகத் தவித்தான். எங்கே போனாலும் அவளும் மானசீகமாக உடன் வருகிறாள். கொய்யாப்பழம் மாதிரி அழகான திட்டுப் புள்ளிகள் கொண்ட அவள் முகமும், இன்ன நிறம் என்று சொல்ல முடியாமல் எல்லா நிறமும் கலந்து நல்ல நிறமாய் உருவானது போல் தோன்றிய உடல் தோற்றமும் அவனை உருக்குலைய வைத்தன.

அன்றைக்கும் அப்படித்தான்.

மானேஜர் அறைக்கு எதிரே சுவரில் சாத்தி வைத்திருப்பதுபோல் போட்டிருந்த நாற்காலியில் சாய்ந்திருந்த மெய்யப்பன், எதையுமே கவனிக்காதவன் போலவும், எல்லாவற்றையும் கவனிக்கிறவன் போலவும் கூரை மேட்டைப் பார்த்தான். தரையை நோக்கியும் கண்களைச் சுழற்றிக் கொண்டிருந்தான். மானேஜர் அறை வாசலை அடைத்து நின்ற வண்ண வண்ண டிசைன்கள் போட்ட திரைச் சீலையோ, அந்த அலுவலகம் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருப்பதுபோல் ஏதோ ஒரு கோளாறால் விட்டுவிட்டு எரிந்து கண்களைப் பறித்த ஒரு டியூப் லைட்டோ, வாணி உள்ளே போனதோ, எதுவும் அவன் கண்களை ஊடுருவவில்லை. கேட்டவை எல்லாம் வெறும் ஒலிகளாகக் கேட்டனவே தவிர, அவை மூளையில் பதிந்து பொருள் வடிவங்களாகவில்லை.

அவன் அங்கே இல்லை என்பது மாதிரி அல்லது அவன் ஒரு பொருட்டே இல்லை என்பதுபோல், இடது கையில் இருந்த வட்டக் கண்ணாடியை மேஜையின் ஊன்றி, தொப்புளுக்குக் கீழே புடவையை இழுத்துவிட்டு, உடம்பை நளினமாகச் சாய்த்து, மாராப்பு சேலையை அது இருக்க வேண்டிய இடத்தில் வைக்காமல், தோள் பக்கமாக ஒதுக்கிக் கொண்டிருந்த விமலாவையே, அவன் வெறித்துப் பார்த்தான்.

மெய்யப்பன், தன் மோவாயைத் தடவி விட்டுக் கொண்டான். குண்டூசி நீளத்திற்கு வளர்ந்திருந்த தாடி

முடியைத் தடவியபோது, முள் குத்துவதுபோல் நோவெடுத்தது. இந்தத் தாடிக்கும், விமலாவின் மாற்றத்தை உணர்ந்த காலத்திற்கும் ஒரே வயது. 'எப்படி இருந்தவள், எப்படி மாறிவிட்டாள். ஆலமரத்தை உள்ளடக்கிய விதை போல, அப்போதே இந்த மாற்றத்தை உள்ளடக்கி இருந்திருப் பாளோ... உள்ளத்துள் பதுக்கி வைத்திருந்த ஏதோ ஒரு விஷமரத்தின் விதை, இப்போது, உதட்டில் லிப்ஸ்டிக்காக, புருவத்தில் கருவேல முள் போன்ற மையாக, கை விரல்களில் கோர நகங்களாக, கால் பாதங்களில் ஹை ஹீல்ஸ் செருப்புக் களாக, வேலிச் சுவரில் சாய்ந்திருந்த செடியே அந்த சுவரை எட்டி உதைத்துக்கொண்டு மரமாய் பீறிட்டது போன்று, வயிற்றில் இருந்து உதைபட்டு, இடுப்பில் விழுந்த புடவையாக விசாலப்பட்டிருக்கிறதோ...'

மெய்யப்பன், அவளை ஏறிட்டுப் பார்த்தான். தற்செயலாகச் சந்தித்த அவள் கண்களில் இருந்து தன் கண் வீச்சை எடுக்காமல் பார்த்தான். அவள் தன் முகத்தை ஒரு வெட்டு வெட்டிக் கொண்டு கண்ணாடியை முறைத்தாள். அவனுக்கு அந்தச் சந்தர்ப்பத்திலும், அவளின் செயற்கைத் தனத்திலும், இன்னும் சாகாமல் கிடந்த இயற்கை அழகை ரசிக்காமல் இருக்க முடியவில்லை. அவள் கண்ணோரத்தில் என்னதான் மை போட்டிருந்தாலும், அந்தக் கண்ணுக்குள், பேதமை என்று புலவர்கள் சொன்னார்களே - அந்த அப்பாவித்தனம் இருப்பதுபோல் தோன்றியது. அதில் கர்வத்திற்குப் பதிலாக ஏதோ ஒரு குற்றவுணர்வும், எப்படியும் இந்த மாற்றத்திலிருந்து மீண்டுவிட வேண்டும் என்பது போன்ற ஒரு படபடப்பும் இருப்பது போலிருந்தது. அப்படி நினைக்க நினைக்க, தான்தான் அவளை மீட்க வேண்டும் என்பதுபோல் நினைத்தான். அப்படி நினைத்துக் கொண்டே மீண்டும் அவளைப் பார்த்தபோது, அவள் தன்னை அந்த மீட்புக்கு நம்பியிருப்பது போலவும் தோன்றியது. அந்த நம்பிக்கை, கருவேல முள்போல் காட்டிய புருவத்தை, வில்போல நினைக்க வைத்து; கோரமாய் புலப்பட்ட நகங்களை அழகுக் கோலமாய் காட்டியது. ஹைஹீல்ஸ்

செருப்புக்களில் இருந்த கால்களை அரியாசனத்தில் உள்ள செங்கோல்களாகத் தோன்றச் செய்தது.

அவளை வைத்த கண் வைத்தபடிப் பார்த்தவன், அவளோடு கடற்கரைக்குப் போனதையும், அவள் தலையில் செல்லமாகக் குட்டியதையும், அவள் சிணுங்கியபடி நோக்கிய சிலிர்ப்பையும், பார்வையையும், குமாரை விட்டு விட்டு, இரண்டு கேரியர்களில் வரும் உணவை தங்களின் உள்ளங்களைப்போல் ஒன்றாகக் கலந்து, ஒரே இலையில் வைத்து உண்டதையும் நினைத்துக் கொண்டான். அப்படி நினைத்தபோது, தனது உணர்வுகளுக்குத் தானே உணவாகிப் போனவன்போல் உடம்பெல்லாம் குழையும்படி நாற்காலிக்குள்ளே உடம்பைச் சுருட்டினான்.

பிறகு, இன்றைக்கு எப்படியாவது அவளிடம் இரண்டில் ஒன்றைக் கேட்டு விடுவது என்று திட்டவட்டமான முடிவுக்கு வந்தவன்போல் நிமிர்ந்து உட்கார்ந்தான். எந்த வகையிலாவது பிரச்சினை தீர்ந்தால் சரிதான் என்பது போன்ற தீர்க்கம். அது சாதகமான வகையில் தான் முடியும் என்ற நம்பிக்கை. அதேசமயம், பாதகமாய்ப் போய்விடக் கூடாதே என்ற பயம். அவளே பேசாதபோது, நாம் ஏன் பேச வேண்டும் என்ற சுயமரியாதை உணர்வு... பூனையைப்போல், மனதிற்குள் குறுக்கும் நெடுக்குமாக ஓடியதால் ஏற்பட்ட நிரடல்.

ஏன் பேசக்கூடாது? மிருக இனத்தில்கூட, பெண் சிணுங்கும்போது, ஆண்தானே குழைகிறது! பார்த்தும் பாராதுபோல் பரல் கல்லைக் கொத்தும் கோழி ஓடும்போது, சேவல்தானே துரத்துகிறது! விருப்பப்படாததுபோல் ஓடி, ஒரு குறிப்பிட்ட தூரத்தில் நிற்கும் பெண் நாயைப் பார்த்து, ஆண் நாய்தானே பின் தொடர்கிறது? அப்படியானால் காதல் என்பது மிருக வகையா? இல்லை... இல்லை.

கடற்கரையில் கைகோர்த்து, நடந்தவள், ஒரு சாக்லேட்டைப் பாதி கடித்துவிட்டு, பாதியை நாணத்தோடு நீட்டியவள், 'நான் உங்களைத்தான் நம்பியிருக்கேன்' என்று

சொன்னவள் மாறியிருக்க முடியாது. இயல்பிலேயே சகஜமாகப் பழகும் தான், அலுவலகப் பெண் எவளிடமாவது சிரித்துப் பேசுவதைத் தப்பாக நினைத்திருக்கலாம்... ஒரு தடவை 'என்னைவிட.... அந்த கனகம் தான் ஒங்களுக்கு உசத்தி' என்று சொல்லவில்லையா? 'நான் அவளைக் கைவிட்டு விட்டதாக நினைத்திருக்கலாம். பேசித்தான் பார்க்கலாமே... நானே வலியப் பேசினேன் என்ற வெற்றிப் பெருமிதத்தை அவளுக்குக் கொடுக்கலாமே...'

அப்படியானால் குமார் சொன்னது? ஆனால் சொன்னபடி இருக்க வேண்டுமா என்ன? அதோடு அவன் சொன்னது உண்மை என்பது என்ன நிச்சயம்? உயிர் நண்பன் குமார் பொய் சொல்வானா... மாட்டான். ஆனால், அவனாகப் பார்க்கவில்லையே-பாஷ்யம் பார்த்ததாய் சொல்லியிருக்கார், அவ்வளவுதான். பாஷ்யம் பொறாமைக்கார கிழவன்... ஒருவன், ஒருத்தியைக் காதலித்தால், கிழவன்கூடப் பொறாமைப் படுகிறான். தன்னோடு வேலை பார்க்கும் ஒரு சகா, தன்னைவிடப் பெரிய வீடு கட்டும்போதோ, ஒரு ஸ்கூட்டர் வாங்கும்போதோ, அல்லது தன்னைவிட ஆபீஸரிடம் நல்ல பெயர் வாங்கும்போதோ பொறாமைப்படாத 'யோகிகள்கூட' யாராவது காதல் செய்வதைப் பார்த்துவிட்டால், வயிரெரிகிறார்கள். 'என் விமலாவிடம் இன்று பேசியாக வேண்டும். பேச முகம் கொடுக்காதவளிடம் பேசுவதா?... பேசித்தான் ஆக வேண்டும்.'

அலுவலக சகாக்கள் போய் விட்டார்கள். வாணி, மானேஜர் அறையில். இதுதான் சமயம்.

மெய்யப்பன் மனதில் எண்ணங்கள் புரையோடிக் கொண்டிருந்தபோது, விமலாவின் மேனி முழுவதும் மேக்கப் வகையறாக்கள் படர்ந்து கொண்டிருந்தன. லிப்ஸ்டிக்கை உதட்டில் உரசி விட்டாள். புருவத்திற்கு மை தானம் செய்துவிட்டாள். முன் தலையில் முடிச்சுகளை எடுத்து நெற்றியில் வளையமாகப் போட்டு முடித்து விட்டாள். காது ரிங்குகளை துடைத்துவிட்டுக் கொண்டாள். கைக்

குட்டையை எடுத்து, இடுப்பில் செருகிக் கொண்டாள். அழகாகத்தான் தென்பட்டாள். மஞ்சள் சிவப்பு நிற முகத்தில் ஒளி சிந்திய கண்கள்... டிஸ்டெம்பர் அடித்த அறையில் உள்ள இரண்டு மின்விளக்குகள் போல் பிரகாசித்தன. சப்பாமலும், உப்பாமலும் இருந்த கன்னங்கள். நீளத்துடன் கூர்மையாய் முடிந்த மூக்கு. முத்தங் கொடுக்கத் தயாராய் இருப்பதுபோல் சப்புக் கொட்டும் உதடுகள். தொந்தியே இல்லாத வயிறு — இந்த அவயவ அழகுகள், அவளுக்கு ஒருவிதப் பேரழகைக் கொடுத்துக் கொண்டுதான் இருந்தன.

'ரன்வேயில்' ஓட அவசியமில்லாமல் நேராக மேல் நோக்கிப் பாயும் ஒருவித பம்பர் விமானம்போல், விமலா, நாற்காலியையோ, மேஜையையோ ஆதாரமாகப் பற்றாமல் எழுந்தாள். திடீரென்று காலில் என்ன பட்டதோ தெரிய வில்லை. மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்து, செருப்புக்களை கழட்டியபோது, அவள் அழகை, தன்னை மீறி ரசித்த மெய்யப்பன், அவளிடம் பேசப் போனான். அதற்குள், வெளியே போயிருந்த குமார், மெதுவாக உள்ளே வந்தான். வந்த வேகத்திலேயே பேசினான்.

"டேய்... மெய்யப்பா... எல்லாருக்கும் ஒரு நேரம்... ஒனக்கு மட்டும் வேற நேரண்டா... புறப்படுடா... ஆபீஸ் டயம் முடிஞ்சது தெரியல..."

மெய்யப்பனுக்கு அவனைப் பார்க்க வெறுப்பாகத் தெரிந்தது. தன்னையே கொடுப்பது போலப் பழகிய ஒரு தோழன்மீது - இன்ப துன்பங்கள் அனைத்திலும் பங்கு கொள்ளும் ஒரு இனிய நண்பன்மீது - ஏன் தனக்கு இப்படி வெறுப்பு வருகிறது என்று உள்ளூர விசனப்பட்டு, தன்மீதே வெறுப்புக் கொண்டான். காதலின் சக்தி என்பது இது தானோ... ஒருத்தியை விரும்புவதால், உயிர் நண்பனையே வெறுக்கும் நிலை வரும் என்றால், அந்தக் காதல் தேவைதானா... இவ்வளவுக்கும், இவனிடம் உணர்வுகளைப் பரிமாறிக் கொண்ட அளவு, அவளிடம் பறிமாறிக் கொள்ள வில்லை. கடந்த ஓராண்டு காலமாக நண்பனிடம் முன்னர்

காட்டிய அன்பை, தான் காட்டவில்லை என்பதையும், ஆனால் குமாரோ பாசத்தைக் கொடுத்துக் காட்டினானே தவிர, வாங்கிப் பார்க்க நினைத்ததே இல்லை என்பதையும் நினைத்தபோது, மெய்யப்பனுக்கு விமலாமீது திடீரென்று ஆத்திரம் வந்தது. எப்படி இருந்த என்னை... எப்படி ஆக்கிவிட்டாள்?

மெய்யப்பன், குழம்பிக் கூழானபோது, குமார் அதட்டினான். "டேய்... ஆபீஸ் டயம் முடிஞ்சுடுத்துடா...". மெய்யப்பன் அவனைப் பார்க்காமலே பதில் சொன்னான்:

"ஆனால் என் டயம் முடியல..."

"என்னடா உளறுற...? டேய், என்னைப் பார்த்துப் பேசுடா... உளறாமல் பேசுடா..."

"என்ன பண்றது... உண்மையைச் சோதிக்கிறவங்க... உறுதியாய் இருக்காங்க... இதனால... உண்மையாய் சோதிக்கப்படுறவங்க, உளற வேண்டியதாப் போச்சு..."

குமார், விமலாவை நோட்டமாகப் பார்த்தான். அவள் அலட்டிக்கவில்லை. அவனுக்கு ஆகாத ஒருத்திமீது, மெய்யப்பன், தான் என்ன சொல்லியும் இன்னும் உடும்புத் தனமான நினைப்போடு இருப்பதில் ஆத்திரம் ஏற்பட்டு, குமார் அமைதி கலைத்துப் பேசினான்.

"டேய்... இன்னைக்கி சினிமாவுக்கு ரிசர்வ் பண்ணியிருக்கோம் தெரியுமுல்லா. நீ தெரிய வேண்டிய விஷயத்தை நினைக்கமாட்டே. தெரியக்கூடாததை நினைச்சுக் கிட்டு இருப்பே. புறப்படுடா. சினிமா துவங்கிவிடும்."

மெய்யப்பன் குனிந்த தலை நிமிராமலே பதிலளித்தான். "நீ சினிமாவோட துவக்கத்துக்கு அவசரப்படுறே... நான்... சினிமாவாப்போன ஒரு விவகாரத்தோட முடிவுக்கு அவசரப் படுறேன். மொத்தத்தில் வாழ்க்கை சினிமாவாகி, சினிமா வாழ்க்கையாகி, எல்லாமே அவசரமாய் போய்க்கிட்டு இருக்குது..."

"பிறகு... எதுக்குடா... டிக்கெட் ரிசர்வ் பண்ணச் சொன்னே?"

"நாம்... ரிசர்வ் பண்ணுன எல்லாமே நமக்குக் கிடைக்குதா? நீ பாட்டுக்குப் போடா..."

குமாருக்கு, இப்போதுதான் உறைத்தது. விமலாவை அடிக்கப்போகிறவன்போல், கைகளை ஆட்டிக் கொண்டே பார்த்தான். அழகான ஒரு பெண், அசிங்கமான குணங்களைக் கொண்டிருந்தால், அந்த அழகே கோரமாகி விடும் என்பதைக் கண் முன்னால் கண்டவன்போல், அவளைப் பார்த்தான். பிறகு, மெய்யப்பனைப் பார்த்தான். அவனோ, 'ஒருதலை ராகத்து' கதாநாயகன் மாதிரி, ஒருவேளை அந்த கதாநாயகனைப் பார்த்த பாதிப்பாலோ என்னவோ தலைகுனிந்து, பைத்தியம் போல் சிரித்தான். குமாரால் பொறுக்க முடியவில்லை. கத்தினான்.

"நீ எதுக்கு உட்கார்ந்திருக்கேன்னு எனக்குத் தெரியுண்டா... இப்படி உட்கார உட்கார, ஒரு நாள் ஒரேயடியாய் எழுந்திருக்க முடியாமல் போகப்போற... 'கிட்டாதாயின் வெட்டென மற'ன்னு சொன்னாங்க... இது கிட்டி வந்தாலும், தட்டிவிட்டு மறக்க வேண்டிய விவகாரம்..."

மெய்யப்பன் மேஜைமீது நிலைநாட்டிய கண்களை சிறிது உயர்த்தி, குமாரைப் பார்த்துக் கொண்டே பேசினான். "ஒரு விஷயத்தை மறக்கறதுக்கும்... அதை பல தடவை பல கோணத்துல நினைத்துப் பார்க்கணும்..."

"ஒன்கூட மனுஷன் பேசுவானா...? பேசுறவன் மனுஷனாத்தான் இருப்பானா..."

மெய்யப்பன், விமலாவைப் பார்த்தான். அவள் சர்வ அலட்சியத்தோடு புறப்பட்டுப் போனாள். அவனுக்கு, குமார் மீது என்றுமில்லாத அளவு எரிச்சல் வந்தது. "டேய்! நீ மனுஷன்தானே... பின்ன ஏண்டா என்கிட்டே பேசுறதுக்காக நிக்கிறே? நீ எனக்கு நல்லது செய்யுறதாய் இருந்தால், அது, நீ, இப்போ போகிறதுதான்."

குமாருக்கும் இப்போது ரோஷம் சீண்டியது. மெய்யப்பனையும் விமலாவையும் மாறிமாறிப் பார்த்தான். "கெட்டுப்போறேன்... பந்தயத்துக்கு வாறியாடான்னு கேட்கிற ஒன்கிட்ட என்ன பேசமுடியும்..." என்று தன்பாட்டுக்குச் சொல்லிக் கொண்டான். பிறகு ரிசர்வ் செய்த சினிமா டிக்கெட்டுக்களை மெய்யப்பன் எதிரிலேயே கிழித்துப் போட்டுவிட்டு வேகமாக வெளியேறினான்.

விமலா, இதனால் பாதிக்கப்பட்டதுபோல் தெரிய வில்லை. டம்பப் பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, நாற்காலியை சத்தம் ஏற்படும் வகையில் இழுத்து ஒதுக்கிவிட்டு, கை நகங்களைப் பார்த்தபடியே நடந்து கொண்டிருந்தபோது, மெய்யப்பன் அவளுக்குக் குறுக்காகப் போய் நின்றான். விமலாவுக்கு சிறிது பயம். அதேசமயம், உள்ளே மானேஜரும் வாணியும் இருக்கிற தைரியம். அவனைக் கூராகப் பார்த்தாள். பிறகு "வழி விடுங்க..." என்றாள்.

மெய்யப்பனும் ரோஷத்தோடு பதிலளித்தான். "ஒனக்கு ஒரேயடியாய் வழிவிடத்தான் இப்போ வழி மறிச்சு நிக்கேன் விமலா... நாம ரெண்டு பேரும் எவ்வளவோ காலமாய் மனம்விட்டுப் பழகுன உரிமையில கேட்கிறேன். உரிமைன்னு சொல்றது கூட தப்பு... ஒருவித கடமையில் கேட்கிறேன்... ஏன் இப்போல்லாம் பட்டும் படாமலும் நடந்துக்கிறே? நாம ஆபீஸுக்கு வரும்போதும் போகும்போதும் சேர்ந்தே வருவோம்... சேர்ந்தே போவோம்... இதை மறந்துட்டியா? விமலா... நீ இப்டி... மாறுறதுக்கு நான் என்ன தப்பு செய்தேன்? அதை மட்டும் சொன்னால் போதும்..."

விமலா சிறிது நேரம் நகத்தைக் கடித்தாள். பெருவிரலால் தரையில் வட்டம் போட்டாள். பிறகு, "எனக்கு நேரமாகுது..." என்றாள்.

மெய்யப்பனால் தாள முடியவில்லை. அடம் பிடித்து விட்டு, பிறகு அடிபட்டதும் அம்மாவிடமே அடைக்கலம் தேடும் குழந்தைபோல் மன்றாடினான். "ஒனக்கு என்கிட்ட

பேச இஷ்டம் இல்லைன்னா... குமார் மாதிரியாவது 'ஒன்கிட்ட மனுஷி பேசுவாளான்'னாவது சொல்லு... ஆனால், பேசாமல் மட்டும் போகாதம்மா... ஒன்னைத்தான் விமலா... என் முகத்தைப் பாரு... இது இருக்கிற தவிப்பைப் பாரு... இந்த கண்ணுங்க இருக்கிற கோலத்தைப் பாரு... ஒன்னை... காதலி என்கிற முறையில கேட்கிறேன்... நான் என்ன தப்பு செய்தேன்...? எதுக்காக என்னை இப்படி உதாசீனம் பண்ணுறே... அதை மட்டுமாவது சொல்லு..."

விமலா கடிகாரத்தைப் பார்த்தாள். அதிலிருந்து கண்களை விலக்காமலே பதிலளித்தாள். "நீங்க... எது எதையோ நினைத்துக் கற்பனை பண்ணினால், அதுக்கு நான் பொறுப்பில்லை..."

"ஒன்னை எதுக்கும் பொறுப்பு ஏற்கச் சொல்லல... ஆனால், மனந்திறந்து உண்மையைச் சொல்லுன்னுதான் கேக்கிறேன்... இன்றைக்கு... அலுவலகத்தில வேலை பார்க்கறவங்களும், நடுத்தர வர்க்க மக்களும், யந்திர கதியாய் ஆனதுக்குக் காரணமே அவங்க... மனசை மூடிவச்சு... அதை அழுக வச்சதுதான்... நான் எப்பவோ படித்ததைச் சொல்றேன் கேளு... இதயம் ஒரு பூ... அதில் உண்மை என்கிற காற்று... வாய் வழியாய் வீசணும்... இல்லன்னா... அது அழுகிவிடும். இதயமும் உண்மையும் இரும்பும் காந்தமும் மாதிரி ஒன்றை யொன்று ஈர்க்கணும்... அதனால... நான் கேட்கிறதுல்லாம் உண்மையைச் சொல்லுன்னுதான்..."

விமலா உண்மையைச் சொல்வதுபோல்தான் சொன்னாள். "இந்தக் காலத்துல நெருங்கிப் பழகுறதே தப்பாப் போயிடுது... நான் ஒங்ககிட்டே சகோதர வாஞ்சையோடுதான் பழகினேன். சகோதரி மாதிரிதான் நடந்துக்கிட்டேன்."

மெய்யப்பன், திடுக்கிட்டுப் போனான்.... அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். அது காய வைத்து சிவப்பான இரும்புபோல் தோன்றியது அவனுக்கு. தன் ஆண்மையின் மீதுகூட சந்தேகம் ஏற்பட்டது. இவ்வளவு நாள் மனம்

விட்டுப் பழகிய ஒருத்தியின் மனதில், ஒரு நடுத்தர வயது மனிதன்கூட ஏற்படுத்தக்கூடிய சலனத்தை, தன்னால் ஏற்படுத்த முடியவில்லையோ என்று தன்மீதே சந்தேகப் பட்டவன்போல், தன்னையே பார்ப்பவன்போல், நெஞ்சை நோக்கிக் கண்களை நிலை நாட்டினான். பிறகு கடந்த கால நிகழ்ச்சிகள் மின்வெட்டுபோல் ஒரு கணத்தில் தோன்றி மறைய, அவளின் உடம்பைப் போல், உள்ளத்திற்கும் போட்டிருக்கும் மேக்கப்பைக் கலைக்க விரும்பியவன்போல், நிதானமாக, ஆணித்தரமாகப் பேசினான். அவனைக் கடக்கப்போன விமலா, அவன் குரலுக்கு ஒடுங்கியவள்போல் காது கொடுத்தாள்.

"குட்... வெரி குட்... நீ புத்திசாலிப் பொண்ணு... ஒரு தடவை கடற்கரையில் உன் கையை அழுத்தியதைக்கூட, 'சகோதரன் சகோதரி கையை பிடிக்கக் கூடாதான்'னு கேட்டே... அந்தச் சமயத்தில், 'இப்பவே இப்படின்னா... அப்புறம் எப்படியோன்னு' கேட்டதைக்கூட, 'இப்போ இப்டி இருக்கும் நான், அப்புறம் மாறிடுவேன்'னு மனசுல வச்சுத்தான் சொன்னேன்னு சொன்னாலும் சொல்லுவே... ஒரு தடவை மோகனோட கல்யாணத்துக்கு நாம் ஜோடியாய் போனபோது, இந்த சந்தானம் 'ஒங்களுக்கு எப்போடா' என்று கேட்டதுக்கு, நான் மழுப்பலாய் சிரிக்க, நீயோ, 'நான்தான் பெண்... பேச முடியல... நீங்களாவது நமக்கு அடுத்த வருஷண்டானுன்னு' சொல்லப்படாதான்னு கேட்டே... இப்போ நமக்கு முன்னால் 'ஒங்களுக்கு இன்னொருத்தி... எனக்கு இன்னொருத்தன்...' என்கிற அர்த்தத்துல சொன்னேன்னு சாதிப்பே... ஒரு பெண் காதலியாய் இருந்தாலும், அவள் கழுத்தில் தாலி ஏறும்வரை, ஒருவன், அவளிடம் சகோதரியிடம் பழுகுவதுபோல் பழகணும் என்று நான் கடைப்பிடித்த பண்பையே, இப்போ எனக்கு எதிராய் திருப்பிடுவே... பரவாயில்ல... நம் பழக்கம் போனாலும்... எனக்கு அந்தப் பண்பு போகாது... நான் பண்புள்ளவன்... வேஷம் போடத் தெரியாதவன்... சமயத்துக்கு ஏற்றபடி பழக்கத்துக்கு புதுப்புது அர்த்தம் கொடுக்கிறவன் இல்ல..."

விமலாவுக்கு, அவன் தன்னைத்தான் குத்திக் காட்டுகிறான் என்பது புரிந்ததில் குழப்பம், கோபமாகியது... வார்த்தைகளால் குத்தினாள்.

“நான் எப்பவும் சலனப்பட்டதில்லை. அப்படியே வாதத்துக்காக சலனப்பட்டதாய் வைத்தாலும்... அந்த சலனத்தில் இருந்து மீள எந்தப் பெண்ணுக்கும் உரிமையுண்டு...”

“நிச்சயமாய்... ஒன் வழியை மாற்றிக் கொள்ள ஒனக்குப் பூரண உரிமையுண்டு... அதை... நான்... தடுக்கப் போறதில்ல.”

“நீங்க தடுக்க நினைத்தாலும் முடியாது... உங்களைக் கல்யாணம் செய்துக்கப் போறதாய், நான் சொன்னது கிடையாது.”

மெய்யப்பன் யோசித்தான். அவள் சொன்னது ‘டெக்னிக்கலாக’ சரிதான். அம்மாவிடம், பையன், நான் ஒன் மகன் என்று சொல்ல வேண்டியதில்லை. அப்பாவிடம், ‘நீதானே என்னை பெத்தேன்’னு கேட்க வேண்டியதில்லை. அதுமாதிரிதான், மனமொத்து, கைகோர்த்துப் பழகும் சமவயது ஆண், பெண், காலம் கனியும்வரை கல்யாணத்தைப் பற்றிப் பேச வேண்டியதில்லை. அதுவும், ஆபீஸ் பிரச்சினைகளைப் பற்றி பேசவே நேரம் போதாத போது... மானேஜரிடம் இருந்து, அவள் எப்படி எப்படி தப்பிக்க வேண்டும் என்பதற்குத் திட்டம்போடவே நேரம் இல்லாத சமயத்தில், கல்யாணப் பேச்சு வரவில்லைதான். இப்போ, அதையே ஆதாரமாகக் காட்டி, அவள் ‘காதல் இல்லை’ என்கிறாள். ‘டெக்னிக்கலாக’ சரிதான்.

விமலா, அவனை மோதிக் கொண்டும் போகத் தயார் ஆனவள்போல், கைகடிகாரத்தைப் பார்த்துவிட்டு, முண்டியடித்தாள். சிறிது வழிவிட்ட மெய்யப்பன், அவளைப் பார்க்காமலே அரற்றினான். “இன்னும் ஒரே ஒரு வார்த்தை மேடம்.... என்னை மாதிரி பல வெகுளிங்க இருக்காங்க... வள்ளுவர் சொன்னது மாதிரி, ‘கண்ணோடு

கண்ணோக்கினால் போதும்... வாய்ச்சொல்கூட தேவையில்லன்னு' நினைக்கிற பல அப்பாவிங்க இருப்பாங்க... இன்னும் சாகாமல் நாட்ல இருக்காங்க... தயவு செய்து அவங்ககிட்டயும் ஒங்க சகோதர பாசத்தைக் காட்டிடாதீங்க... நீங்க போகலாம்..."

'நீ என்ன போகச் சொல்றது' என்பதுபோல், விமலா, மீண்டும் தன் மேஜைக்கு வந்து, டிராயரை இழுத்துப் பார்த்துவிட்டு, தோளை ஆட்டிக் கொண்டே, நடந்து மறைந்தாள்.

மெய்யப்பன் ஸ்தம்பித்து நின்றான். புறமுதுகு காட்டிச் செல்பவளால் புறக்கணிக்கப்பட்டோம் என்ற வாதை; ஏமாற்றப்பட்டோம் என்ற ஆத்திரம்; எள்ளி நகையாடப் பட்டோம் என்ற ஆவேசம். துன்பமின்றி, இன்பமறியாத தன் வாழ்க்கையில், தூய்மையான உறவாகப் போற்றிக் காக்கப்பட்ட பேருணர்வு பெயரில்லாமல் அழிந்ததில், அழியப்போவது போல் அவன் உடம்பெங்கும் ஆடியது. கண்கள் எரிந்தன. நெற்றிப் பொட்டுக்கள் தெறித்தன. என்ன செய்வது என்று புரியாமல் - எங்கே இருக்கிறோம் என்பது தெரியாமல் அவன் தவித்துக் கொண்டிருந்தபோது _

மானேஜர் அறையில் இருந்து வாணி வெளியே வந்தாள்.

மெய்யப்பனைப் பார்த்ததும், அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. 'அக்கா அக்கா' என்று வாஞ்சையோடு பழகும் அவனைப் பார்த்த கண்கள் நீர் சொரிந்தன. அடங்கிப் போனவள் போல், வெளியே வந்தவள், அவனைப் பார்த்ததும், அடங்க முடியாமல் அழுதாள். இரண்டு கைகளையும் மேஜையில் ஊன்றிக்கொண்டு விம்மினாள். கண்களே திரவமாகிச் சொட்டுச் சொட்டாய் விழுவதுபோல், நீர்த்துளிகள் மேஜையில் விழுந்தன. மெய்யப்பனின் அன்பான ஆறுதலை எதிர்நோக்கி நிற்பவள்போல், அவள் விம்மலுடன் அழுது, அவனை ஏக்கத்தோடு பார்த்தாள். ஆனால், மெய்யப்பனுக்கு அவள் வித்தியாசமாக நின்றாள் என்றுதான் தெரிந்ததே தவிர, ஏன்,

எப்படி என்று புரியவில்லை. தன்னைச் சுற்றிய சூன்யத்தில் அவளும் சூன்யப்பட்டவள்போல் தெரிந்தது. கண்ணீரை, கண்கள் பார்த்தாலும், அதன் காரணம் கட்புலனுக்குள் போகவில்லை.

திடீரென்று துள்ளிக் குதித்து வெளியே ஓடினான். விமலாவின் உதாசீனப் போக்கின் காரணத்தை முழுக்க முழுக்கக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற வேகத்தோடு வெளியேறியவன், அலுவலகக் காம்பவுண்ட் சுவரைத் தாண்டியபோது, அவனைத் தாண்டி ஒரு ஸ்கூட்டர் போனதைப் பார்த்தான்.

முன்னிருக்கையில் யாரோ ஒரு ஜடாமுடி வாலிபன்... பின்னிருக்கையில் விமலா... அவன் தோளைப் பிடித்துக் கொண்டு, முதுகில் முகம் சாய்த்துப் போன விமலா...

அருகே இருந்த ஆட்டோ ரிக்ஷாவில் ஏறினான். டிரைவர் மீட்டரைப் போட்டுவிட்டு, அவனைக் கேள்வியோடு பார்த்தபோது, மெய்யப்பன், என்ன சொல்வதென்று புரியாமல் தவித்தான். "நேராப் போங்க..." என்று சொல்லிவிட்டு, அவன் குறுக்காகச் சாய்ந்தான்.

## 4

ஸ்கூட்டர்காரர், உழைப்பாளி சிலையருகே பிரேக் போட்டபோது, மெய்யப்பன் எழிலகத்திற்கருகே ஆட்டோவை நிறுத்தச் சொன்னான். பத்து ரூபாய் நோட்டை டிரைவரிடம் நீட்டிவிட்டு, அவர் சில்லறையைத் தேடிய போது, இவன் உழைப்பாளி சிலையருகே வந்து விட்டான். அந்த புதுஜோடி கடல் மண்ணில் கைகோர்த்து நடப்பது

அந்த மெலிந்த இருட்டிலும் அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. இதற்குமேல் போக வேண்டியதில்லை என்பதுபோல், கால்களை மாற்றிப் போடப் போனான். இவ்வளவு தெரிந்தது போதும் என்பதுபோல், கண்களை மூடிப் பார்த்தான். ஆனால், அவனுக்கே புரியாத ஒரு ஆவேசம் அவனைக் கடல் மண்ணைப் பார்த்துத் தள்ளிவிட்டது. வேகமாக நடந்தான். அவர்களைப் பின்தொடர்வது கேவலமான காரியம் என்று நினைத்து, சிறிது நிதானித்தான். அதேசமயம், இதற்கு மேல் கேவலம் இல்லை என்பதுபோல், கேவலப்பட்டவன் போலவே நடந்தான். விமலாவின் பிடியில் சிக்கிய ஒரு அப்பாவியை மீட்கவேண்டும் என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு, ஏமாற்றப்பட்ட ஆவேசத்தில், கால்களைத் தூக்கிப்போட்டு, கைகளால் அவற்றைப் பிடிப்பவன்போல் நடந்தான்.

விமலாவும், அவளது 'உள்ளங்கவர் கள்வனும்' ஒரு படகுக்கு முன்பக்கமாகப் போய் உட்கார்ந்தபோது, மெய்யப்பன் பின்பக்கமாக உட்கார்ந்து படகோடு படகாக தன்னைக் குறுக்கிக் கொண்டான். சீ... இப்படியா நாம் நடந்து கொள்வது என்பது போல் அதட்டிய மூளையை அடக்குகிறவன்போல் தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கொண்டான். இப்படித்தான் நடந்து. கொள்ளவேண்டும் என்பதுபோல் பேசிய மனதைத் தட்டிக் கொடுப்பவன் போல், வலது கையை விரித்து, மார்பை அழுத்திக் கொண்டான். படகிற்கு அந்தப் பக்கம் பல்வேறு அரவணைப்புச் சத்தங்களுக்குப் பிறகு, வாய்ச் சத்தம் வார்த்தைகளாகக் கேட்டது.

"விமல்... நான் ஒன்னை ஒண்ணு கேட்பேன்... தப்பாய் நினைக்க மாட்டியே..."

"என்ன டார்லிங்... நீங்க இப்படி பூடகமாய் பேசுறதைத் தான் தப்பாய் நினைக்கத் தோணுது. என்றைக்கும் ஒளிவு மறைவு இல்லாம பேசணும்... இதயமும் உண்மையும் இரும்பும் காந்தமும் மாதிரி இயங்கணும்... மனசை மூடி மூடி வச்சால் அது அழுகிப்போயிடும்."

"அடேயப்பா... தத்துவம் பேசுறியே. யார் சொல்லிக் கொடுத்தது?"

"அப்படின்னா எனக்கு சுய புத்தி இல்லன்னு சொல்றீங்களா?"

"நோ... நோ... ஒன் பேச்சு ரசிக்கும்படியாய் இருக்குதுன்னு சொல்ல வந்தேன். ஒன்னை மாதிரி நயத்தோட என்னால பேச முடியல..."

"நான் நயத்தோட சொல்லல... பயத்தோட சொல்றேன். நாம இவ்வளவு காலமாய், அதான்... ஒரு மாதத்துக்கும் மேலாய் அன்னியோன்னியமாய் பழகுன பிறகும், நீங்க சொல்றதை நான் தப்பா நினைப்பேன்னு ஒங்களுக்கு ஒரு எண்ணம் வருது பாருங்க... அதுதான் தப்பு... இதுல இருந்து, என்ன தெரியுதுன்னால், நான் உங்களை நினைக்கிற அளவுக்கு நீங்க என்னை என்னை நினைக்கல..."

"மறந்தால்ல நினைக்கறதுக்கு."

"பரவாயில்லியே... அழகாய்த்தான் இருக்கீங்கன்னு நினைச்சேன்... அழகாயும் பேசுறீங்களே... சரி... விஷயத்தை சொல்லுங்க..."

"இப்போ வேண்டாம்... நாளைக்கு வச்சுக்கலாம்."

"ஒவ்வொருவரும் அன்றைக்குன்னு வாழணும். நீங்க சொல்லாட்டால், ஒங்களை கைவிடப்போறதில்லன்னு சொல்லமாட்டேன். நிஜமாவே ஒங்க தோள்ல என் கையை எடுக்காமல் இருப்பேன்... உம் சொல்லுங்க..."

"நான் ஸ்கூட்டரை வச்சுட்டு காத்து நின்னேனா... நீ வரலியா... உடனே ஒங்க ஆபீஸ் ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தேன். ஒன்கூட வேலை பார்க்கிற ஒரு குறுந்தாடிக் காரன்... கண்ணராவித்தாடி... அதைச் சரியாக்கூட அவன் படிய வைக்கல... ஒன்கிட்ட மனம்விட்டு எதையோ பேசினான்."

விமலா கலகலன்னு சிரித்தாள்.

"ஓ... அவனா... அவன் பேரு மெய்யப்பன். சரியான பித்துக்குளி; என்னைக் காதலிக்கறானாம்... கன்னா பின்னான்னு உளறுறான்."

"அவனைப் பார்த்தால் பித்துக்குளி மாதிரி தெரியலியே."

"அப்படின்னா... நான் பித்துக்குளியா?"

"என்ன இப்டிக் கோபப்படுறே?"

"பின்ன என்ன ரவி... பூடகமாய் பேசுறீங்களே... இதோ என்னைப் பாருங்க... நல்லாப் பாருங்க... இந்த முகத்துல இருக்கிற தவிப்பப் பாருங்க... நாம வருங்கால கணவன் மனைவி; நமக்குள்ளே உடம்பாலும், உள்ளத்தாலும் ஒளிவு மறைவு கூடாது... என்மேல சந்தேகம் வந்துட்டால், சொல்லுங்க... இப்பவே விலகிக்கிடலாம்... ஆனால், அப்போவும் நான் உங்களை மறக்க மாட்டேன். கழுத்துல சுருக்குப் போட்டாலும் போடுவேனே தவிர, இன்னொருத்தனை தாலிபோட விடமாட்டேன்... ஆனால் ஒரே ரிக்வெஸ்ட்... நான் இறந்துட்டாலும்... என் பிணத்தை நீங்கதான் தூக்கணும்... இன்னொருத்தர் கைபடக்கூடாது... நான் தமிழ்ப் பெண்... ஸார்..."

"அன்பு இருக்கிற இடத்துலதான் பொறாமை இருக்குமுன்னு ஏன் ஒனக்குத் தெரிய மாட்டேங்குது...? இனிமேல் அந்த பித்துக்குளி... ஒன்கிட்ட வாலாட்டினால் சொல்லு... என்கிட்ட ஆளுங்க இருக்கு... காலை மட்டும் எடுக்க ஒரு ரேட்... காலோடு கையையும் எடுக்க ஒரு ரேட்... என்ன சொல்ற...?"

"அய்யோ... எறும்பை மிதிச்சால்கூட... அழுகிற டைப் நான்... இந்த மாதிரியா பேசுறது...? இதுக்குத்தான், நான் உங்ககிட்ட எனக்கு வேற கம்பெனிலே வேலை பாருங்கன்னு சொல்றேன்... அந்த ஆபீஸ்ல இருந்தால்தானே... அவன் முகத்துல விழிக்கணும்...? அந்த வேலை எப்போ கிடைக்கும் ரவி..."

"எந்த வேலை?"

''ஃபாரீன் போகக்கூட சான்ஸ் உண்டுன்னு சொன்னீங்களே... அந்த வேலை..."

"ஓ! அதுவா... ஒன் மன்த் டயம் கொடு... அப்புறம் நீ... ஏர்கண்டிஷன் அறையில் இருப்பே..."

"நான் ஒண்ணும் ஏர்கண்டிஷன் அறைக்கு ஏங்கல... சீதைக்கு, ராமன் இருக்கும் இடம்தான் அயோத்தி... எனக்கு இந்தச் செல்ல ரவி இருக்கிற இடம்தான் ஏர்கண்டிஷன்..."

"அப்படின்னா... இன்னும் நெருக்கமாய் வா... ஒனக்கு எதுக்கு சிரமம்... நானே நெருங்குறேன்... நெருக்குகிறேன்..."

மெய்யப்பனால் இருக்க முடியவில்லை. அந்தக் குளிர் காற்றிலும், கடல் மண் சுடுவது போலிருந்தது. புதை மண்ணாய், அவனை கீழ் நோக்கிக் கொண்டு போவது போலிருந்தது. படகைப் பிடித்துக் கொண்டே எழுந்தான். பார்வையே எதிரியான வேதனையில் பாய்ந்து நடந்தான். காதுகளே தேவையில்லை என்பதுபோல், அவற்றை இரண்டு கைகளாலும் அடைத்து, கால்களால் தாவினான். ஆங்காங்கே இருட்டு உருவங்களாய் இருந்த ஜோடிகள்தான், அவனை 'வஸ்தாது' என்று நினைத்தவர்கள்போல், தத்தம் உடம்பை விலக்கிக் கொண்டார்கள். மெய்யப்பனோ விலக்க வேண்டிய நினைவை விலக்க முடியாமல், அந்த நினைவே ஒரு பேய் நினைவாக, விரைந்து கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்திலும், அவனுக்கு ஒரு சுகக் கற்பனை ஏற்பட்டது. 'அத்தான், இந்த ரவி என்னோட அண்ணன்... நீங்க... என்மேல் வைத்திருக்கிற காதல், எனக்கு மட்டுமல்ல... இவனுக்கும் தெரியும்... உங்களை சீண்டிவிட்டு, வேடிக்கை பார்க்க வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு நாடகம் போட்டோம். நம்பி விட்டீர்களா... ஆண்புத்தி அவசரப்புத்தி என்பதைக் காட்டிவிட்டீர்களே' என்று நாளைக்கு, சீ... நாளைக்கில்ல... இப்போதே ஓடி வந்து, பல் தெரியச் சிரித்து, அவன் தோளைத் தழுவிக் கொள்வதுபோல் ஒரு சுகபோக எண்ணம்.

அந்த எண்ணத்தைத் தடுப்பதுபோல் 'எங்களைப் பார்! நாட்டில், தேனும் பாலும் ஓடுகிறதா' என்று கேட்காமல் கேட்பதுபோல், ஒரு நொண்டிக் கிழவர், சாலையைக் கடக்க முடியாமல், ஒற்றைக் காலோடு, கையில் உள்ள கட்டையை கேள்விக்குறியாக வளைத்தது போல வைத்திருக்க, வேர்க்கடலை விற்கும் ஒரு பிஞ்சுப் பையன், அவன் ஏதாவது வாங்குவானா... என்று வினாக்குறியுடன் பார்க்க, தன்னோடு வந்த ஒருத்தியை - அவள் மனைவியோ மற்றவளோ, ஒருத்தன் கண்மண் தெரியாமல் அடிக்க, அந்த அப்பாவிப் பெண், அழுதால் இன்னும் அடிப்பானே என்பதுபோல், அழாமல் அழ - இந்த யதார்த்தத்தின் தாக்கத்தால் தாக்கப்படாமலே, அவன் தலையைப் பிடித்துக் கொண்டான்.

இந்த ரவி, அவளுடைய அண்ணன் அல்ல... அப்படி இருக்கவும் முடியாது... அவள் குடும்பத்தைப் பற்றி அவனுக்குத் தெரியும். இவன் ஒரு தடவை அலுவலகத்திற்கு 'பர்சேஸ் ஆர்டர்' வாங்க வந்தவன். அவளை... பர்சேஸ் செய்துட்டான். தப்பு... பர்சேஸ் செய்ய வந்த பர்சேஸ்காரனை இவள் பர்சேஸ் செய்துவிட்டாள். ஆகையால், இது போலி நாடகமல்ல... நிஜ நாடகம். இதில் நிரந்தரக் கதாநாயகியாக இருக்கப்போவது விமலா ஒருத்திதான்... கதாநாயகர்கள் மாறிக் கொண்டிருப்பார்கள்... இன்னும் சொல்லப் போனால், அவனைப் பொறுத்த அளவில், ஆடவர்கள் கதாநாயகர்கள் அல்ல...

ரவியையும் விமலா உதறி விடுவாள் என்ற எண்ணம் அவனுக்கு ஒரு எதிர்மறை ஆறுதலைக் கொடுத்தது. ஒரு கணந்தான். மறுகணம், தனது கற்பனைகளும், கட்டிய எதிர்கால வாழ்வு நினைப்புகளும், ஆறுதலை நாகமாய், அவனை அச்சுறுத்த, அவன் தலைவிரி கோலமாக நடந்து கொண்டிருந்தான்.

# 5

கோடம்பாக்கத்தில் உள்ள வீட்டிற்கு வந்து, முன் போர்ஷனில் இருந்த தன் அறையைத் திறந்து, கதவை உட்புறம் தாளிட மறந்தவனாய், விளக்குப்போட வேண்டும் என்று மறந்தவனாய், கட்டிலில் மல்லாந்து விழுந்தான். பழைய நினைவுகள், அவன்மேல் அப்புவது போல் பயங்காட்டின. உடனே அவன் குப்புறப் படுத்தான். கட்டில் விளிம்பில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, தரையைப் பார்த்தபோது, கொத்தி விட்டதுபோல் குண்டுங் குழியுமான ஒரு தரைப்பகுதி கண்ணில் தட்டியது.

நிலத்தைக் கொத்தினால் பயிர் விளையும்... மனதைக் கொத்தினால்... அவன் அவளை நினைவிலிருந்து ஒதுக்க முடியாமல், அவளை நிந்திப்பதாய் நினைத்து, தன்னையே கொத்தி, தன்னையே தான் தின்று, தனக்குத்தானே அசைபோட்டுக் கொண்டான்.

கிராமத்தில் எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவிட்டு, எப்படியோ சென்னைக்கு வந்து, ஒரு மளிகைக் கடையில் எடுபிடியாக வேலையில் சேர்ந்து, அருகே இருந்த டைப்ரைட்டிங் பயிற்சிக் கூடத்தில் ஒரு வருட காலம் பயின்று, கடை வாடிக்கையாளர் ஒருவரின் உதவியால் இந்த கம்பெனியில் சேர்ந்த பிறகு, அவன் பழையதை மறக்காமலும், புதுமையை மறுக்காமலும் வாழ்ந்தபோது, கம்பெனி சம்பந்தமாக புரசைவாக்கம் போனான். அப்போது, 'நீங்க... சிவகாமி பாட்டியோட பேரன்தானே...'' என்று சொல்லிக் கொண்டே, இந்த விமலா குறுக்கே வந்து நின்றாள். அவன் அவளை ஆச்சரியமாகப் பாத்தபோது, "எனக்கும் ஒங்க ஊர்தான்... தெற்குத் தெருவுல 'காஞ்சான் முத்து'ன்னு சொல்லு வாங்கல்ல... அவரோட மகள்..." என்று சொல்லிவிட்டு, அவள் மலங்க மலங்க விழித்த போது, மெய்யப்பன் பள்ளிக்கூடத்தில் ஏனோ தானோவாகப் பார்த்திருந்த அந்தச் சிறுமியை, இவளுடன் ஒப்பிட்டுப்

பொருத்தம் பார்ப்பதுபோல் பார்த்தபோது, அவள் வாய் நிற்காது பேசிக்கொண்டு போனாள்.

சின்ன வயதிலே அம்மாவை இழந்த அவள், சித்திக் காரியின் கொடுமை தாங்க முடியாமல், சென்னைக்கு ஓடி வந்ததையும், ஒரு வீட்டில் 'கௌரவ' வேலைக் காரியாகப் பணியாற்றியதையும், பிறகு அங்கிருந்து வெளியேறி, லாட்டரி சீட்டுக்கள் விற்று வருவதையும் தெரியப்படுத்தினாள். அவள் அருகேயுள்ள ஒரு மேஜையில் விதவிதமான லாட்டரிச் சீட்டுக்களை அப்பப்போ பார்த்துக் கொண்டே பேசினாள். அவள் சொல்வதை இரக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்த மெய்யப்பன், 'என்னை ஒங்களுக்கு அடையாளம் தெரியல... ஆனால்... எனக்கு விபரம் தெரிஞ்சதுல இருந்து உங்க முகம்... என் கண்ணுக்குள்ளேயே நிற்குது' என்று அவள் உருக்கமாகச் சொன்னபோது, அவள் கண்களை உற்று நோக்கினான். அவன் முகம் அவள் கண்ணுக்குள் நின்றது. அன்று நின்றது... இன்றுதான் போனது... கண்ணில் இருந்தல்ல... கண்ணோடு...

எஸ்.எஸ்.எல்.சி. தேறாதவளைப் பரீட்சை எழுதச் சொல்லி தேற வைத்தான். அவ்வப்போது பணங்கொடுத்தான். டைப்ரைட்டிங் கூடத்தில் படிக்க வைத்தான். பிறகு தான் வேலை பார்த்த கம்பெனியிலேயே ஓய்வுபெறும் தருணத்தில் இருந்த மானேஜரின் கையில் காலில் விழுந்து, அவளை டைப்பிஸ்டாகச் சேர்த்தான்... 'மெய் (அப்படித்தான் அழைப்பாள்) ஒங்க அறைக்குப் பக்கத்திலேயே... எனக்கும் ஒரு அறை பாருங்க... ஒங்களை பார்க்காத சமயம், பயனில்லா சமயமாய் தோணுது' என்பது மாதிரி, அவள் 'டயலாக்' பேசியபோது, அவன் உள்ளூற மகிழ்ந்து போனாலும், அடையாறில் உள்ள ஒரு பெண் விடுதியில், அவளைச் சேர்த்தான். அவனுக்காக அவள் வழங்கிய அத்தனை சந்தர்ப்பங்களையும் அவன் விட்டுக் கொடுத்தான். அவளோ ஒரேயடியாக விட்டுவிட்டாள். அவள் குழைந்தபோதும், சிணுங்கியபோதும், 'உங்களுக்கு வாணிதான் உசத்தி' என்று பொய்க்கோபம் கொண்டபோதும், அவன் ஆனந்த

அதிர்ச்சியில் மூழ்கினான். இப்போது ஆனந்தம் போய் விட்டது. அதிர்ச்சிதான் நிற்கிறது.

மெய்யப்பன் நடந்ததை நினைத்து நினைத்து, சுய நினைவில்லாதவன் போலவே படுத்துக்கிடந்தான். தெருவே உறங்கிப்போன சுரணை இல்லாமல், முடங்கிக் கிடந்தான். நினைவு முடங்கி, நெஞ்சம் முடங்கி, எல்லாமே முடங்கியதுபோல், அவன் போர்வையைத் தலை முழுவதும் மூடியபடி, லேசாகக் கண்மூடியபோது, ஒரு உலுக்கல் சத்தங் கேட்டுக் கண்விழித்தான். பிறகு, எந்தவித சலனமுமில்லாமல் அப்படியே கிடந்தான்.

வீட்டுக்குள்ளே, இன்னொரு போர்ஷனில், ஒரு பெண், "அடிக்காதண்ணா... அய்யோ அண்ணா... தெரியாமல் உடைச்சிட்டேன் அண்ணா..." என்று ஓலமிடுவதும், அந்த ஓலத்திற்குத் தாளம் சேர்ப்பதுபோல், 'டப்பு டப்பென்று' சத்தங் கேட்பதும் அவன் காதுக்குள் போயின.

காலில் ஊனங் கொண்ட ஒரு இளம் பெண் பக்கத்துப் போர்ஷனில் கணவனால் ஒதுக்கி வைக்கப்பட்ட பிறகு, அண்ணன் வீட்டில் வந்து வாழ்கிறாள். வாழ்கிறாளோ... அல்லது ஒரு கவிஞர் சொன்னதுபோல், வாழ்வதுபோல் சாகிறாளோ...

## 6

மறுநாள் மெய்யப்பன் புதிதாக அலுவலகத்திற்குப் போவதுபோல் போனான். சாதகமாகத் தீரும் என்று நினைத்த விவகாரம் பழையதாய் போனதில், அவனுக்கு அனைத்தும் புதிதாகத் தெரிந்தன. "வணக்கம் தலைவரே" என்று வழக்கம்போல் சிரித்துக்கொண்டே கும்பிடு போட்ட பியூன் முனுசாமி, அவனை அன்றுமட்டுமல்ல, அத்தனை

நாளும் கிண்டல் செய்து கொண்டு இருக்கிறான் என்று நினைத்து, அவனை முறைத்துக் கொண்டே, இருக்கையில் அமர்ந்தான்.

குமாரும் வந்துவிட்டான். எப்போதும் வலியப் பேசும் அவனும், அன்று அவனிடம் பேசவில்லை. பிணக்கு ஏற்படும் போதெல்லாம்கூட, முதலில் பேசும் அவன்கூட, ஒரேயடியாய் கணக்கை முடித்துக் கொண்டவன்போல், அவனை ஏறிட்டுப் பார்க்கவில்லை... 'என்ன தம்பி... உடம்பு ஏன் இளைச்சிருக்கு' என்ற வார்த்தையையே குட்மார்னிங்கிற்குப் பதிலாகப் போடும் வாணியும், அவனைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

விமலா, அரைமணி நேரம் தாமதமாக வந்தாள். வரும்போதே "எனக்கு ஏதும் போன் வந்ததா" என்று கேட்டுக்கொண்டே வந்தாள். அவள் வருவது வரைக்கும் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஏதோ எழுதிக் கொண்டிருந்தவனுக்கு, அவளைப் பார்த்ததும், இதயம் அடித்துக் கொண்டது. மூச்சு மூக்கிற்கு வராமல், வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையே அல்லாடிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு தாபம். எதையோ ஒன்றைப் பறிகொடுத்த ஏக்கம்... பைத்தியக்காரனாக்கியவளைப் பக்கத்திலேயே பார்க்க வேண்டிய தலைவிதி ஏற்பட்டதைச் சுமக்க முடியாத தவிப்பு... கொலையைவிட, தற்கொலையே சாலச் சிறந்தது என்ற சுய இரக்கம்.

ஆனால், விமலாவோ சிரிப்பும் கும்மாளமுமாக இருந்தாள். மத்தியானத்திற்குள் இரண்டு 'டெலிபோன் கால்கள்' வந்தன. டெலிபோன் குமிழை உதடோடு வைத்துக்கொண்டு, தான் பேசுவது பிறர்க்குக் கேட்கக்கூடாது என்பதுபோல், இடது கையை காதோரம் வைத்து மறைத்து, வலது கையை மூக்கோடு சேர்த்து அணைத்து, அவள் பேசுவதுபோல் கொஞ்சினாள். கொஞ்சுவதுபோல் பேசினாள். தலையைக் கவிழ்த்து, தன்னைக் கவிழ்த்துக் கொண்ட மெய்யப்பன், தற்செயலாக ஏறிட்டுப் பார்த்த

போது, விமலா டெலிபோன் குமிழில் உதட்டைக் குவித்து ஊதிவிட்டு ரீஸிவரை வைத்தாள்.

தாள முடியாத வலி மயக்கத்தைக் கொடுப்பதுபோல், மீளமுடியாத துன்பம் மெய்யப்பனுக்கு, எண்ணங்களே இல்லா யந்திர நிலையைக் கொடுத்தது. எதையோ எழுதினான். எழுதிய எதையோ அடித்தான். ஒரு ரிஜிஸ்டரை வைத்துவிட்டு இன்னொன்றை எடுத்தான். அதையும் போட்டுவிட்டு ஸ்டோர் ரூமிற்குப் போனான். அங்கிருந்து கொண்டு வந்த ஒன்றை மீண்டும் அங்கேயே கொண்டு போய் வைத்தான். பியூன் கொண்டு தந்த காபியைப் பருகுவதாக நினைத்துக் கொண்டு, இன்னொரு வெறும் டம்ளரைக் கடித்தான். சகாக்கள் அவனைப் பரிதாபமாகவும், விமலாவைக் கோபமாகவும் பார்த்துக் கொண்டார்கள். குமாரும், சரியான மனோநிலையில் இல்லாதவன்போல், எழுந்து எழுந்து போனான்.

மாலை மயங்கி கசங்கியது. பெரும்பாலும் எல்லோரும் போய்விட்டார்கள்.

வாணி ஓசைப்படாமல் எழுந்திருக்கப் போனாள். அதற்குள் உள்ளே இருந்த மானேஜர், "வாணி... வாணி..." என்றார். அவளால் நிற்கவும் முடியவில்லை. உட்காரவும் முடியவில்லை. "வாரனே் ஸார்" என்று சொல்லிக் கொண்டே, மேஜையில் கையூன்றி, கையில் தலை ஊறி, கண் சிவக்க உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

'அலட்சியப் படுத்துபவளை அலட்சியப்படுத்து' என்று தனக்குத்தானே ஆயிரந்தடவை யோசனை சொல்லிக் கொண்டிருந்த மெய்யப்பன் எழுந்தான். விமலா போனதும் மனதில் ஏதோ ஒரு வைராக்கியம் ஏற்பட்டது. நாளையில் இருந்து அவள் அங்கே இல்லாததுபோல் நினைத்துப் பார்க்கவும் மனதை பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஒரு உறுதி பிறந்தது. அவளிடமிருந்து, தான்தான் தப்பித்தது போலவும், அதுவும் நன்மைக்கே என்பது போலவும், வலி கொடுத்த இதயத்திற்குள் ஒரு எண்ணத்தை

வலிய விட்டுக் கொண்டான். அப்போதுதான் அவனுக்கு வாணி என்ற ஒருத்தி அங்கே இருப்பதும் அவள் நேற்று அழுததும், இன்று அவனோடு பேசாததும் அவனுக்குப் புலப்பட்டது.

மெள்ள அவளருகே போனான். அவளோ, இப்போது 'மெய்யப்ப' நிலையில் இருந்தாள். அருகில் போனவன், "ஐ ஆம் ஸாரி... நேற்று நீங்க அழுததைக்கூட கேட்கல... அக்கா ஒருத்தி... ஒருவனை அழ வைக்கும்போது... அந்த ஒருவன் இன்னொருத்தியோட அழுகையை கேட்க முடியாமல் போயிடுறான்... என்னை மன்னிச்சிடுங்க... என்ன அக்கா விஷயம்...?" என்று தழுதழுத்த குரலில் அவன் பேசியபோது, வாணியால் தாள முடியவில்லை... தாங்க முடியவில்லை. கரங்களால் முகத்தைக் மறைத்துக் கொண்டு விம்மினாள். அழுகை ஒன்றுதான் அந்தரங்கத் துணை என்பதுபோல், விரல்களெல்லாம் நீரால் நனைய அவள் விம்மி வெடித்தாள். மெய்யப்பன் அவள் கைகளை ஆதரவாகப் பிடித்து, "என்னக்கா இது... ஏன் இப்படி அழுறீங்க... அதுவும் நான் இருக்கும்போது..." என்று கம்பீரமாகப் பேசினான்.

வாணி அவனைப் பரிதாபத்துடன் பார்த்துக்கொண்டே, "இந்தக் கம்பெனில... ஆபீஸ் வேலையை மட்டுமா பாக்கச் சொல்றாங்க...? அவரு இருந்தால் எனக்கு இந்த நிலைமை வருமா..." என்று சொல்லிவிட்டு, மெய்யப்பனின் விலகிய கையை பிடித்துக் கொண்டே அழுதாள்.

"என்னக்கா இது... எனக்கு நீங்க ஒரு தாய்மாதிரி. நீங்களா இப்படி ஒரு குழந்தை மாதிரி அழுகிறது. என்னக்கா விஷயம்...? சீக்கிரமாச் சொல்லுங்க... எதுவாக இருந்தாலும் சொல்லுங்க..."

"தம்பி, நான் எப்படி வாழ்ந்தவள்னு ஒனக்குத் தெரியும். ஒரு விதவைப் பெண்... அதுவும் சொத்துப் பத்தில்லாத ஒருத்தி, கூப்பிட்டால் வந்துடுவான்னு ஒரு நெனப்பு வருது பாருங்க... அதைத்தான் என்னால... தாள முடியல... தம்பி."

"இன்னும் நீங்க சமாச்சாரத்துக்கு வரலக்கா..."

"அவரு உயிரோட இருக்கது வரைக்கும்... இந்த மானேஜர், என் வீட்டுக்கு வந்திருக்கார். தங்கச்சி, தங்கச்சின்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்லுவார். அப்படிப்பட்ட மனுஷன்... நேற்று என் கையை வலுக் கட்டாயமா பிடிச்சுக்கிட்டு... 'நாளைக்கு... சினிமாவுக்குப் போகலாமான்'னு கேட்கிறார். என்னை சினிமாக்காரியா நினைச்சுட்டார் பாரு... நான் அந்த அதிர்ச்சியிலயும், நிதானமாய், 'நான் ஒங்களை என் கூடப் பிறக்காத அண்ணனா நினைக்கேன்'னு சொல்லிப் போனேன். இதை விட ஒரு பெண்ணு எப்படி பதில் சொல்ல முடியும்...? ஆனால், இன்னைக்குக் காலையில் வந்ததும், 'டிக்கட் ரிசர்வ் பண்ணிட்டேன்'னு சொல்றார்... இப்போ நான் புறப்படப் போனதைத் தெரிஞ்சுகிட்டு கூப்பிடுறார்... போனால், நான் புனிதமாய் நினைத்துக் காப்பாற்றுவது போகும்... மீறி, வீட்டுக்குப் போனால்... ஒரேயடியாய் அங்கேயே இருக்க வேண்டியதாயிடும்... என் நிலையைப் பார்த்தாயா... எப்படி இருந்தவள் எப்படி ஆயிட்டேன் பார்த்தியா... அவரு இருந்தால்... அவரு... இருந்..."

வாணி தன்னை தவிக்க விட்டுப்போன கணவனை நினைத்து அழுவதுபோல் அழுதாள். தனக்காக அழுதாள். தன்னை நம்பி நிற்கும் சின்னஞ்சிறு பிள்ளைகளுக்காக அழுதாள். எல்லாவற்றிற்கும் மேலாக, விதவைப் பெண்ணென்றால், அது நண்பனின் மனைவியானாலும் பரவாயில்லை என்பதுபோல் நினைக்கும் ஒரு மனிதனின் மிருக உணர்வை நினைத்து அழுவதுபோல் அழுதாள்.

மெய்யப்பன் அவளையே பார்த்தபடி நின்றான். அவள் கணவர், இதே அலுவலகத்தில் உதவி மானேஜராக இருந்தவர். கலகலப்புக்குப் பெயர் போன மனிதர். ஊழியர் ஒருவரால் பிரச்சினை ஏற்படும்போது, பொதுவாக பிரச்சினையைப் பற்றிப் பேசாமல், பிரச்சனையைக் கிளப்பும் மனிதனையே ஒரு பிரச்சினையாகக் கருதி விவாதிக்கப்படும் இந்தக்

காலத்தில், ஒருவர் பிரச்சினைக்குரியவராக இருந்தாலும், அவரை விட்டுவிட்டு, அவர் எழுப்பும் பிரச்சினையை மட்டும் விவாதித்த மேலாளர். யாராவது, எவரைப் பற்றியாவது, எதையாவது சொல்லத் துவங்கும்போது, 'நேற்று குழந்தைக்கு உடம்புக்கு சுகமில்லன்னீங்களே... எப்படி இருக்கு?' என்று பதிலளிக்கும் பக்குவவாதி... சந்தர்ப்பவாதியல்ல... அவரும் இந்த அக்காளும் தங்கள் வீட்டில் நண்பர்களுக்கு 'பார்ட்டி' கொடுத்திருக்கிறார்கள். அப்போது இந்த அக்காவின் கருணைக் கண்கள் நிலவின் குளுமை கலந்த சூரியப் பிரகாசமாக மின்னும். இருவரும் ஒருவருக்கொருவர் படைக்கப் பட்டவர்கள்போல் தோன்றுவார்கள். பார்ட்டிக்கு வந்திருக்கும் யாராவது மனைவியிடம் தனியாகச் சிரித்துப் பேசினாலும், அதைத் தப்பாக எடுக்காத மனிதர்... இயல்பிலேயே நல்லதையே நினைத்து, நல்லதாக வாழ்ந்த மனிதர்... அப்படிப்பட்டவருக்கு பிளட்பிரஷர் கிடையாது. நீரிழிவு நோய் கிடையாது. ஆனால், ஹார்ட் அட்டாக் வந்து நாற்பதாண்டு வாழ்வை நான்கு நிமிடத்தில் பறித்துவிட்டது. 'மாஸிவ்' ஹார்ட் அட்டாக் என்கிறார்கள் டாக்டர்கள். அதற்கு எந்த நோயும் முன்கூட்டியே வர வேண்டிய தில்லையாம்...

அவர் இறந்தபோது அலுவலகமே அழுதது. அவர் இருந்த தெருவே அழுதது. இந்த மானேஜர்தான் நம்பிக்கைக்குரிய சகா; இறந்த துக்கத்தில் சத்தம்போட்டு அழுதார். நண்பர்களை மட்டுமே சம்பாதிக்கத் தெரிந்த அவர் குடும்பத்திற்கு வறுமையையே சோறாக உண்ணவேண்டிய நிலைமை ஏற்பட்டபோது, இந்த மானேஜரின் சிபாரிசினால்தான் கம்பெனி மேலிடம் மனிதாபிமானத்தைக் கருதி, பட்டதாரியான இந்த அக்காவிற்கு வேலை போட்டுக் கொடுத்தது. ஓராண்டுக் காலமாக தன் சுமையைப் பிறரிடம் சுமத்தாமல், 'மூட்' என்பது ஒரு தொத்துஞ் சுமாச்சாரம் என்பதை அறிந்தவள்போல், தாய்மையின் கனிவோடு பணிபுரிபவள் இந்த அக்கா... அவளைப்போய்...

மெய்யப்பனின் சோகம் கோபமாகியது. அவள் கண் கலங்குவதைப் பார்க்கப் பார்க்க, அவன் கண்கள் சிவந்தன. அவள் தளர்ந்து தளர்ந்து, மேஜையில் சாயப் போகிறவள் போல, மண்ணாய்க் குழைந்தபோது, அவன் நாடி நரம்புகள் உச்சி முதல் உள்ளங்கால் வரை இழுத்துப் பிடித்தன. தலை உயர்ந்ததுபோல் தெரிந்தது. கால்கள் வளர்ந்ததுபோல் தெரிந்தன.

இதற்குள் மானேஜர் உள்ளே இருந்து, "வாணி... கம் குயிக்கிலி..." என்றார். அவளோ, மெய்யப்பனை சோகச் சிரிப்போடு பார்த்தாள். மெய்யப்பன் ஒரு முடிவுக்கு வந்தவன்போல் தலையை ஆட்டிக் கொண்டான். தரையை உதைத்துக் கொண்டான். இன்று நாட்டில் பொருளாதார 'எக்ஸ்பிளாய்டேஷன்' நடப்பதுபோல் அலுவலகங்களிலும், பண்ணை வயல்களிலும் 'செக்ஸ்பிளாய்டேஷன்' நடக்கிறது. இது, முன்னது போனால்தான் போகும் என்றாலும், முன்னதைவிட எந்தவகையிலும் கொடுமையில் குறைந்ததில்லை. ஆண் பெண் எதில் சரிநிகர் சமத்துவமாக இருக்கிறார்களோ இல்லையோ, இதில் சம உரிமை பெற்று, சமக்கடமை செய்கிறார்கள். விமலா ஒரு உதாரணம்; இந்த மானேஜர் இன்னொரு உதாரணம்.

மானேஜர் இப்போது காலிங் பெல்லை அடித்துக் கொண்டே "வாணி... வாணி..." என்றார். அவள் அனிச்சையாக நகர்ந்தபோது, ஒருவேளை மெய்யப்பன் இருக்கும் தைரியத்தில் தைரியமாக நடந்தபோது, மெய்யப்பன் அவளிடம் பதில் கேட்க விரும்பாதவன்போல் பேசினான்.

"அவன் கிடக்கான்... நீங்க நேராய் வீட்டுக்குப் போங்க... நான் அவனை கவனிச்சுக்குறேன்..."

அவள் நம்ப முடியாததுபோல் பார்த்தாள்.

"ஆமாக்கா.. நான் சொல்றபடி... போங்க..."

"தம்பீ... நான்... எனக்காக மட்டும் வாழல... இரண்டு பிள்ளைகளுக்காகவும் வாழணும்... நான் அனாதை..."

"நான் அப்பா; அம்மா, அண்ணன், தம்பி இல்லாதவன். நீங்களும்... அப்படித்தான். அதனால... நாம ரெண்டு பேருந்தான் நிஜமான அக்கா தம்பி. ஒரே பேற்றோருக்கு பிறந்தவங்க உரிமைக்காக அடிச்சுக்குவாங்க... ஆனால் பெற்றோரில்லாத இரண்டு பேர் சந்திக்கும்போது அவங்களோட பாசம், உரிமையில் தேயாமல், கடமையில் மினுங்கும். இந்த வகையில் நான் உங்களோட உடன் பிறவா தம்பி... நீங்க பேசாமப் போங்கக்கா. என்னை நீங்க தம்பியாய் ஏத்துக்கிட்டது உண்மைன்னா... உடனே போகணும்."

"நீ சொன்னதே போதும் தம்பி... நீ செய்து காட்டக் கூடியதைத்தான் சொல்கிறவன் என்பதும் எனக்குத் தெரியும். இருந்தாலும், அவன், மேலே இருக்கிறவங்களோட காலை பிடிச்சுக்கிட்டு, கீழே இருக்கிறவங்க தலையில உதைக்கிற டைப்... என் வேலை டெம்பரரி... நல்லவிதமான வாழ்க்கை முறையில இருக்கிற என் பிள்ளிங்களால டெம்பரரியாகூட.... தெருவுல நிற்க முடியாது..."

"அப்படின்னா... உள்ளே போகப் போறேன்னு சொல்றீங்களா..."

"நீ கூட என்னை புரிஞ்சுக்கலியே... நான் அப்படிச் சொல்லல... அவன்கிட்ட பக்குவமாப் பேசுன்னு சொல்றேன்."

"சரி... அதை என் பொறுப்புல விட்டுடுங்க... ஒங்க வேலைக்கு ஒரு ஆபத்தும் வராது... அப்படியே வந்தாலும், என் அக்காவை எப்படிக் காப்பாத்தணுமுன்னு எனக்குத் தெரியும்..."

வர்ணிக்கும் ஏதோ ஒரு உறுதி வந்தது. அவனைக் கையெடுத்துக் கும்பிட்டபடி, வேகமாக வெளியேறி விட்டாள். காலிங்பெல் தொடர்ந்து அடித்தது. பிறகு அதை அடித்தவரே அங்கே வந்துவிட்டார். கழுத்தைச் சுருக்கிப் பிடித்த டை. 'டை' அடித்த தலைமுடி. பழுப்பேறிப்போன

முகம். சாம்பல் நிறம். சுமாரான உயரம். ஐம்பது வயதில் அறுபதைத் தாண்டிய தோற்றம். உடைந்துபோன குரலில் மெய்யப்பனை அதட்டுவதுபோல் கேட்டார்.

"நீங்க இன்னும் போகலியா..."

மெய்யப்பன் அவர் முன்னால் வந்து நின்று கொண்டான்... முழங்குவது போல் சொன்னான். "அதைத்தான் நானும் கேட்கணுமுன்னு நினைச்சேன்."

வார்த்தைக்கு வார்த்தை 'ஸார்' போட்டும், சற்று விலகி நின்றும் பேசும் மெய்யப்பன், இப்போது நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, மதர்ப்போடு நிற்பதைப் பார்த்ததும், மானேஜருக்கு ஆச்சரியமாக இருந்தது. அதைக் காட்டும் வகையில், வாயை லேசாக விரித்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். வாணியை வேறு காணவில்லை. ஒருவேளை இவன் இருப்பதால் போய் விட்டாள் போலும். ஆத்திரத்தோடு கேட்டார். "வாட் யூ மீன் மிஸ்டர் மெய்யப்பன்."

"ஒண்ணுமில்ல... ஆபீஸ் லேடீஸ்தான் போயிட்டாங்களே... நீங்க... இன்னும் இருக்கிங்களேன்னு கேட்க வந்தேன்."

மெய்யப்பன் குடித்திருப்பானோ என்று அவருக்குச் சந்தேகம். கோபத்தோடு கேட்டார்: "கடைசியில ஒங்களுக்கும் குடிப்பழக்கம் வந்துட்டா..."

"குடியைக் கெடுக்கிற பழக்கத்தைவிட.... குடிப்பழக்கம் தேவல..."

"மெய்யப்பன்... ஒங்களுக்கு மூடு சரியில்லன்னு நினைக்கேன்."

"அயோக்கியங்களை மூடுற வரைக்கும் என் மூடு இப்படித்தான் இருக்கும்..."

"வாட் யூ மீன்."

"எதுக்கு ஸார் கண்ணாமூச்சுப் பேச்சு...? வாணியக்காவ எதுக்காக சினிமாவுக்குக் கூப்பிட்டிங்க?... உங்க

பெண்டாட்டியை இன்னொருத்தன் இப்படிக் கூப்பிட்டால் சம்மதிப்பீங்களா?... ஒங்களை மாதிரி ஆட்கள், சம்மதித்தாலும் சம்மதிப்பிங்க..."

மானேஜருக்கு, தன் மனைவியைச் சொன்னதும், ரத்தம் கொதித்தது. அவரே அப்படிச் சந்தேகப்படும்படி அந்த அம்மா இசகு பிசகாக நடந்ததுபோல் தோன்றிய சந்தர்ப்பங்களை நினைவுபடுத்திப் பார்த்தபோது, அவருக்கு வாணி மறைந்து, மனைவி மட்டுமே மனதில் நின்றாள். அதுவும், கோரமாக, சந்தேகத்திற்கு உட்பட்டவளாக. ஆகையால் அவர் ஆத்திரத்தில் கத்தினார்.

"யூ ஸ்டுபிட்.... கெட் அவுட்.... ஐ... ஸே... யூ... கெட் அவுட்."

மெய்யப்பன் பதிலுக்குக் கத்தினான்.

"வார்த்தைய அளந்து பேசுங்க ஸார். 'டா' போட எனக்கு அதிக நேரம் ஆகாது... வாணியக்காவை எதுக்காக சினிமாவுக்குக் கூப்பிட்டே..."

"பெர்ஸனல் சமாச்சாரத்தை கேட்க நீ யார்?"

"எதுய்யா பெர்ஸனல் சமாச்சாரம்...? அதிகாரம் என்கிறது பணக்காரனிடம் இருக்கிற பணம் மாதிரி... குறைந்த பட்சம் தர்மகர்த்தா முறையிலயாவது அது செயல்படணும். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யுறவனை என்ன வேணுமுன்னாலும் செய்யலாம் தெரியுமா..."

"மெய்யப்பன்... இது சஸ்பெண்ட்ல போய் முடியும்..."

"அது தெரிஞ்சுத்தான் பேசுறேன்... உங்களால என்னை பதவியில இருந்து சஸ்பெண்ட் செய்ய முடியும். ஆனால், என்னால் உங்களை இந்த உலகத்தல இருந்தே டிஸ்மிஸ் செய்ய முடியும்."

"ஏன்... மிஸ்டர்...? சம்பந்தா சம்பந்தமில்லாம..."

"பொதுப்பிரச்சினையை... ஒவ்வோருவனும் இப்படி சம்பந்தா சம்பந்தமில்லாததாய் நினைக்கதாலதான்... இப்போ

பொதுப்பிரச்சினையே ஒவ்வொருவனுக்கும் சொந்தப் பிரச்சினையாய் ஆகிற அளவுக்கு வளந்துட்டு... தெரியாமத்தான் கேட்குறேன்; ஒங்களுக்கும் பெண்டாட்டி இருக்குது... நீங்களும் பழைய அஸிஸ்டெண்ட் மானேஜர் மாதிரி ஐந்து நிமிடத்துல போயிடலாம். ஒங்க ஒய்பும் வாணியக்கா மாதிரி வேலைக்குப் போக வேண்டிய நிலைமை வந்து, யாரோ ஒருத்தன் சினிமாவுக்கோ அல்லது..."

மானேஜரால் தாள முடியவில்லை. அந்தக் 'கோவலன்', மேற்கொண்டு கேட்க விரும்பாததுபோல், வாயில் வார்த்தைகள் வராது, அவனைப் பேச்சை நிறுத்தச் சொல்லி கையைக் காலை ஆட்டியபோது, மெய்யப்பன் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

"வாணியக்கா... எப்படி வாழ்ந்தவள்னு ஒங்களுக்குத் தெரியும்... இன்னும் சொல்லப்போனால், இது வாணியக்கா வோட பிரச்சினை இல்ல... ஒரு பெண்ணோட பிரச்சினை. இன்றைய பொருளாதாரச் சுமையில... படித்த பெண்... வேலைக்குப் போக வேண்டியதாய் இருக்கு... வீட்ல புருஷன் திட்டுறதக்கூட பொறுக்க முடியாமல் எதிர்த்துப் பேசுற பெண்கூட, அலுவலகத்தில் அதிகாரி திட்டுறதையும் சகிக்கிறாள் என்றால், அவளுக்கு மானப் பிரச்சினையோடு வயிற்றுப் பிரச்சினையும் இருக்கறதுதான் காரணம். வயிற்றுக்காக, வாயையும், காதையும் மூடுற பெண்களை அதிகாரத்தை வைத்து சூறையாட நினைக்கலாமா... இப்போ உங்களை உதைக்கிறதுக்கு எவ்வளவு நேரமாகும்?"

"ஓ மை காட்... வாட் ஈஸ் திஸ் மெய்யப்பன்...? பிளீஸ் போயிடுங்க... நீங்க தாக்கினால்... நான் தாங்க முடியாதுதான்."

"அதைத்தான் சார் நானும் சொல்றேன். இப்போ கதவை மூடிக்கிட்டு, ஒங்களை ஊமைக் காயமாய் ஒதைச்சால் கேட்கிறதுக்கு நாதி கிடையாது... உங்களைவிட நான் வலுவானவன். என்னால உதைக்கவும் முடியும். அப்படி நான் செய்தால், அது, உடல் துஷ்பிரயோகம் இல்லையா? இது மாதிரிதானே வாணியக்கா நிலைமையும்? வயிற்றுக்காக

வருகிறவளை வேறதுக்காகக் கூப்பிடுறது... அதிகார துஷ்பிரயோகம் இல்லையா... அதுவும் உயிருக்கு உயிராய் பழகுன சகாவோட மனைவியைக் கூப்பிடுறதைவிட... நம்ம மனைவியை கூட்டிக் கொடுக்கது எவ்வளவோ மேல் தெரியுமா..."

மானேஜர் விழித்தார். எதையோ தீவிரமாக யோசிப்பவர் போல் தலையை குறுக்கும் நெடுக்குமாக ஆட்டினார். ஏதோ பேசப்போன மெய்யப்பனைப் பார்க்காமலே, கைகளை மட்டும் ஆட்டிக்கொண்டு, "பிளீஸ் மெய்யப்பன், லீவ் மீ அலோன்... பிளீஸ்..." என்று மாறி மாறிச் சொன்னார். மெய்யப்பனுக்குக்கூட, அவர் மீது லேசாகப் பரிதாபம் ஏற்பட்டது. அவரையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, "யூ ஆல்சோ லீவ் வாணி அலோன்... இது நமக்குள் நடந்த விவகாரமாய் முடியட்டும்... வாணியக்கா மேலே... ஏதாவது சாக்குப் போக்குல நடவடிக்கை எடுக்க நினைத்தால், நான் ஜெயிலுக்குப் போகவும் தயாராய் இருக்கேன்..."

மெய்யப்பன், நாலடி தள்ளிப்போய் நின்று, மானேஜரையே உற்றுப் பார்த்தான். பிறகு மடமடவென்று நடந்தான்.

மானேஜர், கைகளை முதுகின் பின்புறமாக வளைத்துப் பிடித்துக்கொண்டே, குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். அவருக்கு எந்த உணர்வு ஏற்பட்டாலும், குற்ற உணர்வு ஏற்படாததுபோல் தோன்றியது. இளமைக் காலத்திலேயே பெண் விவகாரங்களில் சொந்தக் கிராமத்திலும், வேலை பார்த்த சில ஊர்களிலும், செமத்தையாக உதைபட்டிருக்கும் அவருக்கு மெய்யப்பனின் மிரட்டல் அச்சத்தைக் கொடுத்தாலும், அது அதிகமாகவில்லை. எதிரில் உட்காரச் சொன்னால் அல்லாது, உட்காராத-உட்காரக்கூடாத ஒரு கிளார்க், அதுவும் ஒரு பிஞ்சுப் பையன், மிரட்டியதை நினைத்தபோது, அவருக்கு உதைபட்டபோது ஏற்பட்டதை விட, அதிக அவமானம் ஏற்பட்டது. அந்த அவமானத்திற்குக் காரணமான வாணி நினைவுக்கு வந்ததும் ஆத்திரப்

பட்டவராய், பின்புறம் கட்டிய கைகளை முன்புறம் கொண்டு வந்து, ஒன்றின் மேல் ஒன்றை வைத்துக் குத்திக் கொண்டார். அவர் தயவில் வாழும் ஒருத்தி தயவுக்குப் பிரதியாகக் கேட்டதைக் கொடுக்காவிட்டால் கூடப் பரவாயில்லை. இப்படி ஒரு காலிப் பயலிடம் சொன்னாள் என்றால்... ஒருவேளை அவனுக்கும் அவளுக்கும்... அக்கா என்கிறானே... அக்கா சமாச்சாரங்கள் பலதை பார்த்திருக்கிறோமே... அப்படியானால்... இவனைவிட நான் எந்த வகையில் மட்டம்?

அதிகாரத்தை ஆண்மையாகவும், அந்த அதிகாரத்திற்கு மதிப்பளிக்கும் வகையிலோ அல்லது பயப்படும் முறையிலோ நிமிர்ந்து நோக்காது, பயபக்தியுடன் பார்க்கும் பெண்களை காதல் பார்வையாகக் கருதிப் பழக்கப்பட்ட அந்த மனிதர், பெரும்பாலானவற்றில் வெற்றி பெற்ற அந்த வீர புருஷர், நல்ல பதவிக்கு வந்த பிறகு முதல் தடவையாகத் தோல்வியுற்றவர் போல் வாணி இருந்த இருக்கையை ஆத்திரமாகப் பார்த்தார்.

நேற்று 'கான்பிடன்ஷியல்' என்று சொல்லி, அவளிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு கொடுத்த ஃபைல் - காட்ரெஜ் பீரோவில் - அந்த பீரோவுக்குள்ளேயும் அதற்குள் இருக்கும் டிராவுக்குள் இருக்க வேண்டிய அந்த டெண்டர் ஃபைல், அவள் நாற்காலி மீது பக்கங்களைப் பரப்பி, மின் விசிறிக் காற்றில் சிறகடித்துப் பறக்கும் பறவைபோல் விரிந்து கிடப்பதைப் பார்த்ததும் அதை எடுத்துக் கொண்டார். எதற்கும் உதவும் என்பதுபோல், அதை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு அறைக்குள் போனார்.

அவர் எந்த முடிவுக்கும் வரவில்லை. முதலில் கவனிக்கப்பட வேண்டியது மெய்யப்பனா அல்லது வாணியா...?

# 7

உடம்பு முழுவதும் ஏதோ ஒருவித ஆவேசம் ஆக்கிரமிக்க, அந்த ஆவேசச் சூட்டில் விமலாவின் துரோகம் வெடித்துப் பொடிப் பொடியாகி, போன இடம் போனது தெரியாமல் போக, மெய்யப்பன் விறைத்த பார்வையுடன், அஞ்சுவதற்கும் அஞ்ச விரும்பாதவன்போல, நாளைக்கு நடக்கப் போவதைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூடத் தோன்றாத சுயநம்பிக்கை கொண்டவன்போல, இருப்பிடம் வந்தான். வீட்டைத் திறப்பதற்காக பேண்ட் பைக்குள் கைவிட்டான். சாவிக் கொத்தைக் காணவில்லை. எங்கே விட்டோம் என்று நினைவில்லை. மானேஜருடன் நடந்த ரகளையில, அங்கேயே விட்டிருக்கலாம். இனிமேல் போகமுடியாது... அலுவலகம் மூடப்பட்டிருக்கலாம்.

எப்படிக் கதவைத் திறப்பது என்று மோவாயை வலது கையால் திருவியபடி அவன் யோசித்துக் கொண்டிருந்த போது, உள்போர்ஷனில் இருந்து, நேற்றிரவு அண்ணனிடம் அடிபட்ட அந்தப் பெண் - சத்யா வெளியே வந்தாள். வலதுகால் இளமையில் ஏற்பட்ட வாதத்தால் கூம்பிப் போயிருந்தது. அதைப் பிடித்துக்கொண்டே நடப்பது, அந்த காலே அவளுக்கு ஊன்றுகோலாகவும் இருப்பதுபோல் தோன்றும்... கழுத்தில் நூல் பிரிந்த ஒரு மஞ்சள் சரடு... வள்ளிக்கிழங்குச் செடியின் காம்பு மாதியான செஞ்சிவப்பு நிறம். குழப்பமாகி குழப்பமாகி, நீர் கலங்கிய குட்டையாய்ப் போனதுபோன்ற கண்கள். யாராவது எதையாவது கேட்டால், கேட்பவர் தன்னைத் தாக்க வருவதுபோல் மார்பைப் பின்பக்கமாய் இழுத்து, கண்களை அகல வைத்து, திகிலோடு பார்ப்பவள்... எவனோ ஒருவன் அவளைக் கல்யாணம் செய்துவிட்டு, ஒரு வருடத்திற்குப் பிறகுதான் அவள் கால் ஊனம் என்பதைக் கண்டவன் போல், அவளுக்கு ஒரே ஆதரவான அண்ணன் வீட்டிற்கு அனுப்பி வைத்து

விட்டான்... அண்ணன் மனைவி, அவள் கையில், காதில் போட்டிருந்ததையெல்லாம் விற்கும் வரை 'கண்ணே மூக்கே' என்று சொல்லிவிட்டு, இப்போது கண்ணிலும் மூக்கிலும் குத்துக்கள் விழும்படி நடத்துவதை மெய்யப்பன் பார்த்திருக்கிறான். ஓரிரு தடவை இந்தப் பெண்ணுக்காக அவன் பரிதாபப்பட்டிருந்தாலும், விமலாவின் புனிதக் காதலில் மூழ்கியிருந்த அவனுக்கு, அவள் கண்ணுக்குத் தெரியாமல் சுமக்கும் சுமை, மனதை அழுத்தியதில்லை.

சத்யாவிடம் அவன் இதுவரை பேசியதில்லை. அவளும், அவன் பேச்சுக்காகக் காத்திருந்தவள் போலவும் தோன்றவில்லை. அவள் சுமக்கும் மஞ்சள் சரடே அவளுக்குப் பெருஞ்சுமையாக இருந்தது.

மெய்யப்பன் தயக்கத்தோடு பேசினான்: "என்னங்க... உங்களைத்தான்."

சத்யா, அவனை நிமிர்ந்து பார்த்தாள். வழக்கப்படி, தான் தாக்கப்படப் போகிறோமோ என்று நினைத்தவள் போல், சிறிது பின்வாங்கி, பிறகு மலங்கலான பார்வையோடு, அவனைப் பார்த்தாள். 'சொல்லுங்க' என்று அவள் சொல்லவில்லை. பார்வையாலேயே கேட்டாள்.

"அண்ணன் இருக்காரா..."

"டூர் போயிருக்கார்... வாரதுக்கு ஒரு வாரம் ஆகுமாம்..."

"அப்படியா... அண்ணி இருக்காங்களா?"

"கோவிலுக்குப் போயிருக்காங்க..."

மெய்யப்பன் தயங்கியபோது, 'ஏன் கேட்கிறீங்க' என்று அவள் கேட்கவில்லை. அவன் இருப்பதை அங்கேயே நிராகரித்தவள்போல் அல்லது மறந்தவள்போல், சிறிது முன்பக்கமாக நடந்து, கேட் கதவைத் திறந்து, அண்ணி வருகிறாளா என்று பார்ப்பவள்போல் தெருவை எட்டிப் பார்த்துவிட்டு, மீண்டும் உள்ளே போகப் போனாள். மெய்யப்பன் தயங்கியபடியே கேட்டான்.

''ஆபீஸ்ல... சாவியை வச்சுட்டேன்... இனிமேல் போகமுடியாது... ஒங்க கிட்ட சாவிக்கொத்து இருக்குதா? எந்தச் சாவியாவது பொருந்துதான்னு பார்க்கலாம்...''

சத்யா, அவனிடம் எதுவும் பேசவில்லை. வீட்டுக்குள் போனாள். மெய்யப்பனுக்கு எரிச்சலாகவும், 'சஸ்பென்ஸாகவும்' இருந்தது. உண்டு அல்லது இல்லையென்று சொல்லிவிட்டுப் போயிருக்கலாம்... இவ்வளவு அழுத்தமா?

வெளியே போகப்போன மெய்யப்பன், சாவி குலுங்கும் சத்தம் கேட்டுத் திரும்பினான். அவன் பார்வையை திருப்புவதற்காக அப்படிச் சாவியை ஆட்டியவளுக்கு, அவன் திரும்பிப் பார்த்ததும், இயல்பான சிரிப்பு எதுவும் வரவில்லை. சாவியை தூக்கிப் பிடித்துக்கொண்டு அங்கேயே நின்றாள். மெய்யப்பன் சாவியை அவளிடமிருந்து பறிப்பதுபோல் பற்றிக்கொண்டு கதவைத் திறக்கப் போனான்.

ஒரு சில சாவிகளைப் போட்டு அவன் பூட்டைக் குடைந்தபோது, சத்யா உள்ளே போய்விட்டாள். பத்து நிமிடம் கழித்து, அண்ணி வருகிறாளா என்று பார்க்க மீண்டும் வெளியே வந்தாள்.

அவள் மீண்டும் உள்ளே போகப் போனபோது, மெய்யப்பன் பூட்டைக் குடைவதை நிறுத்தவில்லை. சாவிகள் வளைந்துவிடக் கூடாதே என்று அவளுக்குப் பயம். அவனிடம் கொடுத்திருக்கக்கூடாது என்பது போன்ற ஆதங்கம். சாவி வளைந்தால் அண்ணன் தன்னையும் வளைத்துப் பிடித்து அடிப்பானே என்ற பீதி. சத்யா, மெல்லக் கனைத்தாள். மெய்யப்பன் திரும்பிப் பார்த்தபோது, அவனை விலகி நிற்கும்படி கை ஜாடை காட்டிவிட்டு, பூட்டில் சிக்கிய ஒரு சாவியை இழுத்தாள். அது பூட்டைவிட்டு வர மாட்டேன் என்பதுபோல் மறியல் செய்தது. எப்படியோ சிரமப்பட்டு சாவியை வெளியே எடுத்தவள் அதை உற்றுப் பார்த்தாள். நல்லவேளையாக வளையவில்லை. அதுவே மிகப்

பெரிய அபாயத்தில் இருந்து மீண்டுவிட்டது போன்ற உணர்வைக் கொடுக்க, இன்னொரு சாவியை எடுத்து அவள் பூட்டுக்குள் விட்டபோது, சிறிது நேரத்தில், பூட்டு தோல்வியை ஒப்புக் கொள்ளப் போவதுபோல், அதன் வளைவு ஆடியது.

உள்ளே இருந்து அண்ணிக்காரி, "ஏய் மூதி... இன்னும் அங்கே என்ன பண்றே... வாடி தடிமாடு..." என்று கேட்டது அவளுக்குக் கேட்கவில்லை. அவள் அங்கே வந்து தன் தலையை உலுக்கியபோதுதான், சத்யா நிமிர்ந்து பார்த்தாள். திறந்த பூட்டு, சாவியின் உலுக்கலில் அங்குமிங்கும் ஆடியதுபோல், அவள் தலை அண்ணியின் குலுக்கலில் இரண்டு தடவை ஆடி நின்றது. 'எப்போது வந்தாள்...?'

எள்ளும் கொள்ளும் விதைப்பதற்காகவே இருப்பது போல் தோன்றிய அண்ணியின் முகம், எள்ளடித்த களம்போல் நரம்பு தெறிக்க துடித்தது. ஒரு பெண் அவமானப்படும்போது, பெண் என்ன... வேறு எந்த மனிதரும் அவமானப்படும்போது, அதை நின்று கவனிப்பது நாகரிகமல்ல என்று நினைத்து, மெய்யப்பன் உள்ளே போனான். இது அண்ணிக்கு மெதுவாக வந்த சந்தேகத்தை வேகமாக்கியது.

அண்ணிக்காரி சத்யாவை இழுத்துக் கொண்டுபோய், இரண்டு போர்ஷன்களுக்கு மத்தியில் உள்நோக்கிப் போன பாதையில் நிறுத்திப் புலன்விசாரணை செய்வது, மெய்யப்ன் காதில் வெடிகளாக விழுந்தன.

"எதுக்குடி அங்கே போனே?"

"சாவியத் தொலைச்சிட்டேன்னாரு... வேற சாவி இருக்கான்னு கேட்டாரு..."

"தொலைச்சா என்னடி? சாவியத் தொலைச்ச சாக்குல ஒன்னையும் தொலைக்கப் பார்ப்பான். அதுக்கும் சம்மதிப்பியா? அப்புறம் நாங்கதான் நாக்கைப் பிடுங்கிட்டு

சாவோம். நீ அப்பவும் வேடிக்கை பார்ப்பது மாதிரி பார்ப்பே. 'சாவியும் இல்ல... கீவியும் இல்ல... பெரியவங்க வந்த பிறகு கேளுங்க'ன்னு முகத்துல அடிச்சாப்போல கேட்கப்படாதோ... முகத்தை நீட்டிக்கிட்டுத்தான் போகணுமோ?"

சத்யாவிடம் இருந்தும் லேசாக எதிர்ப்புச் சத்தம் கேட்டது. "அவரு குனிந்த தலை நிமிராத மனுஷன்..."

" நல்லா கவனிச்சுத்தான் வச்சிருக்கே... எவ்வளவு நாளாய் இது தெரியும்? எவ்வளவு காலமாய் அவன் சாவி கேட்கான்?"

"நான் அழகி... அதுல தினமும் கேட்குறார்..."

"ஓஹோ... அந்தக் குறை வேற இருக்கா? அழகியா இருந்தால், அவன் பார்த்திருப்பானேன்னு ஏக்கம் வருதோ? எல்லாம் அந்த மனுஷன் கொடுக்கிற இளக்காரம்... எதிர்த்தாப் பேசறே...? வரட்டும்... ஒன் புருஷன் வீட்ல ஒன்னை நிறுத்திட்டு வரச் சொல்றேன்... அங்கேயும் இப்படித்தான் நடந்திருப்பே..."

சத்யாவிடம் இருந்து பதிலில்லை... வாயொடுங்கி, மெய்யொடுங்கி நின்றிருக்க வேண்டும். அண்ணிக்காரி, 'வெற்றி விழா' கொண்டாடினாள். "ஏண்டி வாய் செத்துட்டு? நல்லா பேசி முடிக்கு முன்னால நான் வந்துட்டேங்கற ஏக்கமா... மகராசியா... தினமும் அவனுக்கு வீட்டைத் திறந்துவிடு... அப்புறம் ராத்திரில, அவனுக்குத் தாகம் எடுக்கும்... தண்ணி கொண்டு கொடு... இல்லன்னா... அங்கேயே போய் இரு... வீட்டுக்குள்ளே வராதடி. அந்த மனுஷன் வாரது வரைக்கும் இந்த இடத்திலயே இருக்கணும்... உள்ளே வரப்படாது... அவரு வந்து ரெண்டுல ஒண்ணை முடித்தால்தான் முடியும்."

எல்லாமே அடங்கிப் போனதுபோல் இருந்தது. அண்ணிக்காரியின் சத்தத்தைக் காணோம்... அவளுக்கு, திட்டிய களைப்பாக இருக்கும்... சத்தியாவுக்கு, திட்டப்பட்ட களைப்பாக இருக்கும்.

மெய்யப்பன் பேண்டையும், சிலாக்கையும் கழற்றிப் போட்டுவிட்டு, லுங்கியைக் கட்டிக் கொண்டு, கட்டிலில் படுக்க வேண்டும் என்றுதான் போனான். இப்போது அந்த அறையே அவனுக்குச் சமாதி போலிருந்தது. எங்கேயாவது நடந்து கொண்டே இருக்கவேண்டும்... நிற்கப்படாது... உட்காரக்கூடாது.

வெளியே வந்த மெய்யப்பன், கதவைச் சாத்திவிட்டு, அதற்குப் பூட்டில்லை என்பதைப் பற்றியும் கவலைப்படாமல், வெளியே வந்து உள்ளே எட்டிப் பார்த்தான். சத்யா, அண்ணியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவள் போல் வாசலுக்கு ·வெளியே குத்துக் காலிட்டு, அதில் முகம் புதைத்து, தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தாள். அவனுக்கு என்னவோ போலிருந்தது. ஒரே தாவாகத் தாவி தெருவிற்கு வந்தான்.

பல்லவ பஸ்களும், பார்த்த மனிதர்களும், ஒலி முழக்கம் செய்த வானொலிப் பெட்டிகளும், அவனுக்கு ரதங்களாகவும், பிணங்களாகவும், ஒப்பாரியாகவும் தோன்றின. தன் பிணத்தைத் தானே சுமந்து கொண்டு போகிறவன்போல் மற்றவர்கள் ரசித்த ஆரவாரம் அவன் மட்டில் சூன்யமாகப் பட, அவன் கண்டபடி நடந்தான். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு 'மெஸ்ஸை' நோக்கிப் போனவன், அங்கே வாசல் வரை சென்று மாடிப்படி ஏறியவன், ஏறிய வழியாக இறங்கி, இருப்பிடம் வந்தான். சாப்பிடத் தோன்றவில்லை.

இன்னும் சத்யா வீட்டுக்கு வெளியே இருந்த இடத்திலேயேதான் இருந்தாள். இடதுகால் தூக்கி நிற்க, அதில் முகம் கவிழ, இருந்த இடத்திலேயேதான் இருந்தாள். அவனுக்கு மனம் கேட்கவில்லை.

குளியலறைக்கு ஒரு டர்க்கி டவலுடன் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு, முற்றத்திற்கு வந்தான். வெளியே வந்த அண்ணிக்காரியை நேராகப் பார்க்காமல், மெள்ள

நடந்தபடி, "என்னால யாருக்கும் சிரமம் வேண்டாம்... இந்த மாதம் முடிஞ்சதும் காலி பண்ணிடுவேன்... வீட்டுக்காரர் வந்தால்... நீங்களே சொல்லிடலாம்" என்று சொல்லிவிட்டு, அவன் நடந்து கொண்டிருந்தபோது, "ஆம்புள இல்லாத சமயத்துல... பொம்பிளைங்க கிட்ட எதுக்காகப் பேசணும்... வீட்டுக்காரன் கிட்ட சொல்ல... நான் என்ன வேலைக்காரியா" என்ற வார்த்தைகள் காதில் வந்து விழுந்தன. அதை வாங்காதவன்போல் அவன் அறைக்கு வந்து கதவைத் தாளிட்டான். ஆனால் மனதைத் தாளிட முடியவில்லை.

அண்ணிக்காரி மீண்டும் சத்யாவை அர்ச்சித்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணிடமிருந்து எந்தக் குரலும் எழும்பவில்லை. ஒடுங்கியவளாய் - ஒடுக்கப்பட்டவளாய், குரலடங்கி, முடங்கிக் கிடந்த அந்தப் பெண்ணிற்கு, அவன் இரங்கியபோது விமலாவின் நினைப்பு மனதில் உரசியது. 'எந்தச் சமயத்தில்... எந்த எண்ணம் வருது பார்... நான் நிஜமாகவே மனிதன்தானா..."

மெய்யப்பன் தன்னை வெறுத்தான். சுற்றுப்புறத்தை வெறுத்தான். பிறந்ததை வெறுத்தான். இறக்காமல் இன்னும் இருப்பதற்காக வெறுத்தான். எல்லாவற்றையும் வெறுத்து வெறுத்து, வெறுப்பே ரசனையானதுபோல் பேண்ட் சண்டையைக் கழற்றி வெறுப்போடு எறிந்தான். கட்டில் காலை எட்டி உதைத்தான். கடிகாரத்தை வீசி எறிந்தான்.

உடல் முழுவதும் அணுஅணுவாக வியாபித்து, பிறகும் இடம் கிடைக்காமல் திண்டாடி, வெறுப்பை விடுபவன் போல், வெறுமையோடு சிரித்துக் கொண்டான். விளக்கு எரிந்து கொண்டிருந்தாலும், அந்த அறை முழுவதும் அவனுக்கு இருள் மயமாகத் தெரிந்தது.

# 8

அலுவலகத்தில் பாதி இடத்தை ஆக்கிரத்திருந்த விசாலமான அறை. சன்மைக்கா மேஜைமேல் இருந்த 'இண்டர்காம்', வெளிர் மஞ்சள் நிறத்தில் ஜொலித்தது. அரைவட்ட மேஜையில், இரண்டு டிரேய்கள். எதிரே நாற்காலிகள்... ஒரு ஓரத்தில் சோபா ஸெட். வெல்வெட் கம்பளம் விரித்த தரை. நீல டிஸ்டெம்பர் அடித்த சுவர்களில் விதவிதமான டிசைன்கள் போட்ட ஓவியங்கள். பெரும்பாலும் 'தழுவல்' ஓவியங்கள். ஆணும் பெண்ணும் அரை நிர்வாணத்துடன் தழுவும் 'மாடர்ன்' ஓவியங்கள். பத்தமடை பட்டுப்பாய் விரிப்பு, தீபம் ஏந்திய கட்டழகியைக் காட்டியது. எலெக்டிரானிக் சுவர் கடிகாரம் நேரத்தை மின்வெட்டாய் காட்டிக் கொண்டிருந்தது.

மானேஜர், கரையான் புற்றுக்குள் போன பாம்புபோல், தலைவிரித்துப் பார்த்தார். காட்ரெஜ் பீரோவைத் திறந்து அந்த 'அந்தரங்க' ஃபைலை மீண்டும் பார்த்துவிட்டு, பீரோவைப் பூட்டினார்.

காலிங் பெல்லை அழுத்தினார். பியூன் முனுசாமி வந்தான். "வாணியை வரச்சொல்" என்றார், முனுசாமியின் முகத்தைப் பார்க்காமலே. பிறகு நமைச்சல் எடுத்த உடம்பைச் சொறிந்து கொண்டு, 'டிராவைத்' திறந்து, ஒரு மாத்திரையைப் போட்டுக்கொண்டு பிளாஸ்கைத் திறந்து வெந்நீரைக் குடித்தார்.

ஒரு நிமிட நேரத்தில் வாணி வந்து நின்றாள். துச்சாதனன் துகிலுரியும்போது திரௌபதி பார்ப்பதுபோல், ஒருவித பாவமான கண்களுடன் பல படங்கள் இருக்கிறதே, அது மாதிரியான பாவத்துடன் வாணி அவரைப் பார்த்தாள். இந்த ஒருவார காலத்தில் அவள் மதர்ப்பான மேனி,

சுரைக்காய் கூடுபோல் மாறியது. ஒளி சிந்திய கண்கள், பழி சுமந்து நிற்பதுபோல் விழி விலகி, தெறித்து விடுவதுபோல் நின்றன. சமையலறையில் இருந்து அப்படியே அலுவல கத்திற்கு வந்துவிட்டது போன்ற தோற்றம்.

அவள் வந்து நின்றதும், மானேஜர், 'பிஸி'யாக இருப்பது போல், 'இண்டர்காமில்' யாருடனோ பேசினார். டெலி போனைச் சுழற்றினார். ஏதோ ஒரு ஃபைலை எடுத்து, கலர் பென்சிலால் கோடு போட்டுக் கொண்டே படித்துக் கொண்டார். அவளை உட்காரச் சொல்லவில்லை. கால்மணி நேரம் வரை காத்து நின்ற வாணி, 'சார்' என்றாள். அப்படிச் சொல்லும்போதே வாய் சிக்கியது. கண்கள் பெருக்கெடுத்தன.

மானேஜர் தலையை நிமிர்த்தாமலே 'யெஸ்' என்று அடித் தொண்டையில் கேட்டார். பிறகு இருவரும் பேசவில்லை. இன்னும் ஒரு ஐந்து நிமிடம் இழுபறியில் ஓடியது. ஃபைலை மூடி 'டிரேயில்' தூக்கியெறிந்து விட்டு, கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டு அவளைச் சிறிது நேரம் இளக்காரமாகப் பார்த்தார். அவள் நின்றவிதம், அவருக்குக் குறுகுறுப்பைக் கொடுத்திருக்க வேண்டும். நிதானமாகக் கேட்டார்.

"என்னம்மா... ஃபைல் கிடைச்சுதா?"

பதிலில்லை.

"அது டெண்டர் ஃபைல். நாம் 'கோட்' செய்த ரேட் வேற கம்பெனிக்கு தெரியக்கூடாதுன்னு சொல்லித்தான் அந்த கான்பிடன்ஷியல் ஃபைலை ஒங்ககிட்ட கொடுத்தேன். நல்ல வேளையா ஒங்ககிட்ட கையெழுத்து வாங்கிட்டேன். இல்லன்னா.... ஆல்ரைட். ஃபைலை என்ன செய்திங்க... இது ஒரு பெரிய மோசடி தெரியுமா?"

வாணி அழுகையை அடக்கிக் கொண்டு, அது வெளிப்பட முடியாதபடி, நிதானமாக ஒவ்வொரு வார்த்தைக்கும் இடைவெளி விட்டுப் பேசினாள். "ஸார்.... நான் மோசடி பட்டுத்தான் பழக்கமே தவிர... மோசடி செய்து

பழக்கமில்ல... அவரோட அண்ணன் தம்பிங்க... என் சொத்தைப் பறிச்சுட்டாங்க... அவருகிட்ட கடன் வாங்குனவங்க...."

"ஒங்க பெர்சனல் சமாச்சாரம் எனக்கு எதுக்கும்மா...? வீடுன்னா ஆயிரம் இருக்கும். இது ஆபீஸ்... அந்த ஃபைலைப் பற்றி மட்டும் பேசுங்க... கடைசியாய் கேட்கிறேன். ஃபைலை 'டிரேஸ்' செய்து தர முடியுமா? தர முடியாதா?"

மேஜைமேல் ஒரு சொட்டுக் கண்ணீர் பதிலாக வந்து விழுந்தது. மானேஜர் அதட்டலுக்கு மேல் அதட்டலாகக் கேட்டார்.

"ஆல்ரைட்... ஒங்களால இனிமேல் அந்த ஃபைலைக் கொடுக்க முடியாது. கொடுத்தாலும் பிரயோசனம் இல்லை. ஏன் கொடுக்க முடியாது என்கிறது எனக்கும் தெரியும். சிவராம் கம்பெனிக்காரங்ககிட்ட 'ரேட்' பேசிட்டு கொடுத்திருப்பீங்க... அவங்க ஃபைலை, நகலெடுத்துட்டு தரதாய்ச் சொல்லி, வாங்கிட்டுப் போயிருப்பாங்க... சரி... ஒங்களுக்குன்னு பேசின பணத்தையாவது தந்தாங்களா? ஏம்மா கண்ணீர் விடுறீங்க... இந்த ஃபைலுங்க நனையுது பாருங்க... நீங்க போகலாம்... அரைமணி நேரம் கழித்து அக்கௌண்டன்டைப் பார்த்து ஒங்க கணக்கை 'செட்டில்' பண்ணுங்கோ... அப்புறமாய் இங்கே வந்து டிஸ்மிஸ் ஆர்டரை வாங்கிக்கோங்கோ. இப்போ, நீங்கே போகலாம். ஐ ஆம் பிஸி."

மானேஜர், இண்டர்காமில் ஒரு பட்டனை அழுத்தி, 'அக்கௌண்டன்ட ...' என்றபோது, வாணி அவரது இரண்டு கைகளையும் எதேச்சையாகப் பிடித்துக் கொண்டு விம்மினாள். மானேஜர் அந்த ஸ்பரிச இன்பத்தில் ஏற்பட்ட கிறக்கத்தை அடக்கிக் கொண்டே, "என்னை ஏம்மா தொடுறீங்க..? நீங்க கண்ணகி பரம்பரையாச்சே" என்று சொன்னபோதுதான் அவளுக்குச் சுயச் செயல் நினைவுக்கு வந்தது. ஏந்திய அவரது கைகளை படபடப்புடன் போட்டுவிட்டு, சிறிது விலகி நின்றபடி, கையெடுத்துக்

கும்பிட்டு, "ஸார், நீங்கதான் சார் என்னைக் காப்பாத்தணும். இல்லன்னா, என் பிள்ளைங்க தெருவுல நிக்கும்" என்றாள். அந்தக் காட்சியைக் கற்பனை செய்தவள் போலவும்; அதைப் பார்க்க மறுப்பவள் போலவும் கண்களை மூடிக் கொண்டாள். மூடிய கண்களைத் திறக்காமலே, "ஒங்களை விட்டால், எனக்கு வேறு ஆதரவில்ல ஸார்" என்று சொல்லி விட்டு, மீண்டும் விம்மினாள்.

''நான் யாரும்மா ஒங்களுக்கு ஆதரவு தரதுக்கு? அதுக்குத்தான் அந்த ரௌடி மெய்யப்பன் இருக்கானே..."

வாணி தலையை நிமிர்த்தி, கைகளை அம்புக்குறி போல் வளைத்துப் பக்கவாட்டில் வைத்தபடி, பத்ரகாளிபோல் கோபத்தோடு கத்தினாள்.

"வினையே அந்தப் பித்துக்குளியாலதான் ஸார் வந்தது. நீங்க அன்னைக்கு என் கையைப் பிடிச்ச படபடப்புல, அந்த பைத்தியக்காரன்கிட்ட லேசா உளறிட்டேன். இவ்வளவுக்கும் கோபப்படாமத்தான் சொன்னேன். உடனே வந்து அவன் ஒங்கள இப்டி மிரட்டுவான்னு நினைக்கல... சத்யமாய் நினைக்கல ஸார்."

மானேஜர் அடக்கமில்லாமல் சிரித்தார். ''சிலர், பிறத்தியார் பாதிக்கப்படுவாங்கன்னு தெரிஞ்சுக்கிட்டே, ஹீரோவாய் மாறதுக்காக, பிறத்தியார் கஷ்டத்தையே மூலதனமாகப் போட்டு, பாறையை பிளக்கது மாதிரி பேசுவாங்க... மெய்யப்பன் அந்த டைப்... இப்போவாவது புரியுதா?"

வாணிக்கு எல்லாமே புரிந்தது. "சுத்தன்... துஷ்டனோட பலன் செய்யும்.'' என்ற மலையாளப் பழமொழியின் அர்த்தமும் புரிந்தது. அதோடு மானேஜர், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சபலம் ஏற்பட்டு, பிறகு மனச்சாட்சியால் கொல்லப்படும் நிலையில் இருப்பவரல்ல என்பதும், இந்த வகையில் அவர் ஒரு அரசியல்வாதி என்பதும், அவளுக்குப் புரிந்தது. புரியப் புரியக் கண்கள் குளமாயின. கைகள் கும்பிட்டன.

கனிய வேண்டியது காய் நிலையில் இருப்பதை உணர்ந்த அந்த 'பழுத்த' மானேஜர் மேலும் அதட்டினார். "எத்தன தடவம்மா ஒங்களுக்குச் சொல்றது? ப்ளீஸ் லீவ் மீ அலோன். நான் சொன்னால் சொன்னதுதான். அரைமணி நேரத்திற்குப் பிறகு ஆர்டரை 'கலெக்ட்' பண்ண வாங்க. ஸாரி, நீங்க வரமாட்டீங்க. கூப்பிட்டாலும், அலட்சியமாய் வீட்டுக்குப் போகிறவங்களாச்சே... அதனால... நானே வந்து கொடுக்கறேன். இப்போ போங்க... ஐ ஸே, கெட் அவுட்."

வாணி ஒரு கையை மேஜையில் ஊன்றியபடியே, இன்னொரு கையால் முகத்தை மறைத்தபடி விம்மினாள். "அய்யோ... அந்தப் பாழாப் போறவனால... என் நிலமை இப்படி ஆயிட்டே... ஆயிட்டே..." என்று இடையிடையே விட்டும் விடாமலும், பட்டும் படாமலும் உளறிக் கொண்டே அழுதாள். அவள் ஏங்கி அழும் ஒலி வெளியே கேட்கு மளவிற்கு வலுத்தது. மேஜையில் ஊன்றிய கை தனியாகத் துண்டித்து விழப்போவதுபோல் ஆடியது. இந்த வேலை போய்விட்டால், வீட்டை விட்டு தெருவுக்குப் போக முடியாது. இரண்டு மாத வாடகைப் பாக்கி இருக்கிறது. அவள் தன்னைக் கட்டுப்படுத்தத்தான் பார்த்தாள். முடியவில்லை. காட்டாற்று ஒலியுடன் அழுகையும், கண்ணீரும் ஒன்றாகப் பாய்ந்தன.

மானேஜர் மர்மப் புன்னகை ஒன்றை மலரவிட்டுக் கொண்டே, "அடடே... என்னம்மா இது... இப்படியா அழுகிறது. நீ அழுதால் எனக்கும் அழுகை வரும் போலிருக்கே... அழாதம்மா..." என்று வார்த்தைக்கு வார்த்தை, 'அம்மா... அம்மா...' என்று சொல்லிக் கொண்டே, அவளுக்குப் பின்புறமாகச் சென்று, அவளை மார்போடு சேர்த்து அணைத்தபடி, முகத்தை நிமிர்த்தி, அவள் கண்களைத் துடைத்தார். அவள் எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் நின்றபோது, மேலும் அவளைத் தன் மார்புடன் நெருக்கிக் கொண்டே, "ஒனக்காக ரொம்ப வருத்தப்படுறேன்... டோண்ட் ஒர்ரி... சாயங்காலமாய், எல்லோரும் போன பிறகு, இரண்டு பேருமாய் அந்த ஃபைலைத் தேடலாம்..." என்றார்.

வாணி முனங்கினாள். நடுக்கத்தோடு முனங்கினாள். முகத்தைக் கரங்களால் மூடிக் கொண்டே பிதற்றுவது போல் பேசினாள்.

"அந்தப் ஃபைல் கிடைக்காது சார்... என்னோட ராசியே அப்படித்தான் ஸார். நான், எது எதையெல்லாம் பாதுகாத்துக்கணுமுன்னு நினைக்கேனோ, அதெல்லாம் பறிபோயிடும் சார்."

மானேஜர், அவளுக்கு ஆறுதல் சொல்பவர்போல், அவள் கழுத்தை வருடிவிட்டபடி, "சரி, என்னைப் பாரு... வெட்கமா இருக்கா...?" என்றார்.

வாணி, வெட்கப்பட வேண்டியதில்லை என்பதுபோல, வெறுமையாகச் சிரிக்கிறாள்; பொறுமையாக நிற்கிறாள். ஆசைக்கு வெட்கம் இல்லை என்பார்கள். வறுமைக்கு மட்டும் என்ன வெட்கம் வாழுது?

## 9

என்னதான் விமலாவை உதறிவிட்டதாக நினைத்தாலும், அவளைப் பற்றிய நினைவுச் சுவடுகள் அழிந்துவிட்டதாகப் பாவனை செய்தாலும், மெய்யப்பனுக்கு அவளைப் பார்க்கும் போதெல்லாம் நெஞ்சு கனத்து, தலை கொதித்து, கண்கள் எரிந்தன. முந்தாநாள்... அந்த ரவி அலுவலகத்திற்கு வந்து, மானேஜரிடம் சிறிது நேரம் பேசிவிட்டு, விமலாவை 'கையோடு' கூட்டிக் கொண்டு போனான். ஆம். அவள் தோளில் கைபோட்டுக் கொண்டு போனான். வாணியக்கா கூட, அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க மறுக்கிறாள். அவன்,

அவளருகே போகும் போதெல்லாம், அவள் எழுந்து இன்னொருவர் பக்கம் போய்விடுகிறாள். மஞ்சள் வெயில் விழும் முன்பாகவே ரிஜிஸ்டர் கட்டுக்களோடு மானேஜர் அறைக்குள் போய்விடுகிறாள். மெய்யப்பன், அவள் கற்பைக் காப்பாற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டியவனாய், சில மாலைப் பொழுதுகளில் வெளியே காத்திருந்து பார்த்தான். கூக்குரல் ஏதும் கேட்கவில்லை.

இது போதாதென்று, இந்தக் குமார் வேறு... எந்தச் சண்டை வந்தாலும் முதலில் பேசும் அவன், இப்போது நட்பை முறித்ததுபோல், இவனைக் காணும் போதெல்லாம் முகத்தை முறித்துக் கொள்கிறான். காபி சாப்பிட்டாலும் சரி, டிபன் சாப்பிட்டாலும் சரி, இவனுக்கும் சேர்த்து வாங்கும் அவன், இப்போது தனக்கு மட்டுமே வாங்கிக் கொள்கிறான். மெய்யப்பனால் அதற்குமேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தானே வலியப் போய் அவனிடம் பொதுப்படையாய் பேசிவிட்டு, பிறகு வாணிக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தையும், தான் மானேஜரை மிரட்டியதையும், நடித்துக் காட்டுவது போல் பேசினான்.

குமார், எல்லாவற்றையும் எந்தவிதச் சலனமுமில்லாமல் கேட்டு விட்டு, பிறகு "ஒன் புத்தி, குரங்குப் புத்தி... மந்திக்கு ஒன்றே குறி என்பது குரங்குக்குப் பொருந்துமோ, பொருந்தாதோ, ஒனக்குப் பொருந்தும். நான் சொன்னால், நீ கேட்கப் போறதும் இல்லை. ஆனால், நீ யாரையெல்லாம் நட்புப் பாராட்டி நம்புறியோ... அவங்கெல்லாம் ஒன் காலை வாரி விடுறாங்க... இது ஒன்னோட ராசி... நீ என்கிட்ட நட்பாய் இருந்து, என்னை முழுசும் நம்பி, அதனால நானும் ஒன் காலை வாரி விடப்படாது பாரு... அதனால... நான் இனிமேல் விலகி இருக்கதுன்னு தீர்மானிச்சுட்டேன்..." என்று கண்டிப்பாய் சொல்வதுபோல் தழுதழுத்த குரலில் சொல்லி விட்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

மெய்யப்பனுக்கு, ஒன்றும் புரியவில்லை. குழந்தை மாதிரி பார்த்தான். குமாரோ ரிஜிஸ்டரில் வைத்த கண்ணை

எடுக்கவில்லை. அலுவலகம் இப்படியென்றால், அதற்கு மேல் வீடு. சத்யாவின் அண்ணன் இன்னும் வரவில்லை. மெய்யப்பன் குளியலறைக்குப் போகும் போதெல்லாம் சத்யாவின் அண்ணி ஜாடைமாடையாகத் திட்டுகிறாள். அந்தப் பக்கம் எதேச்சையாக சத்யா வந்தால், அண்ணி, முகத்தை இடிக்கப் போவதுபோல், கைகளை ஆட்டிக் கொண்டே, கண்டபடித் திட்டுகிறாள். "தடிப்பயல வீட்டில வச்சதால... ஒனக்கு தடிப்பேறிப் போயிட்டு..." என்றுகூடச் சொல்லிவிட்டாள். வேறு அறை பார்க்கலாம் என்று பார்த்தால், எல்லா வீட்டுக்காரனும் ஆயிரக்கணக்கில் அட்வான்ஸ் கேட்கிறான். என்ன செய்யலாம், ஏன் இப்படி ஆயிட்டேன்... எல்லோருக்கும் நன்மையைத் தவிர, தீமையை செய்யாத என்னிடம் ஏன் யாரும் பேச மறுக்கிறார்கள். நான் அசடோ... நான் முட்டாளோ... நான் பைத்தியமோ...

அலுவலகக் கடிகாரத்தை வெறித்துப் பார்த்தபடி, மெய்யப்பன் உட்கார்ந்திருந்தான். ஆடிட் பைலை எடுத்து, சில 'பாயிண்டுகளுக்கு' பதிலெழுதப் போனான். ஆனால், பதிலில்லாமல் போன, 'நான் அசடா... முட்டாளா...' என்ற கேள்வியே அந்த பாயிண்டுக்குள் பாயிண்ட்டுக்களாக நின்றன. மாலை நேரம், மஞ்சள் நிறம் வெயிலாக விழுந்தது.

எல்லோரும் போகத் துவங்கினார்கள். போய் விட்டார்கள். விமலாவை ரவி வந்து கூட்டிக் கொண்டு போய்விட்டான். வாணி, மானேஜர் அறைக்குள் போய்விட்டாள். குமார், முன்னதாகவே போய்விட்டான். நாளையில் இருந்து இரண்டு மாத லீவில் போகிறானாம். இதை அவன்கூடச் சொல்லவில்லை. ஆபீஸ் பியூன் சொல்லித்தான் தெரியும்.

மெய்யப்பன் வெளியேறினான். எதிரே இருந்த ஒரு டீக்கடையில் போய் அமர்ந்து கொண்டான். எப்படியாவது, வாணி வெளியே வந்ததும், அவளின் பாரா முகத்துக்குப் பதில் கேட்கவேண்டும் என்று உட்கார்ந்தான். 'அவள் எப்படிப் போனால் நமக்கென்ன' என்றும் ஒரு எண்ணம்

வந்தது. அவளே பேச விரும்பாதபோது, தான், அவளுக்காக எதிர்பார்த்து இருப்பது பைத்தியக்காரத்தனம்தானே என்பதுபோல், தனக்குள்ளேயே ஒரு கேள்வியைப் போட்டுக் கொண்டான். பிறகு பைத்தியமாய் ஆனாலும், முழு பைத்தியமாய் ஆகலாம் என்று ஒரு பதிலையும் சொல்லிக் கொண்டான்.

எப்போதாவது ஓரிரண்டு சிகரெட்டுகளைப் பற்ற வைப்பவன், அப்போது ஒரு பாக்கெட்டைத் தீர்த்து விட்டான். மணி ஏழாகிவிட்டது. வாணியைக் காணவில்லை. ஒருவேளை, வாணியக்காவிடம் அந்த மானேஜர் முறை தவறி நடக்கும் முயற்சியில் இருப்பானோ? ஓடிப்போய் அக்காவின் மானத்தைக் காப்பாற்றலாமா? மெய்யப்பன், அலுவலகத்திற்கு உள்ளேயும் போக முடியாமல், வெளியேயும் நிற்க முடியாமல், சந்தேக வேதனையில் துடித்தான். டீக்கடையில் இருந்தவர்கள் கூட அவனை ஒரு மாதிரி பார்த்தார்கள்.

அலுவலகத்தில் இருந்து மானேஜர் கார் புறப்பட்டது. மெய்யப்பன் விறைப்பாக நின்றான். 'மானேஜர் மோசமானவன் என்பதற்காக, அவன் சொல்லும் வேலையை அக்காவால் தட்ட முடியுமா... அதுவும் ஸ்டெனோகிராபராக இருக்கும்போது... இவ்வளவு மிரட்டியபிறகு, மானேஜருக்குத் தான் தைரியம் வருமா...?'

தெருவுக்கு வந்த மானேஜரின் காரைப் பார்த்தான். அவனால் நம்ப முடியவில்லை. ஆனால், அது உண்மைதான். கண்ணுக்குச் சிந்திக்கும் சக்தி கிடையாததால், அது உள்ளதை உள்ளபடிக் காட்டியது. வாணியக்கா, காரின் முன்னிருக்கையில் மானேஜருடன் நெருக்கமாக உட்கார்ந்திருக்கிறாள். மானேஜரின் இடது கை, அக்காவின் இடது தோளில் கிடப்பது நன்றாகத் தெரிகிறது. சந்தேகமில்லை. அது வாணியக்காதான். எப்படிச் சிரிக்கிறாள்? அன்று அழுதவளா இப்படிச் சிரிக்கிறாள்? அதுவும், தன் தோளில் தொங்கும் மானேஜரின் கையை பிடித்துக் கொண்டே....

மெய்யப்பன், அவன் கண்ணில் தூசியைப் பரப்பிக் கொண்டு போகும், அந்த 'பச்சைக்' காரையே கண் கொட்டாது பார்த்தான். நிற்பது நடு ரோடு என்ற நினைவில்லாமலே பார்த்தான். அந்தக் காராலேயே அடிபட்டு, உடம்பு சின்னாபின்னமாகி செத்துப் போனது போலவும், இப்போதுதான் அங்கே பேயுருவாக நிற்பது போலவும் அவனுக்குத் தோன்றியது. பின்னால் வந்த இன்னொரு கார் அவன் காலில் மோதாக் குறையாக நின்று ஹாரன் அடித்தது. அதற்கும் அவன் நகராமல் நின்றபோது, டிரைவர் இறங்கி வந்து, அவன் கையைப் பிடித்து, தரதரவென்று இழுத்து, ரோட்டு முனையில் நிறுத்திவிட்டு, மீண்டும் தன் இருக்கையில் அமர்ந்து வண்டியை ஸ்டார்ட் செய்தார். காருக்குள் இருந்த ஆண் பெண் அத்தனைபேரும் சிரித்தார்கள். சிரிப்போடு கார் போனபோது, மெய்யப்பன் சிலிர்ப்போடு திரும்பினான். டீக்கடையில் உள்ள வானொலிப் பெட்டி, "யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்" என்று பாடியபோது, "அம்மம்மா உலகினிலே யாவும் வஞ்சம்..." என்று மெய்யப்பனே தன்னையறியாமலே சத்தம் போட்டுக் கத்தினான்.

## 10

எப்படி வீட்டுக்கு வந்தோம் என்பது அவனுக்கே நினைவில்லை. பஸ்ஸில் ஏறவில்லை. ஆட்டோவில் அமர வில்லை. நடந்தது போலவும் தெரியவில்லை. எப்படியோ வந்த ஞாபகம் இருந்ததே தவிர, எப்படி வந்தோம் என்று தெரியவில்லை. வீட்டுக்குள் வந்தவன், லுங்கியைக் கட்டிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்தான். உடம்பு ஆடுவது நின்றது. உள்ளத்தில் லேசாக நிதானம் ஏற்படுவது போலிருந்தது.

நேற்று குமார் சொன்னதின் அர்த்தம் அவனுக்குப் புரியப் புரிய, வாழ்க்கையே அவனுக்கு அனர்த்தமாகத் தெரிந்தது. நடந்ததையெல்லாம் நிதானமாகச் சிந்தித்து, வாழ்க்கையைப் பற்றியும், வாழும் விதம் பற்றியும், ஒரு முடிவுக்கு வரலாம் என்பதுபோல், அவன் நாற்காலியில் உட்கார்ந்தபடியே கால்களை மாற்றிப் போட்டபோது, உள்ளே இருந்து ஓலம் கேட்டது. சத்யாவின் ஓலம். அவள் அழுதிருக்கிறாள்; ஆனால், இப்படி அழுததில்லை. பிராணனே அழுவது போன்ற ஓலம். பயங்கரமான சத்தம்.

"அடிக்காத அண்ணா... நான் ஒரு பாவமும் அறியாதவள். சாவியைக் கொடுக்கும்போது தவிர, வேற எந்தச் சமயத்துலயும் நான் பேசினதில்ல. சத்தியமாப் பேசுனதில்ல அண்ணா... வேணுமுன்னா கொன்னுடு. இப்படிச் சித்திரவதை பண்ணாத அண்ணா... நாளைக்கு நானே போயிடுறேன். அய்யோ, என் காலு போயிட்டே... என் கன்னம் போயிட்டே... என் வயிறு வலிக்கே... அண்ணா..."

மெய்யப்பன், தன்னையறியாமலே எழுந்தான்.

சத்யாவின் ஓலம் நின்றுவிட்டது. அதேசமயம், அண்ணன்காரன், "ஒன்னை என்ன பண்றேன் பாரு... சாவி கொடுக்கிற சாக்கிலயா போனே? இன்னையோட நீ சரி' என்று சொல்லிக் கொண்டே அடிக்கும் சத்தமும், "மூதேவிய விட்டுடுங்க... ஊரான் பெண்டாட்டிய நாம ஏன் அடிக்கணும்... நாளைக்கே கட்டுனவன் முன்னால நிறுத்திட்டு வாங்க..." என்று அண்ணிக்காரி கீதாவுபதேசம் செய்வதும் கேட்டது. இன்னும் அடிப்பது முடியவில்லை. ஆனால், சத்யா அழுவது நின்று விட்டதே... அழ முடியாதபடி அண்ணன் அவள் வாயில் குத்தியிருப்பானோ... சத்தத்தை எழுப்பும் தொண்டையைக் கிழித்திருப்பானோ....

மெய்யப்பன் ஆவேசமாக உள்ளே போனான்.

சத்யா துவண்டு கிடந்தாள். வீட்டுக்கு வெளியே கிடந்த மாவரைக்கும் ஆட்டுக் கல்லுக்கருகே, குப்புறக் கிடந்தாள்.

சிறிதாய் போன வலதுகால், புடவை விலகி, பல்லியின் வால் போல் துடித்துக் கொண்டிருந்தது. அண்ணன்காரன், அடித்த கை வலித்ததாலோ என்னவோ, இப்போது அவளைக் காலால் உதைத்தான். அவன் உதைக்க உதைக்க, அவள் லேசான முனகலுடன் அங்குமிங்குமாகப் புரண்டு கொண்டிருந்தாள்.

மெய்யப்பன் நேராக, உதைப்பவன் கையைப் பிடித்து, தரதரவென்று இழுத்து, சிறிது தூரத்தில் நிறுத்திக்கொண்டு, "ஸார்.. நீங்க செய்யுறது அக்கிரமம் ஸார்.. இந்த பூமியறிய சொல்றேன்.... என் வேலை சத்தியமாய் சொல்றேன்... நான் அவங்களை தப்பா நினைச்சதில்ல... அவங்களும் என்கிட்ட தப்பா பேசினதில்ல... தப்பாய் நினைக்கது நீங்கதான்..." என்றான்.

அவன் குறுக்கீடலை எதிர்பாராத அண்ணன்காரன் எப்படிப் பதிலளிப்பது என்று யோசித்தபோது, அடிதடி வருமோ - அதில் புருஷன் உதைபட்டுப் போவானோ என்று உள்ளூறப் பயந்து ஒப்பாரி போடப்போன அண்ணி, மெய்யப்பன் நிதானமாக நிற்பதையும், அவன் கையில் ஒரு சின்ன கம்புகூட இல்லாததையும் பார்த்துவிட்டு, எகிறினாள்.

"ஏன் கல்லு மாதிரி நிக்கீங்க... இது நம்ம வீட்டுச் சமாச்சாரம்... எவனுக்கும் இதுல தலையிட உரிமை கிடையாதுன்னு சொல்லுங்க.... அவளை அடிச்சால், இவனுக்கென்ன வந்ததாம்..."

அண்ணன்காரனுக்கும் ரோஷம் வந்தது. "நான் அவளை அடிப்பேன். ஒதைப்பேன்.... ஒனக்கென்ன வந்தது. ஏய்... எடுடி அரிவாள... தடுக்க வாரவனையும், ஒரே வெட்டாய் வெட்டுறேன்.....எல்லாம் இந்த பழிகாரியால வந்தது..."

அண்ணன், மெய்யப்பனை அலட்சியப்படுத்திக் கொண்டே ஓடிப்போய், இன்னும் சுரணை இல்லாதவள் போல் குப்புறக் கிடந்த சத்யாவின் விலாவில் ஒரு உதைவிட்டு,

மீண்டும் இன்னொரு காலைத் தூக்கியபோது, மெய்யப்பன் அவன் கைகளை உடும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டு, "ஸார்.... இந்த நாட்ல ஒரு நாயை அடிக்கக்கூட நமக்கு உரிமை கிடையாது. மிருகங்களை காக்கக்கூட சங்கம் இருக்கிற காலத்துல... கூடப் பிறந்த தங்கையை... இப்படியா ஸார் அடிக்கது? நீங்க அடிக்கிறபோது, ஒரு பிரஜை என்கிற முறையில, அதைத் தடுக்கிறதுக்காக... நான் எந்த லெவலுக்கும் போகத் தயார் ஸார்..." என்று சிறிது அதட்டலாகக் கேட்டான். பிடியையும் விடவில்லை.

அண்ணிக்காரிக்கு, கணவனின் ஆவேசம் தாவியது.

"இந்த முண்ட.... அவனுக்கு நல்லாத்தான் சொல்லிக் கொடுத்திருக்காள். இவளை இப்பவே ஒரே வெட்டா வெட்டிப் போடுங்க... இவன் என்ன செய்யுறான்னு பார்ப்போம்."

அண்ணன்காரன், மெய்யப்பனின் பிடியில் இருந்து விடுபடத் திமிறிக் கொண்டே, தங்கையைப் பார்த்துக் காலை நீட்டினான். மெய்யப்பன், "ஸார் நான் அப்புறம் பொல்லாதவனாய் ஆயிடுவேன்..." என்று சொல்லிக் கொண்டு பிடியை அழுத்தினான்.

கீழே துவண்டு கிடந்த சத்யா தட்டுத் தடுமாறி எழுந்தாள். நிற்க முடியாமல் போனதால், சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டே கத்தினாள்.

"யோவ்... எங்கண்ணன் என்னை அடிச்சா ஒனக் கென்னய்யா வந்தது...? நான் யாரு? நீ யாருய்யா? நீ ஏய்யா தலையிடுறே...? ஒங்கிட்ட தெரியாம சாவியக் கொடுத்துட்டு நான் படுறது போதாதா... போய்யா... மானமுள்ளவன்னால்... சொன்னபடி வீட்டைக் காலி பண்ணிட்டு ஒரேயடியாய் போய்யா... அண்ணா...! என்னை வெளியேத்தணுமுன்னாலும் சரி... கொல்லணுமுன்னாலும் சரி... வேற காரணத்தைக் கண்டுபிடிண்ணா... நான் காலுலதான் நொண்டியே தவிர... கற்பில இல்லண்ணா... அண்ணா.... அண்ணா...."

மெய்யப்பன் விக்கித்து நின்றான். அவன் அண்ணனை விட்டுவிட்டு, சிறிது விலகி நின்றான். சிறிது நேரம் கூனிக்குறுகி ஆகாயத்தையே பார்த்துக் கொண்டு நின்றவன், பிறகு, மின்வெட்டுப்போல் கால்வெட்ட, தன் அறைக்குள் வந்து கதவை மூடிக் கொண்டான். மனத்திரையில் விமலா வந்தாள். வாணியும் சத்யாவும் நிழலுருவங்களாகத் தெரிந்தன. வாணி வந்தபோது, விமலாவும் சத்யாவும் நிழலுருவங்கள் போல் ஒருவர் மாற்றி ஒருவராக வந்து, அந்த உருவங்கள் அஸ்தமித்தபோது, மானேஜர் கொக்கரித்த சிரிப்போடும், ரவி பரிகாசமாகவும், குமார் உதட்டைப் பிதுக்கிக் கொண்டும் வந்து போனார்கள்.

திடீரென்று, சத்யா மீண்டும் ஓலமிடுவது அவனுக்குக் கேட்டது. 'அய்யோ... என் வயிறு போச்சே' என்றும், 'அய்யோ என் இடுப்பு போச்சே' என்றும் அவள் விட்டு விட்டுக் கத்துவது காதைக் குத்தியது. பிறகு சத்தமே இல்லை. அடிபட்டு அடிபட்டு, வலிக்கே வலியெடுத்துப் போனதோ... ஒரேயடியாய் அடியின் சொரணை இல்லாமல் போய் விட்டாளோ... போகட்டும்... எக்கேடாவது கெட்டுப் போகட்டும்... காதலியே கைவிட்டாள்... உடன் பிறவா அக்காளே ஏமாற்றிவிட்டாள்... உயிர் நண்பனே ஒதுங்கி விட்டான். இவள் யார்? நான் யார்? ஆமாம் நான் யார்? யார் பெற்ற பிள்ளை? எத்தனை நாள் வாழப் போகிறேன்.... சுவைக்க வேண்டிய வாழ்க்கையை, எத்தனை நாள் இப்படிச் சுமப்பது? இதற்கு முடிவே இல்லையா... விடிவே கிடையாதா...

மெய்யப்பன் நாற்காலியில் உட்கார்ந்தபடி, கண்களை மூடிப் பார்த்தான். மூடிய கண்களைத் திறந்து பார்த்தான். விளக்கை அணைத்துப் பார்த்தான். அணைத்த விளக்கைப் போட்டுப் பார்த்தான். அந்த அறையே அவனுக்கு சமாதி போலவும், அந்த வீடே ஒரு சுடுகாடு போலவும் தோன்றியது. அத்தனை உணர்வுகளும் ஒன்றுடன் ஒன்று மோதி, மோதியவை பிரிந்து, பிரிந்தவை மோதி, உணர்வே இல்லாதவனாய், உள்ளமே செத்துப் போனவனாய், ஏதோ

ஒன்று உடம்பெங்கும் பரவி, தொண்டைக் குழியில் வேர்விட்டு, தலையில் முளைவிட்டு, காலில் கிளைவிட்டு, உடலெங்கும் வியாபித்திருப்பது போன்ற சுமையுணர்வு... அந்த உணர்வுச் சுமையை சுமக்கவும் முடியாமல், இறக்கவும் முடியாமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தான். விழித்த கண்கள் பார்க்கவில்லை. கனத்த நெஞ்சம் நினைக்கவில்லை.

தெரு உறங்கியது. சத்யாவும் உறங்கியிருக்க வேண்டும். குறைந்தபட்சம், அவள் சத்தமாவது உறங்கியிருக்க வேண்டும். உறக்கமோ... உறைவோ... நிசப்தமோ... நிர்மலமோ... தூக்கமோ... துக்கமோ... எல்லாமே சூன்யப்பட்டு அவன் ஒருவன் மட்டும் இருப்பதுபோன்ற பிரமை. அவன் ஒருவன் மட்டும் சூன்யமாகி, அனைத்தும் ஆனந்தக் கோட்டில் இயங்குவது போன்ற பேதமை.

## 11

நள்ளிரவு நேரம். கரப்பான் பூச்சி ஒன்றை, பல்லி ஒன்று பின்புறமாகப் பிடித்து, சுவரில் வைத்து 'டக் டக்' கென்று அடித்துக் கொண்டே, பற்றிய பூச்சியை உயிரோடு பின்புறமாகத் தின்று கொண்டிருந்தது. தெருவோர தூங்கு மூஞ்சி மரத்தில் துயில் கொண்ட காகங்கள், காலையில் கரையவேண்டிய அந்தக் கரும்பறவைகள், பாம்பைப் பார்த்தோ அல்லது மெதுவாக மரமேறி வந்த பூனையைப் பார்த்தோ, மரத்திலிருந்து விடுபட்டு அலங்கோலமாக ஓலமிட்டுக் கொண்டிருந்தன. ஏதோ ஓர் அடையாளம் காண முடியாத பறவையின் ஓலம் - சத்யாவின் ஓலத்தைப் போல. பல்லி, கரப்பான் பூச்சியின் பாதி உடம்பை விழுங்கிவிட்டது, அவனைப் பிடித்த விமலாவைப் போல.... தெரு நாய் ஒன்று,

சொறி நாய் ஒன்றின் கடியில் சிக்கியது போன்ற அவல ஒலி - வாணியைப் போல. எல்லாவற்றையும் கவனிக்காததுபோல் இருந்த இயற்கைச் சூழல் - குமாரைப் போல. திடீரென்று வீசிய பேய்க் காற்றில் ஏதோ ஒரு மரக்கிளை கீழே விழுந்தது அவனைப்போல.

நாற்காலியில் இருந்து கீழே விழுந்த மெய்யப்பன், எழுந்திருக்க வேண்டும் என்ற உணர்வொடுங்கியவனாய், கால்மணி நேரம் வரை அப்படியே கிடந்தான். தாகம் எடுப்பது போலிருந்தது. முட்டிக் கால்களில், முன் கைகளை ஊன்றிக் கொண்டே எழுந்தான். சுவரின் மூலையில் இருந்த மண் கூஜாவில் இருந்து ஒரு டம்ளர் நிறையத் தண்ணீரை எடுத்துக் கொண்டு வாயருகே கொண்டு போனான். இரண்டு சொட்டு வாயில் விழுந்ததுதான் பாக்கி...

திடீரென்று, டம்ளரைப் பதறிப்போய் கீழே போட்டு விட்டு, விளக்கைப் போட்டான். டம்ளரில் அக்கினித் திராவகம் இருந்தது போலவும், அதை அவன் குடித்து நாக்கில் சுடுவது போன்றும் ஒரு உணர்வு... கீழே விழுந்து கிடந்த டம்ளரையே வெறித்துப் பார்த்த மெய்யப்பன், எரிந்து கொண்டிருந்த பல்பை ஏறிட்டுப் பார்த்தான். அந்த பல்ப் ஆயிரம் சுக்கலாக உடைந்து, அவன் கண்களுக்குள் குத்துவது போன்ற ஒரு பிரமை... பல்பில் இருந்த விடுபட்டு, சுவரைப் பார்த்தான். கரப்பான் பூச்சியைக் கௌவிய பல்லி, மிகப் பெரிய உருக்கொண்டு அவனைக் கௌவுவது போன்ற எண்ணம். அவன் மிகப்பெரிய கரப்பான் பூச்சியானது மாதிரியும், அந்த பல்லி, அதைவிட மிகப் பெரிய உருக்கொண்டு, அவனை பின்பக்கமாகப் பிடித்துத் தின்பது மாதிரியுமான ஒரு பயங்கரமான கற்பனை; நிஜமான உண்மையைவிட அழுத்தமாக வந்த கற்பனைப் பயம்....

மெய்யப்பனுக்கு அந்தக் குளிர் காலத்திலும் உடலெல்லாம் வியர்த்தது. உடம்பின் ஒவ்வொரு அவயங்களும் ஆடின. சற்றுத் தொலைவில் காத்து நின்ற ஏதோ ஒரு கருவுருவம், முழுக்க முழுக்க முண்டமாக இருந்த

ஒன்று, அவனை ஒரே தாவாகத் தாவிப் பிடித்துக் கொண்டது போன்ற பிரமை... சொல்ல முடியாத... சொல்லில் அடங்காத பயம்... அடிவயிற்றில் கிளம்பி, நெஞ்சை உதைத்து, நெற்றியை உடைப்பது போன்ற பயம்... கொலையைப் பார்க்கும்போதோ, குற்றியிராய் விபத்தில் துடிப்பவரைப் பார்க்கும்போதோ ஏற்படும் பயத்தை, வெறுமனே ஒரு துளியாக்கும் கடலளவுப் பயம்... விளங்காத... விளக்க முடியாத பயம்...

மெய்யப்பனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. வெறி பிடித்தவன்போல், விளக்கை அணைத்துவிட்டு, கட்டிலில் மல்லாந்து படுத்தான். அந்தக் கட்டிலே பாடையாகி, நான்கு பேர் தன்னைச் சுமந்து கொண்டு, சுடுகாட்டை நோக்கிப் போவது போன்ற கற்பனை. கற்பனையிலும் விளக்க முடியாத - கற்பனையில் இருந்து தப்பிக்கும் வகையில் அவன், கட்டிலில் இருந்து துள்ளியெழுந்து, கீழே தரையில் படுத்தான்.

திடீரென்று, அந்தத் தரை கீழ்நோக்கிப் போவது போலிருந்தது. அவனை மட்டுமே இழுத்துக் கொண்டு அதல பாதாளத்தைப் பார்த்து வேகமாய் பாய்வது போன்ற எண்ணவோட்டம். மீண்டும் அவன் துள்ளியெழுந்து நாற்காலியில் சாய்ந்தான். நாற்காலி இருக்கையில் ஆணிகளை அடித்து வைத்திருப்பது போலவும், அவற்றின் மீதுதான் அவன் அமர்ந்திருப்பது மாதிரியுமாக சிக்கடைந்த எண்ணம்.

மெய்யப்பன் தட்டுத் தடுமாறி எழுந்து விளக்கைப் போட்டான். சுவரில் கரப்பானைப் பற்றிய பல்லி... இல்லை... இல்லை... கரப்பான் பூச்சியாக மாறி அவனைக் கெளவிய பேய்ப் பல்லி... அவன் கையிழந்து, காலிழந்து முண்டமாய் நடப்பது போன்ற தலைகால் புரியாத எண்ணம்.

மெய்யப்பன் தலை இருக்கிறதா என்பதுபோல், அதை உதறிவிட்டுக் கொண்டான். விளக்கைப் பார்த்தான். பிறகு, கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான். அப்படியே வெறித்து நின்றான்.

நாற்காலியில் உட்கார முடியவில்லை. ஆணிகள் அடிக்கப்பட்டுள்ளன. கீழே தரையைப் பார்க்க முடியவில்லை. அதல பாதாளம் அழைக்கிறது. மேலே நோக்க முடியவில்லை. அந்த அறையின் கூரை இடிந்து, அவன் தலையில் விழுந்து, அவனுடன் இடிபாடுகளோடு இடிபாடாக விழுகிறது. இந்த பயங்கரமான எண்ணோட்டத்தில், விமலாவும், வாணியும், சத்யாவும் கசிந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு. குறிப்பாக, விமலாவைப் பற்றிய உணர்வின் அடித்தளத்தில் இந்தப் பயங்கர பைசாச உணர்வுகள் ஊர்வலம் போவது போலிருந்தது.

மெய்யப்பனுக்கு அந்த அறையை விட்டு வெளியேறி எங்கேயாவது ஓடவேண்டும் போலிருந்தது. குமாரின் இருப்பிடம் போய் அவனை எழுப்பி எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு. 'இருக்கானோ....? இல்லையோ...?'

மேல் சட்டை போடவேண்டும் என்ற நினைப்பு இல்லாமலே, லுங்கி பனியனுடன் அறைக்கு வெளியே வந்து, காம்பவுண்ட் கதவைத் திறந்து கொண்டு ,தெருவுக்கு ஓடி வந்தான். சுவரோரமாக முடங்கிக் கிடந்த சொறி நாய் ஒன்று, அவனைப் பார்த்து எழுந்தது. திடீரென்று அவனுள்ளே ஒரு எண்ணம்... ஒரு பயம்... அந்த நாய் அவன் கழுத்தைக் கௌவிப் பிடித்து, ரத்தத்தைச் சுவைத்துக் குடிப்பது போன்ற கற்பனை...

கழுத்தைக் கைகளால் மூடிக்கொண்டே, மெய்யப்பன் தன் அறைக்குள் ஓடி வந்தான். திபுதிபுவென்று திருடன் போல் ஓடி, உள்ளேபோய் தாளிட்டுக் கொண்டான். நாயை இப்போது அவனால் பார்க்க முடியவில்லையானாலும், அது அவன் வயிற்றைக் கிழித்துக் குடலை கௌவிக் கொண்டு, அவனையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போவது போன்ற பேயுணர்வு... குடலே இடுப்பில் கட்டிய கயிறாக, நாயிழுத்த மனிதனாய், அவன் தெருத் தெருவாய் அலைந்து அலைக் கழிக்கப்பட்ட இரண்டு கால் மிருகமாய் போவது போன்ற நச்சுணர்வு.

மெய்யப்பன் வயிற்றைப் பிடித்துக் கொண்டான். கூரை விழாமல் இருக்க, தலையை கைகளால் மூடிக் கொண்டான். கால்கள் பாதாளத்தில் போகாமல் இருக்க, கால்களை ஒன்றை மாற்றி ஒன்றாகத் தூக்கிக் கொண்டான். கட்டில் பாடையாக மாறாமல் இருக்க, அதைச் சாத்தி வைத்தான். கண்களில் கண்ணாடித் துகள்கள் அழுத்தாமல் இருக்க, விளக்கை அணைத்துக் கொண்டான். ஆனாலும் _

பாதாளத்திற்குள் போவதை, கூரை விழுந்து குற்றுயிராய் கிடப்பதை, பாடையில் போவதை, நாய் கௌவும் நாசத்தை, அவனால் உதற முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மையமாக, விமலாவைப் பற்றிய நல்லதும் கெட்டதும் அற்ற எண்ணத்தை அவனால் நீக்க முடியவில்லை. கண்களை அகலப்படுத்தினான். விமலா அவற்றை ஊசியால் குத்தி வெளியே எடுப்பதுபோன்ற பிரமை.

எப்படி இந்தப் பீதி வந்தது என்று அவனுக்குப் புரியவில்லை. இதிலிருந்து விடுபட முடியுமா என்பதும் தெரியவில்லை. பைத்தியமாகி விட்டோமோ என்கிற சந்தேகம். இந்த அறை பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் ஒரு வார்டோ என்ற கற்பனை.

அவனுக்கு, தான் நினைக்கும் உணர்வுகளுக்கு ஆதாரமில்லை என்பது புரிகிறது. அவை போலி உணர்வுகளே என்பதும் தெரிந்தது. ஆனாலும், அவற்றை நினைக்காமல் இருக்க முடியவில்லை. எண்ணங்களே பாம்புகளாக அவன் நெஞ்சை சதையோடு சேர்த்துத் தின்றன. காலையில் சரியாகிவிடும் என்ற ஆறுதல். அப்படி ஆகுமா என்ற ஆதங்கம். வினாடியே யுகமாகியபோது, இரவுவரை தன்னால் தாக்குப் பிடிக்க முடியுமா என்ற சந்தேகம். உயிர் போகும்போது, இப்படித்தான் இருக்குமோ என்ற மரணப்பயம்.

சாமக்கோழி கூவுவது வரைக்கும், கட்டிலில் இருந்து தரையில் விழுந்து' நாற்காலியில் சாய்ந்து, வயிற்றைப் பிடித்து,

கண்களைப் பொத்தி, அவன் விழுந்து விழுந்து எழுந்தான். எழுந்து எழுந்து விழுந்தான்.

இறுதியில், இயற்கை கருணை செய்தது. தாக்கிய உணர்வுகளுக்குத் தளர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். அவயவங்கள் அவற்றை உள்வாங்கி இருக்கவேண்டும். அவன் கண்கள் செருகின. உடம்பு பூமியை அழுத்திக் கீழே தள்ளுவதுபோல் கனத்தது. மெய்யப்பன் தரையில் குப்புறப் படுத்தான். வெளியுலகைப் பார்க்க விரும்பாதவன்போல், மூக்கு, தரையை முட்டப் படுத்தான். அதல பாதாளத்திற்கும், ஆகாயத்திற்குமாக மாறிமாறிப் போய்வந்த அவன் இறுதியில் செத்தவன் போல் மாறினான்...

## 12

காலையில் எட்டுமணிக்குக் கண்விழித்தான் மெய்யப்பன். ஒரு நிமிட நேரம், எந்தவித எண்ணவோட்டமும் இல்லாமல், மனம் தெளிந்த நீரோடைபோல இருந்தது. திடீரென்று, இரவில் அனுபவித்த உணர்வுகள், ஒரே சமயத்தல் போட்டி போட்டுக் கொண்டு, உள்ளத்திற்குள் பாய்வது போலிருந்தது. அப்படிப் பாய்ந்த ஒரு கணத்துள் தலை கனத்தது. நெற்றி புடைத்தது. கண்கள் அழுத்தின. காதுகளில் பேரிரைச்சல். உடம்பு முழுவதும் ஒரு குலுங்கு குலுங்கி, ஒவ்வொரு அவயவமும் தனித்தனியாக, தற்குறித்தனமாக ஆடுவது போலிருந்தது. உணர்வுகள், மனதுக்குக் கட்டுப்படாமலும், உறுப்புகள், மூளைக்குக் கட்டுப்படாமலும் இயங்குவதுபோல் காதிரைச்சல்... கண்ணெரிச்சல்... இடதுபுறமிருந்த இருதயப் பகுதியின் துடிப்பு...

இரவு அனுபவித்த உணர்வுகள் கனவல்ல, நிஜமாகிப் போன கற்பனை என்பதை உணர்ந்து, திடுக்கிட்டு எழுந்தான். தண்ணீர் குடிக்கப் போனான். பயம் பிடித்துக் கொண்டது. எடுத்த டம்ளரைக் கீழே போட்டுவிட்டு, அவசர அவசரமாகக் குளியலறைக்குப் போய் கை கால் அலம்பிவிட்டு வெளியே வந்தான். கதவைக்கூட சாத்தவில்லை.

காம்பவுண்ட் கதவின் அடியில் தலையைத் திணித்துக் கொண்டு, அந்த சொறிநாய் இன்னும் அங்கேயே கிடந்தது. அவனுக்கு, மீண்டும் குடல் வெளியே வந்து, அதை அந்த நாய் இழுப்பது போன்ற சாவெண்ணம். ஒரு கல்லை எடுத்து அந்த நாய் மீது வீசப்போனான். பிறகு.தூக்கிய கல்லை கீழே போட்டுவிட்டு, மேற்குப் பக்கமாக நடந்தான். அவன் வழக்கமாகச் செல்லும் டீக்கடைக்குப் போனான். உள்ளே போய் கடை முதலாளியிடம் 'எந்தா... நாயரு...' என்று மலையாள பாணியில் 'காலை வணக்கம்' சொல்லும் அவன், இப்போது வெளியே நின்று கொண்டான். டீக்காரர் கண்ணாடி டம்ளரை எடுத்தார். பிறகு, அவன் பிரசன்னத்தை அங்கீகரித்தவர் போல் ஒரு பீங்கான் குவளையை எடுத்தார். அதில்தான் அவன் 'டீ' குடிப்பது.

மெய்யப்பன், எதுவும் பேசாமல், இருபத்தைந்து பைசாவை மட்டும் கல்லாவில் வைத்துவிட்டு, கூனிக்குறுகி நின்றான். உள்ளே, இரண்டு மூன்று தொழிலாளர்கள் தமாஷாகப் பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

"ஒன்னெல்லாம் சும்மா விடப்படாதுடா... இந்த பாய்லர் அடுப்புக்குள்ள ஒன் தலையைத் திணிக்கணும்."

"அப்டில்ல மச்சான்... தலைகீழ தூக்கிட்டுப்போய், கழுத்து வரைக்கும் நெருப்புல முக்கணும்... அப்போகூட இவனுக்குப் புத்தி வராது."

மெய்யப்பன் பேசியவர்களைப் பார்க்கவில்லை. பாய்லர் அடுப்பையே பார்த்தான். நெருப்பு, துண்டு துண்டாக, கட்டிக் கட்டியாக்ச் செம்மை நிறத்தில் மின்னியது. அவன் மனதில்

அசுரத்தனமான ஒரு கற்பனை. நாயர் அவன் தலையைப் பிடித்துப் பாய்லர் அடுப்புக்குள் திணிக்கப் பார்க்கிறார். இன்னும் யாரோ இரண்டுபேர் அவனைத் தலைகீழாகத் தூக்கிப் பார்க்கிறார்கள். அடுப்புக்குள் திணிக்கப் பார்க்கிறார்கள்.

மெய்யப்பன் திரும்பி நடந்தான். திரும்பிப் பாராமல் நடந்தான். அவன் போவது புரியாமல், கடைக்காரர் சிறிது நேரம் அவன் புறமுதுகையே பார்த்தார். பிறகு, ஸ்பெஷலாக போட்ட அந்த குவளை தேநீரை யாரோ ஒரு தொழிலாளிக்கு முனங்கிக் கொண்டே கொடுத்தார்.

மெய்யப்பன் காம்பவுண்ட் கதவைத் தள்ளியபோது, சத்யா துடைப்பத்தோடு வந்து நின்றாள். துடைப் பத்தாலேயே அவள் தலையில் அடிப்பதுபோல் ஒரு அவமானச் சிந்தனை. அவளையே சிறிது நேரம் வெறித்துப் பார்த்தான். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இரவு அவனைத் திட்டியதற்காகத் தனக்குள்ளேயே மருகிக் கொண்டிருந்தவள், இப்போது அவன் பார்க்கும் விதத்தைப் பார்த்துவிட்டு, கோபம் பொங்க, துடைப்பத்தின் அடிப்பாகத்தைத் தரையில் வைத்துத் தட்டிக்கொண்டே பெருக்கப்போனாள்.

மெய்யப்பனுக்கு திடீரென்று இன்னொரு பிரமை. இந்த சத்யா அசுரரூபியாகி அவனை, துடைப்பத்தைப் பிடிப்பது போல், தலைகீழாகப் பிடித்துக் கொண்டு, அவன் தலை முடியை வைத்தே தளத்தைப் பெருக்குவதுபோல் ஒரு பீதி. மெய்யப்பன் சத்யாவைத் திரும்பித் திரும்பி பூர்த்துக் கொண்டே. அறைக்குள் ஓடினான். கதவைப் படாரென்று சாத்தினான். சாத்திய வேகத்தில் மறுபுறமாகத் திரும்பி, கட்டில் 'பாடையைப்' பார்த்தான். 'பாதாளத்' தரையை நோக்கினான். இடிந்து விழப்போகும் மேல் கூரையை வெறிபிடிக்கப் பார்த்தான்.

பிறகு, அறை மூலையில் அப்படியே சாய்ந்து, கால்களை விரித்துப் போட்டுக் கொண்டு, கைகளை குறுக்காக மடித்துக்

கொண்டு, எதையோ பார்ப்பதுபோல், எதையும் பார்க்காமல், அப்படியே அண்ணாந்து இருந்தான். உள்ளத்துள் புகுந்த உணர்வுகளை உதற முடியவில்லை. இல்லாததை இருப்பதாக நினைப்பது தெரிந்தாலும், அவற்றை இல்லாமல் செய்ய இயலவில்லை.

ஒன்பது மணி ஆகியிருக்கும். கதவைத் தட்டும் சத்தம் கேட்டு அவன் எழுந்தான். தாழ்ப்பாள் பாம்பாகச் சீறி அவனைக் கொத்த வருவது போன்ற பயம். சமாளித்துக் கொண்டு கதவைத் திறந்தான். குமார் வந்தான். மௌனமாக அவனையே பார்த்தான். பிறகு, ஆச்சரியத்தை அடக்க முடியாமல் கேட்டான்:

"டேய்... என்னடா... இப்டிப் பார்க்கிறே... நைட்ல தூங்கலியா...?"

மெய்யப்பன் நண்பனையே விக்கித்துப் பார்த்தான். அவன் கழுத்தை கட்டிக்கொண்டு அழப் போகிறவன்போல், கைகளை அவன் தோளில் போடப் போனான். அதற்குள் குமார் சாய்வு நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டு, "ஒன்கிட்ட சொல்லாமல்தான் ஊருக்குப் போவதாய் இருந்தேன். இரண்டு மாதம் பார்க்க முடியாதுன்னு தெரிந்ததும், மனசு கேக்கல... அதோட... நீ விம்புக்காக இருக்கிறவன் இல்லன்னு தெரியும்... ஏண்டா என்னை அப்படிப் பார்க்கிறே...?" என்றான்.

மெய்யப்பன், குமாரின் வாயையே பார்த்தான். அவன் தன் கழுத்தைக் கௌவிக் கடிப்பது போன்ற ஒரு எண்ணம். அந்த எண்ணத்தைப் பயமாக மாறாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டான். குமாரைப் பார்த்ததும் லேசாக ஆறுதல் ஏற்பட்டது. சாய்வு நாற்காலியில் சாய்ந்து கிடந்தவனின் கைகளைக் குனிந்து பற்றிக்கொண்டு, "டேய் குமார்... ஏதோ ஒரு மாய வலையில... மாட்டிக்கிட்டது மாதிரி தோணுதுடா... யாரோ என்னைக் கட்டிப்போட்டது மாதிரி தோணுதுடா...." என்றான்.

"ஒனக்குப் புத்தி இருக்காடா....? இன்னுமா.... விமலாவை மறக்காமல் இருக்கிறே....?"

"அவளை மறக்கவும் இல்ல... நினைக்கவும் இல்ல... அவள் ஒரு பொருட்டே இல்ல... நான் சொல்ல வந்தது வேறடா..."

"விமலா போய், வாணி வந்திருப்பாள். அவளும் போய் வேற ஒருத்தி வந்திருப்பாள். ஒனக்கும் வேற வேலை இல்லை... அவளுகளுக்கும் வேற வேலை இல்லை... உருப்படியாய் ஏதாவது பேசு... இல்லன்னா... நான் பேசுறதையாவது கேளு..."

"சொல்றதைக் கேளு... நைட்ல தண்ணி குடிக்கப் போனேன். அது அக்கினித் திரவமாகத் தெரியுது... கட்டிலில் படுத்தால், பாடையில் யாரோ என்னைத் தூக்கிட்டுப் போற மாதிரி தோணுது... அப்புறம் ஒரே பயமயம்... சொல்ல முடியாத பயம்... இந்த மாதிரியான நினைப்புகளுக்குச் காரணமில்லன்னு நல்லாத் தெரியுது... இருந்தாலும் அப்படி நினைக்காம இருக்க முடியல.... கூரை இடிந்து தலையில் விழுந்தது மாதிரி ஒரு எண்ணம்."

குமார் அவனை ஆச்சரியமாகப் பார்த்தான். சிறிது பரிகாசமாகக்கூட நோக்கினான்.

"அதெப்படிடா வரும்? நம்மை மீறி... எப்டி அப்படிப்பட்ட எண்ணம் வரும்? நான்கூடத்தான் இந்த கட்டில பார்க்கேன். எனக்கு பாடை மாதிரி தோணலியே... கூரை எப்படிடா விழும்? நம்மாலத்தான் அதை விழ வைக்க முடியுமா? நல்ல ஆளுடா... சீக்கிரமா ஆபீஸுக்குப் போ... சரியாயிடும்... அப்புறம் ஏதாவது சினிமாவுக்குப் போ...."

"நீ நினைக்கிறது மாதிரி சிம்பிள் விவகாரம் இல்லடா..."

"ஒன் புத்தி ஒன்னைவிட்டுப் போகாதுடா... சிம்பிள் விவகாரத்தையும் சிக்கலாய் பண்றதுல... நீ நிபுணன்."

"டேய்.... நான் சொல்றது ஏண்டா ஒனக்குப் புரிய மாட்டேங்குது..."

"போடா கழுதை... அற்ப விஷயத்தை ஆயுளுக்கும் நினைக்கிறவன் நீ... என்னையும் உன்கூட சேர்ந்து ஒப்பாரி வைக்கச் சொல்றியா... வேணுமுன்னால் ஒண்ணு பண்ணு... பேசாமல்... என்கூட ரெண்டு மாசம் ஊர்ல வந்து தங்கு... ஒன்னை ராஜா மாதிரி கவனிக்கிறேன்... ஒனக்கும் ஒரு சேஞ்ஜ் வேணும்..."

"நேற்று நைட்ல இருந்து... நான் சேஞ்ஜ் ஆயிட்டேண்டா...."

"மண்ணாங்கட்டி.... சும்மா மனக் கிலேசம்... ஆபீஸுக்குப் போனால் சரியாகிவிடும்... எதுக்கும் சாயங்காலமாய் டாக்டரைப் பாரு... அவரைப் பார்க்காட்டாலும் ஒண்ணும் ஆயிடாது... அப்போ, நான் வரட்டுமா....?"

மெய்யப்பன் அவன் போகலாம் என்பதுபோல் தாராளமாகத் தலையாட்டினான். குமாரே அவனைக் கடித்து, ரத்தத்தைக் குடித்து, குதறுவது போன்ற ஒரு பயம். வழியனுப்புவதுபோல் எழுந்து நின்றான்.

குமார் அவன் தோளில் தன் கரங்களைக் குவித்துக் கொண்டே பேசினான். "இதோ பாருடா... இனிமேலாவது உருப்படியாய் இரு... நீ நல்லவனாவே இரு... அதே மாதிரி எல்லோரும் நல்லவங்களாய் இருப்பாங்கன்னு நினைக்காதே... இருக்கணுமுன்னு எதிர் பார்க்காதே... மனிதர்களை அவர்களது மனவோட்டத்துக்குத் தக்கபடி எடை போடணுமே தவிர, நம்முடைய மனோநிலைக்குத் தக்கபடி கணிக்கக்கூடாது. உலகத்தில் முக்கால்வாசிப் பேர் நல்லவர்களுமில்ல.... கெட்டவர்களுமில்ல... ஏசுநாதரை காட்டிக் கொடுத்தவன் ஒரு சிஷ்யன்தான். அதனால, வம்புச் சண்டைக்குப் போகாதே... வந்த சண்டையை விடாதே... ஆனானப்பட்ட விஷ்ணுவே.... அயோக்கியர்களை அழிக்க பலதடவை அவதாரம் செய்தாராம்... நீ எம்மாத்திரம்? கடைசியில நீதான் அவதாரமாய் போயிடுவே.... அதனால பிறரைக் காப்பாத்தணும் என்கிற எண்ணத்தை விட்டுவிட்டு, ஒன்னைக் காப்பாத்திக்கப் பாரு..."

''இன்றைய வாழ்க்கையில, தற்காப்புப் போராட்டத்துக்கே நேரம் போதல... பிறத்தியாரைப் பற்றி நமக்கென்ன வந்தது...? நான் வரட்டுமா... லெட்டர் போடுறேன்... உங்க ஊர்லயே ஒனக்கும் ஒரு பெண் பார்க்கிறேன். தாலி கட்டத் தயாராய் இரு... தங்கம் வாங்குறதுக்கு காசைச் சேரு... நான் வறேண்டோ... ஒன்னை விட்டுப்போக மனம் வரலியேடா பாவி... கண்டபடி நினைக்காதே... சாயங்காலத்துக்குள்ள சரியாகாட்டி, டாக்டரைப் பாரு.... பார்த்தாலும், பார்க்காட்டாலும் சரியாயிடும்... ஓ.கே...."

குமார் போய்விட்டான். மெய்யப்பன் எழுந்தான். அவசர அவசரமாகக் குளித்து முடித்தான். அலுவலகம் போனால் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையில், ஆடையணிந்து, 'பூட்ஸ்' போடப் போனான். எதேச்சையாகச் சுவரில் தொங்கிய மாதக் காலண்டரைப் பார்த்தான். நீருக்குள் இருக்கும் முதலை, வெளியே நிற்கும் யானையின் காலைப் பிடிப்பதைச் சித்தரிக்கும் படம். ரத்தத்துளிகள் தெறித்தது போல், நீரில் சிவப்பு நிறம். யானை தும்பிக்கையைத் தூக்கி, பரிதாபமாக அலறுவதுபோன்ற பாவனை. மெய்யப்பன் பூட்ஸ் கால்களையே வெறித்துப் பார்த்தான். அந்த பூட்ஸ்கள் இரண்டு முதலைகள் மாதிரியும், அவை அவன் கால்களைப் பிடித்துக் கௌவுவது போன்றும் ஒரு எண்ணம். திடீரென்று பூட்ஸ்களை கழற்றி, வீசியெறிந்தான். காலண்டரை எடுத்து, சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டான். பின்னர், அலுவலகம் போனால் சரியாகிவிடும் என்ற எண்ணத்துடன், செருப்பைப் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

'மெஸ்ஸுக்கு'ப் போகும் வழியில் குழந்தை ஒன்று தெருவில் அசுத்தம் செய்வதைப் பார்த்து, முகத்தைத் திருப்பிக் கொண்டே நடந்தான். 'மெஸ்ஸில்' கூட்டம் அதிகமாக இல்லை. அவனைப் பார்த்ததும், ஏற்கனவே உணவோடு எடுத்து வைத்த சாப்பாட்டுத் தட்டை, பையன், மேஜையில் வைத்தான். மெய்யப்பன் ஒரு கவளம் உணவை

வாயில் போட்டபோது, திடீரென்று ஒரு அருவருப்பான எண்ணம். சாலையில் பார்த்த அந்தக் குழந்தையின் அசுத்தத்தையே தான் தின்பது போன்ற ஒரு உணர்வு.

மெய்யப்பன் நாற்காலியைப் பலவந்தமாகத் தள்ளிக் கொண்டே வாஷ்பேசின் அருகே வந்தபின் வாயில் இருந்த சாதத்தைத் துப்பி, வாயைக் கழுவிவிட்டு, வெளியே வந்தான்.

அலுவலகத்திற்கு அவன் வந்தபோது எல்லாம் அடியோடு மாறியிருப்பது போன்ற எண்ணம். விமலா ஒய்யாரமாகச் சிரித்தபடி, வாணியைப் பார்த்து "இந்த புடவை டிசைன் நல்லா இருக்குதா" என்று கேட்கிறாள். வாணி "ஏ ஒன்" என்கிறாள். அந்த 'ஏ' பெண்கள்மீது அவனுக்கு இப்போது கோபம் வரவில்லை. தாபம் தோன்றவில்லை. "வணக்கம் தலைவரே" என்று வழக்கமாகச் சொன்ன பியூனுக்கு, பதில் வணக்கம் சொல்லத் தோன்றவில்லை.

தன்பாட்டுக்கு ஒரு ரிஜிஸ்டரை எடுத்தான். நேற்று முடிக்காமல் வைத்த 'ஆடிட் அப்ஜெக்ஷன் ரிஜிஸ்டர்' இறுதி ஆட்சேபத்திற்குப் பதிலெழுதுவதற்காப் பேப்பரை எடுத்தான். திடீரென்று ஒரு எண்ணம். மானேஜரை, அயோக்கியன் என்றும், வாணியை விபச்சாரி என்றும், விமலாவை வேசி என்றும் எழுதவேண்டும் என்பது போன்ற ஒரு ஆத்திர உணர்வு.

ரிஜிஸ்டரை மூடிவிட்டு, கம்பெனி சம்பந்தப்பட்ட ஒரு கடிதத்தை டைப் அடிக்கப் போனான். உடனே, டைப்ரைட்டிங் மறந்துபோனது போன்ற ஒரு பீதி. ஆங்கில எழுத்துக்கள் தெரியாமல் போனது போன்ற எண்ணம். உணர்வுகளுக்குத் தீனியாகி, அவன் டைப்ரைட்டர் மிஷினையே உற்றுப் பார்த்தான். உறுமிக் கொண்டு பார்த்தான். அந்த மிஷினுக்கு மேல் பகுதியில் காகிதத்தை வெட்டுவதற்காகக் கத்திமேல் இருந்த பகுதியைத் தற்செயலாக எடுத்துவிட்டான். அந்தக் கருவி தன் முன் தொண்டையில் குத்தி, பின்பக்கம் ஊடுருவுவது போன்ற பிரமை.

ஒன்றும் புரியாதவனாய் விமலாவைப் பார்த்தான். அவளை, தான் கடித்து, ரத்தத்தைக் குடிப்பது போன்ற அரக்க உணர்வு. அவனுக்கு அலுலவகம், பேய்க் காடாய் தெரிந்தது. இருந்தவற்றை இருந்த இடத்திலேயே போட்டுவிட்டு, வாணியை நெருங்கி, "மானேஜர்கிட்ட... நான் அரைநாள் லீவுன்னு சொல்லுங்க மேடம்..." என்று சொல்லிவிட்டு, தலைவிரி கோலமாக வெளியேறினான்.

மெய்யப்பன் நடந்துகொண்டே இருந்தான். எழும்பூர் வந்து, புரசைவாக்கம் போய், மூர்மார்க்கெட்டிற்கு நடந்து, பாரிமுனைக்குத் தாவி, ராயபுரம் அலைந்து, மீண்டும் பாரிமுனை வழியாக, கடற்கரை ஓரமாய் வானொலி நிலையம் வரை நடந்து, சிறிது இளைப்பாறுபவன் போல் நின்றுவிட்டு, பிறகு அடையாறுக்குப் போய், அங்கிருந்து சைதாப்பேட்டை வந்து, மவுண்ட்ரோட்டைப் பார்த்து நடந்து கொண்டிருந்தான்.

உள்ளத்தில் தாவிய உணர்வுகளை உலுக்கி எறிவது போல் ஓடிப்பார்த்தான். உடலெங்கும் பூச்சிகளைப் புரண்டு படுத்துக் கொல்லும் எருமை மாடுபோல், அவன் அங்குமிங்குமாய் சுருண்டு சுருண்டு நடந்தான்.

மருந்து குடிக்கும்போது குரங்கை நினைக்காதே என்று சொன்ன புத்திமதிபோல், அவன் நடக்க நடக்க, நாசகார எண்ணங்களும் கூடவே நடந்தன. உடம்பை ஒழிக்காமல் உணர்வை ஒழிக்க முடியாதுபோல் தோன்றியது. எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, இரவு பத்து மணியளவில் வீட்டுக்கு வந்தான்.

கட்டிலை எட்டி உதைத்தான். பாதாளத் தரை தெரிந்தது. தரையைக் காலால் உதைத்தான். கட்டில் பாடையைக் காட்டியது. கட்டிலைப் பார்க்கப் பயந்தவனாய், கூரையைப் பார்த்தான். விழப்போனது. ஒன்றைவிட்டு இன்னொன்றைப் பார்த்தால், பார்ப்பது பயமுறுத்தியது. அங்குள்ள எல்லாப் பொருட்களும், அவனை மாறிமாறிப் பயமுறுத்தின.

நீண்டநேரம் கொலைகார எண்ணங்களுக்குள் உலவிவிட்டு - எறும்புகள் மொய்த்த ஈயாக அவன் முடங்கினான். காலையில் டாக்டரைப் பார்த்ததும், கஷ்டம் தீரும் என்ற நம்பிக்கை லேசான ஆறுதலைக் கொடுக்க மெய்யப்பன், உணர்வொடுங்கி, உடலொடுங்கி, உயிரும் ஒடுங்கியதுபோல் பிணம்போலக் கிடந்தான்.

## 13

ஒரு வாரம் ஓடிப்போனது. ஆனால், மெய்யப்பனைப் பிடித்த பயங்கரமான பிரமைகள் ஓடவில்லை. மாறாக, கொஞ்ச நஞ்சமிருந்த மெய்யான உணர்வுகளும், அந்தப் போலி உணர்வுகளுடன் பின்னிப் பிணைந்து, சிக்கலடைந்தன. ஆரம்பத்தில், பிரமைகளை உதறிவிடலாம் என்ற நப்பாசையில், அங்குமிங்குமாக நடந்தும், தரையில் புரண்டும், கட்டிலைச் சாத்தியும், சினிமாக்களைப் பார்த்தும் தன்னைச் சமாளிக்க முயற்சி செய்தான். சில சமயங்களில், நிமிடத்தை யுகமாக நினைப்பவன்போல், துடித்தான். சில சந்தர்ப்பங்களில், யுகத்தையே நிமிடமாக நினைக்கத் துவங்கியவன் போல், பரபரக்க விழித்தபடி, தலையைச் சாய்த்து, கைகளை ஒடுக்கி இருந்தான். இதர சமயத்தில், கிட்டத்தட்ட பழுதடைந்த பஞ்சாலை மாதிரி ஆகிவிட்டான்.

உள்ளத்திற்கு எற்றாற்போல், உடம்பும் மாறுதல்களைக் காட்டியது. தலையில் கிரீடம் வைத்ததுபோன்று, நெற்றி விலகியதுபோல், நீர் கோர்த்து நின்றது. காதுகள் நமைச்சலும் குத்தலும் கலந்து 'சைத்தியமாகி' விட்டன. கண்கள் உள்நோக்கின. அளவுக்கு மீறிப் பசியெடுக்கையில்,

அசுத்தமான உணர்வையும் மீறிச் சாப்பிட்டான். தாங்க முடியாத தாகம் வரும்போது அக்கினித் திராவகமாய் இருந்தாலும் கவலையில்லை என்பதுபோல் தண்ணீர் குடித்தான். தப்பலாம் என்ற நம்பிக்கை தப்பிவிட்டது. இறப்பதுதான் ஒரேவழி என்பதுபோல் நாட்களை எண்ணிப் பார்த்தான்.

குமார் சொன்னதுபோல் அவன் டாக்டரைப் பார்க்கத் தான் செய்தான். அந்த ஆசாமி, அவன் சொல்வதையெல்லாம் நிதானமாகக் கேட்காமலே, அவன் பாதி சொல்லி முடிக்கும் முன்னாலேயே சீட்டெழுதினார். வெளியே ஏகப்பட்ட கூட்டம் காத்திருப்பதையே மருத்துவத்தில் தான் செய்த மகத்தான சாதனையாகக் கருதிய அந்த டாக்டர் - யாரோ ஒரு அரசியல்வாதி அல்லது பெரிய அதிகாரியின் சிபார்சில், மருத்துவக் கல்லூரியில் இடம் பிடித்து, டாக்டர் பட்டம் வாங்கியிருக்கவேண்டும். இல்லையானால், முகத்தில் அவ்வளவு அலட்சியம் இருந்திருக்காது. அவன் சொன்னதைப் பரிகசிப்பதுபோல், சிரித்துக் கொண்டு கேட்டிருக்கமாட்டார். ஆளுக்கு மூன்று நிமிடப் பார்வையில் ஐந்து ரூபாய் மொய் வாங்கும் அவருக்கு, வெளியே ஐம்பது பேர் காத்திருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆகையால், அவனைப் பார்த்ததும் 'வித்தியாசமான நோயாய் இருக்கே.... ஸ்டடி பண்ண வேண்டிய கேஸாயிற்றே' என்று அவருக்கு, மனிதாபிமானம் கிடக்கட்டும், குறைந்த பட்சம் தொழிலபிமானம்கூட வரவில்லை. அவன் பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு, ஐந்து ரூபாய்க்கு மருந்துக் கடையில் கிடைக்கக்கூடிய மாத்திரைகளைத்தான் வாங்கிக் கொண்டு வந்தான். அந்த மாத்திரைகளையும், வெளியில் எவரும் அடையாளம் கண்டு விலையைக் கண்டுபிடிக்கக்கூடாது என்பதுபோல், கொடுத்த மாத்திரைகளைப் பொடிப் பொடியாக்கி, பொட்டலங்களாக மடித்துக் கொடுத்தார். மருத்துவத்தின் நுட்பங்களைக் பொடிப்பொடியாக்கிப் கரைத்துக் குடிக்கத் தெரியவில்லை யானாலும், மாத்திரை களையாவது பொடியாக்கத் தெரிந்ததே... அவனை அப்புறம்

வாருங்கள் என்றுகூட அவர் சொல்லவில்லை. ஐம்பதில் ஒன்று குறைந்தால் என்ன...?

மெய்யப்பன் மருந்தைச் சாப்பிட்டான். ஏற்கெனவே உணவு சாப்பிடாமல் இருந்ததால், மருந்தைப் போட்டு நீரைக் குடித்த மறு நிமிடம் வாந்தியெடுத்தான். இதனால் உடல் பலவீனமாகி, பயமுறுத்தும் எண்ணங்கள் பலத்ததுதான் மிச்சம்.

சினிமாவுக்குப் போனால் ஒருவேளை சரியாகும் என்று எண்ணி, தியேட்டருக்குப் போனான். துரதிருஷ்டவசமாக, அது சண்டைப்படம். இன்றைய சினிமா வழக்கப்படி, கதாநாயகன் வில்லனிடம் செமத்தையாக உதை வாங்கினான். அந்தக் காட்சியை அவன் பார்த்ததும், மானேஜர் அவனைப் புரட்டிப் புரட்டி உதைப்பது போன்ற ஒரு பிரமை. உதைபடுபவன்போல், இருக்கையில் அங்குமிங்குமாக நெளிந்தான். பிறகு, இருக்க மனமில்லாமல் வெளியேறினான்.

அலுவலகத்தில் நிலைமை இன்னும் மோசம். விமலாவிடம் சுயமரியாதையுடன் இருப்பதற்குப் பதிலாக, அவள் பச்சாதாபத்திற்கு இரங்குபவன்போல் அவளைப் பார்த்தான். வாணியாவது, தனது புதிய உறவால்தான், அவன் மாறிப்போய்விட்டான் என்று நினைத்தாள். வீட்டில், அவன் சுகமாக வேண்டும் என்று சாமிகூட கும்பிட்டாள். ஆனால், விமலாவோ 'நல்லவேளை, இந்தப் பைத்தியத்திடமிருந்து தப்பித்தோம்' என்பதுபோல் தன் அறிவை மெச்சிக் கொண்டாள்.

அலுவலகத்தில், பிரமை வந்த இரண்டாவது நாள், அவன் அரைநாள் விடுப்பில் போனான் அல்லவா? குத்துக்கல் மாதிரி தான் உள்ளே இருக்கும்போது, மெய்யப்பன் சொல்லாமல் கொள்ளாமல் போனதில், மானேஜர் கோபப்படுவதற்குப் பதிலாகப் பயப்பட்டார். இன்னும் எப்படியெப்படி எல்லாம் அலட்சியப்படுத்தப் போகிறானோ என்பதுபோல் அஞ்சினார் மறுநாள்

அலுவலக விஷயமாகத் தன் அறைக்கு வந்த அவனிடம் மானேஜர், தனக்குப் பரிச்சயமில்லாத கண்ணியமான குரலில், "என்ன மிஸ்டர். மெய்யப்பன், நீங்க லீவு கேட்டால், நான் கொடுக்கவா மாட்டேன்..." என்றுதான் பீடிகை போட்டார். மெய்யப்பன் பரபரத்து விழித்தபடித் தலை கவிழ்ந்து நின்றதைக்கூட நெஞ்சமுத்தமாக நினைத்தபடி "ஒங்களைத்தான்.... மிஸ்டர் மெய்யப்பன்..." என்று இழுத்தார். ஆனால், மெய்யப்பனோ திடீரென்று கைகளிரண்டையும் தலைக்குமேல் தூக்கினான். அப்போதும் அவன் தன்னை அடிக்கப் போகிறான் என்றுதான் முகத்தைத் தன் கரங்களால் அனிச்சையாக மறைக்கப் போனார்.

ஆனால், மெய்யப்பனோ, அவரை நோக்கிக் கும்பிட்ட படியே, "இனிமேல் அப்படி நடந்துக்க மாட்டேன்... என்னை மன்னிச்சுடுங்க ஸார்..." என்று சொன்னபோது, பயல் கிண்டல் செய்கிறானோ என்று சிறிது விழிப்படைந்து பார்த்தார். அவன், "நான் ஒங்க விஷயத்துல தலையிட்டது தப்பு ஸார்... இனிமேல் தலையிட மாட்டேன் ஸார்... தலையிட்டது தப்பு ஸார்..." என்று சொல்லிக் கண்ணீர் விட்டபோதுதான் மானேஜருக்கும் கண்ணில் நீர் வந்தது. ஆனந்த நீர். "இனிமேல் சொல்லாமல் கொள்ளாமல் லீவுபோட்டே, ஒன்னை ஒரேயடியாய் தொலைத்துப்புடுவேன்" என்று உறுமிக் கொண்டு அவர் நடித்தபோது, மெய்யப்பன் அவரது கைகளைப் பிடித்துக்கொண்டு மன்றாடினான். இப்போதெல்லாம் மானேஜர் நடிக்கவில்லை. நிஜமாக வெளியே வந்து நாலு பேர் முன்னிலையில் மிரட்டுகிறார். அன்றும் அப்படித்தான்.

மெய்யப்பன் எதையோ எழுதிக் கொண்டிருந்தான். அக்கௌண்டண்ட் பாஷ்யம், விமலாவிடம் ஈடுபாடாகப் பேசிக் கொண்டிருந்தார். நாட்டு நடப்புக்களைப் பற்றி தனக்குத் தெரிந்த வகையில் பேசிவிட்டு, "ஜப்பான்காரன் ஜப்பான்காரன்தான்... பர்மாவை அவன் பிடித்தவுடனே

என்ன பண்ணினான் தெரியுமா...? கலாட்டா பண்ணுன வங்களை நடுரோட்டுல நிறுத்தி... எதிர் எதிர் திசையில நின்ன இரண்டு கார்லயும்... ரெண்டு காலையும் இழுத்துக் கட்டி... காருங்களை.... அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாய் ஓட்டினான். ரெண்டு காலும் தலையோடு சேர்ந்து பிய்ந்து, ஒரே கண்றாவி... இவங்களுக்கு 'அவன்தான் லாயக்கு" என்றார்,

திடீரென்று, மெய்யப்பனுக்கு ஒரு பயம். அவனை பர்மா ரோட்டில் அல்ல... இதே இந்த நுங்கம்பாக்கம் ரோட்டில் நிறுத்தி, இரண்டு கால்களையும் இரண்டு கார்களில் கட்டி, இதோ ஸ்டார்ட் செய்யப்போகிறார்கள்.... இதோ.... இதோ....

மெய்யப்பன் எழுதிய ரிஜிஸ்டரைத் தொப்பென்று போட்டுவிட்டு எழுந்தான். யாரிடமாவது, தன் உள்ளத்து உணர்வுகளைச் சொல்லி, புகலிடம் கேட்க நினைத்தான். அக்கௌண்டண்ட் பாஷ்யத்தையே கேட்கலாமே.... பர்மாவில் இருந்த மனிதர்... ராசிபலன் தெரிந்தவர்.... பகவத் கீதையைக் கரைத்துக் குடித்தவர்... சிலர் தத்துவங்களைப் பேசுவார்கள். ஆனால், அவர் பேசினாலோ, தத்துவம் தவழும்.... ஐம்பது வயதைத் தாண்டிய அனுபவஸ்தர்... கேட்டுப் பார்க்கலாம்.

விமலாவிடம் இப்போது 'செக்ஸ்' விவகாரத்தைப் பேசிக் கொண்டிருந்த அந்தக் கிழவரைப் பார்த்து, "ஒங்ககிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும்... வெளியில் வாறீங்களா...." என்றான். அவர் வருவார் என்று எதிர்பார்த்து, எழுந்து வெளிக்கதவு வரை போய்விட்டான். ஆனால், பாஷ்யம், "இவன்வேற கொஞ்சம் பொறுப்பா...." என்று சொல்லிக் கொண்டே, விமலாவிடம் வாய் பிளந்து பேசிக் கொண்டிருந்தார். மெய்யப்பன் சோர்வாகத் தன் இருக்கையில் வந்து அமர்ந்தான். கால்கள் இரண்டாகப் பிரிகின்றன... தலையோடு சேர்ந்து... ரத்தம் பீறிடுகிறது... குடல் அறுகிறது... எலும்புகள் முறிகின்றன....

பாஷ்யம் சொல்லும் 'ஏ' ஜோக்குகளை, மாலையில், ரவியிடம் சொல்லிச் சொல்லி சிரிக்கவேண்டும் என்ற ஆசையில், விமலா ஆர்வத்துடன் கேட்டாள். அதற்குள் ரவியே டெலிபோன் செய்துவிட்டான். அவள் கால்மணி நேரம் டெலிபோனை விடவில்லை. காதல் வார்த்தை களுக்குப் பதிலாக.... கம்பெனி வார்த்தைகள்தான் அவள் வாயில் வந்தன. காதல் தேர்வைவிட, கம்பெனித் தேர்வு முக்கியம் என்பதுபோல்...

பாஷ்யம் அவள் வருவது வரைக்கும் பொறுமையாக இருந்து பார்த்தார். அவள் வந்ததும், விட்ட இடத்தில் இருந்து பேச்சைத் துவக்கப் போனார். விமலா, ரவியின் டெலிபோன் பேச்சு கொடுத்த காதல் மயக்கத்தில் இருந்தாளோ... அல்லது புதிய கம்பெனியில் வேலை அவ்வளவு சீக்கிரமாகக் கிடைக்காது என்று ரவி சொன்னானோ... என்ன இழவோ... அவள் 'மூடில்' இல்லை. பேசப்போன பாஷ்யத்தைப் பார்த்து, "இந்த மாதிரி பேச்செல்லாம்... எங்கிட்டே வச்சுக்காதிங்க.... அதுக்குன்னே இருக்கவங்ககிட்ட பினாத்துங்க..." என்று சொல்லிவிட்டு, மானேஜரின் அறையைப் பார்த்தாள். வாணி இன்னும் 'டிக்டேஷன்' எடுத்து முடிக்கவில்லை. விமலா புடவைத் தலைப்பைத் தோளோடு சேர்த்து மூடிக் கொண்டாள். அடேயப்பா, அவள் வாணி மாதிரி இல்லையாம்....

பாஷ்யத்திற்கு பால்ய வயது போய்விட்டது. மெய்யப்பனைப் பார்த்து "போகலாமா... வெத்திலை புகையிலை வாங்கித் தருவியா..." என்றார் வெறும் வாயைமென்று அசந்தவர்போல. பழைய மெய்யப்பனாக இருந்தால், "போங்க ஸார்... இப்போ மட்டும் நானா..." என்றிருப்பான். ஆனால், அவன் புதிய மெய்யப்பன். நீருக்குள் மூழ்குபவன், துரும்பையும் தூணாக நினைத்துப் பற்றுவது போன்ற அபலைப் பையன்.

பாஷ்யமும் மெய்யப்பனும் வெளியேறியபோது, விமலா, அவன் தன்னைப் பற்றித்தான் அவரிடம் ஏதோ சொல்லப் போவதாக நினைத்து, கருவிக் கொண்டாள். 'ரவிகிட்ட சொல்லி, இவனோட கையக் கால எடுக்கணும்... இல்லன்னா... வாயையாவது கிழிக்கச் சொல்லணும்...'

மெய்யப்பன், பாஷ்யத்திடம் மனமுருக, மெய்யுருக தனது அனுபவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் சொல்லும்போது, இடையிடையே போய் வந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்து, "என்னப்பா... புது பேண்டா.... என்னம்மா, ஒன்வீட்டு வாத்தியார் எப்டி இருக்கான்..." என்று குசலம் விசாரித்துக் கொண்டார் பாஷ்யம். பிறகு, மெய்யப்பனைப் பார்த்து, "உம்... சொல்... எதுல விட்டே....?" என்று சொல்லிக் கொண்டே, "வர வர பாக்கும் சரியில்ல... புகையிலயும் சரியில்ல..." என்று பதிலளித்துக் கொண்டார்.

மெய்யப்பனுக்கு, அந்தச் சூழலில், அந்தக் கொள்ளிக் கட்டையைக் தலையில் சொறிந்து கொள்வதன் உஷ்ணம் தெரியவில்லை. எல்லாவற்றையும் ஒப்பித்தான். பாஷ்யம் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, "எதுக்கும் ஒரு தாயத்து போட்டுப்பாரு... சரி... நீ போ... நான் டி.பி.ஐ. ஆபீஸ் வரைக்கும் போய்ட்டு வாரேன். என் ஃப்பிரண்ட் டாட்டருக்கு சீமந்தம் எப்போன்னு கேட்டுட்டு வரணுமுன்னு ஆத்துல ஒரு கட்டளை..." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மெய்யப்பன் அலுவலகம் வந்தான். பாஷ்யத்திடம் பேசியது சற்று ஆறுதலைக் கொடுத்தது. தாயத்துப் போட்டால் சரியாகிவிடும் என்று நம்பிக்கை ஏற்பட்டது. மானேஜர், வாணியைத் தன் அறையிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, வெளியே வந்து "மெய்யப்பன், சரக்கு வந்துட்டாம்... ஸ்டேஷனுக்குப் போய்... கிளியரிங்

ஏஜெண்ட்கிட்ட ஆர். ஆரை செக் பண்ணிட்டு, அப்படியே குட்ஸ்களையும் செக் பண்ணிட்டு வந்துடு... டேமேஜ் அயிட்டம் இருந்தால் போன் பண்ணு... நீ பாட்டுக்கு பேக்கு மாதிரி இருக்காமல்... டேமேஜ் அயிட்டங்களை நல்லா பாரு... 'குயிக்காய்' போப்பா... ஒன்னத்தாம்பா... நான் என்ன இங்லீஸ்லயா பேசுறேன், ஒனக்கு விளங்காமல் போக..." என்று சொல்லிவிட்டு, அறைக்குள் - வாணி இருந்த அறைக்குள், 'குயிக்காய்' போய்விட்டார். அவளுக்குக் கொடுக்க வேண்டிய 'டிக்டேஷன்' இன்னும் முடியவில்லை.

மெய்யப்பன் ரயில் நிலையத்திற்கு வந்தான். ரயில் வண்டிகளைப் பார்த்ததும், அவன் கால்களே தண்டவாளம் மாதிரியும், அதில் ரயில்கள் ஊர்வது போலவும் ஒரு பயக் கற்பனை. பல்லவன் பஸ்ஸில் அடிபட்டு, ரத்தம் தோய்ந்த துணியில் மறைக்கப்பட்டிருக்கும் ஒரு முன்னாள் மனித உருவைப் பார்த்ததும், தானே அப்படிக் கிடப்பது போன்ற பிரமை... முன் சக்கரம் வயிற்றில் ஏறி... குடலை வெளிக்கொண்டு வந்திருப்பது போன்ற பயம்... அத்தனை உணர்வுகளையும் விழுங்கிக் கொண்டு, கொடுத்த வேலையை எப்படியோ நிறைவேற்றிவிட்டு அலுவலகம் வந்தான்.

அங்கே பாஷ்யம் அலுவலக சகாக்களிடம் எதையோ சொல்லிக் கொண்டிருந்தார். அவர்கள் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள், விமலாவும் இருக்கிறாள். வாணி மட்டும் ஒப்புக்குச் சிரிப்பதுபோல் புன்னகை செய்தாலும், முகஞ் சுழித்துக் காணப்பட்டாள். மெய்யப்பனைப் பார்த்த பாஷ்யம், புகையிலையை எடுக்கும் சாக்கில் வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டார். விமலா, தோளைக் குலுக்கி, முகத்தைச் சுழிக்கிறாள். டைப்பிஸ்ட் பெண்கள் கனகமும், மீனாட்சியும் அவனை ஆச்சரியமாகப் பார்க்கிறார்கள். அவர்களின் கண் வலையில் விழுந்த சந்தானமும், சற்குணபாண்டியனும், அவனைப் பார்த்துவிட்டு, பிறகு ஒருத்தன் காதலியைப் பார்த்து இன்னொருவன் கண்ணடிக்கிறான். பியூன்

முனுசாமி, வெளிப்படையாகவே, "என்ன தலைவரே... ஒங்களுக்கு என்னவெல்லாமோ தோணுதாம். தோணப் படாது... அப்புறம் இந்த நாற்காலியைப் பார்த்தால், வெளி நாட்ல மரண தண்டனைக்கு வச்சுருக்கிற எலெக்டிரிக் சேர் மாதிரி தெரியும்... அதுக்கு இன்னும் நாளாகுமாம்... சும்மா கண்டதை நினைக்காதே தலைவரே... பாஷ்யம் சாரை மாதுரி... தெனமும் நைட்ல தண்ணிபோடு... சரியாப்பூடும்... இன்னிக்கு வேணுமுன்னா... என்னோட வாரீயா....?" என்று அட்டகாசமாகப் பேசினான்.

எல்லோரும் முனுசாமி சொன்னதையும், அவனால் சொல்லப்பட்டவனையும், ரசிப்பதுபோல் பார்த்தபோது, வாணி மட்டும், "முனுசாமி... நீங்க யாரையும் இப்படி புண்படுத்தப்படாது..." என்றாள்.

மெய்யப்பன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். எப்படி நடிக்கிறாள்... என்னிடம் நடித்து, மானேஜரிடம் நடித்து, இப்போது எல்லோரிடமும் நடிக்கிறாள்.... என்னை இந்த நிலைக்கு ஆக்கியவளே இந்தப் பழிகாரிதான்.

அவன் பயங்கரமாகக் கத்தினான். "நான் நனையுறேன்னு எந்த ஓநாயும் கவலைப்படவேண்டாம்."

அனைவரும் நிசப்தமாயினர். வாணியின் முகம் சிவப்பதற்குப் பதிலாக வெளுத்தது. விமலா, "ஒங்களுக்கு நல்லா வேணும்... யாராவது கிறுக்கனுக்கு வக்காலத்து வாங்குவாங்களா..." என்றாள் மெதுவான குரலில்.

மெய்யப்பன், தன் இருக்கையில் வந்து அமர்ந்தான். பியூன் முனுசாமி சொன்னதுபோல, அவன் உட்கார்ந்திருப்பது மின்சார நாற்காலி போலவும், அவன் எரிக்கப்படப் போவது போலவும், ஒரு எரிச்சல் எண்ணம். கால்கள் இரண்டிலும் தீப்பற்றிக் கொண்டது போன்ற உணர்வு. தலை, நெருப்புத் துண்டமாய் ஆனது போன்ற அசுர

எண்ணம். வயிற்றுக்குள் குடல் எரிந்து கருகுவது போன்ற நினைப்பு.

இதற்குள் ரவி வந்துவிட்டான். மானேஜரிடம் போய் ஒப்புக்கு இரண்டு நிமிடம் பேசிவிட்டு, விமலாவுக்கு எதிரே இருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டான். வாணியை, மானேஜர் உள்ளே கொண்டுபோய் விட்டார்.

மெய்யப்பன், தன் நாற்காலியில் உட்கார முடியாமல் தவித்தான். நாற்காலியில் சூடு பரவி, அவனையும் பற்றுகிறது! இரண்டு கால்களும், இரண்டு கார்களால் பிரிக்கப்படுகின்றன. பஸ் சக்கரம் வயிற்றில் ஏறி நிற்கிறது. எங்கோ ஒரு நாய் குலைக்கிறது. அங்கே குலைத்த நாய், இங்கே மானசீகமாக வந்து, அவன் குடலைக் கௌவி இழுக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பியூன் முனுசாமி, மெய்யப்பனிடம் வந்தான். தலையைச் சொறிந்து கொண்டு "தலைவரே... நான் சொன்னதை தப்பாய் எடுத்துக்காதே... வாணியம்மா சொன்னதுமாதிரி... நான் ஒன்னை புண்படுத்திட்டேன்... மன்னிச்சிடு... ஒன்னோட சித்தப்பிரமை தெரிஞ்சும், நான் பைத்தியம் மாதிரி பேசிட்டேன்..." என்றான்.

மெய்யப்பன் முனுசாமியை பரிதாபப்படுவதுபோல் பார்த்தான். 'அசல் அப்பாவி. தெரியாத்தனமாகச் சொல்லிவிட்டான். தெரிந்ததும் வருந்துகிறான். ஆனால், இந்த பாஷ்யம் சினிமாக் கதை சொல்வது மாதிரியல்லவா சொல்லிவிட்டார்! அவர் கிடக்கட்டும். மற்றவர்கள்கூட விழுந்து விழுந்து சிரித்தார்களே... மருந்தாக வேண்டியவர்களின் பொழுதுபோக்கிற்கு விருந்தாகி விட்டேனே.... மீனாட்சி... ஞாபகம் இருக்குதாம்மா... ஒன் தங்கைக்கு பரீட்சைக்கு பீஸ் கட்ட பணம் இல்லன்னு யதேச்சையா சொன்னே... நான் அனிச்சையா பணந் தந்தேனே.... தந்த பணத்தை எண்ணிப் பார்த்தது மாதிரி என்னையும் எண்ணிப் பாரும்மா... கனகம், நான் மோதிரம் தந்ததை சொல்லல.... ஒருநாள் பஸ்

ஸ்டாண்ட்ல எவனோ தினமும் 'பாலோ' பண்றான்னு சொன்னே... ஞாபகம் இருக்கா.... ஒன் காதலன் சந்தானம் நழுவிவிட்டான். நான் ஒன்கூட வந்து, பாலோ பண்ணுனவனை சட்டைக் காலரை பிடித்து, ஒன்கிட்ட மன்னிப்பு கேட்க வச்சேனே...' அப்படிப்பட்ட என்னையாம்மா பரிகாசம் செய்யுறே.... செய்மா... நல்லா செய்...'

'அடேய் சற்குணம்... நீ ஆபீஸ் பணத்தைக் கையாடுனபோது, 'அவரு கையாடல.... டூர் அட்வான்ஸுக்கும், பர்சேஸ் அட்வான்ஸுக்கும் என்கிட்ட ஆயிரம் ரூபாய் தந்தார். நான் தான் வவுச்சர் கொடுக்க மறந்துட்டேன்'னு சொன்னேன். நீ சஸ்பெண்டாகாமல் தப்பிச்சது ஞாபகம் இருக்காடா... என்னை ஏளனம் செய்யறவங்களை ஏளனம் செய்ய வேண்டிய நீ, 'ஏன் ஸார் இப்டி இருக்கேன்'னு கேட்க வேண்டிய நீயாடா.... மற்றவங்ககூட சேர்ந்து சிரிக்கிறே.... நீ அழும்போது, அழுதவனைப் பார்த்தாடா சிரித்தே... **சிரிக்கிறவனைப் பார்த்து அழுகிறவனாவது தப்பிக்கலாம்... ஆனால், அழுகிறவனைப் பார்த்து சிரிக்கிறவன் தப்பிக்க முடியாதுடா....'**

நேரம் ஓடிக் கொண்டிருக்கிறது. மெய்யப்பனுக்கு இன்னொரு சிந்தனை.

விமலா உண்மையிலேயே தனக்காக வருத்தப்படுவதாக அவன் நினைத்துக் கொண்டான். ரவியுடன் 'ஊடல்' பட்டு, அவள், தன் முகத்தை உம்மணாம் மூஞ்சியாக வைத்திருப்பதைக்கூட, அவள், தன் நிலைமைக்கு வருந்தித் தான் அப்படி இருப்பதாக நினைத்துக் கொண்டான். என்ன இருந்தாலும், மூன்று வருடப் பழக்கமாச்சே... அன்னியோன் யமாய் இருந்த நட்பாயிற்றே... காதல் போனாலும் நட்பு போகுமா... அவள், ஒரு தடவை அடிபட்டு, படுக்கையில் கிடந்தபோது எப்படி துடிச்சிருக்கேன்.... உங்களுக்காகவாவது நான் சீக்கிரமாய் குணமாயிடணும்' என்று தழுதழுத்த

குரலில் சொன்னவளாயிற்றே... அது பொய்யாகுமா.... அன்றொரு நாள்...

மெய்யப்பன் விமலாவைப் பார்த்தான். எதிரே உட்கார்ந்திருக்கும் ரவியுடன், சிரிப்பு பூக்க, கண்கள் மின்னப் பேசிக் கொண்டிருந்தாள். மெய்யப்பன் அவள் மேஜைக்குக் கீழே தற்செயலாகப் பார்த்தான். லாவகமாகப் போட்டிருக்கும் அவள் கையை, ரவியின் கை வருடிக் கொண்டிருக்கிறது. பெருவிரலைப் பிடித்து அழுத்துகின்றது. பிறகு, முழங்கை வரைக்கும் படர்ந்து, எந்தக் கை யாருடைய கை என்பது தெரியாமல் போகிறது.

மெய்யப்பன், நோக்கிய திசையையே வெறுப்பவன் போல், வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். அடியே.... நீ காதலி.. நல்லா காதலி... ஆனால், மூணு வருஷம் உயிரைக் கூட கொடுக்கத் தயாராய் இருந்தவனை - இப்படி பரிகசிக்கப்பட்டு, பரிதாபமான நிலையில் இருக்கும்போது, ஒரு சின்ன இரக்கம்கூட இல்லாமல், உயிரைக் கொடுக்க முன்வந்தவன் துடிக்கும்போது, நீ, அவன்கிட்ட ஒன் கையைக் கொடுக்கிறேன்னா... பரவாயில்லம்மா... இழவு வீட்டுக்கும் ஆடை அலங்காரத்தோடு போகிறவரை என்ன செய்ய முடியும்.... அப்படி போறது தப்புன்னு சொல்லத்தான் முடியுமா...?

மெய்யப்பன் துடித்துப் போனான். தனக்கு ஆதரவு காட்ட ஒரு ஜீவன்கூட இல்லையே என்று தவித்தான். அத்தனைபேரும் செத்து, அவனைப் பேய்களாய் பயமுறுத்துவதுபோல் பயந்தான். கண்களைக் கைகளால் மூடிக்கொண்டான். ஆரம்பத்தில் அனுதாபம் காட்டிய சகாக்கள், அசிரத்தைப் பட்டவர்களாகி, பிறகு சிரிப்பவர் களாகி - தானும் சிரிப்புப் பொருளானதன் பொருள் புரியாமல் தவித்தான்.

மெய்யப்பன், சோர்விழந்து கிடந்தான். ரவியின் கையும், விமலாவின் கையும் பிரிந்த பாடில்லை. பியூன் முனுசாமி

மெய்யப்பனைப் பார்த்தான். அவன் பார்த்த திசையில் கண்விட்டு, மேஜைக்குக் கீழே உறவாடிய கைகளைப் பார்த்தான். மெய்யப்பனின் மனோநிலையை, அவனைவிட இரண்டு ஆண்டுகள் பிந்திப் பிறந்த, முனுசாமியால் புரிய முடிந்தது. கன்னங்கரிய உடம்பில் உள்ளமே வெள்ளைக் கண்களாய் வந்திருப்பதுபோல் மெய்யப்பனைப் பார்த்தான். அருகே வந்தான். ஆறுதலாகப் பேசினான்.

"கவலைப்படாதே... தலைவரே... ஒன் நல்ல மனசுக்கு ஒண்ணும் வராது.... ஒனக்கு சீக்கிரமாய் குணமாயிடும். பாபர் மாதிரி... முடியுமானால், ஒன் நோயை நான், வாங்கிக்க தயாராய் இருக்கேன். சத்தியமாய் சொல்றேன்.... நம்பு..." என்றான்.

மெய்யப்பன் என்புருகிப் போனான். எவ்வளவு பெரிய வார்த்தைகள்... இவன் எவ்வளவு பெரிய மனுஷன்..... அந்த விமலா? "பாருடி..... எனக்கும் ஆளில்லாமல் போகல.... நானும் அன்பில்லாமல் வாடல...."

விமலாவை நினைத்ததால் மீண்டும் அவளைப் பார்த்தவன், மேஜைக்குக் கீழே அவள் கை இப்போது ரவியின் கையை வருடிக் கொண்டிருப்பதையும் பார்த்தான். ஆங்காரத்தோடு எழுந்தான். முனுசாமியின் கைகளைத் தன் தோளில் போட்டுக்கொண்டு, அக்கம் பக்கம் கேட்கும்படிக் கத்தினான்.

"முனுசாமி.... நீதான் நிஜமான மனுஷன்.... இந்த ஆபீஸ்ல பட்டப் பகலுலயே தேவடியாத்தனம் நடக்கும்போது, நீ ஒருத்தன்தான் கறைபடாமல் இருக்கே.... நீ ஒருத்தன் போதுண்டா, எனக்கு... மத்தவங்கெல்லாம் தூசுடா..."

ரவி, திடுக்கிட்டு, விமலாவின் கையை உதறிவிட்டபடி, 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதுபோல், நாற்காலியைத் தள்ளிப் போட்டுக்கொண்டு, எழுந்து, மெய்யப்பனைப் பயத்தோடு பார்த்தான். விமலாவுக்கு முகம்

சிவந்தது. நான்கு பேர் முன்னிலையில் எப்படிப் பேசி விட்டான்....! என் ரவியை எழுந்திருக்கச் செய்துட்டானே.. அவள் திருப்பிக் கத்தினாள்.

"நீங்க உட்காருங்க ரவி... எதையோ பார்த்து எதுவோ குலைத்தால் குலைக்கட்டும்.... பைத்தியக்காரன் சொல்றதை பெரிசா எடுக்கப்படாது.... ஒங்களத்தான்... உட்காருங்க...."

மெய்யப்பன், விக்கித்தான். 'நான் அப்டிச் சொல்லியிருக்கக் கூடாதுதான். அதுக்காக, அவள் இப்படியா பேசுறது... நல்லவேளை..... வாழ்க்கையில் முதல் தடவையா உண்மை பேசிட்டாள். நான் பைத்தியக்காரனேதான்....' அவன் விமலாவைப் பார்த்தான். அவள் தன் கழுத்தைக் கடித்து, ரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதுபோல் ஒரு பிரமை, குடலை உருவி, தன் தோளில் மாலையாகப் போட்டுக் கொண்டிருப்பது போன்ற அச்சம்.

மெய்யப்பன், நாற்காலியில் செத்தவன்போல் சாய்ந்தான். முனுசாமி அவனை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டான். விமலா விடவில்லை.

"மிஸ்டர் ரவி... ஏன் அப்டி நிக்கிறிங்க...? வந்து, 'பழைய படி' உட்காருங்க... கிறுக்குப் பிடித்தவன் பேசினால் பேசட்டும்... இப்போ நீங்க உட்காரப் போறீங்களா.... இல்லையா.... ஒங்க இஷ்டம்.... அப்புறம்....நாம் ஒரேயடியாய் உட்கார முடியாமப் போயிடும்.. சீ... இது ஆபீஸா? பைத்தியக்கார ஆஸ்பத்திரி.... ஒரு பைத்தியத்தால.... எல்லோருக்கும் கஷ்டம்... ரவி, உட்காரப் போறீங்களா.... இல்லையா...."

அலுவலக ஊழியர்கள் அனைவரும் பிரமிப்போடு பார்த்தார்கள். சந்தானமும், சற்குணமும் - முறையே கனகத்தையும், மீனாட்சியையும் பார்த்துக் கொண்டார்கள். பாஷ்யம், தலையை ஆட்டிக் கொண்டார். உச்சக் கட்டமாயிற்றே.... செலவில்லாத சினிமாவாயிற்றே....

ரவி, விமலாவுக்குக் கட்டுப்பட்டவனாய், அங்கேயும் இங்கேயுமாகப் பார்த்துக் கொண்டே, நாற்காலியில் உட்கார்ந்தான். மெய்யப்பன் சோர்வாக சாய்ந்திருக்கும் தைரியத்தில், அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். மெய்யப்பனை ஆதரவாகப் பிடித்துக் கொண்டிருந்த முனுசாமி, எதிர்பாராத விதமாய் அழுத்தமாகக் கேட்டான்.

"யோவ்.... ரவி... மொதல்ல... இடத்தைக் காலி பண்ணு...."

ரவி, மீண்டும் எழுந்து நின்றபோது, அலுவலக ஊழியர்கள் அனைவரும் அங்கே கூடிவிட்டார்கள். விமலாவும், கேட்டதை நம்ப முடியாதவள்போல், எழுந்தாள். மெய்யப்பன் மட்டுமே அப்படியே சாய்ந்து கிடந்தான். முனுசாமி மீண்டும் அதட்டினான். "யோவ்.... ஒன்னத்தாய்யா.... நீ போறியா.... இல்ல ஒதைச்சு அனுப்பணுமா...."

விமலாவால், கண்ணுக்கும், கருத்துக்கும், எதிர்கால கம்பெனி வேலைக்கும் இனியவனை, முனுசாமி மிரட்டுவதை சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. ரவி ஒரு தடவை, அவளிடம், அடியாள் இருப்பதாகச் சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு, முனுசாமியைப் பார்த்து மிரட்டும் வகையில் கத்தினாள். "சும்மா துள்ளாதீங்க, முனுசாமி... அப்புறம் நீங்கதான் வருத்தப்படுவீங்க...."

முனுசாமி, மெய்யப்பனிடமிருந்து, அவளை நோக்கி நடந்தான். பாதிதூர இடைவெளியில் நின்றுகொண்டு, நிதானமாக வலுவான குரலில் கேட்டான். வார்த்தைகள் ஒன்றுடன் ஒன்று உரசி, தீப்பிடிக்கக் கேட்டான். 'பேட்டை' வார்த்தைகள் தாமாக வந்தன.

"என்னாமே நெனச்சே...? மெய்யப்பன் ஸார் சொன்னதுல என்னா தப்பு....? பட்டப்பகலுல... இவன் வந்து, மேஜைக்குக் கீழே, ஒன் கையைப் பிடிக்கிறான். அதைப் பார்த்துக்கினு சொம்மா இருக்கணுமா என்ன....? வேணுமுன்னால், அந்தப் பெஞ்சை இழுத்துப் போடுறேன்... படுக்கிறீங்களா.....?

இல்லன்னா... ஸ்டோர் ரூமை திறந்து தரட்டுமா.....? ஒன் யோக்கியதை தெரியாமல், மெய்யப்பன் ஸாரை பைத்தியம் என்கிற? நீ யாரால உருவான பெண்ணுன்னு எல்லாருக்கும் தெரியும். சும்மா அலட்டிக்காதே..... நம்ம பேட்டையிலதான் ஒன் ஹாஸ்டல் இருக்குது.... மறந்துடாதே.... யோவ் ரவி, நான் உதைச்சால்தான் நீ போகணுமா....?"

ரவி, தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நடந்தான். கதவைத் திறக்கும்போதுகூட, அவன் திரும்பிப் பார்க்கவில்லை. விமலா, 'ஓ'வென்று கத்தினாள். அவளுக்கும் கண்ணீர் வந்தது. "ஒரு பெண்ணை திட்டுறதுலயும்... ஒரு அளவு இல்லையா....?" என்று அழுகையில் வார்த்தைகளைத் தேய்த்துக் கொண்டே அழுதாள். ஊழியர்கள், அப்படியும் பேசாமல், இப்படியும் பேசாமல், வாய்களை மூடி, காதுகளை மட்டும் கூர்மையாக்கிக் கொண்டார்கள். சத்தங்கேட்டு, மானேஜரும், வாணியும் வெளியே வந்தார்கள். விமலாவால் கட்டுப்படுத்த முடியவில்லை.... வாணியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு முன்னிலும் பலத்த குரலில் ஓலமிட்டாள்.

மானேஜர் அதட்டினார். "என்ன நடந்தது....? என்ன நடந்தது...? அட..... யாராவது சொல்லுங்க....?"

யாருமே சொல்லவில்லை. ஆகையால், விமலாவே சொன்னாள். முனுசாமியின் 'பேட்டையை' நினைத்துக் கொண்டு, ஜாக்கிரதையாகப் பேசினாள்.

"இந்த ஆபீஸ் தாசி வீடாய் ஆயிட்டாம் ஸார்... மிஸ்டர் மெய்யப்பன் சொல்றார். இந்த அப்பாவி முனுசாமியையும் தூண்டிவிட்டு, என் 'ஃபேமலி' ஃபிரண்ட் ரவியை அடிக்காத குறையாகத் துரத்த வச்சிட்டாரு... என்னால இனிமேல் வேலை பார்க்க முடியாது ஸார்.... நான் 'ரிஸைன்' பண்ணிடுறேன். அய்யோ கடவுளே.... ஆண்டவா.... இந்த அநியாயத்தைக் கேட்க ஆளில்லையா..."

மானேஜர், மெய்யப்பனைக் கோபத்தோடு பார்த்தார். அவனோ இன்னும் நாற்காலியில் சாய்ந்தபடியே கிடந்தான். கண்கள் மட்டும் திறந்து கிடந்தன. மானேஜர் ஊழியர்களைப் பார்த்துப் பேசினார். "மிஸ். விமலா சொன்னது உண்மைதானா? ஒங்களைத்தான்.... சொல்லுங்க...."

எவரும் சொல்லவில்லை. அந்த மௌனத்தை விமலா சொன்னது உண்மை என்பதற்கு அத்தாட்சியாக வைத்துக் கொண்டு கத்தினார். "ஆல் ரைட்..... இதுக்கு மேல... இவன் பித்துக்குளித்தனத்தை பொறுக்க முடியாது.... இவனை இன்னும் வைத்திருந்தால், எல்லோருக்குமே பைத்தியம் பிடிச்சுடும்... மிஸ் விமலா... பிளீஸ்.... அழாதீங்க.... வாணி.... இப்பவே ஒரு நோட் டைப் அடி..... விமலாவிடம் ஒரு ஸ்டேட்மென்ட் வாங்கிட்டு..... இவனை சஸ்பெண்ட் செய்யுறதுக்கு ஒரு நோட் 'புட்டப்' செய்.... குயிக்...."

வாணியால் தாள முடியவில்லை. சிறிது நேரத்திற்கு முன்புவரை தன் கன்னத்தைத் தட்டிய மானேஜர், தான் சொல்வதைத் தட்டமாட்டார் என்ற நம்பிக்கையோடு பேசினாள்.

"மிஸ்டர் மெய்யப்பன் அப்படிச் சொல்லியிருந்தால், அதுக்கும் ஒரு பேக்ரவுண்ட் இருக்கலாம் இல்லியா.... அதையும் விசாரிக்காமல்... அவரையும் கேட்காமல்...."

விமலா, வாணியைக் காறி உமிழ்வதுபோல் பார்த்தாள். கட்டுப்படுத்த முடியாத கோபத்தோடு கத்தினாள். "என்ன மேடம்.... பெரிய பேக்ரவுண்டை கண்டுபிடிச்சிங்க...? மெய்யப்பன் ஆபீஸே தாசி வீடுன்னு சொல்றார்... அப்படியும் உங்களுக்கு ரோஷம் வரலன்னா என்ன அர்த்தம்? ஆபீஸின்னா.... இந்த 'போர்ஷன்' மட்டுமில்ல..... மானேஜர் அறையும் அதுல சேர்த்தி.... மெய்யப்பன் என்னை மட்டும் சொல்லல.... நானாவது ரவியைக் கட்டிக்கப் போகிறவள்....

புருஷனை தொலைச்சிட்டு, பிழைப்புக்காக எந்த ஆம்புளையையும் பிடிக்கிற 'டைப்' இல்லை...."

வாணி கூனிக் குறுகினாள். முன்பு பல சந்தர்ப்பங்களில், மெய்யப்பன் தனக்காக வாதாடி ஆற்றுப்படுத்திய நினைவுகள் நெஞ்சத்தில் கிளம்ப, அப்போதும் அவன் தனக்காய் வாதாட வருவான் என்பதுபோல், அவனைப் பார்த்தாள். அவனோ இன்னும் முடங்கிக் கிடந்தான். வாணி வேறு பக்கமாகத் திரும்பி, கண்களைத் துடைத்துக் கொண்டாள். மானேஜர் தர்மசங்கடமாக நெளிந்தார். 'கிணறு வெட்டினால்.... பூதம் கிளம்புதே....'

முனுசாமி இப்போது கம்பீரமாகத் தத்துவம் பேசினான்: "புருஷன் செத்தபிறகு, இன்னொருத்தனைப் பிடிக்கிறதுல தப்பில்ல... அதோட, புருஷனாவது நூறுபேர் முயற்சியில... முன்பின் தெரியாத பெண்ணுக்கு பரிச்சயமாகிறவன்.... அவன் போனதும், ஆறுதலுக்கோ அல்லது அவசியத்துக்கோ, ஒருவனைப் பிடிச்சுக்குறதுல தப்பில்ல.... ஆனால், நாலுபேருக்குத் தெரியாமல் ஒருவனைக் காதலிச்சிட்டு, அவன்கிட்ட எல்லா உதவியையும் வாங்கிட்டு, அவன் உயிரோட இருக்கும்போதே, அவன் கண் முன்னாலேயே, இன்னொருத்தன்கூட ஒருத்தி போகிறாள் என்றால், அவள் எவன்கூடயும் 'போகத்' தயாராய் இருப்பவள்... காசு இருக்கிற எவனும் அவளை சத்தியமாய் கூப்பிடலாம்."

அலுவலக ஊழியர்கள், அதிர்ந்து நின்றார்கள். முனுசாமி அட்டகாசமாய் பேசுவான் என்றாலும், இப்படி அசத்துவான் என்று எதிர்பார்க்கவில்லை. மானேஜருக்கு நிலைமை புரிந்தது. மானேஜிங் டைரக்டரிடம், விவகாரம் போனால், முதலில் அவர் தலைதான் உருளும். சமாளித்துப் பேசினார்.

"முனுசாமி, நீ நல்லவன். கள்ளங்கபடமில்லாத அப்பாவி என்கிறதுனால இத்தோடு விடுறேன். விமலா! நீங்களும்

'ரகளை' பண்ணாமல் என்கிட்ட வந்து ரிப்போர்ட் செய்திருக்கணும். மெய்யப்பன்....! இனிமேல் இப்படி நடந்துக் கிட்டே தொலைச்சுப்புடுவேன். நீங்கெல்லாம் சகாக்கள்.... ஆபீஸ்லதான் பெரும்பகுதி நேரத்தை கழிக்கிறோம். சமுக உறவு இல்லன்னா.... நரக வேதனை யாயிடும். மிஸ்டர் பாஷ்யம்! வம்பு, சண்டையாய் மாறதுக்கு முன்பே நீங்க தடுக்கப்படாதா? நீங்க நினைச்சால் முடியாதா? சொல்லுங்க....? ஆல் ரைட்.... இத்தோடு விட்டுடறேன்.... இனிமேல் இப்படி நடந்தால், நான் வேற ஆளாய் இருப்பேன். நாமெல்லாம் ஒரே ஃபேமலி... வாணி, நீ உள்ளே வா... பர்சேஸ் டிக்டேஷனை கொடுத்துடுறேன்...."

மானேஜர் உள்ளே போய்விட்டார். ஊழியர்கள் கூடிக்கூடிப் பேசினார்கள். மெய்யப்பன் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தான். திடீரென்று அந்தப் பக்கம் போன முனுசாமியைப் பார்த்து, எழுந்து, அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, கூப்பாடு போட்டான். "முனுசாமி.... முனுசாமி... நீ.... பிறத்தியாருக்கு பியூன். ஆனால், எனக்கு தம்பிடா... கூடப் பிறக்காத சதோதரண்டா.... நான் இன்னும் உயிரோட இருக்கணுமா... சொல்லு.... என்னால எத்தனை பேருக்கு சிரமம்..." என்று அரற்றினான். ஏங்கி ஏங்கி அழுதான்.

முனுசாமி, மெய்யப்பனின் தோளைத் தட்டிக் கொடுத்தான். வாணி, பல்லைக் கடித்து கண்ணீர் சொட்டுக் களை விழிகளிலே தேக்கி வைத்தாள். மனிதர்களுக்கு எப்போதாவது மனச்சாட்சி வேலை செய்யும் என்பதுபோல், அத்தனைபேரும் அழுவதுபோல் நின்றார்கள். விமலாகூட அழுதாள். எதற்காகவோ?

மஞ்சள் வெயில் விழுந்தது. எல்லோரும் போய் விட்டார்கள். முனுசாமி, மெய்யப்பனைக் 'கூப்பிட்டுப் பார்த்தான். அவன் மறுத்துவிட்டு, மீண்டும் நாற்காலியில் விழுந்தான்.

வாணி மானேஜர் அறையில் இருந்து வந்தாள். தன்னை எல்லாவகையிலும் பயன்படுத்திக் கொள்ளும் மனிதர், தானும் பாதிக்கப்படலாம் என்று தெரிந்ததும், மெய்யப்பனை வீட்டுக்கு அனுப்புவதில் குறியாக இருப்பதைப் புரிந்து கொண்டாள். இவ்வளவு நேரமும் அங்கே 'டிக்டேஷன்' நடக்கவில்லை. ஒருவொருக்கொருவர் 'டிக்டேட்' செய்தார்கள். இவள், இறுதியில் அவர் கையை உரிமையோடு பிடிக்கப் போனபோது, அவர் 'நோ பிளீஸ்' என்று சொல்லி விட்டார்.

வாணிக்கும், வெறுமையாக இருந்தது. மெய்யப்பனைப் பார்த்தாள். அவன் மெய்மறந்து கிடந்தான். தனக்காக வாதாடியவன், வம்பில் மாட்டியவன், உடன்பிறவாச் சகோதரன், 'அக்கா' என்ற ஒவ்வொரு ஒலியிலும் ஆன்மாவைப் பாய்ச்சியவன் சோர்ந்து கிடப்பதைக் கண்டவளுக்கு, தான் பொடிப் பொடியாப் போனது போலிருந்தது. அவனருகே சென்று, 'தம்பீ' என்றாள். அதற்குமேல் பேச முடியவில்லை. அந்தச் சொல் அழுகையாகியது. விம்மலாகியது. கண்ணீராகியது.

மெய்யப்பன், கண்களைத் திறந்து பார்த்தான். கடகடவென்று சிரித்தான். தலையை முன்னும் பின்னுமாக ஆட்டிக்கொண்டு, அவளை நேராகப் பார்த்தான். சாய்வாகப் பார்த்தான். அண்ணாந்து பார்த்தான். பிறகு, எழுந்து அவளைத் தாழ்வாகப் பார்த்துக் கொண்டே, வெறிபிடித்த சிரிப்பை விட்டுக்கொண்டே கேட்டான்.

"என்னக்கா.... மன்னிக்கணும். என்ன மேடம்.... இப்போ வேற எவனாவது ஒங்களை சினிமாவுக்குக் கூப்புடுறானா... அப்போதானே ஒங்களுக்கு நான் தம்பி.... சொல்லுங்க.... அவனை நொறுக்குறனோ இல்லையோ.... என்னை இன்னும் நல்லா நொறுக்கிக்கறேன்.... ஆஹா.... ஹா...."

மெய்யப்பனின் வெறிச் சிரிப்பு அடங்கி, முகம் இறுகியது. பத்து நிமிடத்திற்கு முன்புவரை உருகிப்

போயிருந்த அவன், இப்போது, நெருப்பில் உருகி, நீரில் பட்டு இறுகிய இரும்புபோல் மாறினான். அந்த இரும்பு யந்திரம்.... ரயில் எஞ்சின் மாதிரி உறுமிக்கொண்டே ஓடியது - வெளியே வெளிப்பட்ட பிரமைகளோடு, வெளியே சொல்ல முடியாத பயங்கரமான உணர்வுகளோடு.

## 14

வாரங்கள், மாதங்களாயின. மெய்யப்பன், கோவில் களுக்குப் போய்ப் பார்த்தான். ஈஸ்வரன் கோவிலுக்குப் போய், நடராஜரைப் பார்க்கும்போது, அவரது ஒற்றைக் காலுக்குக் கீழே கிடக்கும் முயலவனாக தன்னைப் பாவித்துக் கொண்டான். முருகன் கோவிலுக்குப் போனால், வேலே அவனைக் குத்திக் குதறுவது போன்ற பயம்.

இதற்கிடையில், டீக்கடை நாயர், ஒரு நபரைக் கூட்டிக் கொண்டு வந்து, தாயத்துப் போட வைத்தார். கையில் இருந்த மோதிரத்தை அடகு வைத்தும், சேமித்த பணத்தைப் போட்டும், தாயத்துப் போட்டுக் கொண்டான். அதைப் போட்ட ஒன்பது நாட்களில் உலகேமே அவன் காலடியில் விழும் என்று 'மந்திரவாதி' சொன்னார். ஒன்பது நாட்களுக்குப் பிறகும், அவனது அரக்க உணர்வுகள் வலுத்தனவே தவிர, விலகவில்லை. மந்திரவாதியிடம் மீண்டும் போனால், அந்த ஆசாமி, எவளோ ஒருத்தியை இழுத்துக் கொண்டு போய், அதனால் ஏற்பட்ட சிக்கலில், இப்போது லாக்கப்பில் இருப்பதை அறிந்ததும், தாயத்தைக் கழற்றி வீசியெறிந்தான். ஆனால், கும்பம் ஏற்ற குடமேற்ற, தகடெழுத, தாயத்து செய்ய என்பவை போன்ற

இத்தியாதிகளுக்கு செலவிட்ட பணம், மெஸ்ஸில் பாக்கியாக நின்றது. சாப்பாட்டுக்காரர், "நான் என்ன சத்திரம் சாவடியா கட்டி வச்சிருக்கேன்" என்று சொல்லி விட்டார்.

இருப்பிடத்திலோ, சத்யாவின் அண்ணி, அவன், தன் மைத்துனியிடம் ரகசியமாய் பேசவில்லை என்று 'பூமியறிய' பொய்ச் சத்தியம் செய்ததால்தான், பலரறியப் பைத்தியமாகி விட்டான் என்று நம்பினாள். சத்யாவிற்கும், அவனுக்கும் ஏதோ ஒன்று இருந்ததாக சந்தேகமில்லாமல் நினைத்துக் கொண்டாள். குளியலறைக்கு அவன் செல்லும் போதெல்லாம், "தடிமாட்டுப் பயலுக.... பெரிய அரிச்சந்திரன் மாதிரி, வீட்டைக் காலி செய்யுறதாய் சொல்றது... அப்புறம் பிஸின் மாதிரி ஒட்டிக்கிறது.... என்ன மனுஷாளோ...." என்று தினமும் அர்ச்சித்தாள்.

சத்யா, இப்போது தனக்காக அழுவதை விட்டுவிட்டு, அவனுக்காக அழுதாள். அன்று அண்ணன் அடித்தபோது, தான், அவனை 'நீ.... நான்...' என்று மட்டமாய் பேசிவிட்டதால்தான், அவன் மனம் பேதலித்துவிட்டது என்று எண்ணி, அதற்குப் பிராயச்சித்தம் செய்ய முடியாமல், அவனைக் காணும்போதெல்லாம், அண்ணிக்குத் தெரியாமல், கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவன் உள்விழுந்த கண்களைப் பார்க்கும்போது, அவளுக்குக் கன்னங்கள் நனைந்தன. அவன் நெற்றியைச் சுழித்தபோது, அவளுக்கு, தன் உயிரே சுழிப்பது போலிருந்தது. அவனுக்காக ஊமை அழுகையில் தேய்ந்தாள். உருக்கத்தில் துவண்டாள். ஒருசில சமயம், அவனைப் பார்த்து திட்டுகிற அண்ணியை, நறுக்குத் தெறித்தாற்போல், நான்கு வார்த்தை கேட்கப்போகும் அளவுக்குக் கோபம் வந்தது. அனாதைகளுக்குக் கோபம் வரலாமா... அதுவே அண்ணிக்கு யோகமாகாதா? அவளைத் துரத்துவதற்கு வாய்ப்புக் கொடுக்குமே.

அன்றொரு நாள், மெய்யப்பன் குளியலறையில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தான். வைரம் பாய்ந்த உடம்பும்,

வார்த்தெடுத்த தோற்றமும் கொண்ட அவன், எலும்பும் தோலுமாய், தாடி, மீசை முகத்தை மறைக்க, சதைபோன மார்புடன், நடைபோன காலுடன் போகும் காட்சியைப் பார்க்கப் பார்க்க சத்யாவுக்கு, பார்வையே தேவையில்லை என்பது போலிருந்தது. அண்ணி பார்ப்பாள் என்பதையும் மறந்து, அவள் தாய்மையின் உந்தலில், அவனைத் தவிப்போடு பார்த்தாள். அப்போது வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்த அண்ணிக்காரி, "ஏய்.... மூதேவி. இன்னுமாடி அவன் நினைப்பு விடல.... அவன் பொய் சத்தியம் பண்ணி பைத்தியமாய் மாறிட்டான்.... ஒனக்கும் சீக்கிரம் பிடிக்கப் போகுது பாரு.... எல்லாம் அந்த மனுஷன் கொடுக்கிற இளக்காரம்... வரட்டும்..." என்று சொல்லிவிட்டு, வெளியே போய்க் கொண்டிருந்தாள். மெய்யப்பன், அவளின் சத்தத்தால் திருப்பப்பட்டான். சத்யாவைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்துக் கொண்டான். சத்யா, கைகளைப் பிசைந்துகொண்டு, அவனைக் கருணை ததும்பப் பார்த்தது அவனுக்குத் தெரியவில்லை.

மெய்யப்பன் தன் அறைக்கு வந்தான். ஒருவனுக்குப் பைத்திய நிலைமை பிடித்துவிட்டால், சமூகமும் அவனிடம் பைத்தியக்காரத்தனமாகவே நடந்து கொள்கிறது என்றும், பிறர் மனதைப் புண்படுத்தும் பல அரைப் பைத்தியங்களால் தான் முழுப் பைத்தியங்கள் உருவாகின்றன என்றும் நினைத்து, வெறுமையாகச் சிரித்தான். தான் இன்னும் அறிவை இழக்கவில்லை என்பதில் ஒரு ஆறுதல். குற்றுயிரும் கொலையுயிருமாய் கிடக்கும் அறிவு ஒரேயடியாய் போய்விட்டால் நிம்மதி என்ற நினைப்பு.... இப்போதும் விமலா அவன் மார்பில் புரண்டு அழுத கண்களோடு, அவன் தலையைக் கோதிவிடுவதுபோல் ஒரு பசுமையான எண்ணம்....

திடீரென்று, அன்று பாலைவனமானான்.... இவ்வளவுக்கும் காரணமான விமலாவை இன்னும் மறக்க முடியாமல் தவிக்கும் மனதை கொன்றுபோடப் போவது போல் உறுமிக் கொண்டான். அலுவலகத்தில் தன்னை எதிரியாக நினை 'கும், பச்சாதாபமில்லாத ஒருத்திக்காகத்

தவிக்கும் மனதைத் தண்டிக்க நினைத்தவன் போல், ஒரு சிகரெட்டை எடுத்தான். அதைப் பற்றவைத்து, ஒரு தடவை உறிஞ்சிவிட்டு, பிறகு நுனி சிவந்த சிகரெட்டை எடுத்து, நெஞ்சில் வைத்து அழுத்தினான். இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்து, நெற்றியில் அணைத்தான். இப்படி ஏழெட்டு சிகரெட்டுக்களை எடுத்து, வயிற்றில், தலையில், இடுப்பில், காலில் என்று பல்வேறு இடங்களில் சுட்டுக் கொண்டான். சுட்ட இடங்கள் தீப்பிடித்தவைபோல், புகை கக்கின. மொத்தமாக, வந்த வலியைப் பல்லைக் கடித்துக் கொண்டே "ஏய் பிசாசு மனமே.... இன்னுமா... ஒனக்கு அந்த நெனப்பு போகலே.... இருக்கட்டும்.... ஒன்னையே.... என்னிடமிருந்து போக வைக்கேன் பாரு..." என்று தானாய் புலம்பிக்கொண்டு, இன்னொரு சிகரெட்டை எடுத்து பற்ற வைக்கப் போனான். வெளியே கதவு தட்டும் ஓசை கேட்டது-

மெய்யப்பன், கதவைத் திறந்தான். யாரையும் காணவில்லை. ஒருவேளை, அதுவும் பிரமையாக இருக்குமோ என்று ஒரு எண்ணம். வாசலில் நின்றபடியே, சுட்ட இடங்களை அழுத்திவிட்டுக் கொண்டிருந்தான். ஜன்னல் வழியாக, அவன் தன்னைச் சுட்டுக் கொள்வதைப் பார்த்த சத்யா இருமிப் பார்த்தாள். அது பயன்படாமல் போகவே, கதவைத் தட்டினாள். கதவு திறக்கப்பட்டதும், அவன் கண்ணுக்குத் தெரிந்த ஒரு தூணில் முகம் புதைத்து நின்றாள். தூணில் முகத்தைத் தேய்த்து, கண்களையும் துடைத்துக் கொண்டாள். மெய்யப்பனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை, அவளே கதவைத் தட்டியிருப்பாளோ.... வேறு யாராவது வந்திருப்பார்களோ.... அல்லது வெறும் பிரமையோ... அப்படிப் பிரமையாக இருந்தால் நல்லது.... பைத்தியம் முற்றுகிறது என்று அர்த்தம்.... ரொம்ப ரொம்ப நல்லது.

மெய்யப்பன், தன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்வதற்காக, அவளை மெல்ல நோக்கி "யாராவது... இங்கே வந்து கதவைத் தட்டினாங்களா.... இப்போல்லாம்

என்னைப் பார்க்கவோ... ஏன்னு கேட்கவோ.... யாரும் கிடையாது. அதனாலதாம்மா கேட்டேன்... தயவுசெய்து தப்பா நெனைக்காதீங்க.... நீங்க காலுலதான் முடம்.... நான் மனசுல முடமாய் போயிட்டேன். தயவுசெய்து அன்றைக்குப் பேசியது மாதிரி பேசிடாதிங்கம்மா...." என்றான்.

சத்யா, முந்தானைச் சேலையை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு, பிஞ்சுக் கால்மேல் கையை ஊன்றியபடி, இழுத்து இழுத்து நடந்துகொண்டே, உள்ளே போனாள். பாதி வழியில் திரும்பி, அவனைப் பார்த்தாள். அவன் உடலில் கருகிப்போய், திட்டுத்திட்டாய், கருஞ்சாம்பலாய் ஆகிவிட்ட பகுதிகளைப் பார்த்தாள். அவற்றைக் கழுவிவிடத் துடிப்பதுபோல், கண்கள் நீரைக் கொட்டின. கால்கள் போக மறுத்தன. கைகள், ஒன்றை ஒன்று, நெறித்துக் கொண்டன. மெய்யப்பன், அவளை, உதடுகள் விலகப் பார்த்துக் கொண்டே நின்றான். அவள் உள்ளே போய் விட்டாள். வீட்டுக்குள் அழுகைக் குரல் கேட்டது... இதுவும் நல்லதுக்குத் தான்.... சாகும்போது, ஒப்பாரி வைக்கவாவது ஒரு ஆள் இருக்கிறது. எவளோ ஒருத்தி, ஏதோ ஒரு மனிதாபிமானத்தில், தனக்காக வருந்துகிறாள் என்று நினைத்தபோது, அவனுக்கு லேசாகத் தெம்பு வந்தது. பொய்மை உணர்வுகள் போனதுபோன்ற ஒரு சுகம். திடீரென்று பசியெடுத்தது. சீக்கிரமாய் போகலாம்.

மெஸ்காரர் பாக்கியை வசூலிப்பதற்காக ஒரு பையனை அனுப்பி வைத்திருந்தார். "நாளைக்கு பாக்கி வராட்டால், கையில இருக்கிற கடிகாரத்தை பிடுங்க வேண்டியதிருக்கு முன்னு முதலாளி சொல்லச் சொன்னார்" என்று அக்கம் பக்கம் கேட்கும்படிச் சத்தம்போட்டு விட்டுப் பையன் போய் விட்டான். அப்படி, நூறு பேருக்குக் கேட்கும்படிக் கத்த வேண்டும் என்று பையனுக்கு முதலாளி சொல்லிக் கொடுத்திருப்பது மெய்யப்பனுக்குத் தெரியாது... கையில் பைசா இல்லை.... கனகத்திடம் மோதிரப் பணத்தைக்

கேட்கலாமா.... வாணியிடம் கேட்கலாமா... கூடாது... கூடாது... அன்பளிப்பைப் திருப்பிக் கேட்பது அற்பத்திலும் அற்பம்...'

பசியெடுத்த வயிற்றை நீரால் நிரப்பிக்கொண்டு, மெய்யப்பன் படுத்தான். கட்டிலிலேயே படுத்தான். அது பாடைபோல் தெரிந்தாலும், பாடையாகவே இருக்கட்டும் என்பதுபோல் கூரை இடிந்து விழுவதுபோல் தோன்றினாலும், இடியட்டும் என்பதுபோல் இரு கால்களையும் வயிற்றுடன் சேர்த்துக் குறுக்கி, முன் தலையை முட்டிக் கால்களில் ஊன்றி, சுருண்டு படுத்தான். எவ்வளவு நேரம் ஆனதோ தெரியவில்லை.... திடீரென்று சத்தம்... சத்யாவின் குரல்...

"நான் சூதுவாதோட பார்க்கலண்ணா... நல்ல மனுஷன்..... இப்படி ஆயிட்டாரேன்னுதான் பார்த்தேண்ணா... மற்றபடி தப்பாய் பார்க்கலண்ணா.... சத்யமாய் பார்க்கல... அய்யோ என் கழுத்து, அய்யோ என் இடுப்பு... அய்யோ அம்மா.... அண்ணா... கடவுளே... கடவுளே..."

மெய்யப்பன் எழுந்திருக்கப் போனான். உடல் சோர்வும் உள்ளச் சோர்வும் அவனை கீழே அழுத்திப் போட்டன. சத்யாவின் ஓலத்தை மீறி, அண்ணிக்காரியின் சத்தம் கேட்டது. பிறகு எல்லாம் அடங்கி, படிப்படியாய் அடங்கி, முற்றிலும் அடங்கிவிட்டது. தூக்கம் அடக்கிவிட்டது.

மெய்யப்பனும் கண்களை மூடினான். கனவா.... பிரமையா.... ஒன்றும் தெரியவில்லை. சத்யாவின் தலையை அண்ணிக்காரி அசையாதபடிப் பிடித்துக் கொள்கிறாள். அண்ணன், அவள் கழுத்தைக் கடித்து, ரத்தத்தைக் குடிக்கிறான். குடித்து முடித்த திருப்தியில், உதட்டோரம் குவிந்த ரத்தத் துளிகளை நாக்கால் சுவைத்து சுத்தமாக்குகிறான். சத்யா, துடிக்கிறாள். பிறகு, அண்ணன், மீண்டும், கழுத்தில் கடிபடாத இடத்தைக் கடிப்பதற்காகக் குனிகிறான்.

மெய்யப்பன் வீறிட்டுக் கத்தினான்: "அய்யோ ஸார்... சத்யாவை விட்டுடுங்க.... விட்டுடு... டேய் விட்டுடு... சத்யா... சத்யா... அய்யோ சத்யா...."

திடீரென்று, சத்யா வீட்டில் விளக்கு எரிகிறது. அண்ணிக்காரி, பயங்கரமாகக் கத்துகிறாள். கதவு பயங்கரமாகத் தட்டப்பட்டது. மெய்யப்பன், கதவைத் திறந்தான். சத்யாவின் அண்ணனும், அண்ணியும் கோரமான கோபக் குறிகளோடு நிற்பது தெரிகிறது.

அண்ணன்காரன், மெய்யப்பனின் தலைமுடியைப் பிடித்து, வாசலுக்கு வெளியே இழுத்துக் கொண்டு வந்து, "என்னடா நினைச்சிக்கிட்டே..... நடுராத்திரில... என் தங்கையை கூப்புடுற அளவுக்கு.... திமுறாடா.... நாய்ப் பயலே... ஒன்னை... ஒன்னை..." என்று உறுமிக் கொண்டே, மெய்யப்பனை அடிக்கப் போனான். அவன் மனைவி, அவனைத் தடுத்துவிட்டு, ஜன்னல் கம்பிகளில் முகம் சாய்த்து நின்ற சத்யாவைப் பார்த்தபடியே கத்தினாள்.

"பேயனை விடுங்க... எல்லாம் அவள் கொடுத்த இடம்... அவள்... இவன்கிட்ட முன்னால நடந்ததுல்லாம்.... இவனுக்கு இப்போ ஞாபகத்துக்கு வருது... அடிக்காதிங்க... காலையில போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளெயிண்ட் கொடுக்கலாம்... இந்த மாதிரி தடியனுக்கு.... அந்த மாதிரி ஆளுங்கதான் லாயக்கு.... இவ்வளவு நடக்குது.... ஒங்க தங்கை, ' என்னை ஏண்டா... ராத்திரில கூப்பிடுறே'ன்னு கேட்கிறாளா பாருங்க.... அவளை... புருஷன் வீட்ல கொண்டு விடுங்கன்னு எத்தனை தடவை சொல்லிட்டேன்? அவன் தலையை விடுங்க.... நம்ம கெட்ட காலம், உயிரு போயிடப்போவுது... போலீஸ் எதுக்காக இருக்கு?"

அண்ணன்காரன், மெய்யப்பனை, அவன் அறை வாசலுக்குள் தள்ளிவிட்டு, ''காலையில.... ஒன்னை கவனிச்சுக்கிறேன்..." என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் போய்விட்டான். ''எல்லாம்.... இந்த மூதேவி கொடுத்த

இளக்காரம்" என்று மனைவி பின்பாட்டுப் பாடியபடி முன் நடந்தாள். சத்யா, அவர்கள் வருவதைப் பார்த்ததும், ஒரு மூலையில் சாய்ந்தாள்.

சத்யாவின் அண்ணன் தள்ளிய வேகத்தில் அறைக்குள் மல்லாந்து விழுந்த மெய்யப்பன், கட்டில் சட்டத்தில் பட்ட உச்சந்தலை வலித்ததால், கைகளால் அதைத் தடவினான். கைகளில் ஈரக்கசிவை உணர்ந்து, எழ முடியாமல் எழுந்து, விளக்கைப் போட்டுவிட்டு, கைகளைப் பார்த்தான். ரத்தம் துளிகளாக.... அல்ல.... கட்டி கட்டியாக.... மெய்யப்பன் இரண்டு கைகளையும் சேர்த்தாற்போல் வைத்து, உள்ளங் கைகளைப் பார்த்தான். ரத்தத்தைப் பார்க்கப் பார்க்க, சிரிப்பு வந்தது. முதுகு வழியாக ஓடிய ரத்தத்தையும் கையால் தடவி, முதுகு முழுவதும் தேய்த்து விட்டுக்கொண்டே சிரித்தான்.... பயங்கரமாகச் சிரித்தான்.

இவன் சிரிக்கச் சிரிக்க, சத்யா ஓலமிட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கும் இப்போது ரத்தம் வருகிறதோ என்னவோ!...

## 15

இனிமேல் எழ வேண்டியதில்லை என்பதுபோல் மெய்யப்பன் முடங்கிக் கிடந்தான். நேற்றிரவு, சத்தியாவின் அண்ணன் அவன் தலைமுடியைப் பற்றி இழுத்ததும், தாறுமாறாகப் பேசியதும், ஒரு பிரமையாக இருக்க வேண்டும் என்று நினைத்தபடியே, புரண்டு படுத்தான். பிரமையல்ல.... வெளியே அண்ணிக்காரி இன்னும் கத்திக் கொண்டிருப்பது காதில் உறைத்தது.

"ஒங்களுக்கு எத்தனை தடவை சொல்றது.... சீக்கிரமாய் போங்க.... கம்ப்ளெயிண்ட் கொடுத்துட்டு, போலீஸ்காரங்கள கையோடு கூட்டிவாங்க.... இல்லன்னா..... ஒரு நாள்போல், ஒரு நாள் இருக்காது... போலீஸ் பாடு..... இவன் பாடு... நாளைக்கு என்னையே கூட கூப்பிடுவான்... யார் கண்டாங்க....?"

கணவன் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறான். அவன் பதில் குரலில், கருணை இல்லையானாலும், நிதானம் ஒலித்தது.

மெய்யப்பன் மெல்ல எழுந்தான். போலீஸ் வருமோ? பத்திரிகைகளில் செய்தி வருமோ? நேற்றிரவு பக்கத்து வீடுகளிலும், சத்யாவின் அண்ணன் கத்தியபோது, விளக்குகள் எரிந்தது மாதிரித் தெரிந்ததே... இனிமேல் அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது? அது போகட்டும். போலீஸ் வரும். தெரு வழியாக தன்னைக் கூட்டிக் கொண்டு போவாங்க.... பின்னங்கை கட்டப்பட்டாலும் கட்டப் படலாம்.... அடித்தாலும் அடிக்கலாம். ஆஸ்பத்திரியில் டாக்டர்களே நோயாளிகளிடம் எரிந்து விழுகிற இந்தக் காலத்தில், போலீஸ்காரர்கள் இந்த நோயாளிக்கு மாலையா போடப் போறாங்க....? மாலையும் விழலாம்... அடிபட்டு செத்துப் பிணமான பிறகு, யாராவது மாலை போடலாம்... அய்யோ போலீஸ் வருமோ... கண்டிக்கவா....? அல்ல... அல்ல.... தண்டிக்க! தண்டிக்க! வேற வழி இல்லை.... எங்கேயாவது ஓடிப் போகணும்... மனித சஞ்சாரமில்லாத மிருகங்கள் வாழும் காட்டைப் பார்த்து ஓடிப் போகணும்... ஓடியே ஆகணும்..."

மெய்யப்பன் எழுந்தான். குளியலறைக்குப் போகப் போவதுபோல் துண்டை எடுத்தான். சத்யா வீட்டில் இன்னும் சத்தம் அடங்கவில்லை. சொல்லுக்கு சொல் போலீஸ் வருகிறது... வார்த்தைக்கு வார்த்தை பைத்தியக்காரன் என்ற பட்டம் கேட்கிறது. மெய்யப்பன் குளியலறைக்குப் போகவில்லை.... அங்கு போய் மீண்டும் ரகளை வந்து, அந்த

ரகளைக்கு சத்யா பலியாக வேண்டாம். எங்கேயாவது ஓடிப் போயிடலாம்... எனக்கு நிம்மதியோ... இல்லையோ... எல்லோருக்கும் நிம்மதி...

மெய்யப்பன், தான் வசித்த அறையை நோட்டமிட்டுக் கொண்டான். எதையாவது எடுத்துக் கொள்ளலாமா என்று யோசித்தான். பிறகு, அந்த பீடை பிடித்த அறையில் உள்ள எதுவுமே வேண்டாம் என்பதுபோல்... கதவைத் திறக்கப் போனான்.

திடீரென்று போலீஸ் பயத்தால், தன்மானத்தின் சாவால், சலனமில்லாததுபோல் இருந்த அவன் மனக் குட்டையில் விலாவில், ஒரு எருமை மாடு முட்டுவது போலிருந்து. சத்யாவின் கழுத்தை, அண்ணன் கடிக்கிறான். ரத்தம் பீறிடுகிறது. பீறிட்ட ரத்தம், அவன் சட்டையில் சிதறுகின்றது... காட்டுக்கு ஓடிப்போகிற அவனை... ஓநாய்கள் வளைத்துக் கொள்கின்றன. அவனைத் துண்டு துண்டாகக் கடிக்கின்றன. கூரை விழுகிறது.... காலூன்றிய தரை பாதாளத்திற்குள் பாய்கிறது.... கை கால்கள் துண்டித்து தனித் தனியாய் விழுகின்றன.

திடீரென்று, இன்னொரு எண்ணம்: விமலா அவனைப் பார்க்கிறாள். கண் கலங்க, உதடுகள் துடிக்க, வாய் விம்ம... அவன் தலையை ஆதரவாகப் பிடித்துக் கொள்கிறாள். கண்ணீரைத் துடைக்கிறாள். கழுத்தைக் கட்டி அழுகிறாள். "அய்யோ... ஒங்களுக்கா.... இந்த கதி... இந்த கதி..." என்று ஓலமிடுகிறாள்.

மெய்யப்பன், மழையில் நனைந்த ஆடுபோல், கழுத்தை உதறிக் கொண்டான். "மூடமனமே... மானங்கெட்ட நெஞ்சமே... இன்னுமா ஒனக்கு அந்த நெஞ்சமற்றவள்மேல் ஆசை... அதுவும்.... பேராசை... பெரும் நஷ்டம்... ஒன்னை மானபங்கப்படுத்தப் போகிறேன் பார்... நான்... போலீசில் உதைபட்டு, நாய்போல இழுத்துக்கொண்டு போகப்படும் போது, நீ படும் அவஸ்தையை ரசிக்கப் போகிறேன் பார்..."

மெய்யப்பன், தான்வேறு, மனம் வேறு என்று பிரிந்துணர்ந்தவன்போல், கட்டிலில் படுத்துக் கொண்டான். துப்பட்டியை எடுத்து, தலை முழுவதையும் மூடிக் கொண்டு, வெளியுலகைப் பார்க்க விரும்பாதவன்போல் படுத்துக் கொண்டான். உடம்பு கட்டையானது. உள்ளம் ஓய்வு பெற்றது.

திடீரென்று, ஒரு கனவு அல்லது பிரமை. மெஸ்காரர் வந்து, அவன் கடிகாரத்தைக் கழற்றப் பார்க்கிறார். அவன் திமிறுகிறான். கடைசியில், அவனுடைய முன் கையை வெட்டி, கடிகாரத்தோடு கொண்டு போகிறார். திடுக்கிட்டு விழித்த மெய்யப்பன், மேஜையில் இருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி பகல் பதினொன்று. அன்று, மாதக் கடைசி என்பதும், சம்பள நாள் என்பதும் நினைவுக்கு வருகிறது. சம்பளத்தை வாங்கி, ‘மெஸ்’ கடனைத் தீர்க்கலாம். செத்த பிறகு, யாரும் ஈமக்கடன் செய்வார்களோ இல்லையோ... என் கடனைப் போக்கி விட்டுப் போகலாம்.

பறட்டைத் தலையுடன், மோவாயை மறைத்த தாடியுடன், முகம் மறைந்த மீசையுடன், கசங்கிய பேண்டோடு, புறப்பட்டான். பல் விளக்கவில்லையே என்பது நினைவுக்கு வரவில்லை. வயிறு என்று ஒன்று இருப்பதும் மறந்து போய்விட்டது.

வெளியே வந்தவன், தெருமுனையில் இரண்டு போலீஸ்காரர்கள் இருப்பதைப் பார்த்துவிட்டு, பின் வாங்கப் பார்க்கிறான். அவர்கள் யதேச்சையாகப் பார்த்தபோது, உடம்பு ஆடியது... மெள்ள மெள்ள முன்னேறுகிறான்.... அவர்கள் அவனைப் பார்ப்பதாகத் தெரியவில்லை... ஒருவேளை ‘டக்’கென்று பிடிக்கப் போகிறார்களோ... பிடித்தாலும் நல்லதுதான்.... அவர்களே... ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுவார்கள். விமலா வந்து... ஆஸ்பத்திரியில் பார்ப்பாளா.... சீ... என்ன மனுஷன் நான்.... அடேய்.. மெய்யப்பா... இன்னும் உன்னை மனுஷன்னு நினைக்கிறியா...

மெய்யப்பன், விறைப்போடு நடந்தான். போலீஸ்காரர்கள், பிணத்துக்குக் காவல் இருப்பதுபோல், அந்தப் பக்கம் வரப்போகும் ஒரு தலைவரின் வருகைக்காகக் காத்துக் கிடக்கிறார்கள் என்பது புரியாமல், அவன் பாட்டுக்கு நடந்தான். யாரோ ஒருவரின் குடைக்கம்பி பட்டபோது, லத்திக் கம்போ என்று, மாடு போலத் துள்ளிக் குதித்தான். நல்லவேளை... போலீஸ் இல்லை. மேற்கொண்டும் கஷ்டம் வராததை இன்பமாக நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

அவன் அலுவலகம் வந்தபோது, உள்ளேயிருந்து, சத்யாவின் அண்ணன் வெளியே வந்தான். மெய்யப்பனைப் பார்த்து முறைத்துக் கொண்டான். பிறகு, ரத்தச் சிவப்பேறிய கண்களை உருட்டியடி, தலையை மேலுங்கீழுமாக ஆட்டிக் கொண்டு அகன்றான்.

மெய்யப்பன் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது, அங்கிருந்த அத்தனை சகாக்களும் அவனைக் குழப்பத்தோடு பார்த்தார்கள். விமலா, கனகத்தைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டாள். தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். உதட்டைப் பிதுக்கிக் கொண்டாள்.

மெய்யப்பன், இருக்கையில் உட்கார்ந்து, மேஜையில் குப்புறப்படுத்தான். பிறகு, அங்குமிங்குமாக நிமிர்ந்து, முன் கைகளை ஊன்றி, அவற்றில் மோவாயை வைத்துக் கொண்டான். "எப்போ... போர்ட் மீட்டிங்..." என்று பியூன் முனுசாமி வாணியிடம் கேட்டபோது, மெய்யப்பனுக்கு பர்ஸேஸ், ஸ்டேட்மெண்ட் நினைவுக்கு வந்தது. சம்பந்தப்பட்ட ரசீதுகளைப் பார்த்து, ரிஜிஸ்டர்களுடன் ஒப்பிட்டு, ஸ்டேட்மெண்ட் தயாரிக்க வேண்டியது அவன் பொறுப்பு... பாதி தயாரித்துவிட்டான். நன்றாக இருக்கும் போதே, பத்து நாள் வாங்கும் வேலை... பாதிதான் முடிந்திருக்கிறது.... இன்றைக்குள் ஒரு பாதியை முடித்தாக

வேண்டும்... முடியுமா? முடியுமா.... முடியாதா என்பதல்ல கேள்வி... முடித்தாக வேண்டும்.

மெய்யப்பன், 'டிராவில்' வைத்த ரசீதுகளை வெளியே எடுத்தபோது, மானேஜர் ஏகத்தாளமாக அங்கே வந்தார். அவரின் இடுப்பின் இரண்டு பக்கமும் கைகள் அம்புக்குறி போல் பிணைந்து நின்றன. "ஏனய்யா... மெய்யப்பா... ஒனக்கு என்னய்யா... கேடு..."

மெய்யப்பன், கேடு பிடித்தவன்போல், அவரை ஏறிட்டுப் பார்த்தான். மானேஜர் கோபத்தோடு கத்தினார். "நீ... ஆபீஸ்லதான்... பித்துக்குளித்தனமாய் நடக்கிற... சகிச்சுக் கிட்டோம்.... குடித்தனம் இருக்கிறவன் சகிப்பானா? எதுக்குய்யா.... ராத்திரியில... அதுவும் எல்லோரும் தூங்கின பிறகு, பக்கத்து வீட்டுக்காரன் தங்கையைக் கூப்புடுறே....? சத்யா, சத்யான்னு கத்துனியாமே... ஒன் தங்கையைக் கூப்பிட்டால் சகிப்பியா... ஒன் பெண்டாட்டியைக் கூப்பிட்டால் சகிப்பியா..."

அலுவலக ஊழியர்கள் அனைவரும், மானேஜரின் வாயையே பார்த்தார்கள். பாஷ்யம் "லோகத்துல... இப்டியும் மனுஷாளா..." என்று அலுத்துக் கொண்டார். மானேஜர் எல்லோரையும் கம்பீரமாய் பார்த்துக் கொண்டே பேசினார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால வந்துட்டு ஒருவர் போனாரில்ல... அவருடைய துரதிருஷ்டம், இந்த மகாராஜாவோட இருப்பிடத்தில் இருக்கிறாராம். அவருக்கு ஒரு தங்கை வாழா வெட்டியாய் இருக்குதாம்... இந்த மைனர் நேற்று நைட்ல... அதுவும் பன்னிரெண்டு மணிக்கு.... 'சத்யா... சத்யா....' ன்னு கூப்புடுறாராம். இப்போ சொல்லுங்க.... இவரு பைத்தியமா... இல்ல நம்மை பைத்தியமாய் ஆக்குறவரா? அந்த ஆள்... கம்ப்ளெயிண்ட் கொடுத்துட்டுப் போறான்... நான் ஆக்ஷன் எடுக்காட்டால், போலீஸுக்குப் போகப் போறானாம்... பார்த்திங்களா.... நம்ம ஆளோட வேலையை...."

எல்லோரும் மெய்யப்பனைப் பார்த்தார்கள். கடித உறைகளில் தபால் தலைகளை ஒட்டிக் கொண்டிருந்த பியூன் முனுசாமி, நம்ப முடியாதவன்போல், அந்த உறைகளை உதறிப் போட்டுவிட்டு, தலையைப் பிடித்தான். 'டைப்' அடித்துக் கொண்டிருந்த வாணி, 'டைப்' அடிக்காமல், நிமிர்ந்தாள். விமலா தோள்களைக் குலுக்கிக் கொண்டாள்.

குனிந்த தலை குனிந்தபடி இருக்க, கையில் இருந்த ரசீது புத்தகத்தையே வெறித்துப் பார்த்த மெய்யப்பன், அந்த ரசீது புத்தகத்தைக் கிழித்தான். அருகே இருந்த பத்துப் பதினைந்து ஸ்டேட்மெண்ட்களையும் எடுத்து, சுக்கல் சுக்கலாகக் கிழித்தான். பிறகு, இரண்டு கைகளையும் நீட்டி நீட்டி, மடக்கி மடக்கி, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். தன் தலையெழுத்து மோசமாக இருந்தால், அது, அடித்த அடியில் ஒழியட்டும் என்று... உள்ளே ஒன்றுமில்லாமல் போன தலை சுக்கல் சுக்கலாக ஒன்றுமில்லாமல் உடையட்டும் என்று... பெண் விவகாரத்தில் டிஸ்மிஸ் ஆகாமல், அலுவலகத் தவறுக்காக டிஸ்மிஸ் ஆகலாம் என்றா? இது அவனுக்கே தெரியாது.

பியூன் முனுசாமி மெய்யப்பனைப் போய் பிடித்துக் கொண்டான். முண்டியடித்து, கைகளைத் தூக்கப்போன மெய்யப்பனை, மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான். வாணி, மெய்யப்பன் அருகே வந்துவிட்டாள். பாஷ்யம், நிதானமாக நடந்து வந்தார். விமலா, எதுவும் தெரியாதவள்போல், வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு, ஓரக்கண்ணை மட்டும் அந்தப் பக்கமாக விட்டு வைத்தாள். மானேஜர், மெய்யப்பன் கிழித்துப் போட்ட காகிதக் கத்தைகளைப் பொறுக்கி, லேசாகப் படித்துப் பார்த்துவிட்டு, முகத்தில் மட்டுமே உயிர் இருப்பதுபோல் அதைத் துடிப்பாக வைத்துக்கொண்டு, உடம்பின் இதர பகுதி முண்டமானதுபோல், அவனையே பார்த்தார். பிறகு, வெறியன்போல் கத்தினார்.

"அட பாவி.... போர்ட் மீட்டிங்ல வைக்க வேண்டிய ஸ்டேட்மெண்ட்களையா கிழிச்சுப் போட்டே....? ஒன் சீட்டை..... நான் கிழிக்கேனா... இல்லையா பாரு... நீ... காரியப் பைத்தியம். ஆபீஸையே பைத்தியமாக்க நினைக்கிறவன்.... ஒன்கிட்ட என்ன பேச்சு... எல்லாம் இந்த வாணியால வந்த வினை... ஒனக்கு 'மெமோ' கொடுக்க நினைத்த போதெல்லாம், இந்தப் புண்ணியவதி தடுத்தாள். இல்லன்னா.... எப்பவோ... ஒன்னை விரட்டியிருப்பேன்... இனிமேல் நான் யார் பேச்சையும் கேட்கப் போறதில்ல... வாணி, நோட்ஸ் புக்கை எடுத்துட்டு வா... இப்பவே டிக்டேஷன் கொடுக்கேன். இங்கேயே எடு... மிஸ்டர் மெய்யப்பன் இஸ் அண்டர் சஸ்பென்ஷன் அஸ்.... என்ன வாணி ஏன் அப்படி பார்க்கிறே? நோட்டை எடு. ஐஸே... டேக் டவுன் ஐ ஸே..."

வாணி, மானேஜரை உறுதியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன யோசிக்கிற...."

"ஒண்ணுமில்ல ஸார்... முன்னப் பின்ன யோசிக்காமல் நானே நடந்துகிட்ட விஷயத்தைப் பற்றி யோசிக்கிறேன்...."

"பாட்டி கதை வேண்டாம். டேக் டவுன் ஐ ஸே..."

"ஸாரி... ஸார்... என்னால முடியாது."

"வாட் யூ மீன்... இப்போ நான் மானேஜர்.... நீ ஸ்டேனோ... சொல்றதை எழுத வேண்டியது ஒன் வேலை..."

"சொல்றதை மட்டும் எழுதுறவளாய்... என்னை நீங்க நடத்தியிருந்தால்... நான் இப்படி பேசமாட்டேன் ஸார்...."

"இது ஆபீஸ். பெர்ஸனல் சமாச்சாரம் எதுவாக இருந்தாலும், அப்புறமாய் என் ரூம்ல வந்து பேசு..."

"அதே கேள்வியைத்தான் ஸார் நானும் கேக்கிறேன். மிஸ்டர் மெய்யப்பன் எந்தப் பெண்ணையாவது கூப்பிட்டிருந்தால், அது அவரோட பெர்ஸனல் சமாச்சாரம். அவரை... ஒங்க ரூம்ல கூப்பிட்டு... தனியாய் கேட்டிருக்கணும்...

அவரு தப்பு செய்திருந்தால், நடவடிக்கைகூட எடுத்திருக்கலாம். அதை விட்டுவிட்டு, ஒரு மனிதரை நாலுபேர் முன்னால அவமானப் படுத்திட்டிங்க... அதனால... அவர் என்ன செய்றோமுன்னு தெரியாமல் ஸ்டேட் மெண்ட்களை மட்டும் கிழிச்சதுக்கு நீங்க அவருக்கு நன்றி சொல்லணும்..."

"டோண்ட் டாக் நான்ஸென்ஸ்... நீ இப்போ ஸ்டெனோ... மறந்துடாதே..."

"இல்ல ஸார்... நான் வாணி... என் தம்பி மெய்யப்பனை, இந்த நிலைக்கு கொண்டுவரக் காரணமானவர்கள்ல ஒருத்தி என்னால... டிக்டேஷன் எடுக்க முடியாது..."

"அவனுக்குப் பிடித்த பைத்தியம்... ஒனக்கும் பிடித்துட்டுன்னு நினைக்கேன். ஆல்ரைட்.... மிஸ். விமலா, கொஞ்சம் வந்து டிக்டேஷன் எடுக்கிறீங்களா...?"

விமலா லேசாகத் தயங்கினாள். பிறகு, 'டைப்பிஸ்டில்' இருந்து, 'ஸ்டெனோ' புரமோஷன் கிடைத்தாலும் கிடைக்கலாம் - என்று நினைத்தாளோ அல்லது அதிகாரி சொல்வதற்கு உடனடியாகக் கீழ்ப்படியவேண்டும் என்று நினைத்தாளோ தெரியவில்லை, குறிப்புப் புத்தகத்தை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு ஓடி வந்தாள். பியூன் முனுசாமியின் முகத்தை அவள் பார்க்கவில்லை. பார்த்திருந்தால், பாதி வழியிலேயே நின்றிருப்பாளோ என்னவோ... நாகப் பாம்புபோல், தலை முடி சிலிர்க்க, நெளிந்து கொண்டே நடந்து வந்தாள். மெய்யப்பன் இன்னும் முனுசாமியின் மார்புக்குள் அடைக்கலமாகக் கிடந்தான்.

மானேஜர், 'மிஸ்டர் மெய்....' என்று சொல்லும்போதே, பியூன் முனுசாமி, மெய்யப்பனை விட்டுவிட்டு, மானேஜர் முன்னால் வந்து நின்றான். வாணி, மெய்யப்பனை, மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அவனோ, செத்துப் போன விழிகளோடு, சவமாய்போன உடம்போடு, ஆடாமல்

அசையாமல் அன்னையின் மார்பிலே அடைக்கலமான குழந்தைபோல முடங்கிக் கிடந்தான். பியூன் முனுசாமி கர்ஜித்தான்.

"ஸார்... இந்த ஆபீஸ்ல, நான் உட்பட.... நீங்க உட்பட யாருமே யோக்கியமில்ல... அவரு ஸ்டேட்மெண்டைத் தான் கிழிச்சாரு... அந்த ஸ்டேட்மெண்ட்டுக்குள்ள எவ்வளவு 'பிராடு' உண்டுங்கறது... எல்லோருக்கும் தெரியும்... இப்டி சொல்றது என் வேலையில்ல... ஆனால், என்ன செய்யுறது? ஒவ்வொருவரும் தங்களோட வேலைய மட்டும் செய்தால், நான் இதைச் சொல்லியிருக்க மாட்டேன்...."

"என்னையா பண்ணுவே?" என்றார் மானேஜர்.

முனுசாமி சாவகாசமாகச் சொன்னான்: "என்னை டிஸ்மிஸ் செய்யு முன்னால.... மெய்யப்பன் ஸார... டிஸ்மிஸ் செய்ய முடியாது. டிஸ்மிஸ் ஆக நினைக்கிறவன், அதுக்காக, கையைக் காலைக்கூட முறிப்பான். அதிகாரத்தைக் காட்டி அபலைப் பெண்கள் கைகாலைப் பிடித்து மடக்கிற வங்களோட தலையை முறிக்கிறதுலயும் தப்பில்ல..."

மானேஜர் அவனை ஓரக் கண்ணால் பார்த்தார். இயல்பான உயிர்ப்பயம் அவரை உலுக்கியது. குரலில் அஹிம்சை பளிச்சிட்டது. "என்ன முனுசாமி... விஷயம் தெரியாமப் பேசுற... ஸ்டேட்மெண்ட் முழுசையும் கிழிச்சிட்டான்... போர்ட் மீட்டிங்கில பதில் சொல்ல வேண்டியது நீயா..? நானா...?"

வாணி, மானேஜரை நிமிர்ந்து பார்க்காமல், மெய்யப்பனைப் பிடித்திருப்பதை விடாமல், பொதுப் படையாகப் பேசுவதுபோல், பேசினாள்.

"போர்ட் மீட்டிங் நடக்க இன்னும் இரண்டு நாள் இருக்கு... எல்லா ஸ்டேட்மெண்டையும் நான் அடிச்சுக் கொடுத்துடுறேன்..."

பிடுங்கித் தின்னும் அவமானத்துடன், மானேஜர் பல்லைக் கடித்துக் கொண்டே கேட்டார்: "அம்மா, எவ்வளவு நாளாய் பரோபகாரியாய் மாறுனிங்க?"

"பரோபகாரியாய் இருந்தவன் பைத்திய நிலைக்கு வந்த போது, பைத்தியமாய் நடந்துகிட்ட நான் பரோபகாரியாய் மாறிட்டேன். அவனுக்கே இதுன்னால், மற்றவங்களுக்கு என்ன கூலியோ...?"

"ஷட் அப்..."

"சரிதான் போங்க ஸார்.. இனிமேல்... தரக்குறைவாய் நடந்து கிட்டாலோ... இல்ல பேசினாலோ... நான் ஷட் அப்னு நாகரிகமாய் பேசமாட்டேன்... ஞாபகம் இருக்கட்டும்..."

மானேஜர் சுயமரியாதை உணர்வுக்கும், அவமரியாதை உணர்வுக்கும் இடையே அல்லாடியபோது, பாஷ்யம் பல்குழையப் பேசினார். "எதுக்கு வீண் வம்பு... லோகத்துல... ஒருத்தனோட கெட்ட நேரம்... அவனுக்கு உபகாரம் செய்ற வாளுக்கும் வரும். அதனால... அவனை வச்சிருக்கதும் தப்பு.... வைக்காமல் விடுறதும் தப்பு... நான் என்ன சொல்றேன்னா... பேசாம... மிஸ்டர் மெய்யப்பனை ஒரு மாதம் கம்பெல்ஸரி லீவ்ல அனுப்புவோம்... அப்புறம் பார்த்துக்கலாம்... இதனால பாம்பும் சாகாது, பாம்படித்த கம்பும் நோகாது பாருங்கோ..."

மானேஜர், பாஷ்யம் சொல்வதை, அங்கீகரிப்பதுபோல், மௌனமாக நின்றார். பிறகு, "வாணி... ஐ அம் ஸாரி... மிஸ் விமலா... என் ரூமுக்கு வாங்க... கம்பெல்ஸரி லீவுக்கு ஒரு டிக்டேஷன் கொடுக்கிறேன். வாரீங்களா...?" என்றார்.

மானேஜர், அவமானத்தை மறைக்க விரும்புபவர் போல், அவசர அவசரமாக அறைக்குள் போனார். அவர் போன ஐந்து நிமிஷத்திற்குள் மிஸ். விமலாவும் நோட்ஸ் புத்தகமும் கையுமாக உள்ளே போனாள்.

அரைமணி நேரத்திற்குள், மெய்யப்பனைக் கம்பெல்ஸரி லீவில் அனுப்பும் 'மெமோ' டைப் அடிக்கப்பட்டு, அவனிடம் கொடுக்கப்பட்டது. மெய்யப்பன், அதை வாங்கி, கிழிக்கப்

போனான். முனுசாமி தடுத்துவிட்டான். இருக்கையில் இருந்தபடியே, விமலாவுடன் கடற்கரைக்கும், கிராமத்துப் பள்ளிக் கூடத்திற்கும், அரசியல் மேடைகளுக்கும் இப்படி எங்கெல்லாமோ போய்க் கொண்டிருந்த மெய்யப்பன் கையில், பாஷ்யம் சம்பளத்தைக் கொடுத்தார். அவன் அதை எண்ணாமலே, பைக்குள் வைத்துக் கொண்டான்.

பியூன் முனுசாமி அவனைச் செல்லமாக அதட்டினான். "வா ஸார்... ஒரு ஆட்டோவுல கொண்டு போய் விடுறேன்... எய்ந்திரு ஸார்... ஏன் ஸார் கலங்குறே... இன்னா ஸார் நடந்துட்டு. நீ லீவ்லதான் போறே... நீ நல்லபடியாய் மாறி, பழையபடி வரத்தான் போற... அப்போ ஒரு சிலர், லீவ் போடவேண்டிய அவசியம் இல்லாமல், ஒரேயடியாய் போயிடுவாங்க... நட ஸார்... நிமிர்ந்து நட ஸார்... ஒரு பாவமும் செய்யாத பைத்தியமாக்கப்பட்ட ஒனக்கே இந்த நிலமைன்னா... ஒன்னை பைத்தியமாக்கினவங்களுக்கு என்ன நிலையோ... ஒன்னை நம்பக்கூடாது ஸார்.. அப்போகூட, நீ அவங்களுக்கு உதவுவே... நட ஸார்... அட அழுவுறதப் பாரு... ஒன்னோட ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும், சிலருக்கு ஒவ்வொரு துளி ரத்தமாய் வரப்போவுது... என்ன யாருக்கும் சாபம் போடாண்டாமா... சரி போடல. நீ இப்போ நடந்தியான்னா.... சாபம் கொடுக்கல... உம், அப்படித்தான் நடக்கணும்..."

பாஷ்யம் குறுக்கிட்டார். "டேய் முனி... அவரை அழக்கூடாதுன்னுட்டு, நீ... ஏண்டா அழுவுறே...?"

முனுசாமியும், மெய்யப்பனும் போவதைப் பார்த்துக் கொண்டே நின்ற வாணி, கண்ணீர் விடாமல், சத்தம் போடாமல், முட்டாமல், மோதாமல், தனக்குள்ளே அழுதாள். முனுசாமி, விமலாவுக்குத்தான் சாபம் கொடுத்தான் என்றாலும், சாபம் என்பது, அவனைப்போல் வேண்டியவர் வேண்டாதவர் என்று பார்க்காது என்பதைப் உணர்ந்தவள்போல், தனக்குள்ளே மருகினாள். நல்லவர்களின் சாபம் என்பது, தர்மத்தின் கோபமாயிற்றே...

வாணி, தனக்குள்ளே புலம்பினாள். 'முனுசாமி, என் சம்பளத்துல பாதி வாங்குறவன் நீ... என் பிள்ளைங்களை மாதிரி, ரெண்டு மடங்கு அதிகப் பிள்ளை குட்டிக்காரன். ஆனாலும், ஒன்னால நிமிர்ந்து நிற்கமுடியுது... சத்தியத்தைப் பற்றிப் பேச முடியுது... ஆனால், நான்... போலித்தனமான வாழ்க்கைக்காக, புனிதத்தையே போலியாக்கிட்டேன். ஒன்னை மாதிரி, என்னால சத்தியத்தைப் பற்றிப் பேச முடியலியே... நிமிர்ந்துகூட பார்க்க முடியலியே.... சத்தியத்தைப் பேசக்கூட வேண்டாம்... பேசுற வார்த்தையைக் கேட்ககூட யோக்கியதை இல்லாமல் போயிட்டேனே.... ஒரேயடியாய் போயிட்டேனே....'

## 16

கையோ, காலோ வெட்டுப்பட்டால், எடுத்த எடுப்பிலேயே வலியை உணரமுடியாது. அப்புறம் அந்த வலி தவிர, வேறு எந்த வலியும் தெரியாது. இதுபோல், உள்ளத்தில் இருந்து முற்றிலும் உணர்வு துண்டிக்கப் பட்டவனாய் தோன்றிய மெய்யப்பனை, அவன் அறைக்கு வந்ததும், வெட்டுப்பட்ட தன்மான உணர்வுகளுடன், வெட்டப்படாத இதர உணர்வுகள் துடிக்க வைத்தன. துவள வைத்தன. ஆடைகளை யாராவது அகற்றி, அவனை நிர்வாண மாக்கியிருந்தால்கூட பரவாயில்லை. சிறு வயதிலே அப்படி இருந்ததை நினைத்துக் கொள்ளலாம். ஆனால், உள்ளமே அம்மணமாக்கப்பட்டு அதிலிருந்த மனிதத்துவமே கொலை செய்யப்பட்டாகி விட்டது. மனிதன் வாழ்வதே நான்குபேர் கண்ணெதிரில் நன்றாகத் தோன்ற வேண்டும் என்றுதான்.

தனக்காக வாழ்வது கால் பங்கு என்றால், பிறத்தியாருக்காக வாழ்வது அல்லது வாழ்வதுபோல் நடிப்பது முக்கால் பங்கு... கால் பங்கு உயிரோடு ஏன் இருக்க வேண்டும்? 'இப்போது, நான் இருந்துதான் ஆகவேண்டும் என்று என்ன இருக்கிறது...? யார் இருக்கிறார்கள்... அம்மாவா... அண்ணன் தம்பியா... மனைவி மக்களா... எனக்கு நானே அப்பன்... எனக்கு நானே அம்மா... அக்காள்... அண்ணன்... நான் சர்வேஸ்வரன்... அவனைவிட மேலானவன்... அவனுக்கு மனைவி உண்டு. மக்கள் உண்டு. எனக்கோ 'சக்தி' இல்லை.'

மெய்யப்பன், வயிறு குலுங்கச் சிரித்தான். வாய் குலுங்கச் சிரித்தான். காதடைக்கச் சிரித்தான். கழுத்திழுக்கச் சிரித்தான். அவன் கண்களில் மரணப் பிரகாசம் ஒளிர்ந்தது. மாணவப் பருவத்தில், அரசியலில் தீவிரமாக இருந்தபோது, நேருவின் சுயசரிதையைப் படித்திருக்கிறான். அதில், அவர் 'நம் துன்பங்களுக்கெல்லாம் மரணம் முற்றுப்புள்ளி வைக்கும் என்பதை நினைக்கும்போது, மரணமே இனிமையாகத் தோன்றுகிறது' என்று எழுதியது நினைவுக்கு வந்தது. அவர், கஷ்டங்களால் ஒருவன் கலங்கக்கூடாது என்பதற்காகச் சொன்னார். இவனோ, அதை, கஷ்டங்கள் கூடினால் காலமாக வேண்டும் என்று எடுத்துக் கொண்டான்.

எப்படியோ, தன் பிரச்சினைக்கு - பிரச்சினையாகப் போன தனக்கு, ஒரு தீர்வு கண்டுபிடித்து விட்டான். மரணத் தீர்வு. தனக்குத்தானே வழங்கப்போகும் தண்டனையை உதவியாக நினைத்து அவன் அழுதான். இப்போது, கூரை விழவில்லை. பாதாளம் தெரியவில்லை. விமலா வரவில்லை. பட்ட அவமானம் தெரியவில்லை. சத்யாவைக் காணவில்லை. எதுவுமே தோன்றவில்லை. மரணத்தைத் தவிர, எல்லோரும் எல்லாமும் போய்விட்டார்கள்; போய்விட்டன. மரணம் ஒன்று மட்டுமே எதிரே நின்றது. இரு கரம் விரித்து. தாயைப் போல - தோளில் தூக்கும் தந்தையைப் போல.

மெய்யப்பன் இருட்டிய பார்வையோடு எழுந்தான். கட்டிலுக்கடியில் தாம்புக்கயிறு கிடந்தது. கார்ப்பரேஷன்

குழாயில் தண்ணீர் வராதபோது கிணற்றில் நீரெடுக்க வாளியுடன் வாங்கிப்போட்ட கயிறு. கிணற்றில் இருந்து நீரை மேலே கொண்டுவர உதவிய கயிறு, இப்போது அவன் உடலில் இருந்த உயிரை எடுத்து, 'மேலே' கொண்டுவரப் போகிறது. 'வர' அல்ல. போகப் போகிறது.

மெய்யப்பன், முன்பு பாடைபோல் தோற்றங்காட்டிய கட்டிலுக்கு அடியில் குனிந்து, செம்மண் நிறத்தில், சாரைப் பாம்புபோல் சுருண்டு கிடந்த கயிற்றை எடுத்தான். ஒரு முனையில் சுருக்குப் போட்டு, இன்னொரு முனையை விட்டத்தில் கட்டினான். பிறப்பின் முனையில் இருந்து, இறப்பின் முனைக்குப் போகப் போகிறோம் என்ற இன்பதுன்ப எல்லையற்ற, சூன்யப் பெரும்பரப்பில் சுக்கிலமாய் மறையப் போவதை நினைத்துக்கொண்டான். உடல் பளுவால் கயிறு அறுந்துவிடுமோ என்று, அதற்கு மட்டுமே அஞ்சியவன்போல், கயிற்றை இழுத்துப் பார்த்தான். அறுபடாது. உடம்பு இளைத்துப் போனதும், எடை பாதிக்கும் கீழே பாதிக்கப்பட்டதும் நல்லதாய் போயிற்று. இதனால்தான், 'எல்லாம் நன்மைக்கே' என்கிறார்களோ... அவன் இழுத்த வேகத்தில் கயிறு ஆடியது. கீழே தொங்கிய வட்டச் சுருக்கு பலூன் மாதிரியும், அதுதான் வாழ்க்கை போலவும் தோன்றியது. வாழ்க்கையும் ஒரு பலூன்தானே.... கீழே தொங்கிய சுருக்கும், சுருக்குக்குப் போடப்பட்ட முடிச்சும், குழந்தை தொட்டிலில் ஆடுவதுபோல் காட்டியது. மரணத் தொட்டில். இறப்பம்மா தாலாட்டப் போகும், பெரும் தூக்கத் தொட்டில்.

கட்டிலில் ஏறி, சுருக்குக்குள் கழுத்தை நுழைக்கப் போனவன், திடீரென்று கீழே குதித்தான். கீழே கிடந்த ஒரு குப்பைக் காகிதத்தை எடுத்து 'என் மரணத்திற்கு நானே காரணம்... வேறு எவருமல்ல... உணர்வுகளால் 'புலன் விசாரிக்கப்பட்டு' உயிரை விட்டவன். என் மரணத்திற்குப் புலன் விசாரணை செய்ய வில்லையானால், அதுவே இந்த எனக்கு, இறந்த பிறகாவது செய்யும் உதவி' என்று தன்

கையெழுத்தையும் போட்டுவிட்டு, தலையெழுத்தை அழிக்க நினைத்தவனாய் மீண்டும் கட்டிலில் ஏறினான். லேசாக... மரணபயம். உயிர் போகப் போகிறதே என்பதைவிட, உடல் அவஸ்தைப்படுமே என்ற பயம்.... மூச்சைப் பிடித்துக் கொண்டு, அவன் சுருக்குக் கயிற்றைப் பார்த்தபோது-

ஜன்னல் பிய்க்கப்படுவதுபோல் சத்தமிட்டது மெய்யப்பன் ஜன்னலை நோக்கினான்.

சத்யா, ஜன்னல் கம்பிகளுக்கு இடையில், தன் இரு கரங்களையும் நீட்டி, அவனைப் பார்த்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தாள். முகம் 'வேண்டாம் வேண்டாம்' என்று இருபக்கமும் ஆடிக் கொண்டிருந்தது. கண்கள் நீர் சொரிந்தபடி, அவனைப் பார்த்துக் கெஞ்சிக் கொண்டிருந்தன.

அவள், 'கீழே இறங்குங்கள்' என்று கரங்களாட, விரல்களை ஆட்டிய விதம், ஒரு தாய், தன் குழந்தையை எடுக்கத் துடிப்பதுபோல் தெரிந்தது. அவள் கண்ணீர்த் துளிகள், அவன் அறைக்குள் பன்னீர்போல் தெறித்தன. அவள் அண்ணி வீட்டில்தான் இருக்கிறாள். பட்டப்பகல் தான். எதிர்வீட்டுக்காரி இவள் ஜன்னலில் குவிவதைப் பார்த்துக் கொண்டுதான் நிற்கிறாள். அவளுக்கும் இது தெரியும். இப்போது, அவனைத் தவிர, எதுவுமே அவளுக்குப் பொருட்டாகத் தெரியவில்லை. அவன் மரணப்படாமலே, மீண்டும் தன்னில் பிறக்க வேண்டும் என்பதுபோல், அவள் துடித்தாள்... கருணையின் நோக்கம்... தாய்மையின் தாக்கம்.... பிரசவ வேதனையில் தாய்க்கு, வெட்கம் போய் விடுவது போல், அவளின் நெஞ்சின் கருணைப் பிரசவத்தில், அக்கம் பக்கம் மறந்துவிட்டது. அவனை மீண்டும் கரம் குவித்துக் கும்பிட்டாள். பிறகு, தானும் சாகப் போவதுபோல், கைகளை கழுத்துப் பக்கமாகக் கொண்டு வந்து, நெறிப்பதுபோல் காட்டினாள்.

மெய்யப்பன் கீழே குதித்தான். ஓடிப்போய், அவள் இருகரங்களையும் எடுத்து, கண்களில் ஒற்றிக் கொண்டான்.

பிறகு, அதில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அவன் விட்ட கண்ணீர், அவள் குவித்த கைகளில் தேங்கி, அதில் அவன் முகம் மிதப்பதுபோல் தோன்றியது. சத்யா, மெதுவாக, விட்டுவிட்டுப் பேசினாள்.

“உங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்த பாவி நான்தான்... நீங்கள் இப்படி ஏதாவது பண்ணுவிங்கன்னு நினைத்துதான்... உயிரை விடுவிங்கன்னு நினைச்சுதான்... நான்... என் உயிரை விடாமல் இருக்கேன்.... இல்லன்னா... அண்ணன் அடிக்கிற அடிக்கும், அண்ணி பேசுற பேச்சுக்கும்... எப்பவோ உயிரை விட்டிருப்பேன்.... இல்லன்னால் எங்கேயாவது ஓடியிருப்பேன்.... தாழ்கிறவன் தாழ்ந்துக்கிட்டே இருக்கப் போறதில்ல... கஷ்டத்துக்கே சாவு வரும்படியாய் நடந்துக்கணும்... கஷ்டத்தால சாகப்படாது....”

மெய்யப்பனின் கைகள் நோகக்கூடாது என்பதுபோல், அவற்றை மெல்ல விலக்கிக்கொண்டு, அவள் திரும்பாமலே, பின்புறமாக நடந்தாள். பிறகு, தன் நிலையும், அண்ணியின் போக்கும் தெரிந்தவள்போல், அவனிடம் ‘நான்..... ஒரு உயிர் அநியாயமாய் போகப்போகுதேன்னுதான் அப்படிப் பேசினேன்... வேற விதமாய் அர்த்தப் படுத்தாதிங்க....’ என்று சொல்வதற்காகத் திரும்பினாள். மெய்யப்பன், ஜன்னல் கம்பிகளில் முகம் பதிய, கைதிபோல் பார்த்தான். சத்யாவிற்கு, சொல்லவந்ததை, சொல்ல மனமில்லை.

ஜன்னல் பக்கம், அண்ணியின் முதுகு தெரிந்தது. பார்த்திருப்பாளோ... பார்த்தால் பார்க்கட்டும்.... விரட்டினால் விரட்டட்டும்...

சத்யா, சென்ற வழியிலேயே சென்றாள். அண்ணி பார்த்திருப்பாளோ... பார்த்தால் என்ன... ஒருவேளை, வீட்டிற்குள் வந்தபிறகு பேசிச் கொள்ளலாம் என்று காலன்போல் காத்திருக்காளோ... திட்டுவாளோ... திட்டட்டும்....

‘ஒரு உயிர் - அதுவும் சூதுவாதில்லாத ஒரு ஜீவன், அநியாயமாய் போகப் பார்த்தது. அதை ஒருத்தி பார்க்கிறாள்.

நூறு பேருக்குப் பயந்து, தானே அந்தத் தற்கொலையைத் தடுக்காமல், பிறத்தியாரிடம் சொல்வதற்காக அவள் போனாலும், அவள் பெண்ணல்ல.... அச்சம், மடம், நாணம் என்ற அனாவசியங்களின் பேரில் எமலோகத்திற்கு ஒருத்தி இடம் கொடுத்தால், அவள் நிஜமாகவே நாணமற்றவள். ஒரு உயிர் போவதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தால், அவள் பெண்மையற்றவள்... 'அண்ணி பேசினால் பேசட்டும்... பதில் சொல்ல எனக்கும் தெரியும். விரட்டினால்? விரட்டட்டும்... வீட்டுக்குள்ளே விரட்டப்படுவதைவிட.... ஒரேயடியாய் வெளியே விரட்டுறது எவ்வளவோ மேல்...'

தன்னைவிட வயதில் பெரிய ஜீவனைப் பிரசவித்த இன்ப துன்ப வேதனையுடன், 'நாணமும், அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்' என்ற பாரதியாரின் பாட்டுக்குப் பொருள் போல், முல்லைக் கொடிபோல் தோன்றிய அந்த முடக்கொடி, ஊனக்காலில் கை ஊன்றியபடி, வைராக்கியம் உள்ளமெங்கும் வரையப்பட்டதுபோல் நடந்தாள்.

## 17

ஒருசில நாட்கள் வரை, முகத்தில் சிரிப்பு இல்லையானாலும், சிலிர்ப்புக் காட்டாமல் இருந்த மெய்யப்பன், மீண்டும் முடங்கிக் கொண்டதும், சில சமயம் மேஜை, நாற்காலிகளைக் குத்துவதையும் பார்த்த சத்யாவிற்குத் தன் 'வாழாவெட்டி' பிரச்சினையைவிட, அவன் பிரச்சினையே பெரிதாகத் தெரிந்தது.

அன்று குளியலறைக்குப்போன வேகத்திலேயே, குளிக்காமல் அவன் திரும்பிய தோரணையைப் பார்த்தவளுக்கு, மீண்டும் அவன் மரணப்பிடிக்குள் சிக்கப் போகிறானோ என்று பயம் வந்தது. அண்ணிக்குத் தெரியாமல், ஜன்னல் வழியாக ஜாடைமாடையாகப் பார்த்தபோது, அவன் கட்டிலுக்கடியில் எதையோ தேடுவது போலிருந்தது. அதற்குமேல் அங்கே நிற்க முடியவில்லை. அண்ணி கூப்பிட்டாள், அல்ல, 'கூப்பாடு' போட்டாள்.

பாதிவழி வந்தவள், மீதி வழியையும் கடந்து, ஜன்னல் வழியாக அவனைப் பார்த்துவிட்டு, வீட்டுக்குள் ஓடினாள். ஓடிய வேகத்தில் ஊனக்கால் மேலும் தேய்ந்தது போலிருந்தது.

நல்லவேளையாக, மாலையில், அண்ணிக்காரி கோவிலுக்குப் போய்விட்டாள். வருவதற்கு எப்படியும் ஒரு மணி நேரமாவது ஆகும். கோவிலில் விழுந்து விழுந்து கும்பிடுகிறவள். முன்பெல்லாம், பெரும்பாலும், குரோதமும் விரோதமும் உள்ளவர்கள்தானே அதிகமாகக் கோவிலுக்குப் போகிறார்கள் என்று கோவில்கள் மீதே வெறுப்படைந்த சத்யா, இப்போது 'ஞானம்' பெற்றவள்போல், கோவில்களைக் கண்முன் நிறுத்தி, மானசீகமாகக் கையெடுத்துக் கும்பிட்டாள். கோவிலில், ஆண்டவன், குரோதிகளையும் தன்னிடம் வரவழைத்து, அந்தச் சமயத்தில், அந்த குரோதிகளைச் சார்ந்தவர்களுக்கு சுகமளிக்கிறான்... நல்லவர்கள் தன்னிடம் வர நினைத்தால் அவர்களால் நடக்க வேண்டிய நல்ல காரியங்கள் தடைபடக்கூடாது என்று நினைத்து, அவர்களை வரவழைக்காமல் அருள் காட்டுகிறான்...

சத்யா, தன்னுள் எழுந்த சிந்தனையால், மெல்லச் சிரித்து, வெளித் தளத்தில், தேக்குத் தூணில் சாய்ந்து கொண்டே, பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள். அண்ணி வந்ததும், வீட்டுச்சாமிக்குப் பூ சாத்துவாள்.

சத்யா, ஜன்னல் வழியாக, மெய்யப்பனின் அறையை அவ்வப்போது பார்த்துக் கொண்டாள். எங்கேயாவது ஏதாவது விழுவதுபோல் சத்தம் கேட்கும்போது, திடுக்கிட்டு எழுந்து, கேட்டுக்குப் போவதுபோல் போய், அந்த அறையைப் பார்த்துக் கொண்டாள். மெய்யப்பன், படுத்துத்தான் கிடக்கிறான்... கட்டிலில் ஏறவில்லை.... கயிற்றைக் கட்டவில்லை.

பூக்களைப் பார்த்த கண்முன்னால், ஒரு முதிய உருவம் நிற்பதைப் பார்த்து நிமிர்ந்தாள். உடனே, அவரது காலைத் தொட்டுக் கும்பிட்டுக் கொண்டே, "எப்போ சாமி வந்திங்க... நான் கவனிக்கல..." என்று அடக்கமாகப் புன்னகைத்துச் சொன்னாள்.

வந்தவருக்கு எழுபது வயதிருக்கலாம். ஆனால், முகத்தில் பழுப்பில்லை. நெற்றியில், பட்டை பட்டையாக இல்லாத - ஒரு அங்குல நீள திருநீர். அதில் குங்குமம் இல்லை. குளமிடகாய் போன்ற மூக்கு. காவிக்கரை போட்ட வேட்டி. அருள் பாலிக்கும் கண்கள். தொலைதூரப் பார்வை. சற்று விரிந்த வயிறு. கழுத்தில், சிறிய அளவிலான ருத்ராட்சமாலை; எதையும் துருவிப் பார்க்காததுபோல், துருவிக் கேட்காதது போலான போக்கு. காடாத் துணியிலான சட்டை; அதில் அண்டா குண்டாப் பை. நல்லதையும், கெட்டதையும் அந்தப் பைக்குள்ளே வாங்கிப் போட்டுக் கொள்வதுபோன்ற பற்றற்ற நடை. வாழ்க்கை என்பது இந்த உலகோடு முடியவில்லை என்பதுபோல், சொல்லும் சொற்களில், வாழ்க்கைக்கு அப்பால் உள்ள ஏதோ ஒன்று ஒலிப்பதுபோன்ற தோரணை. நிதானமான சொல்; வேகமான அர்த்தம்.

சத்யாவிற்கு, அந்தப் பெரியவரைப் பார்க்கும் போதெல்லாம், அஞ்சத்தக்கது, அஞ்சுதற்குரியது எதுவும் இல்லை என்று தோன்றும். அவரைச் சுற்றி, அல்லதை எரித்து, நல்லதைப் பேணும் ஒரு ஜோதிப் பிரகாசம் இருப்பது போலவும், மானுட நெறிப் பயிர்கள் வளர்வதற்கான சீதளம் இல்லாத குளுமை வீசிக் கொண்டிருப்பது போலவும்

தோன்றும். யாராவது, அவரிடம் தம் பிரச்சினையைச் சொன்னால், வலது கைப் பெருவிரலை மூக்கடியில் வைத்து, ஆள்காட்டி விரலை, நெற்றிப் பொட்டில் வைத்து, நிதானமாக மூச்சுவிடுவார். பிறகு எதாவது பதிலளிப்பார், ரத்தினச் சுருக்கமாக. அவரிடம் ஏமாற்றுக்காரர்களும் போவதுண்டு. அந்நியோன்யமானவர்களும் போவதுண்டு. இவர் இப்படி என்று வாய் பேசாது... கண்கள் பேசும்... புரிந்து கொள்ளக் கூடியவர்கள் புரிந்து கொள்ளலாம். அவர் நினைத்தால் எவ்வளவோ சம்பாதிக்கலாம்... ஆனால், இன்னும், தெரிந்தவர் வீட்டுத் திண்ணையை ஒட்டிய சின்ன அறையில்தான் இருக்கிறார்.

அவள் பிறந்த நாளிலிருந்தே, அவள் குடும்பத்துடன் தொடர்பு கொண்டவர். அவள் கல்யாணத்தைக்கூட வேண்டாம் என்று சொன்னார். 'அவளுக்கு என்ன அவசரம்' என்றார். அவசரம் அண்ணனுக்கு என்பதைக் கேட்க மறந்தாரோ... சொன்னால் கேட்க மாட்டான் என்று நினைத்தாரோ....

அவரையே பார்த்தபடி, தன்னை மறந்து, தன் கஷ்டத்தை மறந்து நின்றவளைப் பார்த்து, "என்னம்மா... வீட்ல யாரும் இல்லையா...?" என்றார் பெரியவர்.

"அண்ணன் 'டூர்' போயிருக்கிறார். அண்ணி, கோவிலுக்கு.... இப்போ வந்திடுவாங்க.... வாங்க, வந்து உட்காருங்க..."

அந்த முதியவர், சிறிது யோசிப்பவர்போல் நின்றார். பிறகு, அவளையே உற்றுப் பார்த்தார். பிறகு "ஒன் புருஷன்... ஏதாவது லெட்டர் போட்டானா..." என்றார். இப்போதுதான், அவர், அந்தப் பிரச்சினையைப் பற்றியே கேட்கிறார்.

சத்யா கண்கலங்க அவரைப் பார்த்தாள். புரிந்து கொண்டார்.

சத்யா அவர் கொடுத்த விபூதியைப் பயபக்தியுடன் வாங்கிக் கொண்டு, அவரையே பார்த்தாள். அவர், அந்தப்

பார்வையை ஊடுருவி அதற்கு உள்ளே இருந்ததை உணர்ந்தவர்போல், மெதுவாகப் பேசினார். "கவலைப் படாதம்மா, ஒன் கஷ்டகாலம் தீரப்போவுது... ஒன் புருஷன்கிட்ட ஒன்னை சேர்க்கணுமுன்னு நான் விபூதி கொடுக்கல... ஒனக்கு எந்த வகையிலேயோ... ஒரு வகையில மேலான வாழ்வு வரணுமுன்னுதான்... விபூதி கொடுத்தேன்.... அந்த வாழ்க்கை... புருஷன் இல்லாமல்கூட வரலாம்... உதறுகிறவனை ஒதுக்குகிறவர்தான் உண்மையான பத்தினி. கவலைப்படாதே... பத்தினித்தன்மை என்பது கணவன் உறவோடு சம்பந்தப்பட்டது அல்ல.... தன்னோடு மட்டுமே சம்பந்தப்பட்டது.... நான் வரட்டுமாம்மா...."

சத்யா ஓரளவு துணுக்குற்றாள். இப்போதெல்லாம், தனக்குக் கணவரிடம் போகப் பிடிக்கவில்லை என்பதை எப்படிப் புரிந்து கொண்டார்? முதியவர் நகரப் போனார். சத்யா, தயக்கத்தோடு, அவரைப் பார்த்தாள். அவரே கேட்டார்:

"என்னம்மா யோசிக்கிற....?"

"ஒண்ணுமில்ல.... இந்த ரூம்ல... ஒருவர் இருக்கார். சின்ன வயசு... நல்ல மனுஷர்... அம்மா என்கிற சொல்லுக்கு அடுத்த சொல் அறியாத மனுஷர். ரெண்டு மாசமா மூளைக் கோளாறுல தவிக்கார். நான்... எனக்கே கூட கேட்டதுல்ல.... அப்பாகிட்ட மகள் கேட்கவேண்டியதும் இல்ல...."

பெரியவர், மீண்டும், மூக்கில் பெருவிரல்பட, ஆள்காட்டி விரல் நெற்றியை வருட, மூச்சு விட்டார். பிறகு, "சரி.... வா... போய்ப் பார்க்கலாம்..." என்றார். இருவரும் உள்ளே போனபோது, மெய்யப்பன் கண் விழிக்காது முடங்கிக் கிடந்தான். பெரியவர் அவனையே பார்த்தார்.

மெய்யப்பன் மலங்க மலங்க விழித்துக் கொண்டே பார்த்தான். எழுந்திருக்கப் பார்த்தான். முடியவில்லை. பெரியவர், அவனைக் கையமர்த்திவிட்டு, விபூதியை எடுத்து அவனிடம் நீட்டினார். அவன், அதை வாங்கலாமா

என்பதுபோல், சத்யாவைப் பார்த்தான். அவள் "காலுல விழுந்து வாங்குங்க...." என்றபோது, மெய்யப்பன் கட்டில் சட்டத்தில் கையூன்றி எழப்போனான். பெரியவர் மீண்டும் கையமர்த்தினார். "கவலப்படாதப்பா.... ஒனக்கு சீக்கிரம் குணமாயிடும்.... நிச்சயமாய் குணமாயிடும்...."

இதுவரை யாரும் குணமாயிடும் என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்வதைக் கேட்டறியாத மெய்யப்பன், அப்போதே குணமானதுபோல் எழுந்தான். பெரியவரின் காலைப் பிடித்துக் கொண்டு விம்மினான். கண்ணுக்குப் புலப்படாமல், கருத்துள் ஒளிந்திருந்த ஒருவரை, கண்ணெதிரே கண்டவன்போல் விம்மினான். "எனக்குக் கூட குணமாயிடுமா.... எனக்குக் கூடவா...." என்றான். அவரது கண்களைப் பார்க்கப் பார்க்க, அவனுக்கு உள்ளத்தில் ஒளி ஏற்பட்டது போலிருந்தது. அந்த ஒளியே தீயாகிப் பிரமைகளைச் சுடுசாம்பலாய் எரிப்பது போலிருந்தது.

பெரியவரும் இப்போது உணர்ச்சி வசப்பட்டவர்போல் பேசினார்.

"இளமையில், என் வாழ்க்கையும் ஒன் வாழ்க்கையும் ஒரு மாதிரியான வாழ்க்கையாய் ஆனதால சொல்றேன்... பர்மாவுல பிறந்து, சின்ன வயசிலேயே பெத்தவங்களை இழந்தவன் நான்... இதனால, சமூகத்தையே பெற்றவர்களாய் நினைக்கப் பழகுனவன்... பர்மாவுலயும்.... நேபாளத்துலயும் புத்த பிட்சுக்களோடயும் சித்த புருஷர்களோடயும் பழகிய கட்டை இது. இரண்டாவது உலகப்போர்ல.... பர்மாவுல இருந்து, கால்நடையா புறப்பட்டு ஆயிரக்கணக்கான இறப்பையும் பிறப்பையும் பார்த்துப் பார்த்து.... எல்லாவற்றையும் ஒரே மாதிரி பார்க்கப் பழகுன கட்டை..... ஒன் முகக் குறிப்பை வச்சே தெரிஞ்சிக்கிட்டேன். ஒனக்கு சீக்கிரம் குணமாயிடும். இதுல தம்பட்டம் அடிக்க எனக்குத் தகுதி இல்ல... என் மகள் ஒனக்கு சுகமாகணுமுன்னு நினைக்கிறாள்... அவள் நினைத்தது நடப்பதற்கு நான் வெறும் கருவி.... அவ்வளவுதான்...."

மெய்யப்பன், குழந்தைபோல் முகம் ஏங்கக் கேட்டான்:

"சாமி.. நிச்சயமாய் குணமாயிடுமா.... ஒங்களை குணமான நிலையில பார்ப்பேனா...."

"கவலப்படாதப்பா.... என் குருநாதன் ராமையா அம்பலத்தை நினைத்து... இந்த ரங்கசாமி கொடுக்கிற விபூதி வீணாகாது... அதை வீணாக்காமல் பார்த்துக்கிற வல்லமை என் மகள்கிட்ட இருக்கு... ஒரு முருகன் படத்தை வாங்கி வை.... பழனியாண்டி காலை கெட்டியாப் பிடிச்சுக்கோ... ஏண்டா கவலைப்படுற... அப்பனையே துச்சமாக நினைத்து தனியாய் போன முருகன்... ஒன்னை தனியா விடமாட்டான்... இன்னையோடு ஒன் கஷ்டகாலம் நீங்கிட்டுன்னு நினைச்சுக்கோ...."

பெரியவர் எழுந்தார். அவனிடம், மேற்கொண்டு எதுவும் பேசாமலே வெளியே வந்தார். ஆகாயத்தைத் துருவிப் பார்த்துக் கொண்டார். சத்யா தயக்கத்தோடு கேட்டாள், "நீங்க இந்த அளவுக்கு யார்கிட்டயும்... இப்டி மனம் விட்டுப் பேசினதை நான் கேட்கல...."

பெரியவர் அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார். மெய்யப்பனை உற்று நோக்கியபடியே உபதேசித்தார்.

"கவலப்படாதே மகனே.... உன் கோளாறுகளுக்கு தீர்வே இல்லை என்று நினைக்காமல், ஒன் கோளாறுகளுக்கு மட்டுமில்லை - உலகத்தின் கோளாறுகளுக்கே தீர்வு உண்டு என்று நினைத்துப் பழகு. பிரசவ வாதை இல்லாமல், பிள்ளைப்பேறு இல்லை... மனவாதை இல்லாமல், ஞானப் பேறும் இல்லை. இந்த உலகமும் சரி... உலகின் தாவர சங்கமும் சரி... பிரபஞ்சத்துடன் சம்பந்தப்பட்டவை... இதனால்தான் இங்கே இருக்கிற ஒரு சின்னப் பூவைப் பறித்தாலும்... அது எங்கேயோ இருக்கிற நட்சத்திரங்களில் எதிரொலிக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். இப்படி பெளதீக விதிகளால் வெளிமுகமாகப் பார்த்ததை, இந்த பெளதீக விதிகளுக்கு உட்பட்ட உடம்பை, நம் ஞானிகள் உள்முகமாய்ப் பார்த்தார்கள். பனித்துளி, பனையையே பிரதிபலித்துக் காட்டுவதுபோல் நெத்திப் பொட்டின் உள் பகுதியும்

பிரபஞ்சத்தையே பிரதிபலிக்க வைக்கலாம் என்றார்கள். இதற்கு சரியை, கிரியை, யோகம் என்று வழி முறைகளையும் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்."

"திருமூலர் சொன்னதுபோல், 'உடம்பார் அழிந்தால், உயிரார் அழிவர்'.... இந்த உடம்பு, ஒரு கோவில்; ஆன்மா, அந்தக் கோவிலின் தீபம்; உடம்பைப் பேணினால், உள்ளொளி தானாய்த் தோன்றும். ஆகையால், நாளையில் இருந்து, புஜங்காசனம், தனுராசனம், மயிலாசனம், சர்வாங்காசனம், சிரசாசனம் போன்ற லகுவான ஆசனங்களைப் போட்டுப் பழகு. உடம்புக்குப் பயிற்சி கொடுப்பதுபோல், மனத்திற்குப் பயிற்சி கொடுப்பது யோகம் எனப்படும். அதற்கு, இதோ சொல்கிறேன். கேள்...."

"பிரபஞ்சத்துக்கு மூலாதாரமானது ஒளி.... ஒளியின்றி உடம்புய்ய வேறு வழி இல்லை.... இதனால்தான் வள்ளலார் இதை, 'அருட்பெரும் ஜோதி, தனிப்பெரும் கருணை' என்றார். தினமும்... இரவில், குத்துவிளக்கில் தீபமேற்றி.... அதன் முன்னால் உட்கார்.... அந்த ஜோதியையே உற்றுப் பார். அதுதான் 'நீ' என்று எண்ணிப்பார். பிறகு, அந்த ஜோதி, உள்முகமாய் வாய்க்குள் வருவதாக பாவனை செய்.... ஐந்து நிமிடம் வாய்க்குள் நிற்க வைத்துவிட்டு, அந்த ஜோதியை தொண்டை, இருதயம், உந்தி, அடி வயிறு, பிறப்புறுப்பு, குதம் வழியாகக் கொண்டு வந்து - அதாவது ஐந்தாறு நிமிடம் நிறுத்தி, நிறுத்தி, கொண்டு வா.... பின்னர், அதை முதுகுத்தண்டு வழியாக முகுளமான பின் தலைக்குக் கொண்டு வா.... அங்கிருந்து அதை இரண்டு காதுகள், கண்கள், மூக்குத் துவாரங்கள் வழியாய் நெற்றிப் பொட்டிற்குக் கொண்டு வா.... அங்கிருந்து, உச்சந்தலையின் உள்முகப்பில் நிறுத்து... தீபம் எரியட்டும்... தீமைகள் பொசுங்கட்டும்.... ஜோதியின் உள் முகப் பாவனையே, பாவனை போலான மாயையை, வெளிமுகமாக்கி விரட்டும்.... ஆனால், இந்த அப்பியாசத்திற்கு பின்னணியாய் சாந்தி வேண்டும். இந்த சாந்தியையும் பௌதீக விதிகளாலேயே,

செயற்கை வைரம் மாதிரி கொண்டு வரலாம். அதுக்கு இதோ ஒரு வழி...”

“மல்லாந்து படுத்துக் கொள். உடம்பை லகுவாக்கு... இந்த உடம்பில் இருபத்தேழு மையங்கள் உள்ளன. இரண்டு கணுக்கால்கள், முட்டிக்கால் குமிழ்கள், பிறப்புறுப்பு, தொடை முனைகள், உந்தி, இருதயம், நுரையீரல்கள், தோள் குவிப்புகள், முட்டிக்கை குவிப்புகள், கணுக்கை முனைகள், தொண்டையின் மையம், காதுகள், கண்கள், வாய், மூக்குத் துவாரங்கள், நெற்றிப் பொட்டு, உச்சந்தலை ஆகிய இந்த மையங்கள் ஒவ்வொன்றையும், இரண்டு கண்களால் ‘ஓம்’ என உச்சரித்தபடியே ஆறு ஆறு தடவை மானசீகமாக மனதைச் சுற்றவிடு. ஒரு மாதத்திற்குப் பிறகு... என்னிடம் சொல்லு... ஏன் யோசிக்கிறே... சொன்னபடி செய்வியா...?”

சத்யா, அந்தப் பெரியவருக்கே உபதேசியானாள்.

“எல்லாவற்றையும், மொத்தமாய்... அவசர அவசரமாய் சொன்னால் அவருக்கு ஒன்றுகூட வராது...”

பெரியவர் அவளைக் குருவைப் பார்ப்பதுபோல் பார்த்தார். பிறகு, பத்மாசனம் போட்டு உட்கார்ந்தபடியே, சாவகாசமாகப் பேசினார்.

“நல்ல வேளையாய் ஞாபகப்படுத்துனே.... டாக்டர் நித்தியானந்தம் என்ற யோகி சொல்லிக் கொடுத்த இதை - ஞானப் பயிற்சியை செயல்முறையில் விளக்குகிறேன்.... மெய்யப்பா... இப்படி வந்து உட்கார்... நீயும் உட்காரும்மா...”

சத்யாவும், மெய்யப்பனும், அவர் முன்னால் ஜோடியாக உட்கார்ந்தார்கள்.

# 18

பெரியவர் யோகப் பயிற்சியைச் செயல் முறையில் விளக்கிவிட்டுப் போய்விட்டார்.

மெய்யப்பன் எழுந்தான். தலையைக்கூட வாரிக் கொண்டான். குளியலறைக்குப் போய் முகத்தை அலம்பிவிட்டு வெளியே வந்தபோது, சத்யா, கருணை பொங்கச் சிரித்தாள். சிறிதுநேரம், அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். அவள், அவனுக்குப் பயந்தவள்போல் உள்ளே போய், மீண்டும் வெளியே வந்தாள். அவனைப் பார்க்கப் பார்க்க, மேலும் பார்க்கவேண்டும் போலிருந்தது. கழுத்தில் தொங்கிய தாலியை, கழுத்தோடு சேர்த்து, பயபக்தியுடன் பிடித்துக் கொண்டாள். தாலி, அந்த மென்கழுத்தில் முள்மாதிரிக் குத்தியது.

மெய்யப்பனும் வெளியே வந்தான். நாயர் கடைக்குப் பக்கத்திலேயே, சாமி படங்கள், தலைவர் படங்கள், நடிகர் நடிகையர் படங்கள் முதலிய 'பலதர' படங்களை விற்கும் கடை இருந்தது. கையில் தண்டு மட்டும் கொண்ட, தண்டாயுதபாணி படத்தையும், வேலை மார்பில் சாத்தியபடி, பின்புறமாக நின்ற மயிலை அணைத்தபடி, அருள் பொங்கும் கண்களோடு, அபயமளித்த கரத்தோடு விளங்கிய பாலமுருகன் படம் ஒன்றையும் வாங்கிக் கொண்டான். நீண்ட இடைவெளிக்குப் பிறகு, அன்றுதான் மகிழ்ச்சி என்ற ஒரு உணர்வும் இருக்கத்தான் செய்கிறது என்பதை உணர்ந்து கொண்டான்.

அறைக்கு வந்து, இரண்டு படங்களையும் வைத்துவிட்டு, ஊதுபத்தி வாங்காமல்போன தன் முட்டாள் தனத்திற்குத் தலையில் குட்டிக்கொண்டே வெளியே போகப் போனான். அந்தப் பக்கமாக வந்த சத்யாவிடம், 'ஊதுபத்தி இருக்குதா' என்றும் கேட்டு வைத்தான். அவள், அவனை அங்கேயே நிற்கும்படிச் சைகை செய்துவிட்டு, வீட்டுக்குள் வேகமாய் நடந்து, இரண்டு ஊதுபத்திகளைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

மெய்யப்பன் மெய்மறந்து கும்பிட்டான். 'பொய்மை உணர்வுகள் போயின போயின' என்று சொல்லிக் கொண்டே, கண்மூடி, கரங்கூப்பி, கும்பிடக் கும்பிட, அவன் உடலெல்லாம் புல்லரித்தது. முருகன் அவன் தோளை நிமிர்த்துவது போலிருந்தது. அவன் நெஞ்சுள் பூப்போல் புகுந்து, நெருப்பாய் மலர்ந்து பொய்மைகளை எரித்து, சரவணப் பொய்கையாய் மலர்வது போலிருந்தது. இதயப் பொய்கையில், எண்ணக் குமிழிகள் இல்லாதது போலிருந்து. குன்றுதோறும் குடியமர்ந்த ஞான பண்டிதனை, கண்மூடி உள்வைத்து, 'சண்முகக் கடவுளே.... என் சிந்தையில் வந்து உட்காரப்பா....' என்று பலதடவை சொல்லியபடியே, அப்படியே உட்கார்ந்தான்.

திடீரென்று, 'குமார் வந்துட்டார்' என்று குரல்கேட்டுக் கண்விழித்தான். பியூன் முனுசாமி, வழக்கமாய் அட்டகாசமாய் நுழைபவன், பதுங்கி வந்தவன்போல் நின்றான். முருகப் படங்களைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுவிட்டு, கட்டிலில் உட்கார்ந்தான். மெய்யப்பனிடம் பேசினாலும், அவனிடம் பேசாதது போலவே பேசினான்.

"இன்றைக்கு மத்தியானம்... குமார் ஸார் வந்து டூட்டில சேர்ந்துட்டார்... ஒங்க நிலைமையை வாணியம்மா விளக்கிச் சொன்னாங்க.... அவர் அசந்து போயிட்டார். நிலைமை சீரியஸாப் போகுது. இப்போ.... மானேஜர்... எதுக்கு கெடுத்தாலும் விமலாவைத்தான் கூப்புடுறார். அவளும் கொண்டையை ஆட்டிக்கிட்டே போறாள்... வாணிக்கும், மானேஜருக்கும் பயங்கரமான யுத்தம். விவகாரம் மானேஜிங் டைரக்டர் வரைக்கும் போயிட்டு.... விமலா, சிரிக்கச் சிரிக்க... வாணி அழுகுறாங்க.... வாணி, அழ அழ, விமலா, சிரிக்கிறாள். வாணிக்குக்கூட, இங்க வந்து, ஒன்னைப் பார்க்கதுக்கு ஆசை... நீ என்ன சொல்லு வியோன்னு பயம். சரி... அது போவட்டும்... நான் வந்தது வேறு விவரத்தைச் சொல்லுறதுக்கு.... அந்த மானேஜர், ஒன்னை கம்பெல்ஸரி லீவ்ல போகச் சொன்னால் போதுமுன்னு பாஷ்யம் சொன்னதை ஒத்துக்கிட்டது மாதிரிப் போனருல்லா? இப்போ நீ, ஸ்டேட்மெண்ட்டை கிழிச்சதாயும், ஒன்னை ஆபீஸ்ல வச்சுருக்க முடியாதுன்னும்,

எம்.டி.க்கு ரகசியமாய் எழுதியிருக்கானாம். விமலாதான் அதை டைப் அடிச்சாளாம். ஒங்ககிட்ட எத்தனை தடவை வாங்கித் தின்ன நாயி... நீ கொடுத்ததெல்லாம் தின்னுதின்னு.... இப்போ ஒன்னையே தின்னப் பார்க்காள். போனால் போகுதுன்னு கம்முன்னு இருந்த மானேஜரை, இந்த விமலாதான் சீண்டி விட்டாளாம். அவள், ஒன்னைப் பற்றி மானேஜர்கிட்ட தாறுமாறாய் பேசுனப்போ, காபி கொண்டு போன 'வாட்ச்மேன்' நாகரத்தினம் கேட்டுட்டான். இப்போ... எனக்கு மேல... அவனும் குதிக்கான். போற போக்கைப் பார்த்தால், என் கத்திக்கு வேலை இருக்கும் போலுக்கு...."

மெய்யப்பன் எதுவும் பேசவில்லை. நடந்ததை நம்ப முடியாதவன் போலவும், நடக்கப் போவதை நம்புகிறவன் போலவும், அவன் பிரமித்து நின்றான். சிறிதுநேரம் அங்கேயே நின்ற முனுசாமி, "நாளைக்கு வாரேன்..." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். அவனுக்கு அங்கே இன்னும் இருக்க மனமிருந்தாலும் நிலைமை துரத்தியது. அவன் வீட்டுக்குப் போய்தான் அடுப்பெரிய வேண்டும்.

மெய்யப்பன் முருகன் படங்களையே பார்த்தான். கோபத்தோடு பார்த்தான். திடீரென்று, தனக்கு வேலை போய், முருகன்போல் தானும் கோவணம் கட்டிக்கொண்டு, தெருத் தெருவாய் பிச்சை எடுப்பது மாதிரியான ஒரு எண்ணம். பாலமுருகனைப் பார்த்தான். முருகனின் வேல் அவனைக் குத்திக் குடைவது போன்ற ஒரு பயம். அதுவும் நெஞ்சுக்குள்... அவன் கைகளால் மார்பை மூடிக் கொண்டான். மயில் அவன் கண்களைக் கொத்தி கொத்தி, வெளியே இழுப்பதுபோன்ற பிரமை. கண்களை மூடிக் கொண்டான். மயிலுக்கு ஆசனம் கொடுத்த பாம்பு, அவன் உடம்புக்குள் புகுந்து, இதயத்தைக் கடிப்பது போன்ற பயவுணர்வு... லேசான வலி...

மெய்யப்பன் ஜன்னல் பக்கமாய் போய் உட்கார்ந்தான். அதலபாதாளத்திற்கு அந்த ஜன்னலுடன் போகிறான். கூரை இடிந்தது. கைகால்கள் துண்டித்து விழுகின்றன. விமலா

வந்து, அவன் கழுத்தைக் கடிக்கிறாள். மார்பைப் பிளந்து, அவன் ரத்தத்தைக் கோதி, தன் தலையில் தேய்க்கிறாள்.

மெய்யப்பன் உயிர் வாதையில் துடித்தான். முருகப் படங்களை எடுத்து வீசியெறிவதற்காக எழுந்தான். உடனே, வேல் பாயும் என்ற பயம். மயில் கொத்தும் என்ற அச்சம்... அவனுக்கு சத்யாவின் மீதும் பயங்கரமான கோபம் வந்தது. சாமியார் மீதும் ஆத்திரம் வந்தது.... அன்று இரவு அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டதற்காக, பழிவாங்கும் எண்ணத்துடன் இருவரும் போட்ட திட்டமாக இருக்குமோ...?

'இருக்கோ... இல்லையோ... நான் இருக்கக்கூடாது.... முருகனே கைவிட்டபோது உயிர் வாழ்வது அர்த்தமற்றது... கைவிட்டால் கூட பரவாயில்லை. கைவேலால் குத்தும்போது வாழ்வது அபத்தம். முருகா, பந்தயத்துக்கு வாரியாடா.... ஒன்னால என்னைக் குத்த முடியுதான்னு பார்ப்போமா.... நீதான் தோற்கப் போறே.... நான் உயிரோடு இருந்தால்தானே நீ குத்துவே.... செத்திட்டால்.... செத்திட்டால்... நான் தோற்றுச் சாகிறவன் இல்லே... செத்து ஜெயிக்கிறவன்.... பார்க்கலாமா...'

மெய்யப்பன் தாம்புக் கயிற்றை எடுக்கத்தான் போனான். உடம்பை அசைக்க முடியவில்லை. கையை நீட்ட முடியவில்லை. அப்படியே ஜன்னல் சுவரில் சாய்ந்தபடித் தூங்கிப் போனானோ.... மயங்கிப் போனானோ....

காலையில், யாரோ தன்னை உலுக்குவதை உணர்ந்து, கண் விழித்த அவன், குமாரைப் பார்த்தான். இரண்டு மாதத்திற்குப் பிறகு வந்த நண்பனுக்கு, குடிப்பதற்காகவாவது கொடுக்க வேண்டும் என்பதுபோல் கண்கள் நீர் கொட்டின. குமார் அவனை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான். மெய்யப்பன் மெதுவாக முணு முணுத்தான்.

"டேய் குமார்! என் நிலைமையைப் பார்த்தியா....? அன்றைக்கு நீ சொன்னது ஞாபகம் இருக்கா...? 'மெய்யப்பா... நீ இப்டி உட்கார.... உட்கார... ஒரேயடியாய் எழுந்திருக்க முடியாமப் போயிடுவேன்னு' சொன்னே பாத்தியா....? நான்

அப்படியே ஆயிட்டேன். ஒன் நண்பன், மெய்யப்பன்.... பொய்யப்பனாய் போயிட்டான். நீ கூட.... நேற்று வந்தவன்... இப்பத்தானே வந்து பார்க்கிறே.... குமார், எனக்கு சாவு நெருங்கிட்டு... அதுவரைக்கும் நீ பக்கத்துலே இரு. நீ, அதிக நாள் அப்படி இருக்க வேண்டியது இருக்காது...."

மெய்யப்பன் அழவில்லை. குமார் அழுதான். நண்பனைக் கட்டிப் பிடித்து, குழந்தையைத் தாலாட்டுவது போல், அவனை ஆட்டிக் கொண்டே விம்மினான். பிறகு கண்ணீர் அக்கினித் திராவகம் ஆனதுபோல், விழிகள் எரிமலையாய் வெடிப்பதுபோல் வெடித்தன.

"எல்லாம்.... என்னால வந்தது... நீ பிரச்சினையை சொன்னபோது, நான் லேசா எடுத்துக்கிட்டேன். அதோட பட்டால்தான் ஒனக்கு புத்தி வருமுன்னு நினைச்சேன்.... இப்படி புத்தி போகுமுன்னு நினைக்கல... ஒரு வாரத்திற்கு முன்னால... குற்றாலத்திற்கு வந்திருந்த ஒரு சைக்காட்ரிஸ்டை தற்செயலாய் பார்த்தேன். மனோ விகாரங்களைப் பற்றி பேசின அவர்கிட்ட.... உனக்கு வந்த பிரச்சினையை, சிரிச்சுக்கிட்டுதான் சொன்னேன். அவருதான், 'அழ வேண்டிய விவகாரத்திற்கு சிரிக்கிறீங்களேன்னு' சொல்லிவிட்டு, உனக்கு வந்திருக்கிறது 'போபியா'. புற்றுநோயைவிட மோசமானது என்றார். புற்று நோயாவது, உடலைக் கொன்று, உயிரை வாங்கும். இதுவோ, உயிரைக் கொன்று, உடலை வாங்குமுன்னார்.... நேற்று ஆபீஸ்ல எல்லா விபரமும் கேள்விப்பட்டேன்.... இப்போ மொதல்ல கவனிக்க வேண்டியது ஒன் மனநோய்தான். மற்ற விவகாரம் அப்புறம்... நல்லவேளையா, அந்த சைக்கியாட்ரிஸ்டோட அட்ரஸை வாங்கி வச்சிருந்தேன். நேற்று ராத்திரி, அவரைப் போய் பார்த்தேன். ஒன் வாழ்க்கை வரலாற்றை, அற்ப விஷயந் தானேன்னு எதையும் விடாமல், சிறு வயதில் இருந்து இப்போ நான் பேசிக்கிட்டு இருக்கிற இந்தத் தருணம் வரைக்கும்... நடந்த எல்லாவற்றையும்.... நினைவுக்கு வந்ததையெல்லாம் எழுதிக் கொண்டு வரச்சொன்னார்."

"ஓ.... சுயசரிதை எழுதணுமா.... நான் தலைவர்தான் போலுக்கு..."

"பினாத்துறதுக்கு நேரமில்ல... ஏற்கெனவே, நீ ரெண்டு மூன்று கதை எழுதிப் பழக்கப்பட்டவன்தானே.... எழுது. நீ, எழுதுறதையே, நாவலாய் போடலாம்.... ஆமாண்டா.... நிஜமா சொல்றேன்.... ஆனானப்பட்ட சார்லஸ் டிக்கன்ஸே இந்த மாதிரி நிலையில் இருந்தவர்தான்...."

மெய்யப்பன், குமாரை வியப்போடு பார்த்தான். முருகனின் படங்களைக் குற்றவுணர்வுடன் நோக்கினான். 'அவசரம் அச்சத்தின் அறிகுறி.... அவசரம் என்பது வேறு... வேகம் என்பது வேறு...' என்று சொல்வதுபோல், பாலமுருகன் அபயக் கைகாட்டிச் சிரிக்கிறான். நிதானத்தின் வேகன்போல், பழனியாண்டி பார்க்கிறான்! மெய்யப்பன், தூசி படிந்த நாற்காலியை, மேஜைப் பக்கமாய் இழுத்துப் போட்டுக் கொண்டு, பேனாவை எடுத்துக் கொண்டே, உட்கார்ந்தான். குமார், தன்னோடு தயாராகக் கொண்டு வந்திருந்த அரைக்குயர் வெள்ளைக் காகிதத்தை மேஜையில் வைத்தான்.

மெய்யப்பன் எழுதத் துவங்கினன். துவக்கத்தில், எதுவுமே வரவில்லை. திடீரென்று எண்ணங்கள் பொங்கின. இளமைக் காலத் தாபங்களும், கோபங்களும், பேனா முனை வழியாக, தாளில் எழுத்துக்களாயின. எழுத்து வேலையில் ஈடுபட்டுக் கொண்டே, அவன் அவ்வப்போது, தன் தலையைக் குத்திக் கொண்டான். தானாகச் சிரித்துக் கொண்டான். மேஜையை அடித்துக் கொண்டான்.

குமார், அவ்வப்போது, அவன் தோளை ஆதரவாகப் பற்றிக் கொண்டான்.

பள்ளிக்கூடத்தில் கட்டுரைப் போட்டியிலும், ஒரு நியாயமான இலக்கியச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியிலும், எடுத்த எடுப்பிலேயே முதல் பரிசுகள் பெற்ற அவன், இப்போது வாழ்க்கைப் போட்டியில் தோற்றுப் போனதால், மீண்டும் எழுதுகிறான். தோல்விகள், வெற்றியின் படிக்கட்டுகள் என்பார்கள். ஆனால், தன்னைப் பொறுத்த அளவில், வெற்றிகளே, தோல்விகளின் படிக்கட்டுகளாய் போனதை அறிந்தவன்போல் எழுதினான். எண்ணங்களே, எழுத்துக்களாக எழுதிக் கொண்டேயிருந்தான்.

# 19

செயற்கைத்தனத்திற்கு அப்பால் இருக்கவேண்டும் என்பதுபோல், சென்னை நகருக்கு சற்று வெளியே, அறிவார்ந்த அமைதி நிலவுவது போன்ற பகுதியில் இருந்தது அந்த கிளினிக். சுற்றிலும், அசோக மரங்களும், தென்னையுமாய் பின்னிக் கிடந்த அந்த இடத்திற்குச் சென்ற மெய்யப்பனும், குமாரும், கிளினிக்கில் வேலை பார்க்கும் ஒருவர், வேலியைத் தாண்டிய குரோட்டன்ஸ் செடிகளை உள்ளே இழுத்துப் போடுவதையும், இன்னொருவர், ஏற்ற இறக்கத்தோடு உள்ள சில பூச்செடிகளையும், புதர்க் கொடிகளையும், கலைக் கண்ணோடு கத்தரித்து விடுவதையும் பார்த்தார்கள். பார்த்துக் கொண்டே நடந்தார்கள்.

வரவேற்பு அறையில், 'வாங்கோ மிஸ்டர் குமார்' என்று அழைத்தவரைப் பார்த்ததும், மெய்யப்பன் அசந்து விட்டான். சைக்கியாட்ரிஸ்ட் என்றால், சுழித்த புருவத்தோடு, சிந்திக்கும் தலையோடு, பைப் கொண்ட வாயோடு, ஒவ்வொருவரையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் மனிதர் என்று நினைத்தவனுக்கு, தன்னைவிட ஐந்து வயதுதான் அதிகமாய் உள்ளவர் போலவும், எதுவுமே தெரியாத அப்பாவி போலவும், கலகலப்பாக இருந்தவரைப் பார்த்ததும், சிறிது ஏமாற்றங்கூட வந்தது. இவரிடமா குணப் பிச்சை கேட்கப் போகிறோம் என்பதுபோல் வெட்கப்பட்டுக் கொண்டான். மெய்யப்பனும், குமாரும் உட்கார்ந்தார்கள்.

"நல்லா உட்காருங்கோ... மிஸ்டர். மெய்யப்பன். ஐ அம் ரகுராமன்.... சைக்கியாட்ரிஸ்ட்."

சிறிது நேரம் மௌனம். ஒருவர் முகத்தில், ஒருவர் அந்தரங்கமாக எதையோ தேடுவது போன்ற சங்கடமான-சந்தேகமான பார்வைகள். மெய்யப்பனுக்கு அப்படியே, அங்கேயே உயிர் போனால் தேவலை என்பதுபோல்

இருந்தது. உடல் கோளாறுகளுக்குக்கூட டாக்டரிடம் போகாதவன், கடைசியில் 'இந்தக்' கோளாறுக்கு வர வேண்டியதிருக்கிறதே என்று நினைத்து, வெளியே பார்த்தான். ரகுராமன் நிதானமான குரலில், "சரி.... நான் சொன்னது மாதிரி எழுதிக் கொண்டு வந்திருக்கங்கல்லா.... கொடுங்க மிஸ்டர்... குமார்! அவரே கொடுக்கட்டும்...." என்று சொன்னபோது, மெய்யப்பன், கையாட, மெய்யாட, கண்ணாட, தான் எழுதிய காகிதக்கட்டை அவரிடம் நீட்டினான்.

இதற்குள், உள்ளறையில் இருந்து, இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் வந்தாள். கருணையே உருவானது போல் இல்லையானாலும், கருணையால் உருவாக்கப் பட்டவள்போல் தோன்றிய அந்தப் பெண், 'பேஷண்ட் யார்' என்பது மாதிரி, மெய்யப்பனையும், குமாரையும் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு, கண்டுபிடிக்க முடியாதவள்போல் கணவனைப் பார்த்தாள். அவர், அவளை அறிமுகம் செய்து வைத்தார்.

"மீட் மை ஒய்ப். இவங்க, என்னோட கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட். இவரு, மிஸ்டர் குமார். இவர், மிஸ்டர் மெய்யப்பன். இவருக்குத்தான்...."

அவள் மெய்யப்பனைச் சிறிது உற்றுப் பார்த்தாள். அவன், சங்கடப்பட்டவன் போல் கூரையைப் பார்த்தான். 'போயும் போயும், ஒரு இளம் பெண்ணிடம்'..... மெய்யப்பன், மீண்டும் அவளைப் பார்க்க, அவள், "இதெல்லாம் சகஜம், மிஸ்டர் மெய்யப்பன். ஒங்களுக்கு வந்தது நாளைக்கு எனக்கும் வரலாம். என் ஹஸ்பெண்டுக்கும் வரலாம்.... மனநோய், தலைவலி வயிற்றுவலி மாதிரி.... யாருக்கு வேண்டுமானாலும்... எப்போது வேண்டுமானாலும் வரலாம்... இதில் வெட்கப்பட ஒன்றும் இல்லை" என்று சொன்ன போது, பள்ளிக்கூடத்தில், சரஸ்வதி பூஜையின் போது, 'ஓம் சரஸ்வதி தேவி நமா.... ஸர்வரோக பாப நிவாரணி நமா....' என்று சொன்ன சொல்லும், சொல்லுக்குரியவளின் படமும் நினைவுக்கு வந்து, அவன் நெஞ்சை நெகிழ வைத்தது. அந்தப்

பெண்ணில், தாயின் தரிசனத்தைக் கண்டவன்போல் குழைந்தான்.

ரகுராமன் சுறுசுறுப்பாக எழுந்தார். "நாங்க இரண்டு பேரும்.... அதோ அங்கேபோய் இவர் எழுதிக் கொடுத்ததை... ஸ்டடி பண்றோம்.... இங்கேயே இருங்க.... இல்லன்னா.... இந்த காம்பவுண்ட்டுக்குள்ள சுற்றி வாங்க.... அரைமணி நேரம் கழித்து வாங்க...."

"இல்ல ஸார்.... இங்கேயே உட்கார்ந்திருக்கோம்."

ரகுராமனும், அவர் மனைவியும், வீட்டுக்கு வெளியே தனித்துக் கட்டப்பட்டிருந்த ஒரு சின்னக் கட்டிடத்திற்குள் நுழைந்தார்கள். மெய்யப்பனும், குமாரும் அங்கே உட்கார முடியாமல் வெளியே வந்து, அங்குமிங்குமாக உலாவினார்கள். அரைமணி நேரமாகியும், அவர்களைக் கூப்பிடவில்லை. ஒரு மணி நேரமாகியும் கூப்பிடவில்லை. மெய்யப்பனுக்குப் பயமெடுத்தது. ஒருவேளை, தனக்கு வந்திருப்பது தீர முடியாததோ...? தீர முடியாது என்றால், ஐந்து நிமிடத்தில் அவனை அனுப்பித் தீர்த்திருப்பார்களே....

இருவரும் அந்தத் தனித்த அறைப் பக்கமாக வந்தார்கள். உள்ளே கணவனும், மனைவியும், தொழில் ரீதியில் எதையோ ஆதரித்தும், மறுத்தும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது உள்ளே பேசுவது, வெளியே அவர்களுக்குக் கேட்டது. இருவரும் சூடாகி இருப்பதுபோலவும் குரல்கள் காட்டின.

"இல்ல ரமா.... இது சிசோபிரினியாவா **(Schizophrenia)** இருக்க முடியாது.... இதுல... நோயாளி அப்படியே நம்புவார்... நாயைப் பார்த்ததும் கடிக்கிற மாதிரி தெரிந்தால், கடிக்கிற மாதிரியே வலிக்கும். கடிக்கிற மாதிரியே நம்புவார்.... தரை, பாதாளத்துக்குப் போறது மாதிரி தெரிந்தால், நோயாளியும் பாதாளத்துக்குள்ள சிக்குறது மாதிரி நம்பித் தவிப்பார். அவருக்கே சில சமயம், அந்த உணர்வு போலின்னு தெரிந்தாலும், அந்த உணர்வு வரும்போது, அதை அப்படியே நம்புவார்.... இந்த 'டெலூஸன்ஸ்' மெய்யப்பன் கிட்ட

இல்லை.... இவருக்கு இந்த மாதிரியான உணர்வு வரும்போது, அந்தச் சமயத்திலயும் அது போலின்னு தெரியுது. அது வேண்டாத நினைவுன்னும் தெரியுது... அறிவு அழிக்கப் படாமலே, அதுக்கு மேலதான் பிரமைகள் படர்கின்றன...."

"அப்படின்னா.... கம்பல்ஸிவ் நெரோஸிஸ்னு சொல்றீங்களா... அதாவது ஷேக்ஸ்பியரோட லேடி மேக்பத்துக்கு வந்தது மாதிரி.... ஸாரி.... அவளுக்கு வந்தது சிசோபிரினியா **(Schizophrenia)** இவருக்கு வந்திருப்பது வேற...."

"கரெக்ட்.... ஸ்கிஸோபிரினியா கேஸ்ல.... ஒன்றுக்கும் இன்னொன்றுக்கும் வித்தியாசம் தெரியாது. கம்பல்ஸிவ் நெரோஸிஸ்ல தெரியும். மெய்யப்பன், தண்ணீரைக் குடிக்கும் போது, அது தண்ணீர்னு தெரிந்து.... குடிக்கவும் செய்கிறார். அதேசமயம், அக்கினித் திராவகம் நினைப்பு வருது— ஒன்றைப் பார்த்து, இன்னொன்றை இணைக்கிறார். இந்த இணைப்புக்கள் விபரீதமானவை. இவர் சிறு வயதிலேயே, வில்லுப்பாட்டு பாடியிருக்கார்... கதை எழுதியிருக்கார்... இயல்பிலேயே கலைப்போக்கு உள்ளவர்.... சின்ன வயதிலேயே அம்மா இறந்ததாலயும்.... மற்றதாலயும்.... பீலிங் ஆப் இன்செக்யூரிட்டி.... பயப்பிராந்தி ஏற்பட்டிருக்கு.... அடுத்தடுத்து... இது சப்கான்ஷியஸ் மைன்ட்ல வலுப் பட்டுட்டு.... பயம், கற்பனையோடு கலந்தால் என்ன ஆகும்? கற்பனை விதவிதமான பயங்கரங்களைக் கற்பித்து, பயங்கள் கற்பனையைப் பெருக்கிடும். அதிலும் கலைப்போக்கு உள்ளவருக்கு, பயம் பிடித்தால், கற்பனை பயம் சிறகடித்துப் பறக்கும்.... இதுதான் இவரோட கேஸ்...."

"இன்னும் எனக்கு... இது சிசோபிரினியா **(Schizophrenia)** மாதிரிதான் தோணுது. பட்.... இப்போ நீங்க பாஸ்.... ஹஸ்பெண்ட் அல்ல.... எதிர்த்துப் பேச.... ஓ.கே. என்ன சிகிச்சை செய்யலாம்... பிஹேவியர் தெராபி கொடுக்கலாமா...?"

"தேவையில்ல.... ஹிப்னாடிஸ் முறை போதுமுன்னு நினைக்கேன்...."

"அது அவுட் ஆப் டேட்டுன்னு தெரிந்து..."

"மெய்யப்பன்.... கோப்பரேட்டிவ் பேஷண்ட் மாதிரி தோணுது.... அவரோட உணர்வுகளுக்கு வெளிப்பாடு கிடைத்தால்.... சரியாயிடுவார்னு நினைக்கேன். ஏன்னா.... இயல்பிலேயே எதையும் நம்புறவர்.... நம்பிக் கெட்டவர்.... நாம் சொல்றதை நம்பியாவது குணமாகட்டும்...."

ரகுராமன், மெய்யப்பனைக் கூப்பிடுவதற்காக எழுந்த போது, அவனும், குமாரும் ஜன்னல் பக்கத்தில் இருந்து திருட்டுத்தனமாக நழுவப் பார்த்தார்கள். ரகுராமன், குரல் கொடுத்தார். ரமாவும், எழுந்து பார்த்தாள்.

"பார்த்ததினால தோசமில்ல.... வாங்கோ...."

வந்தார்கள். வந்து நாற்காலியில் உட்கார்ந்தார்கள். ரகுராமன், மெய்யப்பன் எழுதிய காகிதங்களைப் புரட்டிக் கொண்டே, "மிஸ்டர் மெய்யப்பன், தண்ணீரைக் குடிக்கும் போது, ஒங்களுக்கு அதுவே, அக்கினித் திராவகமாய் மாறிடுறது மாதிரி தோணுதா, இல்ல.... அக்கினித் திராவகத்தோட நெனப்பு வருதா....?"

மெய்யப்பன், நாற்காலி முனைவரைக்கும் நகர்ந்து உட்கார்ந்து கொண்டே, தட்டுத் தடுமாறிப் பேசினான்.

"என்னோட நிலைமை.... என் எதிரிக்குக்கூட வரப்படாது ஸார்.... முழுப் பைத்தியமுன்னால், பரவாயில்லை.... பைத்தியமாகாமலே, பைத்தியக்கார உணர்வுகளை அனுபவிக்கிறேன்.... அதாவது, ஒரு பைத்தியத்தை, ஒரு சராசரி மனிதன் பார்க்கிறது மாதிரியான இரண்டு வித உணர்வுகள். பாம்பு, தவளையின் உயிரைக் கொல்லாமல், உடம்பைச் சிறுகச் சிறுகத் தின்கிறது மாதிரியான நிலைமை. பாம்பாயும் இருக்கேன்.... தவளையாயும் இருக்கேன்.... பல்லியாயும் கொதிக்கேன்... பூச்சியாயும் தவிக்கேன். உங்களாலயும் என்னைக் குணமாக்க முடியாட்டால், நான் உயிரோடு இருக்கதுல அர்த்தமில்ல..."

"அழாதீங்க... மிஸ்டர் மெய்யப்பன்... நீங்க எதுக்காக உயிர் விடணும்...? உங்கள் வாழ்க்கையில் அர்த்தமில்லன்னு ஏன் நினைக்கணும்? அப்படியே வச்சிக்கிட்டாலும் வாழ்றவங்க எல்லாம் அர்த்தத்தோடயா வாழ்றாங்க? சுய இரக்கம் வேண்டாம் மிஸ்டர். என்னால உங்களை நிச்சயம் குணமாக்க முடியும்.... உங்களோட இந்த நிலைமைக்கு, இந்த சமூக அமைப்பு முக்கால் காரணம்... நீங்க வெட்கப்பட வேண்டியதில்ல.... ஒங்களுக்குச் சின்ன வயதிலேயே... பாதுகாப்பு இன்மை உணர்வு ஏற்பட்டுட்டு... அடி மனதில் வேர்விட்டு, வேரை வெட்டிட்டால்.... மரம் விழுந்திடும்... டோன்ட் ... ஒர்ரி..."

குமார், ரகுராமனிடம், முழு விபரமும் சொல்ல நினைத்து, சொன்னான்: "தலையிடுறதுக்கு மன்னிக்கணும் டாக்டர்... இவன் ரொம்ப உறுதியான ஆளாய் இருந்தவன் ஸார். மூன்று மாதத்துக்கு முன்னால வரைக்கும்... துணிச்சலுக்குப் பேர் போனவன். நீங்க சொல்ற பாதுகாப்பு இன்மை உணர்வு அவனுக்குக் கிடையாது.... இன்னும் சொல்லப்போனால், நாங்கெல்லாம் இவனோட பாதுகாப்பைத் தேடுவோம்.... எல்லாம், விமலா.... வாணி... லேடீஸால வந்த வினை..."

ரகுராமன், புன்னகைத்தபடியே, "மிஸ்டர் குமார்... எனக்கு ஒரு உதவி செய்யறீங்களா...?" என்றார்.

"சொல்லுங்க ஸார்..." என்றான் குமார்.

"பேசாமல் நீங்க என் நாற்காலியில் உட்காருங்க... நீங்களே சிகிச்சை கொடுங்க..."

ரமா, கலகலன்னு சிரித்தாள். பிறகு, கணவனைக் கண்டிப்பதுபோல் பார்த்தாள்.

குமார், திருட்டுத்தனமாகச் சிரித்துக் கொண்டே, அவரைச் சங்கடத்தோடு பார்த்தான். பிறகு, "ஸாரி ஸார்... அப்நார்மலாய் நடந்துக்கிட்டேன்" என்றான்.

ரகுராமன் அவன் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க நினைத்தார். "நானும் ஜோக்தான் அடிச்சேன்; நீங்க அப்நார்மலாய் நடந்துக்கல... நடந்தாலும் தப்பில்ல.... மனோதத்துவத்தின் அடிப்படை விதியே... 'தி நார்மல் திங் இஸ். எவரிபடி இஸ் அப்நார்மல்'... என்பதுதான். ஒவ்வொருவரும் மாமூல் நிலைக்கு வித்தியாசமானவங்க என்பதுதான் மாமூல் விதி. அதை விடுங்க... மெய்யப்பன் உறுதியானவர்னும், கலகலப்பானவர்னும் சொன்னீங்க... சந்தோஷம்... பட் நீங்க நம்புற அந்த உறுதி, ஆண்மைக் குறைவானவன்... நாலுபேர்கிட்ட, செக்ஸ் சமாச்சாரங்களைப் பேசுறது மாதிரி.... தாழ்வு மனப்பான்மையுள்ளவன், எல்லாரையும் விரட்டுறது மாதிரி.... புரியுதா...? ஹிட்லர், ஒங்களுக்கு ஒரு அராஜகவாதி... ஆனால், மனோதத்துவப்படி, பயந்தாங்கொள்ளி. அவன் ஆஸ்திரியத் தெருக்களில், இளம் வயதில் பட்ட கஷ்டங்களால், பயந்தாங்கொள்ளியானவன்.... அடிமனதில் பயப் பிராந்தி அப்பியவன்.... பயவாதி, பயங்கரவாதியாய் மாறலாம்... செக்ஸ் பர்வர்டாய் மாறலாம்... விமலா மாதிரி, மனச்சாட்சி இல்லாத சேடிஸ்டாய் மாறலாம்.... மெய்யப்பன் ஜென்டில்மேன்... அதனால... இப்படி மாறிட்டார். எத்தனையோ பேருக்கு காதல் தோல்வி வந்திருக்கு.... குடும்பத் துரோகம் நடந்திருக்கு... எல்லோரும் மெய்யப்பனாவா மாறியிருக்காங்க...? ஓ.கே. கிளாஸ் எடுத்தது போதும். ஹிப்னாடிஸ் சிகிச்சை கொடுக்கப் போறேன்... நீங்க வெளியில போய் உலாத்துங்க.... இல்லன்னா வரவேற்பு அறையில் போய் உட்காருங்க..."

குமார், இருக்கையைவிட்டு எழுந்துகொண்டே, ரகுராமனின் மனைவி, ரமாவைப் பார்த்தான். அவள், கணவனைவிட, புத்திசாலி மாதிரித் தெரிந்தது. எதையும் சந்தர்ப்பத்திடம் விடத் தயாராக இல்லாதவன்போல் பேசினான்: "அம்மா.... ஏதோ.... வேற சிகிச்சை கொடுக்கலா முன்னும், ஹிப்னாடிஸ் பத்தாம் பசலின்னும் சொன்னது மாதிரி.... ஸாரி.. ஸார். சும்மா, ஒங்களுக்கு ஞாபகப் படுத்தினேன்... அவ்வளவுதான்..."

ரமா, கணவனின் உணர்வை போற்றுபவள் போலவும், அவரது 'ஈகோ' பாதித்து, தாழ்வுணர்வு அடி மனத்திற்குப் போய், தனக்கு இல்லறத் துன்பம் தரலாகாது என்று நினைத்தவள் போலவும், சற்று கோபமாகவே பேசினாள். "நீங்க... இப்பதான் அப்நார்மலாய் நடந்துக்கிறீங்க... மிஸ்டர் குமார்.... அதனாலதான், வரவேற்பு அறையிலேயே உங்களை உட்காரச் சொன்னது... புரியாத விஷயங்களை தெரியாமல் கேட்டு, தெரிந்தது மாதிரி பேசுறது.... ஒருவித அப்நார்மல் போபியா.... இவரு... எத்தனையோ கான்பரென்ஸ், மீட்டிங்ஸ் போனவர்.... நான் ஆப்டர் ஆல் சைக்காலஜில ஒரு எம்.ஏ."

ரகுராமன், பெருமிதத்துடன் மனைவியை அதட்டினார். "நீதான்... இப்போ அப்நார்மலாய் நடந்துக்கிறே... ரமா....! மிஸ்டர் குமாரோட கவலையை நாம் புரிஞ்சுக்கணும்... மிஸ்டர் குமார்! அவங்க சொன்னது பிஹேவியர் திராபி. அதாவது... இவரோட ஒவ்வொரு பிரமையையும் நினைக்கச் சொல்லி... அந்த நினைப்புல அவர் தவிக்கும்போது, சிகிச்சை கொடுப்பது... அவர் கையில் காலில் லேசாகக் குத்தியோ... அல்லது விரும்பத்தகாத சத்தத்தை எழுப்பியோ.... 'ஸ்டாப் ஸ்டாப்' என்று சொல்லி அந்த எண்ணத்தை நிறுத்தலாம். இதனால... அந்த அரக்கத்தனமாக எண்ணம், விரும்பத்தகாத செயலோடு இணைக்கப்பட்டு, அது பிடித்து வைத்திருக்கும் நல்ல உணர்வு தனிமையாகும். இது மாடர்ன் முறை... விஞ்ஞானப் பூர்வமானது... நான் கொடுக்கப் போறது, வேற மாதிரியானது... அது பலிக்காட்டால், இந்த முறையை பயன்படுத்தலாம். இப்போ சில டெக்னிக்கல் காரணங்களுக்காக அதைக் கொடுக்க விரும்பல.... மொத்தத்துல, 'எப்போ குணமாக்குவிங்க'ன்னு கேளுங்க... எப்படின்னு கேளாதிங்க...."

குமார், தழுதழுத்த குரலில் மன்னிப்பை மன்றாடினான். "ஸாரி ஸார்.... எனக்கு பொறுமையாய் விளக்கிட்டிங்க... உண்மையிலேயே நீங்க பெரிய மனிதர்... வித்தியாசமானவர்...."

"வயசாயிட்டுன்னு சொல்றீங்களா...? இல்ல அப் நார்மல் என்கிறீங்களா...?" ரகுராமன் மோகனமாகச் சிரித்தார்.

குமார் சங்கடத்தோடு சிரித்தான். சங்கோஜத்துடன் ரமாவைப் பார்த்தான். அவள் 'இது சகஜம்' என்பதுபோல் புன்னகை வீசினாள். ரமாவும், குமாரும் வெளியேறினார்கள். ரகுராமனும், மெய்யப்பனும் அந்த அறையில் தனித்து விடப்பட்டார்கள்.

மெய்யப்பனைக் குணப்படுத்த முடியுமா என்று அந்த மனோதத்துவ நிபுணர்களும், சந்தேகத்தில் தவிப்பது குமாருக்குப் புரியவில்லை.

## 20

ரகுராமன், மெய்யப்பனைக் கருணை ததும்பப் பார்த்தார்.

சாம்பல் நிறத்தில், நீறுபூத்த கண்களுடன், எந்தவித இயக்கமுமின்றி, பிரிந்திருந்த உதட்டோடு, குழிவிழுந்த கண்களோடு, தாடையை மறைத்த தாடியுடன், குழைந்த உடம்போடு, குச்சிக் கைகால்களோடு, நாற்காலியில் சாத்தி வைக்கப்பட்ட பிணம்போல் உட்கார்ந்திருந்த மெய்யப்பனைப் பார்த்ததும், அவருக்கும், தொழிலை மீறிய மனிதாபிமான உணர்வுகள் அதிகமாயின. "எழுந்திருங்கள்... மிஸ்டர் மெய்யப்பன், அதோ அந்த சாய்வுப் படுக்கையில் போய் படுங்கள்" என்றார்.

யந்திரமயமாய் எழுந்த மெய்யப்பன், அப்போதுதான் அந்த அறையைப் பார்த்தான். பச்சை வண்ணம் தீட்டிய சுவர், மேஜையைச் சுற்றிய நாற்காலிகளையும் சாய்வுப் படுக்கையையும் அதற்கு அருகே ஒரு நாற்காலியையும் அந்தப் படுக்கைக்கு எதிர்ச்சுவரில் தொங்கிய ஒன்றுக்கு மேல் ஒன்றாய் வரையப்பட்ட பல வட்டக்கோடுகளையும்,

மையத்தில் ஒளிக் கதிர்களைப்போல், ஒருவித 'மூவ்மெண்டைக்' காட்டும், சரஞ்சரமான நுண்ணிய கோட்டுக் கற்றைகளையும் பார்த்தான். அந்த அறையில், இவை தவிர, வேறு எதுவும் இல்லை. கிழக்குப் பக்கமாக இருந்த ஜன்னலுக்கு திரைச்சீலைபோல், மாமரங்களும், பூச்செடிகளும் இழைதழைகளோடு மறைப்பாகவும், மறைபொருளாகவும் மின்ன, ஒய்யாரமான காற்று ஒயிலுடன் வீசியது.

ரகுராமன், அவனிடம் படுக்கையைச் சுட்டிக் காட்டினார். மேல் நோக்கி நிமிர்ந்து, படிப்படியாய், சரிந்திருந்த படுக்கை. தூய்மையான வெண்துணி விரித்த படுக்கை. மெய்யப்பன் அதில்போய் படுத்துக் கொண்டான். சின்ன வயதில் தோரண மலையில், சுகபோகக் காற்றில், மலைச்சரிவில் சரிந்து படுத்த நினைவு வந்தது. ரகுராமன் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. அவர் குரல் மட்டும் கேட்டது. தனது இதயத்தில் இருந்தே ஒலிப்பது போல - தன் தலைக்குள்ளிருந்து பேசுவதுபோல்.

"மிஸ்டர் மெய்யப்பன்! உடம்பை தளர்த்துங்க சாயாதிங்க... அப்படியே மல்லாந்து படுங்க.... கைகால்களை தளர்த்துங்க.... ரிலாக்ஸ்... மை ஃபிரண்ட்.... ரிலாக்ஸ். ஆகாயத்தில் உடம்பு மிதப்பது மாதிரி நினையுங்க... அதோ எதிரில் தெரிகிற வட்டத்தைப் பாருங்க.... நுண்ணிய கதிர்கோடுகளைப் பாருங்க... அதுதான் உயிரியக்கம். அப்புறம் வட்டத்திற்கு மத்தியில் இருக்கும் புள்ளி மட்டும் பாருங்க.... இப்போ அந்தப் புள்ளி மட்டுமே தெரியணும்... வேற எதுவும் தெரியப்படாது..... புள்ளி மட்டுந்தானே தெரியுது? குட்... இப்போ ஒலிக்கிற இந்தக் குரல் தவிர, வேறு எந்தக் குரலும் கேட்கக்கூடாது; கேட்காது. சரிதானே.... குட்..... இப்போ.... நான் பத்துவரைக்கும் எண்ணுவேன். எண்ணி முடிப்பதற்குள், உங்கள் கண்கள் மூடும். பேரமைதியான உணர்வு வரும். பாதி மயக்க நிலையில் இருப்பிங்க.... ஓ.கே.... ஒன்.... டு.... திரி.... போர்... பை... சிக்ஸ்..."

மெய்யப்பன், உடலும் விலகி, உள்ளமும் விலகி, தனித் தனியாய் ஆனதுபோல் படுக்கையில் மிதந்தான். அவன் கண்கள் மூடின. உடம்பு அசைவற்றுக் கிடந்தது. ஞானிகள் தேடிய மெய்ஞ்ஞான தூக்கம் போன்ற பெருநிலை. மனம் மரித்துப் போனது போன்ற மரணநிலை. சாந்தியின் சந்திப்பு போன்ற தவநிலை.

ரகுராமன், நிதானமான குரலில், ஆணையில்லாத, அன்புக் கட்டளையோடு பேசினார்: "மெய்யப்பன், உங்க வீட்டுக்கு வெளியே, அந்த சொறி நாயை இப்போது பார்க்கிறிங்க... அது என்ன பண்ணுது...?"

திடீரென்று மெய்யப்பனின் கால் கைகள் ஆடின. உதடு துடிக்கக் கத்தினான். வயிறு குலுங்க அழுதான். பயம் ஒலிக்க அரற்றினான். "அந்த நாய்... என் வயிற்றைக் கீறுது... என் குடல் சரியுது.... சரிந்த குடலை கௌவிக்கிட்டு நடக்குது... நான் வயிற்றைப் பிடிச்சுக்கிட்டே..... நாய் பின்னால போறேன். நாய், என்னை இழுத்துக்கிட்டே, போகுது... அய்யோ என்னை காப்பாற்ற ஆளில்லையா.... அய்யோ... குடலை இழுக்குதே.... யாருமே இல்லையா.... என்னைக் காப்பாற்ற யாருமே இல்லையா.... அய்யோ.... நாய் குடலு.... நாய்... நாய்... யாருமே இல்லியா...."

"ஏன் இல்லாமல்... நான் இருக்கேன், மெய்யப்பன். கத்துனதுபோதும், இப்போ ஆபீஸ்ல வேலை பார்க்கிங்க. அங்கே ஏதாவது ஏமாற்றம் ஏற்பட்டிருக்கலாம்... டக்குன்னு உங்க ஏமாற்றத்துக்குக் காரணமான ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுங்க...."

மெய்யப்பன், நெளிந்தான்.

"உம்... சொல்லுங்க..."

"சொல்றேன்.... டீக்கடை பக்கம் நிற்கிறேன். வாணியோட தோளுல... கைபோட்டபடி, மானேஜர், கார்ல போறார்...."

"அப்போ.... நீங்க எப்படி துடிச்சிங்க....? உங்க மனம் எப்படிக் கூப்பாடு போட்டது.... அதை இப்போது வார்த்தைகளாய் வெளிப்படுத்துங்கள்..."

"அக்கா... தங்கையில்லையேன்னு தவிச்சவன் நான்... நண்பர்கள், தங்களோட அக்கா தங்கைகளைப் பற்றி பேசம்போது, நமக்கும் அப்படி ஒருத்தி இல்லையேன்னு ஊமையாய் அழுதவன் நான்... அந்தச் சமயத்தில், 'தம்பீ'ன்னு அழைத்தே... என் உடம்புக்கு ஒண்ணுன்னா... உடனே வீட்ல இருந்து மருந்து கொண்டு வருவே.... உன்னை... கூடப்பிறந்த அக்காளாய் நினைத்தேன்.... அக்கா என்ற வார்த்தையை, உயிர்விட்டுச் சொன்னேன்.... அப்படிப்பட்ட என்கிட்ட நடித்து, மானேஜர், தகாதபடி நடக்குறதாய் சொல்லி, நீ தகாதபடி நடந்துட்டியே.... நீ எப்படியும் நட... என்னை ஏன் தம்பின்னு சொன்னே.... வாணியக்கா.... மோசம் பண்ணிட்டியே.... அக்கான்னு ஆசை காட்டி..... நான் பாசத்தில் குழையும்போது, நீ வேஷத்தை மாத்திட்டியே.... உன்னை கொலை பண்ணணும். ஒன்னை... துண்டு துண்டாய் வெட்டணும்... ஒன் பிணத்தை நாய் கடித்துத் தின்னணும். நீ அக்கா இல்ல... அரக்கி.... என்னைப் பைத்தியமாக்கணுமுன்னு பகல் வேடம் போட்ட நடிகை.... அய்யோ... ஏமாந்துட்டேனே... ஏமாத்தப்பட்டேனே...."

"போதும் மெய்யப்பன், இந்த வாணி மட்டுந்தானா உங்களை ஏமாற்றினாள்? வேற யாரும் உண்டா...?"

"உண்டு.. இவளைவிட மோசமானவள் உண்டு.... விமலா... விமலா...."

"சரி.... அவளால் ஏமாந்த சம்பவத்தைச் சொல்லுங்க...."

"விமலா.... ஒன்னோட கடற்கரையில் பேசினேன்... ஒரே சாப்பாட்டைச் சாப்பிட்டோம். தொட்டுப் பழகினோம்... ஒன்னை வேலையில் சேர்த்தது நான்...."

"இருக்கட்டும்.... மெய்யப்பன், விமலா படகுப் பக்கம் இருக்காள். ரவி, அவளோடு நெருக்கமாய் இருக்கான். நீங்க .... இப்போ.... இதோ பார்க்கிங்க.... கத்துறிங்க.... புலம்புறிங்க... எப்படி.... எப்படி?"

"படகுப் பக்கம்.... ரவியோட இடித்துக் கொண்டு இருக்கிறாள்.... என்னை பித்துக்குளின்னு சொல்றாள்....

இவ்வளவு நாளும் என்கிட்ட நடிச்சிருக்காள். என் நல்ல குணத்தை அவள் நடிப்புக்கு மேடையா போட்டிருக்காள். விமலா, உதவி செய்த என்னையா உதறுறே.... ஏறிய ஏணியையா உதைக்கிறே.... உதைத்தால்கூட பரவாயில்லை.... அதை விறகாய் எரிச்சுட்டியே.... ஒன்னை உயிரோட எரிக்கணும்.... எரிக்கணும். ஒன் உடம்பு அணு அணுவாய் நெருப்புல கருகணும்.... நானா பித்துக்குளி? உன் உடம்பையே உயிராய் நினைத்து... அதைத் தொடாமல் புனிதமாய் இருந்த நானா பித்துக்குளி? உதவியவன் பித்துக் குளின்னால்.... உதவி பெற்றவளுக்கு என்ன பேருடி? விவஸ்தை கெட்டவளே.... ஒன்னை அணுஅணுவாய் வெட்டணும்.... கணுக்கணுவாய் துண்டிக்கணும்...."

"போதும் மெய்யப்பன்... இப்போது ஒங்களுக்கு பதினாறு வயது... எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறிங்க.... ஏதாவது ஏமாற்றமான நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கா...."

"ஒண்ணா.... ரெண்டா...."

"மொதல்ல... முக்கியமானதைச் சொல்லுங்க...."

"பத்தாவது படிக்கேன்... எல்லாப் பையன்களும், மத்தியானச் சாப்பாடு கொண்டு வாராங்க... என்னால கொண்டு வர முடியல.... என்னோடு காமாட்சின்னு ஒரு பெண் படிக்கிறாள். எனக்காகப் பரிதாபப்படுகிறது மாதிரி பார்க்கிறாள். காதலித்தாலும் காதலிப்பான்னு நினைக்கேன். என் காலுல செருப்பு கிடையாது. கிழிந்தவேட்டி, பேண்ட் போட்ட பசங்க.... என்னைப் பார்த்து சிரிக்காங்க.... ஒருநாள், என் வேட்டில, பின்பக்கம் கிழிஞ்சு... சதை தெரியுது... ஒருவன், அதை இன்னும் கொஞ்சம் கிழிக்கிறான். இப்போ வேட்டியால் பின்பக்கத்தை மறைக்க முடியல... நான் டெஸ்குக்குக் கீழே.... பாதி உடம்பை மறைக்கிறேன்.... எல்லாப் பையன்களும் சிரிக்காங்க.... வாத்தியார், 'நீயில்லாம், ஏண்டா ஸ்கூலுக்கு வாரேன்னு' கோபமாய் சொல்லிவிட்டு, பலமாய் சிரிக்கிறார். நான், காமாட்சியைப் பரிதாபமாய் பார்க்கேன். அவள், துடுக்கான பொண்ணு.... அவங்களை திட்டப் போறாள்னு நினைக்கேன். ஆனால், அவள்.... அவள்...."

"அழாமல் சொல்லுப்பா...."

"அவளும் சிரிக்காள். விழுந்து விழுந்து சிரிக்காள். காமாட்சி! நீயுமா சிரிக்கிறே.... அதுவும்.... எதையோ பார்த்துக் கிட்டு நிற்கிற மல்லிகாவோட தலையைத் திருப்பி.... என்னைப் பார்க்க வைச்சுட்டு, நீயுமா சிரிக்கிறே.... காலமெல்லாம் நீ என் அருகே இருப்பேன்னு நினைச்சேன்.... என் ஏழ்மை நிலைக்காக, தினமும் நீ வீட்ல அழுதுட்டு அழுத கண்ணோடு பள்ளிக்கூடம் வாரேன்னு நினைச்சேன்.... கடைசியில், நீயுமா... நீயுமா? ஒனக்காக, உன் பரிதாபத்தைப் பெறுவதற்காக வாவது.... ஏழ்மையில் இருக்கணுமுன்னு நினைத்த என்னைப் பார்த்தா சிரிக்கே...."

"போதும் மெய்யப்பா.... இப்போ ஒனக்கு பன்னிரண்டு வயது.... உள்ளூர் பள்ளிக்கூடத்துல ஏழாவது படிக்கிறே.. சடுகுடு விளையாடுறே.... வகுப்புல முதல்ல வாரே.... வயலுக்குப் போறே.... ஏதாவது, கஷ்டமான அனுபவம் ஏற்பட்டுதா... சொல்லுடா கண்ணு..."

"சடுகுடு விளையாடுகிறேன்.... பண்ணையார் மகன் பரமசிவத்தை, அலாக்கா தூக்கி, கோட்டுக்கு அந்தப் பக்கமாய் கொண்டு வாறேன்... அவன் கோபத்துல என்னை அடிக்கான்.... கையைப் பிடித்து திருவுறான்.... 'டேய் விடுடா.... கைவலிக்குது... அப்புறம் வயலுல வேலை பார்க்க முடியாது'ன்னு சொல்றேன். அவன் கேட்கல. முதுகிலயும்... மூக்கிலயுமாய் மாறி மாறி குத்துறான். என் மூக்குல ரத்தம் வருது.... பொறுத்துக்கிறேன்.... ஆனால், என்கிட்ட இருக்கிற ஒரே சட்டையைக் கிழிக்கிறான். ஆத்திரம் வருது.... அவனை மல்லாக்கத் தள்ளுறேன்.... அடிக்க மனசு வரல.. தள்ளிப் போய் நிக்கேன். அவன் அம்மா, வாராள். 'என் மகனை எப்படிடா, அடிக்கலாமுன்னு' சொல்லி, என் தலைமுடியைப் பிடித்து இழுக்கிறாள்... முகத்துலயும்... வயித்துலயுமாய் அடிக்கிறாள்.... அப்போ என் பாட்டி வயலுல இருந்து வாராள்... பாட்டி, பண்ணையார் பொம்பிளையை திட்டுவாள்னு நினைச்சேன். பாட்டிகிட்ட, பண்ணையாரம்மா ஏதோ சொல்றாள். பாட்டி அதுவரைக்கும் அடிபடாத, என் கழுத்துல மாறி மாறிக்

குத்துறாள். 'பண்ணையார் மகனையா.... வயித்துக்குக் கஞ்சி ஊத்துற மகராசன் மகனையாடா... அடிக்கேன்'னு கேட்டு அடிக்காள். அப்புறம் என் முகத்துல, காறித் துப்புறாள். பாட்டியும், பண்ணையாரம்மாவும் போகிறாங்க..... பண்ணையார் மகன், மத்த பசங்ககிட்ட போய் நின்னுகிட்டு என்னை இளக்காரமாய் பார்க்கான். எல்லாப் பசங்களும், என்னைப் பார்த்து சிரிச்சுக்கிட்டே போறாங்க.... பாட்டி திரும்பி வந்து, 'வீட்டுக்கு வந்தியானால், செருப்படி படுவே. எங்கேயாவது ஓடிப்போ'ன்னு சொல்லிட்டுப் போறாள். நான், தனியாய் தவித்து தனியாய் நிக்கேன். அழமுடியாமல் அழுவுறேன். அம்மா, நீ இருந்தால், யாரும் என்னை இப்படி அடிப்பாங்களா? அப்பா, நான் பிறக்கு முன்னாலயே எதுக்காக செத்தே? நீ இருந்தால், பரமசிவம் அடிப்பானா....? பண்ணையாரம்மா மிதிப்பாளா....? அம்மா... அம்மா.... எங்கம்மா போனே...?."

"சரிப்பா, இப்போ ஒனக்கு ஆறு வயசு. அம்மா இருக்காங்க.... அம்மா சம்பந்தமாய் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லு...."

"சாயங்கால நேரம். பாட்டிக்கும், அம்மாவுக்கும் சண்டை. தப்பு..... சண்டைன்னா ரெண்டு பேர் வேணுமே.... சண்டையில்ல. பாட்டி, அம்மாவைத் திட்டுறாள். தாத்தா திட்டுறார். எதுக்குன்னு புரியல... இவ்வளவுக்கும் என் அம்மா, கோழி கூவுறதுக்கு முன்னால வயலுக்குப் போயிட்டு, ஆந்தை அலறுற சமயத்தில வீட்டுக்கு வாரவள்.... அன்றைக்கு அம்மாவுக்கு சுகமில்லை.... வயலுக்குப் போகலன்னு பாட்டி திட்டுறாங்கன்னு நினைக்கேன். திடீர்னு, பாட்டி, அம்மாவை அடிக்காள். அம்மா, அழாமலே வேகமாய் நடக்காள். நான் பின்னால் ஓடுறேன். அம்மா என்னைத் திரும்பிப் போகச் சொல்லுறாள்.... நான் நிற்கேன். ஒரு கல்லை எடுத்து எறியுறாள்... எனக்குக் கோபம் வருது... திரும்பிப் பாராம வீட்டுக்கு வாரேன். அப்புறம், நடு ராத்திரில அம்மாவைத் தூக்கிக்கிட்டு வாராங்க... சேலை முழுதும் நனைஞ்சிருக்கு... தலை முடியில சொட்டுச் சொட்டுன்னு தண்ணீர். அம்மா,

கிணத்துல விழுந்து இறந்துட்டாள். என் அம்மா இறந்துட்டாள். அவளை எல்லோருமாய் சாகடிச்சிட்டாங்க..."

"அப்புறம்...?"

"ராத்திரியோட ராத்திரியாய் அம்மாவை எரிக்கிறாங்க.... நான் ராத்திரில தூங்கும் போதெல்லாம், அம்மா வாராள். மடியில உட்கார வைக்கிறாள். முத்தம் கொடுக்காள்... 'என் ராசா நான் இருக்கையில.... ஒனக்கு என்னடா கவலை....' என்கிறாள். தூக்கம் கலைஞ்சு பார்த்தால் அம்மா இல்லை.... அம்மா... என் அம்மா... என்னை பெத்தவளே... முன்னெல்லாம் நான் தூங்குற சமயத்துல.... வயலுல இருந்து வருவே.... ஒன்னைப் பார்க்க முடியாது.... தூக்கம் கலைஞ்சால்தான் பார்க்கலாம்... இப்போ.... தூக்கம் கலைஞ்சதும் போயிடுறே... தூங்கும்போது வாறே.... ஏன் அம்மா... ஏன் அம்மா.... அம்மா... நான் சொல்றதைக் கேளும்மா.... முன்னை மாதிரி தூக்கம் கலைஞ்ச பிறகு ஒன்னை நான் பார்க்கணும்.... ஆமாம்மா... அதுதாம்மா என் ஆசை..... அம்மா... எங்கம்மா போயிட்டே..... என்னை விட்டுட்டு.... அழவிட்டுட்டு... தனியாய் விட்டுட்டு, அனாதையாய் விட்டுட்டு.... எங்கம்மா போயிட்டே..... அம்மா.... அம்மா...."

"போதுண்டா.... அழுதது போதும்... இப்போ நீ இப்போதைய வயதுக்கு வாரே..... இப்போ நான் கேட்டதோ... நீ பேசியதோ வெளி மனதில் வராது... நான் பத்தில் இருந்து ஒன்று வரைக்கும் தலைகீழாய் எண்ணுவேன்.... எண்ணி முடிப்பதற்குள் கண் விழிக்கணும்... பத்து.... ஒன்பது.... எட்டு.... ஏழு...."

மெய்யப்பன், கண்களைக் கசக்கிக் கொண்டே, எழுந்தான். ரகுராமனைக் கூச்சத்தோடு பார்த்தான்.

"இப்போ எப்படி இருக்கு மிஸ்டர் மெய்யப்பன்?"

"ஏதோ கனவுல இருந்து மீண்டது மாதிரி இருக்கு ஸார்.... பிரஷ்ஷா தோணுது...."

இதற்குள் குமாரும், ரமாவும் அங்கே வந்தார்கள். மெய்யப்பன், குமாரைப் பார்த்து, ஆசிரியரைப் பார்க்கும் அந்தக் காலத்து உயர்நிலைப்பள்ளி மாணவன்போல

செல்லமாகச் சிரித்துக் கொண்டான். ரகுராமன் வெற்றியின் நுழைவாசலுக்குள் நுழைந்தவர்போல் பேசினார்.

"என்ன யோசிக்கிறீங்க மிஸ்டர் மெய்யப்பன்? என்னடா இது.... கொஞ்ச நேரத்துக்கு முன்னால.. இப்படி இருந்தோம். இப்போ எப்படி இருக்கோமுன்னு நினைக்கிங்களா....? குட். பழைய பாதையை திரும்பிப் பாருங்க.... ஆனால், அதுல நடக்காதீங்க.... நான் ஒன்றும் பிரமாதமாய் எதுவும் செய்யல... உங்கள் மன சக்தியை, உங்களுக்கு ஆதரவாய் ஆக்கினேன்.... அவ்வளவுதான்."

"ஒரு மனிதனுடைய மூளையில், ஒவ்வொரு அணுவும்.... சுமார் இரண்டு இலட்சம் தாக்கங்களை, உள்வாங்கக் கூடியது... ஒரு மனிதனுக்கு, ஐம்பது வயதிற்குள், அவன் மூளையில் சுமார் 287 கோடி தாக்கங்கள் ஏற்படுகின்றன. இது சராசரி கணக்கு.... உங்களுக்கு வயது இப்போ இருபத்தாறு. உங்கள் அனுபவத்தை கணக் கெடுத்துப் பார்த்தால், கிட்டத்தட்ட 200 கோடி தாக்கங்கள் - அதுதான் இம்பிரஸன்ஸ் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். இந்த தாக்கங்களுக்கு இடையே, தர்க்கங்கள் ஏற்பட்டால் என்னாகும்? நினைத்துப் பார்க்க முடியுமா? மனோ சக்திக்கு மிஞ்சின சக்தி எதுவும் இல்லை. மனோ வேகத்துக்கு ஈடான வேகம் எதுவும் இல்ல. பார்த்த பொருளையோ.... ஊரையோ... நாட்டையோ, ஒரு வினாடியில் ஐந்தில் ஒரு பங்கு நேரத்தில், மனதுக்குக் கொண்டு வரக்கூடியது மனோவேகம்... அடிமன சக்தியை.... சரியாய் பயன்படுத்தினால், பாரதி சொன்னது மாதிரி, காற்றில் ஏறி, விண்ணையும் சாடலாம்..."

"ஆனால், நீங்க, கஷ்டப்பட்டு, கஷ்டப்பட்டு, கஷ்டத்தையே ரசனையாய் அனுபவிக்கத் துவங்கிட்டீங்க.... நீங்கதான் உலகத்திலேயே அதிகமாய் கஷ்டப்படுகிறது மாதிரி ஒரு நெனப்பு... இது தப்பான எண்ணம்... எல்லோருக்குமே கஷ்டம் இருக்கு.... பிளாட்பார ஜனங்க படுற கஷ்டத்தை விடவா நம்ம கஷ்டம் பெரிசு? அதனால.... கஷ்டம் வந்தால், அதை அனுபவிக்க துணியுங்க.... அதன் காரண காரியத்தை கண்டுபிடித்துப் போராடுங்க.... ஆனால், கஷ்டப்படுறோமேன்னு மட்டும் நினைக்காதிங்க.....

கஷ்டத்தைவிட மோசமானது, கஷ்டப்படுறோமே என்கிற எண்ணந்தான்."

"ஓ.கே. இந்தாங்க டிரான்குலைஸர் மாத்திரைங்க.... தினமும் மூன்று வேளை சாப்பிடுங்க.... இது ஒரு யோகாசன நூல்.... சுவாமி சிவானந்தா எழுதியது. இதைப் படித்துவிட்டு, உருப் படியான யோகாசன பயிற்சிக்கூடத்துல சேரப் பாருங்க.... நிமிர்ந்து உட்கார்ந்து மூக்கின் நுனியைப் பாருங்க.... புருவத்தைப் பாருங்க.... நல்ல புத்தகங்களைப் படியுங்க.... இரவில் படுக்கும்போது, 'மனம், நான் சொன்னபடி கேட்கும்; அது சொன்னபடி நான் கேட்கமாட்டேன். நாசகரமான எண்ணங்களை விரட்டி விட்டேன்' என்று பல தடவை, உள்ளுக்குள்ளேயே சொல்லுங்க... எல்லாவற்றிற்கும் மேலாக இந்த தாடி மீசையை எடுத்திடுங்க.... இதுவே, பாதிப் பைத்தியத்தைக் கொடுக்கும். ஓ.கே. புறப்படுங்க...."

மெய்யப்பனும் குமாரும், வாசலைப் பார்க்காமல், ரகுராமனின் வாயையே பார்த்தார்கள்.

## 21

தாடி, மீசை இல்லாமல் காட்சி அளித்த மெய்யப்பனைப் பார்த்து, சத்யா முதலில் அதிர்ச்சியடைந்தவள்போல், வண்டிக்காரர் கொண்டு வந்த காய்கறிகளைப் புரட்டிக் கொண்டே, அவனைப் பார்த்தாள். அவன், அவளைப் பார்த்துச் சிரித்தபோது, பைத்தியம் முற்றிவிட்டதோ என்பது மாதிரி கூடப் பார்த்துக் கொண்டாள். அவன், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட்டபோது, அவள் ஆனந்தப் பரவசமானாள். காய்கறிகளைப் பொறுக்காமல் துழாவிக் கொண்டிருந்தவளைப் பார்த்த காய்கறி வியாபாரி, "காற்றுல ஆடி, மரத்துல மோதுனதால... இந்தக் காய்.... காஞ்சு போனது மாதிரி தெரியுதும்மா..... ஆனால், காஞ்சது இல்ல... இதுதான் இருக்கிற காயை விட

நல்லகாய்....'' என்று சொல்லி, அவளை சுயநிலைக்குக் கொண்டு வந்தார்.

காலம் ஒரு மாதமாக உருண்டோடின. மெய்யப்பனுக்கு ஏழெட்டு 'செஷன்களை' ரகுராமன் நடத்தி விட்டார். அவனது ஒவ்வொரு பழைய உணர்வையும், அக்குவேறு ஆணி வேறாக்கி, அவனையே பார்க்கச் செய்தார். இப்போது, அவனுக்கு உள்ளத்தின் வீக்கம் குறைந்து தெரிந்தது. ஆரம்ப காலத்தில் ரகுராமன் கொடுத்த 'டிரான்குலைசர்' மாத்திரைகளை அதிகமாகச் சாப்பிட்டான். பழைய நினைவுகள் தலையைக் காட்டினாலும், அவை கால் பதிக்க வில்லை. மாத்திரைகள் அவன் மனதைக் கட்டிப் போட்டன.... அவனே 'நாமா.... இப்படியெல்லாம் நடந்தோம்....' என்று நினைக்குமளவிற்கு, அவன் மனமே, இயங்காத சக்கரம்போல், நிர்மலமாக இருந்தது. சில சமயம், சிந்திக்கும் சக்தியை இழந்த அப்பாவி மாதிரியும் ஆக்கியது. சிந்தனா சக்தியை இழந்த அப்பாவி மாதிரியும் ஆக்கியது. சிந்தனா சக்தி போகப் போக, யந்திரமயமாகிக் கொண்டிருந்தது.

அவனை டிஸ்மிஸ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படுவதாகச் செய்தி வந்தபோதுகூட, அது அவன் மனதைப் பாதிக்கவில்லை. சத்யா, அவனைக் கருணை ததும்பப் பார்க்கும்போதுகூட, அது அவன் உள்ளத்தைப் பாதிக்க வில்லை. மனம் நெகிழ வேண்டிய அளவுக்கு நெகிழ வில்லை. உடனே அவனுக்கு அது தப்பாய் தெரிந்தது. மாத்திரை சாப்பிடுவதை நிறுத்தினான். பாதாளமும், பாய்லர் அடுப்பும், சொறிநாயும், வந்து வந்து போயின. அந்த நினைப்புக்கள் பதட்டத்தைக் கொடுக்கவில்லையானாலும் தொல்லை கொடுத்தன. டாக்டர். ரகுராமனின் ஆலோசனைப் படி, மாத்திரைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டான். இறுதியில் எப்போதாவது தேவைப்படும் போது மட்டும் பயன்படுத்தினான்.

ஆசனப் பயிற்சிக் கூடத்தில் சேர்ந்து, மயூராசனம், புஜங்காசனம், தனுராசனம், சர்வாங்காசனம், சவாசனம் முதலிய எளிய ஆசனப் பயிற்சிகளைக் கற்றுக் கொண்டான்.

வீட்டில் அரைமணி நேரம் வரை ஆசனப் பயிற்சி. உடம்பின் உறுப்புக்களை மிகமிக மெதுவாக, அதேசமயம் உச்ச நிலை வரைக்கும் இயக்கியதில், மனதை எப்படி வேண்டுமானாலும் இயக்கலாம் என்று ஒரு நம்பிக்கை ஏற்பட்டது.

ரகுராமனின் சிகிச்சை, அவன் உள்ளத்தில், பைத்திய நிலைக்கு முன்புகூட ஏற்பட்டிராத அளவுக்கு ஒருவித சாந்தி நிலையைக் கொடுத்தது. அனைவரையும், அவர்களின் உள்ளத்தில் ஊடுருவி உறவாடுவதுபோல் வெளி மூச்சும், அவர்களின் உள்ளங்கள் தன் நெஞ்சத்துள் வருவது போன்று உள்மூச்சும், அவன் பிரச்சினையையும் துரத்தின. விமலா இப்போது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. வாணியைப் பற்றி நினைப்பே வரவில்லை. ஆனால், பாதாளம், பாய்லர் வகையறாக்கள் மட்டும் விருந்தாளி மாதிரி வந்து, விருந்து கசந்ததுபோல், போய் வந்தன. சத்யாவும், அவ்வப்போது அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாய் போய் வந்தாள்.

இதற்கிடையே, விமலா அபார்ஷனுக்காக மாத்திரை சாப்பிட்டு, அது வெளியே தெரிந்ததால் தூக்க மாத்திரை சாப்பிட்டு, அதுவும் வெளியே தெரிந்ததால் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு, அதுவும் வெளியே தெரிந்து போலீஸ் விசாரணையில் இருப்பதாக, குமார் மகிழ்ச்சியாகச் சொன்னதை - முனுசாமி, குதித்துக் கொண்டே சொன்னதை - மெய்யப்பன் மௌனமாகக் கேட்டுக் கொண்டான். வாணி, இப்போது அவனைப் பார்க்கத் துடிக்கிறாள் என்று சொன்னபோது, அவனும், 'அப்படியா...? வரட்டுமே...' என்று கோபமோ, நட்போ இல்லாத குரலில் பதிலளித்தான். மானேஜர், வாணியின் உபயத்தால், ஏதோ ஒரு 'பிராட்' விவகாரத்தில் மாட்டிக்கொண்டு, சஸ்பெண்டாகி இருக்கிறார் என்று சொன்னபோது, மட்டும் திடீரென்று மகிழ்ச்சியடைந்தான். பிறகு அதையும் அடக்கிக் கொண்டான்.

அன்று சைக்கியாட்ரிஸ்டிடம் போவதற்காகப் புறப்பட்டான். இன்னும், எத்தனை 'செஷன்கள்' நடக்கும்

என்று தெரியவில்லை. அநேகமாக ஒன்றிரண்டில் முடிந்து விடலாம். மினுமினுப்பான உடையோடு, பளபளப்பான பூட்ஸ்களோடு அவன் புறப்பட்டபோது, சத்யாவின் அண்ணி, 'ஒரு சொல் சொன்னாலும்.... அதை நிறைவேற்றிக் காட்டுறவன்தான் மனுஷன்.... காலி பண்ணுறானாம் காலி....' என்று கடைசி வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்தாள். அவளுக்கு, அவன் போகவேண்டும் என்பதைவிட, அந்த அறை அவளுக்கு வேண்டுமென்பதே இப்போது முக்கியம். குழந்தை குட்டிகளோடும், இந்த 'நொண்டி முண்டை'யாலும் கணவனைத் தனியாகப் 'பார்க்க' முடிவதில்லை.

காம்பவுண்ட் கதவைத் திறக்கப்போன மெய்யப்பன், ஜன்னலுக்கு உள்ளே நின்று பேசிய அண்ணிக்காரியை பார்த்து நடந்தான். அவள், பயந்தவள்போல், ஒதுங்கியபோது, "நான் சொன்ன சொல்.... இப்போதான் ஞாபகம் வருதும்மா.... எப்படியோ ஏதோ ஒரு நிலையிலே இருந்துட்டேன்.... இப்பதான் மீண்டு வாரேன்... நிச்சயமாய் அடுத்தமாசம் காலி பண்ணிடுவேன்... முடியுமானால், நூறு ரூபாய்ல... நீங்களும் எனக்காக ஒரு ரூம் பாருங்க. நீங்க பார்த்தாலும், பார்க்காட்டாலும் காலி பண்ணிடுவேன்... என்னை நம்புங்க.... என்னால யாருக்கும் சிரமம் வரப்படாது...." என்றான்.

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மெய்யப்பனுக்கும், லேசான அதிர்ச்சி. அதே சமயம் அந்த இடத்தைக் காலி செய்யவேண்டும் என்ற உறுதி. காலி செய்ய வேண்டியதிருக்கிறதே என்ற கலக்கம். சத்யாவின் நன்மையை உத்தேசித்து இடத்தை மாற்றித்தான் ஆகவேண்டும் என்ற வேதனை கலந்த உள்ளம், இடறுவது போல் இருந்தது. டிரான்குலைசர் மாத்திரை ஒன்றைப் போட்டுக் கொள்வதற்காக மீண்டும் அறைக் கதவைத் திறந்தான். மாத்திரையைக் கையில் வைத்துக் கொண்டே கட்டிலில் உட்கார்ந்தான். பிறகு, அதை உள்ளே தள்ளிவிட்டு, வெளியே வந்தான். காம்பவுண்ட் கேட்டைத் திறக்கும்போது, சத்யாவின் அண்ணி நாயர் கடைப்பக்கம் போவது போலிருந்தது. அவனுக்கு அறை பார்க்கவா?

மெய்யப்பன் உள்ளே எட்டிப் பார்த்தான். சத்யா தன் அண்ணன் மகன், மூன்று வயதுப் பொடியனை, மார்போடு அணைத்தபடி வெளியே வந்தாள். முகத்தில் புல்லில் படர்ந்த பனித்துளிகள் போன்ற வேர்வை. துக்கத்தைச் சிறை செய்ததுபோல் கன்னம் உப்பியிருந்தது. அண்ணன் மகனிடம் அழாத குறையாக ஆணையிட்டாள்.

"டேய்.... நீ இங்கேயே இருக்கணுண்டா. அவர் சொன்னார், இவர் சொன்னார்னு எங்கேயும் போகப் படாது. அப்படிப் போனால், என்னால தாங்க முடியாதுடா.... 'நீ யார் சொல்றதுக்கு'ன்னு கேட்கிறியா... அதுதாண்டா எனக்கும் புரியல..."

மெய்யப்பனுக்குப் புரிந்தது. கேட்டைத் திறந்துவிட்டு, அதை மூடும் சாக்கில், அவளை நேராகப் பார்த்தான். என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. சத்யா முகத்தை விலக்கிக் கொண்டாள். அண்ணன் மகனை, கீழே விடமாட்டேன் என்பதுபோல், தோளோடு அணைத்தபடி, துவண்ட நடையோடு போய்க் கொண்டிருந்தாள்.

மெய்யப்பன் தான் சொன்ன சொல்லுக்கும், சத்யாவின் சொல்லாத சொல்லுக்கும் இடையே தவித்து, அந்த இடைவெளியை இட்டு நிரப்பும் வழி தெரியாது நடந்து கொண்டிருந்தான்.

## 22

சைக்கியாட்ரிஸ்ட் ரகுராமன், மெய்யப்பனைச் சாய்வுப் படுக்கையில் சரித்துப் போட்டிருந்தார். அவன், வெளி மனதுக்கும் அடிமனதுக்கும் இடையே, தூங்காத தூக்க நிலையில் கிடந்தான். உடலில்லாமல், உள்ளம் மட்டும்

அங்கே இருப்பது போன்ற உணர்வு. ரகுராமனின் குரல் ஒலித்தது.

"மிஸ்டர் மெய்யப்பன், இப்போ அலுவலகத்துல வேலை பார்க்கிங்க.... உங்க திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத அனுபவம் ஏதாவது உண்டா...? சொல்லுங்க... பார்க்கலாம்..."

"அலுவலகத்தில சேல்ஸ் செக்ஷன் கிளார்க் லீவுல இருக்காள். நான் தற்காலிகமாய், அவள் வேலையைப் பார்க்கேன். முன்னால, ஒரு கம்பெனி கொடுக்க வேண்டிய பணத்தை 'ரைட் ஆப்' செய்திருந்ததை பார்க்கேன். அந்த கம்பெனி, இன்னொரு பேர்ல நல்ல முறையில இயங்கி வருவதை கண்டுபிடித்து எழுதுகிறேன்.... ஒரு லட்ச ரூபாய் எங்க கம்பெனிக்கு வருது. மானேஜர் என் முதுகைத் தட்டிக் கொடுக்கார். என் சேவைக்கு அங்கீகாரம் கிடைக்குமுன்னு சொல்றார். கடைசில, அந்தப் பெண் கிளார்க்தான் அதைக் கண்டுபிடித்துப் பணத்தை மீட்டதாய் ரகசியமாய் எம்.டி..க்கு எழுதிடுறார். அந்தப் பெண் அவருக்கு உறவாம்.... என்ன உறவோ... கடைசியில், அவளுக்கு சேல்ஸ் அஸிஸ்டெண்டாய் புரமோஷன் வருது. நான் அவளுக்குக் கீழேயே வேலை பார்க்கேன். அயோக்கியனுக்குக் கீழே வேலை பார்த்துடலாம். ஆனால், முட்டாளுக்குக் கீழே வேலை பார்ப்பது ரொம்ப கஷ்டம். வாணியக்கா பெட்டிஷன் போடச் சொல்றாள். நான் மறுத்துடுறேன்...."

"சரி.... ஆபீஸ் கிடக்கட்டும். கதை எழுதுறதுல கசப்பான அனுபவம் உண்டா...?"

"பல சிறுகதைகள் எழுதி அனுப்புறேன். எழுதுன வேகத்திலேயே திரும்பி வருது. இவ்வளவுக்கும் செக்ஸ் கதைகளாகத்தான் எழுதினேன். ஒரு கதையில், 'படுத்துக் கிடந்தாள். பார்க்க ரம்மியமாய் இருந்தது'ன்னு எழுதினேன். அது மட்டும் எப்படியோ ஒரு பத்திரிகையில பிரசுரமாச்சுது... மற்ற கதைங்க திரும்பி வருது. ஒரு நாவல் எழுதி, ஒரு சினிமாக் கம்பெனில கொடுக்கேன். பத்துநாள் கழித்து நாவலைத் திருப்பிக் கொடுக்காங்க.... ஒரு வருஷம் கழித்து

என் நாவலே சினிமாவா வருது.... நான் எழுதுன வரிகளே வசனமாய் வருது.... என் நாவல் என் பேரு இல்லாமலே சினிமாவா வருது.... இன்னொருத்தர் பெயர்ல வருது.... அந்தப் படத்துக்கு ஏதோ ஒரு அவார்டும் கிடைக்குது.... பாவிப் பயலுங்க.... என்னை ஏமாத்திட்டாங்க.... மோசடி பண்ணிட்டாங்க.... அவங்களை கொலை பண்ணுனால்தான் என் மனசு ஆறும்.... ஜப்பான்காரன் மாதிரி.... ரெண்டு கார்ல, ரெண்டு காலையும் கட்டி...."

"இப்போ உங்களுக்கு பதினைந்து வயது. படிக்கும் போதே அரசியல் மேடையில் பேசுறீங்க... அங்கேயாவது அங்கீகாரம் கிடைக்குதா..."

"ஹைஸ்கூலுல.... பேச்சுப் போட்டியில முதல்ல வாரேன்.... மாவட்ட அளவுலேயும் முதல்ல வாரேன்.... 'பலே பையான்னு' சொல்றதுக்கு நாதியில்லாமல் போயிட்டோமேன்னு... வருத்தப்படுற சமயத்தில.... ஒரு அரசியல் கட்சியில் பேசச் சொல்றாங்க.... அது எனக்குப் பிடித்த கட்சி.... பேசுறேன்; கைதட்டு வாங்கும்படியா பேசுறேன்.... திடீர்னு அந்த வட்டாரத்துல.... எங்க கட்சிக்கும், இன்னொரு கட்சிக்கும் கலவரம் மூளுது.... நாலு கொலை விழுது. முதல் கொலையை செய்தது எங்க கட்சிதான். எங்க உள்ளூர் தலைவர், நான், எங்க தொண்டர்களை உசுப்பி, ரத்தத்தை கொதிக்கும் படியாய் பேசச் சொல்றார். எனக்கு மனசாட்சி கேட்கல... நான் முடியாதுன்னு சொல்லிடுறேன்.... அவரு.... உடனே.... 'போடா பொட்டை. பெரியவங்க பேச்சைக் கேட்டு அலுத்துப்போன பொதுமக்கள், சின்ன பையன்கள் பேச்சை மதிக்கிறதாலதான் உன்னை பேசச் சொன்னேன். எனக்கா ஆளில்ல'ன்னு சொல்லிட்டு பேச்சுப் போட்டில ரெண்டாவது பரிசு வாங்கின பையனை தயார் பண்ணுறார். அவனும், எங்க கட்சித் தொண்டர்களை, மேலும் ரெண்டு கொலை செய்யும்படி 'நல்லா' பேசுறான்....அப்பாவிங்க உயிருங்களை.... வெளுத்து வாங்கிறான். அவன் இப்போ தலைவனாயிட்டான். நான் வெறும் கிளார்க்... நானும்... மூணுகொலை விழும்படியா... பொய் பேச்சு பேசியிருந்தால்,

இப்போ தலைவனாகி இருப்பேன். பேசாமல் போயிட்டேனே.... ஏமாந்துட்டேன்.... தலைவனாக முடியாமல் போயிட்டே.... அய்யோ.... உலகத்துல எல்லாரும் அயோக்கியர்களாய் இருக்கும்போது, நான் மட்டும் ஏன் யோக்கியனாய் இருக்கணும்..."

"சரி மெய்யப்பன், உலகத்துல... எல்லோரும் அயோக்கியர்களாய் இருக்க முடியாது. அன்புள்ளம் கொண்டவர்களும் இருக்கிறாங்க.... பார்ப்போமா.... இப்போ... ஒங்க அறையில் இருந்து வெளில வாறிங்க.... உங்ககிட்ட அன்பு காட்டுறதுக்கு ஒருத்தரும் இல்லையா...?"

"இருக்காள். சத்யா இருக்காள். எனக்காக அண்ணன் கிட்ட அடிபட்டாள். நான் தற்கொலை செய்யப்போகும் போது, கையெடுத்துக் கும்பிட்டாள். அழுதாள்... இன்றைக்குக்கூட, நான் அந்த அறையைக் காலி செய்துடுவேன்னு கலங்கினாள். சத்யா, என் தெய்வமே, என் தோழியே.... என் தாயே.... என் கடவுளே... நீ காட்டுற அன்புக்கு ஈடில்லை.... ஒன் கண்ணே கருணை.... பார்வையே பாசம்... சத்யா.. என் சத்யா.... ஒன்னை விட்டுட்டுப் போகமாட்டேன்.... கலங்காதே சத்யா, சத்யமாய் போகமாட்டேன்...."

"சரி, இப்போ அலுவலகத்தில இருக்கிங்க.... உங்கள் மேல் பாசம் காட்ட ஆளில்லையோ...."

"இருக்கான் ஸார்... குமார்... உயிர் காக்கும் தோழன்.... ஒருநாள், ஏதோ மானேஜர் எரிந்து விழுந்ததுல நான் சாப்பிடல... குமார் சாப்பிடச் சொன்னான். மாட்டேன்னுட்டேன். உடனே, ரெண்டு பேருக்கும் கொண்டு வந்த சாப்பாட்டுப் பொட்டலத்தை முனுசாமிகிட்ட கொடுத்துட்டு... தண்ணீர்கூட குடிக்காமல் இருந்தான். விமலாமேல் இருந்த மோகத்துல, என் நண்பனை பல தடவை உதாசீனம் செய்திருக்கேன். அவன் ஒரு தடவை கூட அப்படி நடந்துக்கல..."

"சரி.... இப்போ... நீங்க சின்னப் பையன். யாருமே அன்பு காட்டலியா...?"

"ஏன் இல்ல.... எங்க வீட்டுக்கு எதிர்த்த வீட்ல. வயலுல கூலி வேலை பார்க்கற மாரிச்சித்தி இருக்காள். தெருவில விளையாடுற என்னை வீட்டுக்குள்ள இழுத்துக்கிட்டுப் போய் வாய்ல சோறு ஊட்டுவாள்... அவளே என்னைக் குளிப்பாட்டி விடுவாள். மாரிச்சித்தி இறந்துட்டாள். அப்போ நான் எங்க பெரியம்மா வீட்ல இருக்கேன். மாரிச்சித்தி இறக்கும்போது ஜன்னியில என் பேரைக்கூட உளறுனாளாம். 'மெய்யப்பா.... விளையாட்டு போதும்.... ஒன்பாட்டி.... என்னத்தைக் கொடுத்திருப்பாள். வாடா... கருவாட்டுக் குழம்பு இருக்குன்னு' பிதற்றுனாளாம். அந்தத் தாய் இறந்துட்டாள். ஒரேயடியாய் போயிட்டாள்...."

"சரி. இப்போ நீங்க பழைய வேலைக்கு வந்துட்டிங்க... ஆபீஸ்ல வேலை பார்க்கிங்க.... விமலா உதறினாள். கடற்கரையில் அவளை நினைத்தபடியே, உட்கார்ந்து இருக்கீங்க.... கடலையே பார்க்கிங்க.... என்ன தோணுது....""

"வானம் அழுகுது. கடல் விம்முது..."

''அழட்டும்.... விம்மட்டும்.... நீங்க சோகத்தோட திருவல்லிக்கேணி பஸ் ஸ்டாண்ட் பக்கம் வாரிங்க... என்ன தெரியுது...."

"எல்லாமே சத்யா மயமாய் தெரியுது..."

''சத்யா மயத்தோடு, சத்தியமயமுன்னும் ஒண்ணு இருக்கே... என்ன தோணுது...?"

"நல்லா பார்த்துச் சொல்லுங்க.... ஜனங்க தெரியல.... எப்படித் தெரியுது.... நல்லா பார்த்துச் சொல்லுங்க...."

''பிளாட்பாரத்துல... ஒரு குழந்தை வயிறு வீங்கிக் கிடக்குது.... கால் சிறுத்த குழந்தை.... கவனிக்க ஆளில்லாமல் நடக்குது... ஒரு கிழவி... ஈயப் போணியையே, தலையணையாய் வச்சு முடங்கிக் கிடக்காள். ஒரு கர்ப்பிணிப் பொண்ணு, வயிற்றைப் பிடிச்சுக்கிட்டு அழுகிறாள். நாலு கல்லை நிறுத்தி, ஒரு அம்மா சோறு பொங்கப் போறாள்.... அதுக்குள்ள, போலீஸ் வேன் வந்து, அவளை வாரிப்போட்டுக்கிட்டு

போகுது. மழை பலமாய் பெய்யுது.... ஈயப் போணிக் கிழவி, பஸ் ஸ்டாண்டுக்குள்ள வந்து, தூணைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டே, தூக்கப் பார்க்காள். நொண்டிக் கிழவர் ஒருத்தர், கம்பை ஊன்றி நடக்கிறார். கம்பு, ஈரத்துல நழுவுது... கீழே விழுகிறார்.... தூக்கிவிட ஆளில்ல..."

"சரி இந்த இந்நாட்டு மன்னர்களைப் பார்த்துட்டே..... யாருக்காவது உதவி பண்ணணுமுன்னு தோணுதா...."

"தோணல.... சத்யா நினைப்பில் எதுவும் தெரியல...."

"சத்யாவைவிட, ஜனசமுத்திரம் வலுவானது. கீழே விழுந்த கிழவருக்கும், கிழவிக்கும் இதோ உதவுறிங்க...."

"கிழவரை தூக்கிவிடுறேன்.... ஆயாவை அணைச்சபடி, டீக்கடையில போய் டீ வாங்கிக் கொடுக்கேன்..."

"குட்..... பாய்லர் தெரியுதா...?"

"தெரியுது...."

"தலை பாய்லருக்குள்ள திணிக்கப்படுறது மாதிரி தெரியுதா....?"

"இல்லை...."

"சரி... இப்போ.... நான் பத்தில் இருந்து ஒன்று வரை எண்ணுவேன். எண்ணி முடிப்பதற்குள் எழுந்திருங்க. பத்து.... ஒன்பது... எட்டு.... ஏழு...."

மெய்யப்பன் விழித்த கண்ணோடு எழுந்தான். அவனுக்கு, ஆகாயத்தில் பறக்க முடியும் என்பதுபோல், உடல் மயிலிறகானது. உள்ளம் ஆனந்தமயமானதாய், ஆனந்தமே உள்ளமாய் மாறியதுபோன்ற பரவசம். இதற்குள், அங்கே வந்த குமார், "மடையா... எனக்காகக் கொஞ்ச நேரம் காத்திருக்கப் படாதாடா...." என்று சொன்னவன், தன்னையே புன்னகை செய்தபடி உற்றுக் கவனிக்கும் ரகுராமனைப் பார்த்துவிட்டு, "ஸாரி ஸார்... சகவாசதோசம்..." என்றான். உடனே அவனைப் பார்த்துச் சிரித்த ரகுராமன், இப்போது சீரியஸாகப் பேசினார்.

"மிஸ்டர் மெய்யப்பன், இப்போதைக்கு இதுதான் கடைசி செஷன். இனிமேல் பழைய உணர்வுகள் வந்தால்.... வராது.... அப்படி வந்தால் மட்டும்.... வாங்கோ... இப்போ நான் சொல்றதை தயவுசெய்து... கவனமாய் கேளுங்க..."

"மனம் ஸ்தூலமானது. இதை தத்துவார்த்தமாகவும், சமயரீதியாகவும், ரசாயன விதியின்படியும், பிரபஞ்ச சேர்க்கைப்படியும், சமூக அமைப்புப்படியும் பலர் தத்தம் பார்வையில் விளக்கியிருக்காங்க.... நம் முன்னோர்கள் மனப்போக்கையும், அதை அடக்குவதில் உள்ள சிரமத்தையும் உணர்ந்துதான் மனமாயைன்னு சொன்னாங்க. 'மனமென்ற மாயப் பிசாசு'ன்னு பாடியிருக்காங்க. இதேபோல், பிளேட்டோ, பிரான்ஸிஸ் பேகன், ஹென்றி பெர்க்ஸன், லோட்ஸே, பெட்ராண்ட் ரஸ்ஸல், கிளார்க்ஸ் மாக்பெல், கார்ல் மார்க்ஸ் போன்ற தத்துவவாதிகளும், மனதை பல்வேறு வகையில் விளக்கியிருக்காங்க. எட்மண்ட் பிராய்ட், பாலுணர்வு அடிப்படையில், கனவுகளை மாறுவேட எண்ணங்கள் என்று சொல்லியிருக்கார். இது பிரமைகளுக்கு பொருந்தும். ஆனால் ஒன்று.... அடிமனம், வெளிமனதைவிட, வல்லமை வாய்ந்தது. நுட்பமானது. வெளிமனம் இந்த தரை என்றால், அடிமன்ம் இந்தத் தரைக்குக் கீழே இருக்கும்.... கல், பாறை தண்ணீர், தாதுப் பொருட்கள், எரிக்குழம்பு முதலியன வைத்திருக்கின்ற அதல பாதாளம் மாதிரி.... அது நடராஜர் நடனம் மாதிரி... ஆனந்த நடனமும் ஆடும். ஊழிக் கூத்தும் போடும். மொத்தத்தில் உடல் ரயில்பெட்டி என்றால், மனம் என்ஜின்."

"உங்களுக்கு சின்ன வயதிலேயே அம்மா இறந்ததால் ஏற்பட்ட பாதுகாப்பின்மை உணர்வு... அடிமனதில் தேங்கிட்டு.... ஒவ்வொரு கட்டத்திலயும், தாய்மையைத் தேடுபோது, சம்பந்தப்பட்ட பெண்கள், உங்களை நிராகரித்திருக்காங்க.... இது பாதுகாப்பின்மை உணர்வை பெருக்கிட்டு.... சின்ன வயதிலிருந்தே.... உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கல.... இது ஒரு பெர்ஸ¬குஸன் காம்ப்ளெக்ஸா மாறி, சும்மா இருந்த அடிமனதை ஊதிக்கெடுத்துட்டு...."

"இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், எத்தனையோ ஞானிகளும், யோகிகளும், அறிஞர்களும், மனதின் நுட்பங்களையும், அது தறிகெட்டுப் போவதற்கான காரண காரியங்களையும் கண்டுபிடித்துச் சொல்லியிருக்காங்க.... இவங்களுக்கு சமூக அமைப்பும்.... ஒருவனுடைய மனோ அமைப்புக்கு பெருங்காரணம் என்பது எப்படியோ தெரியாமல் போய்விட்டது. இதை முதன் முதலில் தத்துவார்த்தமாக எடுத்துச் சொன்னவர் கார்ல் மார்க்ஸ்... இன்னுங்கூட.... ஒருவனுடைய மனோநிலைக்கு சமூகத்தின் அமைப்பும், அதனால் எழும் சமூகப் போக்கும் பெருங் காரணமாகிறது என்பதை மனோதத்துவ நிபுணர்களே மறந்து விடுகிறார்கள்."

"உங்களோட மனநோய்க்கு, நோய் கொண்ட இந்த சமூக அமைப்பும் முக்கியமான காரணம். இந்த சமூகம் சமதர்மப்படி இயங்கினால், பண்ணையார் அம்மா, ஒங்களை, அநியாயமாய் அடிக்கும்போது, ஏழைகள், பார்த்துக் கொண்டே சும்மா இருந்திருக்க மாட்டாங்க.... விமலா மாதிரியான ஒரு அனாதைப் பெண்ணுக்கு உருப்படியான காப்பகம் இருந்திருந்தால், அவளும் ஒரு 'சேடிஸ்டாய்' மாறியிருக்கமாட்டாள். இப்போது நிலவும் வர்த்தகக் கலாச்சாரம் மட்டும் இல்லாதிருந்தால், வாணியும், போலித் தனமான கௌரவங்களையும், வாழ்க்கை முறையையும் காப்பாற்றுவதற்காக, மானேஜருக்கு இரையாகியிருக்க மாட்டாள். பெண்ணுக்கு சொத்துரிமையும், மறுமண உரிமையும் இருந்திருந்தால், உங்கள் அம்மா, தற்கொலை செய்திருக்க வேண்டியதில்லை.... சத்யாவும், அண்ணனிடம் அடிபட்டு உங்கள் மனதையும் அடித்திருக்க முடியாது."

"மானேஜரும், மனோவியாதிக்காரனாய் இருக்கலாம். ஒருவேளை, தன் அம்மாவோ அல்லது மனைவியோ, தப்பு செய்வதைப் பார்த்து, அவர் வருத்தப்பட்டிருப்பார். அம்மா மீதோ மனைவி மீதோ ஆத்திரப்படமுடியாத நிலையில், ஒவ்வொருத்தியும், தன் அம்மா மாதிரி, மனைவி மாதிரி மோசந்தான்னு தன்னையறியாமலே நிரூபிக்க நினைத்து

இருக்கலாம். பார்த்திங்களா.... போலித்தனமான சமூக அமைப்பில், ஒரு பெண்ணை 'அம்மா மாதிரி' என்ற நெறிக்குக்கூட வேற அர்த்தம் வந்துடுது... அந்த நெறிக்கே 'நெரி' கட்டிடுது..."

"ஆனாலும், நீங்களும், உங்கள் நிலைமைக்கு ஒரு காரணந்தான். சமூகத்தின் அடித்தளத்தில் இருந்துவந்த நீங்கள், தெருவோர மக்களைப் பற்றி சிந்திக்காமலே, நடுத்தர வர்க்க மக்களைப் பற்றி மட்டுமே சிந்தித்து.... அவங்களோட மட்டுமே ஐக்கியப்பட நினைத்திங்க.... நீங்கள் போராட்டப் போக்குள்ளவர்தான்... ஆனால், தனிமனிதப் போராட்டம், சமூக இயக்கங்களுடன் இணையாதபோது, தத்துவார்த்த ரீதியில் பார்க்கப்படாதபோது, அது கூர் மழுங்கி, கடைசியில் மூளையையும் மழுங்க வைத்திடும். பிறகு, அதுவே விரக்தியாகி, போராட்டம், மனதுக்குள் வந்திடும். உதாரணமாய், வாணியோட பிரச்சினையை நீங்கள் சகாக்களிடம் சொல்லி, எல்லோருமாய் சேர்ந்து, மானேஜரைப் பார்த்து, எச்சரித்திருக்கலாம். இதனால... உங்களுக்குள் ஒரு சமூக உறவு ஏற்பட்டிருக்கும். மானேஜரும் திருந்துறதுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்."

"இன்னொன்று, நீங்க அயோக்கியனாகாமல் போனோமேன்னு வருத்தப்படுற யோக்கியன். அரசியலில் பிரகாசிக்க முடியாமல் போனதுக்கு வருந்துறிங்க.... மூணு கொலை விழக் காரணமாக இல்லாமல், எதிர்காலத்தை விட்டுக் கொடுத்த பெருமிதம் உங்களுக்கு ஏன் ஏற்படக் கூடாது? **திலகர், வ.உ.சி. சுப்பிரமணிய சிவா** நாட்டுக்காக எவ்வளவோ செய்தார்கள். அவங்க ஜெயிலில் இருந்து திரும்பும்போது, ஜனங்கள் அவர்களைப் பார்க்கவோ, அவங்க பேச்சைக் கேட்கவோ தயாராக இல்லை... இது நன்றிகெட்ட தனந்தான் என்றாலும், இது தவிர்க்க முடியாது. ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில், சமூகம், தனிமனிதனை சார்ந்து நிற்பதுபோல் தெரிந்தாலும், அது அப்படி நிற்பதல்ல.... அந்த தனிமனிதனை உற்பத்தி செய்வதே சமூகந்தான்.... வ.உ.சி.யை விடவா, நீங்க அரசியலில் தியாகம்

செய்துட்டிங்க? வ.உ.சி.யிடம் வாங்கித் தின்றவர்களே, அவர் சிறையில் இருந்து திரும்பும்போது எதிர்கொண்டு அழைக்கவில்லை என்பது தெரியுமா?”

“இதே அறிவுரை, இலக்கியத்திற்கும் பொருந்தும். எழுதுங்க.... எழுதிக் கொண்டே இருங்க..... ஒன்றுமட்டும் நிச்சயம். திறமையை, தாமதப் படுத்தமுடியுமே தவிர தடுக்கமுடியாது. மாதவையாவையும், புதுமைப்பித்தனையும், அழகிரிசாமியையும், விந்தனையும் மறைக்கப் பார்த்தாங்க.... முடிந்ததா? இவங்க சாகாமல் செத்த காலத்தில், ஓஹோன்னு வாழ்ந்த எழுத்தாளர்கள் பேர் இப்போ செத்திட்டு.... ஆனால், இவங்க, இப்போ மட்டுமல்ல.... எப்பவும் வாழ்வாங்க.... அதனால, எழுதுவதை விசுவாசமாய் எழுதுங்க.... எழுத்தை சத்தியமாய் உபாசியுங்க.... அது வீணாகாது.... இந்த வர்த்தகச் கலாச்சாரம் போய்... நியாயமான பாட்டாளிக் கலாச்சாரம் வரும்போது.... நீங்க எழுதுறது சத்தியமானால்.... அது நிற்கும்.”

“அதனால, உங்களைச் சுற்றியுள்ள ஜன சங்கிலியில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு உயிரும் ஒரு அற்புதம். ஒவ்வொரு அற்புதமும், ஒரு லட்சியத்தைக் கொண்டதுன்னு நினையுங்க.... எந்த சமூகத் தட்டில் இருந்து வந்தீங்களோ.... அந்தத் தட்டில் உள்ள அடிப்படை மக்களுக்காக, ஏதாவது ஒட்டு மொத்தமான சேவை செய்யுங்க.... பிளாட்பாரத்து ஜனங்களைப் பார்க்கும்போது, உதவி செய்ய முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் அவங்க நிலைமையை, ஒரு நிமிடமாவது நின்று கவனியுங்க. பிறர் பாராட்டணுமுன்னு சேவை செய்வதைவிட, கொடுமை செய்வது எவ்வளவோ மேல். சேவைக்காக சேவை செய்யுங்க.... இது, உங்களுக்கும், சமூகத்திற்கும் உள்ள உறவைப் பலப்படுத்தும். வீட்டை, சமூகமாய் நினைக்காமல், சமூகத்தையே வீடாய் நினையுங்க.... சமுதாயக் கடலில் ஒரு துளியாய் மாறுங்க.... இதனால், நீங்க தனித்தனியாய் ஆகாமல், வெள்ளமாய் இயங்கமுடியும். நீங்க சராசரிக்கு மேலான இளைஞர் சிந்தனையை, தனிமனித அடிப்படையில் வளர்க்காமல், சமூகச் சிந்தனையை விரிவாக்குங்க...”

"மனம், சூன்யத்தில் நிற்காது. அதனால, ஆரோக்கியமான உணர்வுகளை நினைத்துப் பார்க்கணும். மகாத்மா காந்தியின் போதனைகளையும், கார்ல் மார்க்ஸ் தத்துவத்தையும் படிக்கப் படிக்க, புதியதோர் உலகத்தைப் பார்ப்பீங்க.... ஏன் அப்படிப் பார்க்கிங்க....? மெத்தப் படிச்சவன் சுத்தப் பயித்தியமாச்சேன்னா...? பரவாயில்ல.... படிக்காமல், அசுத்தப் பயித்தியக்காரனாய் இருக்கதைவிட, சுத்தப் பைத்தியம் நல்லது."

"கடைசியா ஒண்ணு.... எதற்குப் பயப்பட்டாலும், இந்தப் பயத்திற்கு மட்டும் பயப்படக்கூடாது..."

ரகுராமன், பேசி முடித்தவர்போல், அவர்களைப் பார்த்துவிட்டு, சுற்றும் முற்றும் பார்த்தார். மெய்யப்பனும் குமாரும் அவரையே பார்த்தார்கள். குமாருக்கு, தனக்கும் அவர் சிகிச்சை அளித்தது போன்ற உணர்வு. அவர்களுக்கு எப்படி எழுந்திருப்பது என்ற மயக்கம். ரகுராமனுக்கு, எப்படி அனுப்புவது என்ற தயக்கம். சிறிதுநேர மௌனம். பிறகு, டாக்டர் ரகுராமனே, இருக்கையில் சிறிது சாய்ந்து, 'ரமா...' என்று, அங்கே இல்லாத மனைவியைக் கூப்பிட்டார்.

மெய்யப்பனும் குமாரும் எழுந்தார்கள். நன்றி சொல்ல நெஞ்சிருந்தாலும், வார்த்தைகள் கிடைக்கவில்லை. மெய்யப்பன், 'ஸார்....' என்றான். அதைப் புரிந்து கொண்ட ரகுராமன், "இந்த சமூகம் கொடுத்த வரிப்பணத்தில், படித்த ஏழை நான். நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது இந்த சமூகத்திற்குத்தான்...." என்றார்.

சமூகத்தை அடையாளம் கண்ட மகிழ்ச்சியில், அதில் இரண்டறக் கலக்கப்போவது போல, மெய்யப்பன், குமாருடன் கலக்கமில்லாமல் நடந்தான்.

# 23

பயங்கரமான சண்டைக் காட்சிகள் நிறைந்த திரைப்படத்தைப் பார்த்து முடித்த அனுபவம். போரில் பேரழிவுகளை நேரிடையாகப் பார்த்தும், அவற்றில் பங்கு பெற்றும், பின்னர் அமைதியான சொந்தக் கிராமத்திற்கு, நிரந்தரமாகத் தங்க வந்திருக்கும் போர் வீரனைப்போன்ற மனப்போக்கு. கெட்டதை அமுக்கி, நல்லது மேலோங்கி யிருப்பது போன்ற உணர்வு நிலை.

மெய்யப்பனுக்கு, பழைய நினைப்புக்களும், நிகழ்ச்சிகளும் கடந்தகால அனுபவமாகி விட்டன. அனுபவம் முக்கியமல்ல. அந்த அனுபவத்தில் இருந்து எப்படிப் பாடம் கற்றுக் கொள்கிறோம் என்பதுதான் முக்கியம். பழைய அனுபவங்கள், அரக்கத்தனமான பிரமைகளைக் கொடுத்த புதிய அனுபவமாகி, அந்தப் புதிய அனுபவம், அவனுக்குப் புதுமையான-பொதுமையான பாடத்தைப் போதித்தது. 'பழைய காலத்தில் திரும்பி நடக்க வேண்டாம்.... பழைய காலத்தை திரும்பிப் பார்க்காமலும் இருக்க வேண்டாம்' என்று ரகுராமன் ஒரு சமயத்தில் சொன்னது, இன்னும் அவன் காதுகளில் ஒலிக்கிறது. 'எதற்குப் பயப்பட்டாலும், இந்தப் பயத்திற்கு மட்டும் பயப்படக்கூடாது....' என்று அவர் உபதேசித்தது எப்போதும் இதயத்தில் ஒலிக்கிறது.

எல்லாவற்றையும் புதிய கோணத்தில் பார்த்தான். சுற்றுப்புறச் சூழலில் தோன்றும் மண்ணும், செடியும், மரங்களும், தாவர சங்கமத்தின் அர்த்தமிக்க உயிர்ப்புக்களாகத் தெரிந்தன. இப்போதுதான் விதவிதமான மரங்கள், பறவைகள், அவை சொல்லாமல் சொல்லும் வனப்பின் நேர்த்திகள், அவன் பார்வைக்கு வந்தன. ஒவ்வொரு பறவையும் ஒரு அழகு. ஒவ்வொரு மரமும் ஒரு நேர்த்தி. ஒவ்வொரு பூவும் ஒரு பூப்பு. ஆசனப் பயிற்சியால் உடலுக்குள்ளேயும், உள்ளத்திற்கு உள்ளேயும் ஒரு அமைதி. பலப்பல புத்தகங்களைப் படிப்பதால், 'இவ்வளவு நாளும் இந்த இன்பம் தெரியாமல் போனதே' என்ற விசன ஆனந்தம்.

கடந்தகால அனுபவத்தைக் கடந்து, அந்த அனுப வத்தையே இன்றைய மனோதளத்திற்குப் பலமான அடித்தளமாகக் கொண்ட மெய்யப்பனால் ஒன்றே ஒன்றை மட்டும் மறக்க முடியவில்லை. மனமும் கேட்கவில்லை. சத்யாவின் அண்ணி அறையைக் காலி பண்ணச் சொன்னதைப் பேச்சுவாக்கில் குமாரிடம் சொல்லியிருந்தான். அவனும் 'அதுவும் நல்லதுதாண்டா...'' என்று மட்டும் சொன்னான். திடீரென்று, அவன் குடியிருக்கும் தெருவிலேயே ஒரு அறையைப் பார்த்து, தன் சொந்தப் பையில் இருந்து மூன்றுமாத அட்வான்ஸையும் கொடுத்து விட்டானாம். மெய்யப்பன் 'சத்யா...' என்று இழுத்தபோது, "இனிமேல் ஒன்னை சத்தியமாய் உதைப்பேண்டா.... அப்போ விமலான்னு விழுந்தே. இப்போதான் எழுந்திருக்கே..... அதுக்குள்ள சத்யாவா.... பிச்சுப்பிடுவேன்....'' என்று சொல்லிவிட்டு, அறையைக் காலி செய்ய வேண்டிய நாளையும், நிச்சயித்து விட்டான். இன்று, நிச்சயித்த நாள் வந்துவிட்டது.

அவன் காலி செய்யப்போவதை, ஒரு வாரத்திற்கு முன்பே தெரிந்துகொண்ட சத்யா, அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் வெளியே வந்தால், அவள் உள்ளே போனாள். வேறு எவரும் இல்லாத சமயத்தில், அவளிடம் பேச்சுக் கொடுக்கப் பார்த்தான். அவள் வீட்டுக்குள்ளே போய்க் கதவைப் பலமாகச் சாத்திக் கொள்வாள். வெளியே காய்கறி வாங்கப்போனால், அவனோ, அவனுள்ள அறையோ இல்லாததுபோல் போவாள். இன்று, அவன் காலி செய்யப் போவதால், மனங்கேட்கவில்லையோ.... என்னவோ, அவன் கண்ணில் படும்படி மாறி மாறி நடந்தாள்.... வீட்டில் யாரும் இல்லாத வேளை.

மெய்யப்பன் அறைவாசலுக்கு அருகே வந்து, 'சத்யா...' என்றான். அவள் காதில் வாங்காததுபோல் நடக்கப் பார்த்தாள். உடனே அவன், ''நான் பழையபடியும் சீரழியணுமுன்னால் போ...'' என்று குழந்தைக் கோபத்தோடு சொன்னபோது அவள் நின்றாள்.

"சத்யா..... ஒன்னைத்தான்... இப்படி வா..... வாம்மா...."

அவள், அக்கம்பக்கம் பார்த்துக் கொண்டே, தயங்கினாள்.

"வாரீயா.... இல்ல.... நான் வரணுமா...."

அவன் வரக்கூடாது என்பதற்காக வருபவள்போல், வந்தாள். அறைவாசலில் பாதியை அடைத்து நின்றாள்.

"நான் இன்னைக்கு காலி பண்ணப் போறேன் தெரியுமா....?"

'தெரியும்' என்று அவள் வாய் பேசவில்லை. கண்கள், நீர்சிந்திப் பேசின.

"நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன் சத்யா.... இப்போ, ஒன் முடிவு தெரியணும்.... உள்ளே வா...."

சத்யா, எதிர்வீட்டை எட்டிப் பார்த்தாள்.

"வாரீயா..... கையைப் பிடித்து இழுத்து.... உட்கார வைக்கணுமா...?"

சத்யா, கைகளைப் பின்புறமாக வைத்துக்கொண்டு, அவனைப் பார்த்தாள். எதிர்வீட்டைப் பார்த்தாள். மெய்யப்பனுக்கு என்ன செய்கிறோம் என்று புரியவில்லை. அவள் தோளைத் தொட்டு, கழுத்தைப் பிடித்து, உள்ளே இழுத்துவிட்டான். நடந்ததை நிராகரிப்பவள் போல நின்றவளின் தோளை அழுத்தி, நாற்காலியில் உட்கார வைத்தான். அவள் அவனை மௌனமாகப் பார்த்தாள். கண்கள் செருகுவதுபோல் பார்த்தாள். பிறகு, திடுக்கிட்டு எழுந்தாள். அவன் பார்வையின் பாவத்தைப் பார்த்து மீண்டும் உட்கார்ந்தாள்.

மெய்யப்பன், தழுதழுத்த குரலில் பேசினான்:

"என்னை புது மனிதனாய் உருவாக்கினதே நீ.... நீ மட்டும் இல்லன்னா.... இந்நேரம் என் எலும்புகூட சாம்பலாய் பூமியில்

படிந்திருக்கும்.... நீ மட்டும் அந்தப் பெரியவரை தரிசிக்க சந்தர்ப்பம் கொடுக்கலன்னா.... நான் பைத்தியத்தை தரிசிச்சுக்கிட்டு இருப்பேன். எனக்கு அந்தப் பெரியவர், இந்த முருகன் எல்லாமே நீதாம்மா. நீ இல்லாமல் என்னால வாழமுடியாது.. பழைய நிலைக்கு நிச்சயம் போயிடுவேன். சொல் சத்யா.... ஆயிரம் ரூபாய் கொடுத்து குதிரை வாங்கிட்டு, ஆறு ரூபாய் கொடுத்து கயிறு வாங்கி, குதிரையைக் கட்டாட்டால், அது ஓடிடும்.... அவ்வளவுதான் சொல்லமுடியும்.... அப்புறம் உன் இஷ்டம்...."

சத்யா தலைநிமிராமல் முணுமுணுத்தாள்.

"ஆறு ரூபாய் கயிறு எப்படியோ....? இந்த ஐந்து பைசா மஞ்சக் கயிறு, என்னை ஏற்கெனவே கட்டிப் போட்டுட்டு. இதை அறுக்கிறது... குதிரை ஓடுறது மாதிரி.... ஒங்களுக்கு என்னைவிட, எல்லா வகையிலும் மேலானவள் தேவை. நிச்சயம் கிடைப்பாள்.... உங்களை... இப்போ பார்க்கையில் ஏற்படுகிற மகிழ்ச்சி... எனக்குக் கல்யாணம் நடக்கும்போது ஏற்பட்டதைவிட அதிகம்.... இருந்தாலும்... நான்.... இன்னொருத்தன்...."

விலகி உட்கார்ந்திருந்த மெய்யப்பன், எழுந்து அவளருகே சென்றான்.

"என்னோடு, உனக்கு வாழ இஷ்டமில்லன்னா.... அது வேற விஷயம்.... தாலி கட்டிட்டு.... அப்புறம் உதறிவிட்ட ஒரு குடும்பத் துரோகிக்காக, நீ விலகி இருக்கதை, என்னால சகிக்க முடியாது.... எப்போ ஒருவன், தொட்டுத் தாலி கட்டினவளை தள்ளி வச்சுட்டானோ..... அந்தப் பயலுக்கு, கணவன் என்கிற அந்தஸ்து போயிட்டுது.... அவன் போட்ட தாலி, தூக்குக் கயிறாய் ஆகப்படாது.... என்னோட தூக்குக் கயிறை அப்புறப் படுத்தினவள் போட்டிருக்கிற தூக்குக் கயிற்றை அகற்ற எனக்கு உரிமை இல்லாமல் இருக்கலாம். ஆனால், கடமை உண்டு...."

"கற்புன்னு ஒண்ணு இருக்கே..."

"கற்பு.... மண்ணாங்கட்டிக் கற்பு.... இப்போதான், டாக்டர் மு. வரதராசனார் நாவலைப் படிச்சேன். அதிலே அவர் ஒருவனும், ஒருத்தியும் கூடி வாழ்கிற காலத்தில், அவன், அவளுக்கும், அவள், அவனுக்கும் விசுவாசமாய் இருக்கதுதான் கற்புன்னு" புது விளக்கம் கொடுக்கிறார். கூடி வாழாதவன் கணவன் இல்ல.... அவன் போட்ட கயிறு கழுத்தில் கிடந்தால், அந்தப் பெண் மாடுன்னு அர்த்தம்.... ஒனக்கு ஆட்சேபம் இல்லைன்னா, நானே அந்த கயிற்றைக் கழட்டிட்டு.... முருகன் கோவில் அறிய.... நல்ல கயிறாய் போடுறேன்... சம்மதமா...?"

சத்யா சம்மதமற்றவள்போல் எழுந்தாள். மெய்யப்பன் மறந்துபோன ஒன்றைக் கேட்டான்.

"நீ... பெரியவர் ரெங்கசாமிகிட்டே கேளாமல் எதுவும் செய்யமாட்டேன்னு எனக்குத் தெரியும்.... வேணுமானால் கேட்டுப்பாரு.... இரண்டு நாள் கழித்து.... முருகன் கோவிலுக்கு வந்து, ஒன் பதிலைச் சொல்லு.... அது வரைக்கும், எனக்கு பழைய நிலைமை திரும்பாமல் இருக்கதுக்கு, பிரார்த்தனை செய்...."

சத்யா மெல்ல மெல்ல முணுமுணுத்தாள்.

"ரெங்கசாமி சாமியார்கிட்டே கேட்க வேண்டியதில்லை. அவரே, 'தள்ளி வச்ச புருஷன்' இல்லாம கூட..... ஒனக்கு மேலான வாழ்வு வருமுன்னு.... சொல்லாமல், சொல்லி விட்டார். வெளிப்படையாய், 'எவன் கூடயாவது வாழ்க்கை நடத்துன்னு' அவர் சொல்லமாட்டார். அவரும்... இந்த சமூகத்துல இருக்கவராச்சே.... சரி... எனக்கு நேரமாவுது.... அண்ணி வார சமயம்...."

மெய்யப்பன் பேசிக்கொண்டு நிற்கவில்லை. அவள் முதுகைத் தன் மார்போடு அணைத்து, மஞ்சள் கயிற்றைத் தூக்கி, தலைக்கு மேலே கொண்டு வந்து, கழற்றினான். கழற்றியதை ஒரு மூலையில் விட்டெறிந்தான். அவள் இப்போதும் நடந்ததை நம்ப முடியாததுபோல், அவனைப்

பார்த்தாள். அந்தக் கயிற்றை எடுக்கப் போகிறவள்போல் நடந்தாள். மெய்யப்பன் அவள் கையைப் பிடித்து, தோளை அழுத்தி, நாற்காலியில் உட்கார வைத்தான். பிறகு, "என் மனதைக் காட்டிட்டேன்.... இனிமேல் அந்தத் தாலியை எடுக்கறதும், எடுக்காததும் உன் இஷ்டம்.... நாலு பேருக்குப் பயப்படுறே.... நீ பயங்கரமாய் அடிபடும்போதோ.... கட்டுனவன் தள்ளி வச்சபோதோ... நாலுபேர் கிடக்கட்டும்.... ஒருத்தராவது உதவிக்கு வந்தாங்களா....? உன் விருப்பம்போல் செய்..."

அவன் விருப்பம்தான் தன் விருப்பம் என்பதுபோல், அவள் தலை கவிழ்ந்து இருந்தாள். எழாமலே இருந்தாள். அவள் உடம்பு ஆடிய ஆட்டத்தில் நாற்காலி ஆடியது. மெய்யப்பன் கிடுகிடுவென ஆடிய அவள் உடம்பை ஆதரவாகப் பிடித்தான். பிறகு, பிடியை விட்டுவிட்டு, விலகி நின்றான். அவள் அவனை நிமிர்ந்து பார்த்து, "எனக்குப் பயமாய் இருக்கு.... பயமாய் இருக்கு..." என்று கிளி மாதிரி, சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தாள்.

மெய்யப்பன் உறுதியோடு பேசினான். அந்தப் பேச்சில், காதலின் குழைவைவிட, சமூக அநீதியைச் சாடும் போர்ப் பரணி ஒலித்தது.

"அடிக்கிறவன் அண்ணனாக மாட்டான்; கரிக்கிறவள் அண்ணியாக மாட்டாள்; பிறத்தியார் கஷ்டத்தை கண்டுக்காத மனிதர்கள் சமூக உறுப்பாக மாட்டார்கள்; சொந்தக்காரர்கள் அந்நியராய் மாறிட்டாங்க.... இந்த அந்நியன், இப்போ, சொந்தமாயிட்டான்.... இப்போ, குமார் வரப்போறான்.... ஒன் அண்ணன் அண்ணியோட உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து, இப்பவே குமார் வீட்டுக்குப் போகப் போறோம்.... சாயங்காலம் கோவில்... ராத்திரியில் நம்ம வீடு...."

"எனக்குப்... எனக்குப் பய... பயமாய்... பயமாய்...."

"எதுக்குப் பயப்பட்டாலும், பயத்துக்கு மட்டும் பயப்படக்கூடாது சத்யா... நான் சொன்னதை திருப்பிச்

சொல்லு.... இதுதான் நம் கல்யாண மந்திரம்... சொல்லு.... அட, சும்மா சொல்லும்மா.... சொல்லும்மா.... சொல்லு கண்ணு...."

சத்யா லேசாகச் சிரித்தபடித் தயங்குகிறாள். மெய்யப்பன் அவள் மோவாயை நிமிர்த்தியபடி, "நீ... சொல்லாட்டால், ஒனக்கு என்மேல் இஷ்டமில்லன்னு அர்த்தமாம். சொன்னால் கோடி ஆசைன்னு அர்த்தமாம்.... சொல்லும்மா.... அட.... சொல்லு கண்ணு... எனக்குப் பயப்பட்டாலும்.... உம்.... சொல்லு ராசாத்தி..."

சத்யா அவன் கையை லேசாகப் பிடித்துக் கொள்கிறாள். நாணம், பயத்தை விரட்டுகிறது. பாசம், நாணத்தை விரட்டுகிறது. பிறகு அதுவே உறுதியாகிறது. அதுவே வார்த்தைகளுக்கு உருவமாகிறது. செம்பருத்தி நிற உதடுகள் பிரிகின்றன. கண்கள் பிரகாசிக்கின்றன. வார்த்தைகள், தாமாக வருகின்றன.

**"எதுக்குப் பயப்பட்டாலும், இந்த பயத்திற்கு மட்டும் பயப்படக்கூடாது...."**

திருவரசு புத்தக நிலையம்